## SYLLABUS

**III SEMESTER** **PAPER : XVI ( ELECTIVE)**

**CBCS PATTERN**

## HISTORY OF DRAVIDIAN MOVEMENT IN TAMILNADU

**UNIT-I**

'Dravida'-Definition, Dravida and Arya Race Theories - Emergence of Non-Brahmin ideology – Pre-Justice Party Era, Socio-Political Movements of non-Brahmins, Madras Native Association, Madras Dravidian Association, Madras Presidency Association and Emergence of Dalit Movement-C.Ayothidasa Pandithar and Rettamalai Srinivasan.

**UNIT-II**

Justice Party Era-Formation of SILF, Justice Party, Non-Brahmin Manifesto, Founder Leaders-P.T.Theagaroyachetti, Dr.C.Natesa Mudaliar, and T.M.Nair-Their Services-Conflict with Congress and Home-Rule Movement, Demand for Communal Representation-First Direct Election, 1920.

**UNIT-III**

Justice Party in Power-Ministries of Subbarayalu Reddiar, Raja of Panagal, and Munuswamy Naidu-Independent Ministry under Dr.P.Subbarayan-Achievements of Justice Party, Fall of Justice Party-Depressed Classes Movement, M.C.Raja

**UNIT-IV**

Periyar E.V.Ramasami-Self Respect Movement, Vaikam Struggle, Rajagopalachari-Formation of Congress Government,1937, Family Vocational Education Scheme (Kulakalvi Thittam), Three Lanugage Formulae-Justice Party in Opposition, Anti-Hindi Agitations-Transformation into Dravida Kazhagam-Salem Conference-C.N.Annadurai and Formation of DMK-Services of Periyar and Kamaraj

**UNIT-V**

Rise of DMK-DMK in Power, Achievements under C.N.Annadurai-Anti Hindu Agitations, Withdrawal of Separate Dravida Nadu Demand-Chief Ministership of M.Karunanidhi-Coalition Politics-Rise of M.G.Ramachandran-his Achievements-Post M.G.R. Scenario in Tamil Nadu Politics-The Tenures of J.Jayalalitha and M.Karunanidhi-Their Contributions.

## REFERENCE BOOKS


1. Arooran, N.K. Tamil Renaissance and Dravidian Nationalism, Madurai, 1980.
2. Baker.C.J. The Politics of South India – 1920-1937, New Delhi, Macmillian Company, 1975.
3. Baker.C.J. and D.A.Washbrook, South India, Political Institutions and Political Change 1880-1947, Delhi, Macmillan, 1976.
4. Devenandan .P.D: The Dravida Kazhagam: a Revolt Against Brahminism, California, 1960.
5. Geetha, V and S.V.Rajadurai. Towards a Non-Brahmin Millennium: Iyothee Thass to Periyar, Delhi, Samya, 1999.
6. Hardgrave R. The Dravidian Movement, Mumbai, Popular Prakashan, 1965.
7. Irschick, Eugene, Politics and Social Conflict in South India: The Non-Brahmin Movement and Tamil Separatism, 1916-1929, Berkeley, University of California Press, 1969.
8. ……………..Political and Social Conflict in South India, USA, University of California Press, 1969
9. …………….Tamil Revivalism in the 1930s, Madras 1986.
10. Iyengar Krishnaswamy R. Contributions of South India to Indian Culture, Calcutta, 1923.
11. Pandian M.S.S. The Image Trap: M.G.Ramachandran in Film and Politics, Sage Publications, 2015.
12. ………………Brahmin And Non-Brahmin, New Delhi., Permanent Black, 2007.
13. Rajayan K. History of Tamil Nadu 1565-1987, Madurai, Madurai University, 1974.
14. Ramamoorthy P: The Freedom Struggle and the Dravidian Movement, Chennai 1987

… New Delhi 1987.

# 17. நீதிக்கட்சி, 1916–1920

*நீதிக்கட்சி வருங்கால திராவிட இயக்கத்துக்கான தத்துவார்த்த அடித்தளக் கட்டுமானத்தை அமைத்துக் கொடுத்தது.*

*– ஆர்.கண்ணன்*

## 17.1 முன்னோடி முயற்சிகள்

### 17.1.1 அரசாங்க ஆணைகள்

19 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆங்கில அரசாங்கம் ஒரு ஆணையைப் பிறப்பித்தது: 1854 நிலை ஆணை (Standing Order No.128(2), 1854) இந்த ஆணைப்படி 1) அரசாங்க கீழ்நிலைப் பதவிகளுக்கான நியமனங்கள் ஒருசில செல்வாக்குமிக்க குடும்பங்களின் ஏகபோக உரிமையாக இருக்கக்கூடாது; 2) ஒவ்வொரு மாவட்டத்துக்கான பதவிகள் அம்மாவட்டத்தில் உள்ள பிரதான சமூகத்தினருக்குக் கிடைக்குமாறு பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று தெளிவாக்கப்பட்டது.

1871 ஆம் ஆண்டு மக்கள் கணக்கீட்டு மேற்பார்வையாளர் கோர்னிஷ் (Cornish, Superintendent W.R.Cornish, Census of Madras Presidency, Vol I, p.197) பின்வரும் பரிந்துரையைச் செய்தார்: 1) ஒவ்வொரு பிரச்சனையும் 'பிராமணக் கண்ணாடி' மூலம் பார்ப்பது அரசாங்க அரசியலுக்கு நல்லதல்ல; 2) மிக அதிகமான உள்ள இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகியோரின் எண்ணிக்கைக்கு ஏற்ப அரசாங்கப் பதவிகளுக்கு வரம்பு விதிக்க வேண்டும்; 3) எந்தவொரு குறிப்பிட்ட சாதியினருக்கும் முதன்மை முக்கியத்துவம் கொடுக்காதவாறு அரசின் கொள்கைகள் இருக்க வேண்டும். சுருங்கக்கூறின், 1854 நிலை ஆணையும், 1871 பரிந்துரையும் நீதிக்கட்சி தோன்றி வேர்விட்டு வளர்வதற்கான விதைகளைத் தாங்கி இருந்தன என்பதில் ஐயமில்லை.

### 17.1.2 ஆதிதிராவிடர் ஜனசபை, 1892

20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சென்னை ராஜதானியில் பிராமணர் அல்லாதார் சார்பில் துவக்கப்பட்ட மிகப் பெரிய பிராந்திய அரசியல் அமைப்பு (Regional Political Party) நீதிக்கட்சி ஆகும். இக்கட்சி உருவாக்கப்படுவதற்கு முன்பாக இத்திசை நோக்கிப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் முதன்மையானது ஆதிதிராவிட ஜனசபை (Adi Dravidar Jana Saba) ஆகும். ஆதிதிராவிடர் முதன் முறையாக 'திராவிடர்' என்ற பட்டப்பெயரைப் போட்டுக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார் ஆர்.கண்ணன்.

### 17.1.3 இரண்டு துண்டு வெளியீடுகள், 1895

ஆதிதிராவிடர் ஜனசபை அமைக்கப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, 1895 ஆம் ஆண்டில் இரண்டு துண்டு பிரசுரங்கள் வெளியிடப்பட்டன: 1) பிராமணரல்லாதோர் இனங்களும் இந்திய பொதுப்பணியும் (The Non-Brahmin



Races and Insian Public Service); 2) பிராமணரல்லாதார் இனங்களை சீர் செய்வதற்கான வழிவகைகள் (The Ways and Means for the Amelioration of Non-Brahmin Races). இவ்விரு வெளியீடுகளும் நடுநிலையாளர் (Fair Play) என்ற புனைப் பெயரில் எழுதப்பட்டவை. இந்த வெளியீடுகள் அரசுப் பணிகளில் பிராமணர்கள் ஆதிக்கம் செலுத்துவதாகவும், இப்பணிகளில் அனைத்து வகுப்பினரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கோரப்பட்டிருந்தன. இவ்வெளியீடுகள் முதல் முறையாக பிராமணரல்லாதார் பற்றிய பிரச்சனையை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தன. மேலும் இந்த பிரசுரங்களில் 'பிராமணரல்லாதார் இனங்கள்', 'இந்தியப் பொதுப்பணி' ஆகிய சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டு வெளியீடுகளும் தேசிய கண்ணோட்டத்தோடு எழுதப்பட்டவையாகும்.

### 17.1.4 சி.சங்கரன்நாயர், 1904, 1908

சி.சங்கரன் நாயர் நீதிபதி ஆவதற்கு முன் பிரிட்டிஷார் போற்றும் சமத்துவம், சகோதரத்துவம் போன்ற கருத்துக்கள் சாதி முறைக்கு முற்றிலும் மாறுபட்டது என்று பேசினார் (1904). சென்னைப் பல்கலைக்கழகம் பட்டதாரிகளுக்கு உரையாற்றிய நீதிபதி சங்கரன் நாயர் வர்ண–ஜாதி முறை அகற்றப்படாத வரை அரசியல் முன்னேற்றம் சாத்தியமில்லை என்றார் (1908).

### 17.1.5 சென்னை பிராமணரல்லாதார் சங்கம், 1909

1909 ஆம் ஆண்டு பி.சுப்ரமணியம், எம்.புருஷோத்தம நாயுடு ஆகிய இரண்டு பிராமணரல்லாத வழக்குரைஞர்கள் சென்னை பிராமணரல்லாதார் சங்கம் (Madras Non-Brahmin Association) என்ற அமைப்பைத் துவக்கினர். இந்த அமைப்பின் நோக்கம் பிராமரல்லாதோரிடையே கல்வியைப் பரப்புவதாகும். மேலும் இச்சங்கத்தில் ஓராயிரம் உறுப்பினர்களைச் சேர்க்கத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் அப்போதிருந்த பிராமணரல்லாத பிரமுகர்கள் இம்முயற்சிக்கு ஆதரவளிக்க முன்வரவில்லை! காலம் கனிவதற்கு முன்பே துவக்கப்பட்ட இச்சங்கம் செயல்பட முடியாமல் போயிற்று! சென்னை பிராமணரல்லாதார் சங்கம் தான் 20 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதல் அமைப்பாகும்.

### 17.1.6 சென்னை கூட்டமைப்புக் குழு, 1912

சென்னை பிராமணரல்லாதார் சங்கம் துவக்கப்பட்ட மூன்றாண்டுகளில் சென்னை கூட்டமைப்புக் குழு (Madras United League, 1912) துவக்கப்பட்டது. இக்குழு பிராமணரல்லாத அரசாங்க அலுவலர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்க நிர்வாகத்தில் பிராமணர் ஆதிக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட சரவண பிள்ளை, ஜி.வீராசாமி நாயுடு, துரைசாமி நாயுடு போன்றோர் இக்குழு தோன்ற மூலகாரணமாக இருந்தனர். அரசியல் சாராத இந்த அமைப்பு சமுதாய நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. சென்னை கூட்டமைப்புக் குழுவே பின்னர் சென்னை திராவிடர் சங்கம் (Madras Dravidian Association) என்று பெயர் மாற்றம் பெற்றது (1912 அக்டோபர் 1). அப்போது மருத்துவ மாணவராக இருந்த சி.நடேச முதலியார் இச்சங்கத்தின் செயலாளராகவும் பணியாற்றினார்.

## 12.1.7 சென்னை திராவிடர் சங்க சாதனை

திராவிடர் சங்கம் துவக்கப்பட்டபின் சில குறிப்பிடத்தக்க சாதனைகளைச் செய்தது: 1) சென்னையில் இச்சங்கத்தின் கிளைகள் திறக்கப்பட்டன; 2) சென்னையில் தங்கியிருந்த பிராமணரல்லாத மாணவர்களுக்கென்றே பிரத்யேக விடுதி (Hostel) துவங்கப்பட்டது; 3) சென்னையிலிருந்த பிராமணரல்லாதார் பட்டதாரிகளை ஆண்டுதோறும் அழைத்து அவர்களுக்கு இச்சங்கத்தின் நோக்கம் மற்றும் நடவடிக்கைகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது; அவர்கள் கவுரவிக்கப்பட்டனர்; 4) சங்கக் கோரிக்கைகளை உள்ளடக்கிய இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன. சென்னை திராவிடர் சங்கத்தின் நடவடிக்கைகள் படித்த பிராமணரல்லாதோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அதுமட்டுமல்ல. வெளி மாவட்டங்களிலிருந்து சென்னையில் பல இடர்பாடுகளுக்கு இடையே கல்வி பயின்று வந்த பிராமணரல்லாத மாணவர்களுக்கென தனியாக ஒரு விடுதியைத் துவக்கியது சமுதாய மாற்றத்துக்கான அடிப்படை முக்கியத்துவமான நிகழ்ச்சியாகும்.

### 17.1.8 ராயல் கமிஷன், 1912

1912 ஆம் ஆண்டு அரசாங்கப் பணிகளுக்கான ராயல் கமிஷன் (Royal Commission on Public Services) அமைக்கப்பட்டது. அப்போது சென்னை சட்டமன்ற உறுப்பினராக இருந்த பி.தியாகராய செட்டி அக்கமிஷனை சந்தித்து மாகாண அரசாங்கப் பதவிகளை பிராமணர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புள்ளி விவரங்களுடன் விளக்கினார். கமிஷன் 42 சாட்சிகளை விசாரித்தது. அவர்களில் ஒருவரான வருவாய் கோட்ட அதிகாரி பாலாஜி ராவ் நாயுடு பிராமணரல்லாதார் நலனைப் பாதுகாப்பதற்கான ஒரு வழி சாதிவாரியான விகிதாச்சார பிரதிநிதித்துவம் தான் என்பதை வலியுறுத்தினார்.

### 17.1.9 கடிதக் கிளர்ச்சி, 1915

1915 ஆம் ஆண்டு 21 கடிதங்களை உள்ளடக்கிய நூல் வெளியிடப்பட்டது. பிராமணரல்லாத சி.சங்கரன் நாயரால் எழுதப்பட்ட இக்கடிதங்கள் அனைவரது கவனத்தையும் கவர்ந்தன. இந்த கடிதங்கள் பட்டும் படாமலிருந்த பிராமணரல்லாத தலைவர்கள் அனைவரையும் சிந்திக்க வைத்தன. உள்ளாய்வு செய்தோர் ஊக்கமுற்றனர். திராவிட மகாசபை (Dravida Maha Sabha) என்ற அரசியல் அமைப்பை உருவாக்கி அதன் கிளைகளை மாவட்டங்களிலும், கிராமங்களிலும் துவக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. இக்கடிதங்கள் அடங்கிய நூல் வெளியிடப்பட்ட அதே ஆண்டில் (1915) சி.சங்கரன்நாயர் எழுதிய திராவிட பிரபலங்கள் (Dravidian Worthies) என்ற நூலும் வெளியிடப்பட்டது. இந்த இரண்டு நூல்களும் நல்ல வரவேற்பைப் பெற்றன. இவை பிராமணரல்லாதோரிடையே சிந்தனைக் கிளர்ச்சியை ஏற்படுத்தின. அப்போது சி.சங்கரன் நாயர் காங்கி கட்சித் தலைவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## 17.2 தேர்தல் திருப்புமுனை, 1916

### 17.2.1 தேர்தல் தோல்வி

1916 ஆம் ஆண்டு இம்பீரியல் சட்டமன்ற (Imperial Legislative Assembly)த்துக்கான தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் போட்டியிட்ட பிராமணரல்லாத பிரபல வேட்பாளர்களான டி.எம்.நாயரும், பி.ராமராயரும் முறையே பிராமண வேட்பாளர்களான பி.எ .ஸ்ரீனிவாச சா திரி, கே.வி.ரங்கசாமி ஐயங்கார் ஆகியோரால் தோற்கடிக்கப்பட்டனர்! அதேபோன்று, பிட்டி தியாகராய செட்டியும், குமார வெங்கடரெட்டி நாயுடுவும் அன்னிபெசண்ட் அம்மையாரின் சுயாட்சி சங்க (Home Rule League)த்தின் ஆதரவு பெற்ற பிராமண வேட்பாளர்களால் தோற்கடிக்கப்பட்டனர். அனைத்து வேட்பாளர்களும் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது!

### சுய:சிந்தனை

மிகச் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த பிராமண வேட்பாளர்கள் மிகப் பெரும்பான்மைச் சமூகங்களைச் சேர்ந்த செலவமும் செல்வாக்கும்மிக்க வேட்பாளர்களை எளிதில் தோற்கடித்தது பிராமணரல்லாத பிரபலங்களுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. இத்தேர்தல் தோல்விகள் பிராமணர்–பிராமணரல்லாதார் ஆகியோருக்கு இடையே இருந்த இடைவெளியை மேலும் விரிவுபடுத்திவிட்டது. குறிப்பாக பிராமணரல்லாத வாக்காளர்கள் பிராமண வேட்பாளர்களுகு ஆதரவாக வாக்களித்து வெற்றி பெறச் செய்தது பிராமணரல்லாத தலைவர்களிடையே சுயசிந்தனையைத் தூண்டிவிட்டது. அதன் விளைவே நீதிக்கட்சியின் எழுச்சியாகும்.

## 17.3 நீதிக்கட்சியின் தோற்றம், 1916

### 17.3.1 இரண்டு முடிவுகள்

இம்பீரியல் சட்டமன்றத் தேர்தலில் தோல்வியைத் தழுவிய பிட்டி தியாகராய செட்டியும், எம்.நாயரும் அவர்களுடைய ஆதரவாளர்களுடன் 1916 நவம்பர் 20 ஆம் நாள் சென்னை விக்டோரியா பொது மண்டபத்தில் (Victoria Public Hall) கூடி வரலாற்று முக்கியத்துவமுடைய இரண்டு முடிவுகளை எடுத்தனர்: 1) தென்னிந்திய மக்கள் சங்கம் (South Indian People's Association) என்ற பெயரில் ஒரு அமைப்பைத் துவக்குவது; 2) அதேபோன்று, தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (South Indian Liberal Federation) என்ற அமைப்பையும் உருவாக்கவது.

### 17.3.1 தென்னிந்திய மக்கள் சங்கம்

தென்னிந்திய மக்கள் சங்கம் ஒரு கூட்டுப் பங்குக் கழக (Joint-Stock Company)த்தைப் போன்று வர்த்தக அமைப்பாகும். அதன் நோக்கம் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் செய்தித்தாள்களைத் துவக்கி, அவற்றின் மூலம் பிராமணரல்லாதாரின் குறைகளை வெளியிடுவதாகும். அதாவது, இந்த சங்கம் ஒரு பிரச்சார சாதனமாக இயங்கும். தியாகராய செட்டி இதன் செயலராக இருந்தார்

### 17.3.3 தென்னிந்திய நல உரிமை சங்கம்

நீதிக்கட்சி

இரண்டாவது நிறுவனமான **தென்னிந்திய நல உரிமை சங்கம்** அரசியல் கட்சியாகும். இதன் **நோக்கங்கள்: 1)** பிராமணரல்லாதார் உரிமைக்காகவும், நலனுக்காகவும் குரல் கொடுப்பது; **2)** அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இவை பற்றி எடுத்துரைப்பது; **3)** பிராமணரல்லாதவர்களுக்கான திட்டங்களைத் தீட்டி செயல் படுத்துவது; இக்கட்சி நீதி (Justice), திராவிடன் (Dravidan), ஆந்திர பிரகாசா (Andhra Prakasa) ஆகிய நாளேடுகளை முறையே ஆங்கிலத்திலும், தமிழிலும், தெலுங்கிலும் வெளியிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. அதன்படியே கட்சியும், பத்திரிகைகளும் துவக்கப்பட்டன. ஆங்கில நாளேடான 'நீதி' செல்வாக்கு பெற்றமையால் **தென்னிந்திய நல உரிமைச் சங்கம் நீதிக்கட்சி (justic Party) என்ற பெயர் மாற்றம் பெற்றது.** தனித்தனியே செயல்பட்டு வந்த சென்னை திராவிடர் சங்கமும், தென்னிந்திய மக்கள் சங்கமும் நீதிக்கட்சியுடன் இணைந்தன.

### ஒன்று சேர்ந்த துருவங்கள்

சென்னை மாநகராட்சியில் **இரு துருவங்களாக** செயல்பட்டு வந்த பிட்டி தியாகராய செட்டிக்கும் நாயருக்குமிடையே இருந்த கருத்து வேறுபாடுகளைப் போக்கி, இருவரையும் ஒன்று சேர்த்து நீதிக்கட்சிக்கு கொண்டு வந்த பெருமை சி.நடேச முதலியாரைச் சேரும். இவர்தான் பின்னர் **'பிரதிநிதித்துவம் இன்றேல் வரியில்லை' (No taxation without representation)** என்ற கோஷத்தை சென்னை சட்டமன்றத்தில் எழுப்பினார். இவர்களுடன் மு.ஏ.ரெட்டி, பனகல் அரசர், போப்பிலி அரசர் போன்றோரும் காங்கிரசை விட்டு வெளியேறி நீதிக்கட்சியில் சேர்ந்தனர். இதனால் நீதிக்கட்சிக்கு மக்களிடையே அங்கீகாரமும் மதிப்பும் அதிகரித்தது.

### 17.3.4 பிராமணரல்லாதார் பிரகடனம், 1916

Manifesto

**1916 டிசம்பர் மாதம் தியாகராய செட்டி** வரலாற்றுச் சிறப்புமிக்க **பிராமணரல்லாதார் பிரகடன (Non-Brahmin Manifesto)**த்தை வெளியிட்டார். **இப்பிரகடனத்தின் முக்கிய அம்சங்களாவன: 1)** இந்தியர்கள் இன்னும் சுயாட்சிக்குத் தயாராகவில்லை; **2)** இந்நிலையில் பிரிட்டிஷார் இந்தியர்களுக்கு சுயாட்சி வழங்கினால் அது பிராமணர்கள் பிறர்மீது ஆதிக்கம் செலுத்துவதில் தான் முடியும்; **3)** சென்னை ராஜதானியின் மக்கள் தொகையில் பிராமணர்கள் 3% மட்டுமே உள்ளனர்; ஆனால் அவர்கள் அரசாங்க **அதிகாரவர்க்கம் (Bureaucracy)**, சட்டம், மருத்துவம் போன்ற துறைகள், இந்திய தேசிய காங்கிரசின் முக்கிய பதவிகள் ஆகியவற்றில் அளவுக்கு மீறி அதிக இடங்களைப் பிடித்துள்ளனர்.

**4)** மிகப் **பெரும்பான்மையில் உள்ள** பிராமணரல்லாதோர் அரசாங்கத்துக்கு வரி செலுத்துகின்றனர்; **ஆனால் அவர்களுக்கு அரசாங்க** வேலையிலும் கல்வியிலும் உரிய இடம் கொடுக்கப்படவில்லை; **5) இந்த நிலை நீடித்தால் பிராமணர்கள்** அரசாங்கப்



கொள்வர்; 6) செட்டி, கோமுட்டி, முதலியார், நாயுடு, நாயர் போன்ற சமுதாயத்தினர் சென்னை ராஜதானியின் பொருள் மற்றும் ஒழுக்க மேம்பாட்டு முன்னேற்றத்துக்குப் பங்களிப்பு செய்திருப்பினும் இவர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளனர் எனவே **மக்கள் சுயாட்சி பெறுவதற்கு முன்பாக சாதி வேடுபாடுகள் நீக்கப்படுதல் வேண்டும். இதற்காக நீதிக்கட்சி பிரிட்டிஷ் ஆட்சிக்கு விசுவாசத்துடன் நன்றிக்கடன் பட்டிருக்கும். பிராமணரல்லாதார் பிரகடனம் நீதிக்கட்சியின் குறிக்கோள், கொள்கை, திட்டங்கள் பற்றிய அடிப்படை ஆவணமாகும்.** இப்பிரகடனம் சென்னை **ராஜதானி வாழ் பிராமணரல்லாதாரின் மாக்னா கார்டா (Magna Carta)** என்று **வர்ணித்துள்ளார் சிதம்பரம் குடியரசு.**

### 17.3.5 கண்டனக் குரல்

பிராமணரல்லாதார் பிரகடனம் அடையாள அரசியல் (Identify Politics) அறிவிப்பாகவும் அழைப்பாகவும் இருந்தது. இந்த அறிவிப்பு பிராமணரல்லாதோருக்கு தனிப்பட்ட அடையாளத்தைக் கொடுத்தது. இது தற்கால தமிழ்நாட்டு அரசியலுக்குப் புதிய வடிவத்தைத் தந்து, புதிய பாதையையும் போட்டுக் கொடுத்தது. எனவே, பிராமணரல்லாதார் என்ற அடையாளத்தை வலிமைப்படுத்த இச்சொல் பிரகடனத்தில் 13 இடங்களில பயன்படுத்தப்பட்டுள்ளது!

எனினும் தேசிய பத்திரிகைகள் இப்பிரகடனத்தை சர்ச்சைக்குரிய ஆவணமாகவே பார்த்தன; இதற்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பின. எடுத்துக் காட்டாக இந்து பத்திரிகை இந்த பிரகடனத்தை மிகுந்த வேதனையோடும், வியப்போடும் பரிசீலித்ததாகவும், இதில் காணப்படும் பல விஷயங்கள் நியாயமற்றதாகவும், திரித்துக் கூறப்பட்டிருப்பதாகவும், பெருமைக்குரிய இந்திய சமூகத்தாரிடையே இந்த அறிவிப்பு கசப்புணர்வை ஏற்படுத்துவதைத் தவிர வேறு எந்த நோக்கத்தையும் நிறைவேற்றப் போவதில்லை என்றும் எழுதியது (1916 டிசம்பர் 20).

**இந்து நேசன்** பத்திரிகை இப்புதிய சங்கம் துவக்கப்பட்டதைப் பற்றிய சந்தேகத்தைக் கிளப்பியது. அன்னிபெசண்ட்டின் நியூ ஏஜ் (New Age) இப்பிரகடனமும் நீதிக்கட்சியும் அகால மரணமடையும் என்று ஆரூடம் கூறியது. இது 'செட்டியாரின் பிரகடனம்' என்று வர்ணித்த டைம் ஆப் இந்தியா (Times of India) ஒன்று சேர்ந்து செயல்படக்கூடிய ஒருமித்த பிராமணரல்லாதார் என்ற வகுப்பார் யாருமில்லை என்று கூறியது. இப்பிரகடனம் ஒரு முறைகேடான கட்டுக்கதை (Illegitimate Fabrication), **அரசியல் போலிப்புனைவு (Political Fiction), கற்பனைச் செய்தி** (Figment of Imagination) என்றெல்லாம் குறை கூறப்பட்டது. இக்குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் **பிராமணர் அல்லாதார் (Non-Brahmin)** என்ற நீதிக்கட்சி பத்திரிகை "கேலி பேசுவோர் பேசட்டும்... பிராமணரல்லாதார் சமுதாயம் எவராலும் தடுத் நிறுத்த முடியாத அளவுக்கு முன்னேறும்" என்று எழுதியது. எனினும் நீதிக்கட்சி **எழுச்சி கோப்பையில் எழுந்த புயல் அல்ல என்பதை உணர வைத்தது.**

### ... பத்திரிகைகள், 1917

1917 ஆம் ஆண்டு தென்னிந்திய மக்கள் சங்கம் தனது பங்குகளை (Shares) விற்று, மேலும் பணம் திரட்டி ரூ.40,000க்கு ஒரு அச்சுக்கூடத்தை வாங்கி நீதி (Justice) என்ற பெயரில் முதல் இதழை வெளியிட்டது (1917 பிப்ரவரி 24). டி.எம்.நாயர் இப்பத்திரிகையில் கவுரவப் பதிப்பாளராகவும், எம்.எ .பூர்ணலிங்கம் துணைப் பதிப்பாளராகவும் பொறுப்பேற்றனர். அதேபோன்று, பக்தவத்சலம் பிள்ளையைப் பதிப்பாளராகக் கொண்டு திராவிடன் என்ற தமிழ் செய்திப் பத்திரிகை 1917 ஜூன் மாதம் துவக்கப்பட்டது. ஏ.சி.பார்த்தசாரதி நாயுடு ஆந்திர பிரகாசிகா என்ற தெலுங்கு செய்திப் பத்திரிகையை விலைக்கு வாங்கி பதிப்பித்தார். நீதிக்கட்சி மூன்று பத்திரிகைகள் மூலம் கொள்கைகளையும், திட்டங்களையும், செயல்பாடுகளையும் பரப்பும் பழக்கத்தை ஏற்படுத்தியது. அந்த காலகட்டத்தில் பிராமணர் பத்திரிகைகளை எதிர்த்து நிற்பது என்பது நினைத்துப் பார்க்க முடியாதது. எடுத்துக்காட்டாக, **திவான் பகதூர் கருணாகர மேனன் நீதி** (Justice) ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியராக இருக்க ஒப்புதல் கொடுத்தார். ஆனால் அன்னிபெசண்ட், சி.பி.ராமசாமி ஐயர், பி.கேசவ பிள்ளை ஆகியோரின் பேச்சைக் கேட்டு கடைசி நேரத்தில் ஆசிரியர் பொறுப்பேற்க மறுத்து விட்டார்!

### 17.3.7 பிராமணரல்லாதார் மாநாடு, 1917

### நீதிக்கட்சியின் கொள்கைகள்

நீதிக்கட்சி துவக்கப்பட்டு, பிராமணரல்லாதார் பிரகடனம் வெளியிடப்பட்ட பின், **முதல் பிராமணரல்லாதார் மாநாடு** (First Non-Brahmin Conference) 1917 ஆக டு 19 ஆம் நாள் கோயம்புத்தூரில் ரமராயனின்கரின் தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் நீதிக்கட்சியின் **நோக்கங்களும், இலக்குகளும்** தெளிவுபடுத்தப் பட்டது: 1) தென்னிந்தியாவிலுள்ள அனைத்து சமுதாயங்களின் கல்வி, பொருளாதார, சமூக, ஒழுக்க நிலைகளை மேம்படுத்தல்; 2) பிராமணரல்லாதாரின் எண்ணங்களையும், எதிர்பார்ப்புகளையும் ஆங்கில அரசாங்கத்திடம் எடுத்துரைத்தல்; 3) பொதுக்கூட்டங்கள், பிரசுரங்கள் மூலம் கட்சிக் கொள்கைகளையும், செயல் திட்டங்களையும் பற்றிப் பிரச்சாரம் செய்தல். இக்கொள்கைகளை மக்களிடம் கொண்டு செல்வதற்காக 1917 ஆம் ஆண்டு இறுதிக்குள் கோவை, சேலம், திருநெல்வேலி, பிக்காவளே, புலிவெண்டியா, பெசவாடா ஆகிய நகரங்களில் மாநாடுகள் நடத்தப்பட்டன. இம்மாநாடுகள் நீதிக்கட்சி நிலை பெற்றுவிட்டது என்பதை உறுதிப்படுத்தின. ஒரே ஆண்டில் (1917) 6 வட்டார மாநாடுகளை நடத்திய பின் முதல் மாநில மாநாடு 1917 டிசம்பர் 28–29 தேதிகளில சென்னை வெல்லிங்கடன் திரை அரங்கில் நடைபெற்றது. அம்மாநாட்டில் துவக்கக் கல்வி, விவசாயக் கல்வி, தொழில் கல்வி, பொது நிறுவனங்கள், அரசாங்கப் பணி, உள்ளாட்சி அமைப்புகள், அறக்கட்டளை அமைப்புகள், சமூக–சமய முன்னேற்றம், தற்காப்பு இயக்கம், அரசியல் சீர்திருத்தம், வகுப்புவாரி பிரதிநிதித்துவம், லட்சியக் கனவுகள் பற்றியெல்லாம் பரிசீலிக்கப் பட்டது. "அரசியல் போர் துவங்கிவிட்டது. ஓயாது உழையுங்கள். வெற்றி நோக்கி நடை போடுங்கள். உங்களுடைய சமுதாய உரிமைகள் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படாமல்



போகலாம். ஆனால் வருங்கால சமுதாயம் இவற்றை நிச்சயம் அறுவடை செய்யும்" என்ற அறைகூவலுடன் மாநாடு முடிவுற்றது.

## 17.4 முதல் நான்கு ஆண்டுகள், 1916–1920

நீதிக்கட்சி துவக்கப்பட்டபின் அக்கட்சி பல சவால்களை சந்திக்க வேண்டியதாயிற்று. அவற்றுள் முதலாவது அறிவிலும், ஆற்றலிலும், அரசாங்க அதிகாரத்திலும் வலுவாக இருந்த பிராமணர்களுடன் மோதியதாகும். அன்றைய சென்னையில் மூன்று வலுவான **பிராமணர் கோஷ்டிகள்** (Factions) செயல்பட்டு வந்தன: **1) மைலாப்பூர் குழு.** இக்குழுவில் சேத்துப்பட்டு ஐயர்களும், வெம்பாக்கம் ஐயங்கார்களும் இடம் பெற்றிருந்தனர். **2) எக்மோர் குழு.** இந்தக் குழு 'இந்து' பத்திரிகை பதிப்பாளர் கஸ்தூரிரங்க ஐயங்காரின் தலைமையில் செயல்பட்டது. **3) சேலம் குழு. சி.ராஜகோபாலாச்சாரியும்** பிற தேசிய வாதிகளும் சேலம் பிரிவின் பிரதான தலைவர்களாவர். இக்கோஷ்டிகள் நீதிக்கட்சியின் கொள்கைகளை எதிர்த்தன.

நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்தால் எத்தகைய திட்டங்களை நிறைவேற்றும் என்பது பற்றி இக்கோஷ்டிகளுடன் போராட வேண்டியிருந்தது. குறிப்பாக மைலாப்பூர், எக்மோர் பிராமணக் கோஷ்டிகள் இனவாரி இட ஒதுக்கீட்டு முறையை (Communal Representation) எதிர்க்க சேலம் குழுவின் தலைவர் ராஜாஜியும் அவரது ஆதரவாளர்களும் காந்தி துவக்கிய ஒத்துழையாமை இயக்கத்தை சென்னை ராஜதானியில் வெற்றகிரமாக செயல்படுத்த வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தனர். நீதிக்கட்சி **வகுப்புவாரி இட ஒதுக்கீட்டுக் கொள்கையிலும்**, ஒத்துழையாமை இயக்கத்தை எதிர்ப்பதிலும் பிடிவாதமாக இருந்தது.

### 17.4.1 நீதிக்கட்சியும் சுயாட்சி இயக்கமும்

நீதிக்கட்சியும், அன்னிபெசண்ட் அம்மையாரின் **சுயாட்சி** இயக்கமும் (Home Rule Movement) ஒரே ஆண்டில் துவக்கப்பட்டன (1916). அம்மையார் சனாதன இந்து மதத்தின் தீவிர ஆதரவாளர். அவரது இயக்கத்தை தமிழ் நாட்டுப் பிராமணர்கள் ஆர்வத்துடன் ஆதரித்தனர். எனவே, **நீதிக்கட்சி சுயாட்சி இயக்கத்துக்கு எதிராகச் செயல்பட்டது. டாக்டர் டி.எம்.நாயர்** அன்னிபெசண்ட்டின் பிற்போக்கு மருத்துவக் கருத்துக்களை எதிர்த்து வந்தார். பிராமணரல்லாதார் பிரகடனம் சுயாட்சி இயக்கத்தைக் கடுமையாக எதிர்த்தது. அதேபோன்று அன்னிபெசண்டின் **நியூ இந்தியா** பத்திரிகையும் இப்பிரகடனத்தைச் சாடியது. நீதிக்கட்சி அன்னிபெசண்டை **'அயர்லாந்து பிராமணி'** என்று வர்ணித்தது. **சுயாட்சி என்பது பிராமணர் ஆட்சி** என்று விமர்சித்தது **திராவிடன்** பத்திரிகை. நீதிக் கட்சியின் மூன்று பத்திரிகைகளிலும் சுயாட்சி இயக்கத்தை எதிர்த்துப் பல விமர்சனக் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. **வெள்ளைக்கார பெண்மணியால்** துவக்கப்பட்ட சுயாட்சி இயக்கத்தின் எதிர்மறைப் பயனை பிராமணர்கள் தான் அறுவடை செய்வர் என்பதை நீதிக்கட்சி பிரச்சாரம் செய்தது. இதற்கு எதிராக **சுயாட்சி இயக்கத்தின் பிராமண ஆதரவாளர்கள்** ஒன்று சேர்ந்து தங்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கோரிக்கையை பிரிட்டிஷ் வைசிராய்க்கு அனுப்பியதாகக் குறிப்பிட்டுள்ளார் **சிதம்பரம் குடியரசு**.

## 17.4.2 வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கோரிக்கை, 1917

### ஆகஸ்டு பிரகடனம்

1917 ஆக டு 20 ஆம் தேதி இந்திய விவகாரச் செயலர் எட்வின் மாண்டேகு (Edwin Mongtagu, Secretary of State for India) வெளியிட்ட பிரகடனம் (August Declaration) நீதிக்கட்சிக்குப் புதிய நம்பிக்கையையும், உத்வேகத்தையும் கொடுத்தது. இப்பிரகடனம் அரசாங்கத்தில் இந்தியர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுப்பது பற்றியும், சுயாட்சி உள்ளாட்சி நிறுவனங்கள் அமைப்பது பற்றியும் அறிவித்தது. இந்த அறிவிப்பைத் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்ட நீதிக்கட்சியினர் 1917 ஆக டு மாத இறுதிக்குள் தமிழ் நாடெங்கும் பல மாநாடுகளைக் கூட்டி நீதிக்கட்சி தான் தீண்டத்தகாதோர் என்று ஒதுக்கி வைக்கப்பட்டோர் உள்ளிட்ட பிராமணரல்லாதார் அனைவருக்கும் பொதுவான பிரதிநிதித்துவ கட்சி என்பதைக் கோடிட்டுக் காட்டி மக்களின் ஆதரவைத் திரட்டியது.

## 17.4.3 செட்டி அனுப்பிய ‘கேபிள்’

நீதிக்கட்சி தலைவர் தியாகராய செட்டி காலம் கடத்தாமல் மாண்டேகுவுக்கு ஒரு கடலடித் தந்தி (Cable) அனுப்பினார். அதில் பிராமணரல்லாதோருக்குத் தனியே வாக்காளர் தொகுதிகள் வேண்டும் என்றும், வகுப்புவாரி பிரதிநிதித்துவ அடிப்படையில் அரசாங்கப் பணிகளில் இடஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார். இந்த இட ஒதுக்கீடு மிண்டோ–மார்லி சீர்திருத்தங்கள் (1909) அடிப்படையில் மு லீம்களுக்கு அளிக்கப்பட்ட இட ஒதுக்கீட்டுக்கு இணையாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

## 17.4.4 சென்னை மாகாண சங்கம்

நீதிக்கட்சியின் நிலைப்பாட்டை அறிந்த பிராமணரல்லாத பிரபல காங்கிர காரர்களான ஈ.வெ.ராமசாமி நாயக்கர், திரு.வி.கல்யாண சுந்தர முதலியார், பி.வரதராஜுலு நாயுடு, பி.கேசவ பிள்ளை ஆகியோர் சென்னை மாகாண சங்கம் (Madras Presidency Association) என்ற அமைப்பைத் துவக்கினர். இச்சங்கம் நீதிக்கட்சிக்குப் போட்டியாகத் துவக்கப்பட்டது. சென்னை மாகாண சங்கமும், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காகப் பாடுபடப் போவதாக அறிவித்தது! அதே சமயம் அச்சங்கம் பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்தது!! இப்புதிய சங்கத்தைப் பிராமணர் ஆதரவுப் பத்திரிகைகள் வரவேற்றன. ஆனால் நீதிக்கட்சியினர் சென்னை மாகாண சங்கம் பிராமணரல்லாதார் ஒற்றுமையை உருக்குலைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி என்று குற்றம் சாட்டினர். அன்னிபெசண்ட் அம்மையாரும், பிற பிராமணத் தலைவர்களும் நீதிக்கட்சியின் செல்வாக்கைக் குறைப்பதற்காக மேற்கொண்ட சதி என்று கருதப்பட்டது. ஈ.வெராமசாமி நாயக்கர் சென்னை மாகாண சங்கத்தின் துணைத் தலைவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது! நீதிக்கட்சியின் பரம எதிரியாக இருந்த ராவ் பகதூர் பி.கேசவ பிள்ளை பிராமணத் தலைவர்களின் ஆதரவோடும் ஆசியோடும் சென்னை மாகாண சங்கத்துக்குத் தலைமை தாங்கி நீதிக் கட்சியை நிந்தித்து வந்தார்.



## 17.4.5 மாண்டேகுவின் சென்னை வருகை, 1917

### கோரிக்கை

எட்வின் மாண்டேகு 1917 டிசம்பர் 14 ஆம் தேதி தமிழ் நாட்டில் இருந்த பிரதிநிதித்துவ அமைப்புகள் மற்றுமுள்ள பிரமுகர்களின் கருத்துக்களையும், திட்டங்களைப் பற்றியும் அறிந்து கொள்வதற்காக சென்னை வந்தார். நீதிக்கட்சியின் சார்பாக ஓ.கந்தசாமி செட்டியும், சென்னை மாகாண சங்கத்தின் சார்பாக கேசவ பிள்ளையும் மாண்டேகுவை சந்தித்தனர். நீதிக்கட்சியின் சார்பாக அளிக்கப்பட்ட பொதுநிலை அறிக்கை (Memorandum)யில் 5 வகுப்பினருக்கு பிரதிநிதித்துவம் கோரப்பட்டது: 1) பலிஜா நாயுடுகள்; 2) பிள்ளைமார்; 3) வேளாள முதலியார்; 4) செட்டியார்; 5) பஞ்சமர். இவர்களோடு 4 பிராமண வகுப்பாருக்கும் பிரதிநிதித்துவம் கோரப்பட்டது! அதாவது, நீதிக்கட்சி பிராமணர்களையும் உள்ளிட்ட அனைத்து வகுப்பினருக்கும் விகிதாச்சார பிரதிநிதித்துவம் (Proportional Representation) கேட்டது என்பது நினைவு கூறத்தக்கது.

### நிராகரிப்பு

நீதிக்கட்சியின் கோரிக்கைக்கு சென்னை மாகாண சங்கமும் ஆதரவு அளித்தது. கேசவ பிள்ளை சென்னை மாகாண காங்கிர கமிட்டி உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெற்றுத் தருவதில் வெற்றி பெற்றார். சென்னை ராஜதானி ஆளுநர் பாரன் பெண்ட்லாந்து (Baron Pentland)ம் இம்முயற்சிக்கு ஆதரவளித்தார். மெயில் பத்திரிகையும் வகுப்புவாரி பிரதிநிதித்துவ கோரிக்கைக்கு ஆதரவாக எழுதியது. ஆனால் மாண்டேகு இந்த கோரிக்கையை ஏற்கவில்லை. 1918 ஜூலை 2 ஆம் தேதி வெளியிடப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சீர்திருத்தங்களில் (Indian Constitutional Reforms-Montford Scheme) இக்கோரிக்கை இடம்பெறவில்லை.

## 17.4.6 லண்டனில் நாயர், 1918

### நாயரின் நற்பணி

நீதிக்கட்சியின் வகுப்புவாரி பிரதிநிதித்துவ கோரிக்கையை மாண்டேகு நிராகரித்ததால் சோர்வடையாத நீதிக்கட்சியினர் தஞ்சையில் கூடி விவாதித்து டாக்டர் டி.எம்.நாயரை லண்டனுக்கு அனுப்பி இக்கோரிக்கைக்கு ஆதரவு திரட்டுவதென முடிவு செய்தனர். அதன்படி லண்டன் சென்ற நாயர் (1918 ஜூன்) அங்கு பல்வேறு கூட்டங்களில் கலந்து கொண்டார்; பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதினார்; பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே உரையாற்றினார்; துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டார்; நாயரின் நடவடிக்கைகளின் விளைவாக பிரிட்டிசாரிடையே வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தின் அவசியம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது.

### சௌத்பரோ கமிட்டி

மாண்டேகு திட்டத்தின் அடிப்படையில் வாக்குரிமை வரைவுத் திட்டம் (Franchaise Framework) தயாரிப்பதற்காக சௌத்பரோ கமிட்டி (Southborough

... ஒரு பிராமணரல்லாதவராக இருந்தும் அவர் பிராமணர்களோடு பிராமணராக இருந்து, பிராமண வைதீகத்தை ஆதரித்தது; 2) அவரது கிராமியக் கொள்கை நாடு தொழில்மயமாவதற்கு எதிரானது; 3) காந்தியின் கனவான ராமராஜ்யம் பிராமண ராஜ்யம் என்ற நீதிக்கட்சியினரின் கணிப்பு; 4) காந்தியின் குறிக்கோளான குழப்பவாதம் (Anarcism) நடைமுறை சாத்தியமற்றது; 5) நாட்டின் அரசியல் விடுதலை சமுதாய சுதந்திரத்துக்கு வழிவகுக்கும் என்ற காந்தியின் தவறான முடிவு; 6) சமூக நீதியின் மீது சீரமைக்கப்படும் சமுதாயம் தான் அரசியல் சுதந்திரத்துக்குத் தகுதியானது என்ற நீதிக்கட்சியின் நிலைப்பாடு.

### 17.4.10 காந்தியின் சென்னைப் பேச்சு, 1921

நீதிக்கட்சியின் நிலைப்பாட்டைப் பற்றி நன்கறிந்த காந்தி 1921 ஏப்ரல் மாதம் சென்னை வந்த போது பிராமண கலாச்சாரத்தின் பெருமை பற்றியும், பிராமணர்கள் இந்திய பண்பாட்டுக்கு அளித்த பங்களிப்பு பற்றியும் உயர்வாகப் பேசினார். காந்தியின் இந்த பிராமணர் ஆதரவுப் பேச்சு நீதிக்கட்சியினருக்கு விடப்பட்ட சவாலாக இருந்தது. நீதிக்கட்சி பிராமணரல்லாதார் சார்பாக அதன் எதிர்ப்பைத் தெரிவித்தது. திராவிட கலாச்சாரம், தொன்மை, தத்துவம், இலக்கியம், மொழிச்சிறப்பு, வரலாறு பற்றி எதுவும் தெரியாத காந்தி பிராமணர் பங்களிப்பைப் பற்றி ஒருதலை பட்சமாக உயர்வாகப் பேசியது ஏற்கத்தக்கதல்ல என்று நீதிக்கட்சி அதன் எதிர்ப்பை வெளிப்படுத்தியது.

நீதிக்கட்சியைச் சேர்ந்த **கந்தசாமி செட்டி யங் இந்தியா** பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் பிராமணர்களிடமிருந்து விலகி இருக்குமாறும், பிராமணரல்லாதார் பிரச்சனைகளில் குறுக்கிடாமல் இருக்குமாறும் காந்தியை கேட்டுக் கொண்டார். இதற்குப் பதிலளித்த காந்தி பிராமண கலாச்சாரத்தைப் பற்றிய கருத்தை மீண்டும் வலியுறுத்துவதோடு, இந்தியா பல கலாச்சாரங்களின் கலவை என்றும், திராவிடத் தென்னாட்டை ஆரிய வடநாட்டிலிருந்து பிரித்துப் பார்க்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார். **காந்தியின் ஒழுக்கத் தலைமையை உயர்வாகக் கருதிய நீதிக்கட்சியினர் அவரது பிராமணர் ஆதரவுக் கொள்கையைக் கடுமையாகச் சாடினர்.**

## 17.5 சாதனையாளர்கள்

### 17.5.1 அயோத்திதாசர், 1845–1914

**அயோத்தி தாசர்** திராவிட இயக்கத்தின் முன்னோடி; அவ்வியக்கத்துக்குப் புதிய பாதையைக் காட்டியவர். முதல் தலித் தலைவர். இவர் 1845 மே 20 ஆம் தேதி கோயமுத்தூர் மாவட்டத்தில் **காத்தவராயன்** என்ற கிராமத்தில் பறையர் குலத்தில் பிறந்தவர். இவருடைய தாத்தா **ஆர்லிங்சன்** பிரபு (Lord Arlington)விடம் வேலை பார்த்தவர். அதன் காரணமாக அவரது குடும்பமும், குலமும், கிராமம் வெளிச்சத்துக்கு வந்தன; பிரபலமடைந்தன.

... உடையவராக இருந்தார். யாவற்றுக்கும் மேலாக இவர் சித்த வைத்திய நிபுணராக திகழ்ந்தார்.

அயோத்திதாசர் 1870களில் **நீலகிரி தோதுவர்கள்** (Todas) மற்றும் பி... பழங்குடியினரிடையே தங்கி, அவர்களுடைய பிரச்சனைகளைப் புரிந்து கொண்டு விழிப்புணர்வை உண்டாக்கி, அவர்களை ஒன்று சேர்க்கும் பணியில் ஈடுபட்டார். இந்த அனுபவத்தின் விளைவாக அவருக்குத் திராவிடர் பற்றிய ஆர்வம் ஏற்பட்டது. 1876 ஆம் ஆண்டு **அத்விதாநந்தா சபை** என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். **அருள்திரு ஜான் ரத்தினம்** அவர்களுடன் இணைந்து **திராவிட பாண்டியன்** என்ற இதழை வெளியிட்டார்.

அயோத்திதாசர் 1886 ஆம் ஆண்டு **தீண்டத்தகாதோர் இந்துக்கள் அல்லர்** என்ற அதிர்ச்சி தரக்கூடிய, அசாதாரணமான, புரட்சிகரமான பிரகடனம் செய்தார். இப்பிரகடனம் அன்றைய கல்வியாளர்களிடையே பெரிய சலசலப்பை ஏற்படுத்தியது. சனாதன பழமைவாதிகள் மற்றும் சமூக சீர்திருத்த ஆர்வலர்களின் கவனம் இவர் பக்கம் திரும்பியது. இப்பிரகடனத்தைத் தொடர்ந்து 1891 இல் **திராவிட மகாஜன சபை** (Dravidian Mahajana Sabha) என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். **1891 மக்கள் கணக்கீட்டின்** (Census) போது தலித்துகள் தங்களை சாதியற்ற **திராவிடர்** (Casteless Dravidians) என்று தெரிவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்!

அயோத்திதாசரின் வரலாற்றுப் பார்வை வித்தியாசமாக இருந்தது. அவர் **பண்டைய பறையர்கள் பௌத்தர்கள்** என்றும், நிலச் சொந்தக்காரர்கள் என்றும், அவர்களுடைய நிலத்தை வெளியிலிருந்து வந்த அயலவ **ஆரியர்கள் திருடிக் கொண்டார்கள்** என்றும் கூறினார்! அதுமட்டுமல்ல. அயோத்திதாசர் **கர்னல் ஆல்காட்டை** (Colonel H.S.Olcott)ஐ சந்தித்து புத்த மதத்துக்கு மாறுவது பற்றிப் பேசினார். பேசியதோடு மட்டுமின்றி அவர் ஆல்காட்டின் ஆதரவுடன் இலங்கை சென்று, **சிங்கள புத்த துறவியான பிக்கு சுமங்கள நாயகே**யிடமிருந்து தீட்சை பெற்றார்!

இலங்கையிலிருந்து சென்னை திரும்பிய அயோத்திதாசர் (1898) **சாக்கிய புத்த சங்கம்** (Sakya Buddhist Society) என்ற அமைப்பை உருவாக்கினார். அதன் கிளைகளை தென்னிந்தியாவின் பல இடங்களில் துவக்கினார். இச்சங்கங்களின் கூட்டமைப்பு **இந்திய புத்த சபை** (Indian Buddhist Association) என்று அழைக்கப்பட்டது.

அயோத்திதாசர் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் (1907) **ஒரு பைசா தமிழன்** என்ற செய்தித்தாளை வெளியிட்டார். இதில் பிராமணர்களையும், அவர்கள் திராவிடத் தமிழர்களுக்குச் செய்த அநீதிகளையும் கடுமையாக விமரிசித்தார். இவருடைய புரட்சிகரமான சிந்தனைகளும், நடவடிக்கைகளும், தென்னிந்திய கல்வியாளர் இடையேயும், அரசாங்க அதிகாரிகளிடையேயும், சமூக சீர்திருத்தவாதிகளிடையேயும்

பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அயோத்திதாசர் 1914 ஆம் ஆண்டு 69வது வயதில் இயற்கை எய்தினார்.

அயோத்திதாசர் அறிவாற்றலும், செயலாற்றலும் மிக்க பன்மொழிப் புலவர், இலக்கியவாதி, தென்னாட்டின் முதல் பிராமண எதிர்ப்பாளர். தமிழ் நாட்டின் ஆதிவாசிகளையும், தமிழர்களையும் திராவிடர் வழி வந்தவர்களாகக் கருதினார். பிராமணர்களே தமிழர்களின் தாழ்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணம் என்ற விதையைத் தமிழ் மண்ணில் விதைத்தவர். தலித்துகள் இந்த விஷ வட்டத்திலிருந்து வெளியே கொண்டு வர முனைந்த சமுதாயப் புரட்சியாளர். தலித்துகள் புத்த மதத்துக்கு மாறினால் தான் அவர்களின் கீழ்நிலை நீங்கும் என்று வெளிப்படையாகக் கூறினார். அமைப்பின் அவசியத்தையும், பத்திரிகை பலத்தையும் நன்கறிந்தவர். எனினும் இவரது திராவிடத் தொண்டு இலைமறை காயாய், குடத்தில் வைத்த விளக்காய், கால மணற் பரப்பில் புதையுண்டு போயிற்று.

தற்காலத் தமிழ் நாட்டில் **தலித் எழில்மலை, தலித் சாகித்ய அகாதெமி** (Dalit Sahitya Academy) மூலம் வெளியிட்ட அயோத்திதாசரின் எழுத்துக்களும் எண்ணங்களும் தமிழர்களிடையே இந்த திராவிட முன்னோடியைப் பற்றிய ஆர்வத்தை உண்டாக்கியது. மத்திய சுகாதாரத் துறை அமைச்சராயிருந்த **தலித் எழில்மலை** அயோத்திதாசரின் நினைவாக **தேசிய சித்த வைத்திய ஆராய்ச்சி மையத்தை** (National Centre for Siddha Research) சென்னையில் தோற்றுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். இவரைத் தொடர்ந்து *இந்திய குடியரசுக் கட்சித்* தலைவர் **செ.கு.தமிழரசன்** சித்த வைத்திய ஆராய்ச்சி மையத்தைத் துவக்க வேண்டும் என்று போராடினார். இவற்றின் விளைவாக **2005 செப்டம்பர் 3 ஆம் தேதி சென்னையில் சித்த வைத்திய ஆய்வு மையம்** (Institute of Siddha Research) இந்தியப் பிரதமர் **டாக்டர் மன்மோகன் சிங்கால் திறந்து வைக்கப்பட்டது.**

அயோத்திதாசரின் வரலாற்றுச் சிறப்பைக் குறைக்க முற்பட்டோர் இவர் மீது மூன்று குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர்: 1) இவர் ஆங்கிலேயர் ஆதரவாளர்; 2) இந்திய விடுதலை இயக்கத்துக்கு எதிரானவர்; சுதேசி இயக்கத்தை வன்மையாகக் கண்டித்தவர்; தேசிய பத்திரிகைகளைச் சாடியவர்; 3) பிராமணர் எதிர்ப்பாளர்; பொது வாழ்க்கையில் அவர்களது ஆதிக்கத்தை எதிர்த்தவர். எனினும், அயோத்திதாசரின் வாழ்வும் வாக்கும் எதிர்ப்பு ஏவுகணைகளைத் தாண்டி, காலத்தால் கரைக்க முடியாத, தமிழ் நாட்டின் முன்னேற்றத்தின் முன்னுதாரணமாகத் திகழ்கின்றது. **அம்பேத்கார், பெரியார் ஈ.வே.ரா, உதித்ராஜ், திருமாவளவன்** போன்றோர் அயோத்திதாசரின் கொள்கை வாரிசுகள் என்றால் மிகையாகாது.

## 17.5.2 இரட்டைமலை சீனிவாசன், 1860–1945

### இரட்டையர்

இரட்டைமலை **சீனிவாசன்** அயோத்திதாசரின் மைத்துனர். இருவரும் தலித் இயக்க தலித்துகளின் முன்னேற்றத்தின் ஆழ்ந்த அக்கறை கொண்டவர்கள்; முன்னோடிகள்; இரட்டைமலை **சீனிவாசன் 31வது வயதில் பறையர் மகாசன சபை**



(Paraiyar Mahajana Sabha) என்ற அமைப்பைத் தோற்றுவித்தார் (1891). இந்த அமைப்பே பின்னர் **ஆதிதிராவிட மகாசன சபை** என்று அழைக்கப்பட்டது. இவரது அமைப்புடன் 'திராவிடர்' என்ற சொல்லை இணைத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது. இரட்டை மலை சீனிவாசன் 1893 ஆம் ஆண்டு 'பறையன்' என்ற நான்கு பக்க மாத செய்திப் பத்திரிகையைத் துவக்கினார். இவர் கடுமையான எதிர்ப்பை எதிர்கொண்டு இப்பத்திரிகையை நடத்தினார். இவர் மீது வழக்கு தொடரப்பட்டு ரூ.100 அபராதம் விதிக்கப்பட்டது (1896).

### நீதிக்கட்சி ஆதரவாளர்

இரட்டைமலை சீனிவாசன் நீதிக் கட்சியின் பிராமணரல்லாதார் இயக்கத்தை ஆதரித்தார். இவர் 1917 இல் சென்னையில் நடைபெற்ற முதல் பிராமணரல்லாதார் மாநாட்டில் கலந்து கொண்டார். அப்போது இவரது முன்னிலையில் டாக்டர் டி.எம்.நாயர் ஆரியரும் திராவிடரும் வெவ்வேறு இனங்கள் என்றும், வெளியிலிருந்து வந்த ஆரியர் 'வீட்டுக்குள் நுழைந்த திருடன் போன்று' திராவிடர்களின் சொத்தை சூறையாடிவிட்டனர் என்று பேசினார்.

### விடுதலைப் போராளி

இரட்டைமலை சீனிவாசன் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார். 1930 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற முதல் வட்டமேஜை மாநாட்டில் (Round Table Conference) பி.ஆர்.அம்பேத்காருடன் கலந்து கொண்டார். இவர், எம்.சி.ராஜா, அம்பேத்கார் ஆகியோர் 1932இல் காந்தி துவக்கிய **தீண்டத்தகாதோர் ஊழியர் சங்கத்** (Servants of Untouchables Society)தில் சேர்ந்து விரைவிலேயே அந்த அமைப்பிலிருந்து விலகிக் கொண்டனர். இரட்டைமலை சீனிவாசன் அம்பலத்தாரின் உதவியுடன் **சென்னை மாகாண பட்டியலிடப்பட்டோர் கூட்டமைப்பு** (Madras Province Scheduled Castes Federation) என்ற அமைப்பைத் தோற்றுவித்தார்.

### மதிப்பீடு

அயோத்தி தாசரும், இரட்டைமலை சீனிவாசனும் தலித் இயக்கத்தின் துவக்க காலத் தலைவர்களாகத் திகழ்ந்தனர். இவ்விருவரது பங்களிப்புகளும் தலித்துகளைத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்தன. எனினும், இவர்களது சாதனைகள் திராவிடக் கட்சிகளால் உரிய முறையில் அங்கீகரிக்கப்படவில்லை. இரட்டைமலை சீனிவாசனின் முக்கியத்துவம் காலம் கடந்து உணரப்பட்டது. மத்திய அரசு இவரது நினைவாக அஞ்சல் தலை வெளியிட்டது. **ஒட்டேறியில் 'உரிமைக்கலம்'** என்ற பெயரில் நினைவு மண்டபம் கட்டப்பட்டது. இவரது சிலையும் திறந்து வைக்கப்பட்டது (2009). இரட்டைமலை சீனிவாசன் நினைவாக சென்னை காந்தி மண்டபத்துக்கு அருகே ஒரு மணிமண்டபம் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. அயோத்தி தாசர், இரட்டைமலை சீனிவாசன் ஆகியோரின் நினைப்பை நடைமுறைப்படுத்தினால் அடித்தட்டு தலித்துகள் முன்னேறுவர்.

## 17.5.3 டாக்டர் சி.நடேச முதலியார், 1875–1937

### இளமைப் பருவம்

சி.நடேசன் சென்னை திருவல்லிக்கேணியில் வேளாளர் குடும்பத்தில் பிறந்தார் (1875). இவர் அங்கு பள்ளிப் படிப்பை முடித்தபின் சென்னை பிரசிடென்சி கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்தார். அதன்பின் பித்தாபுரம் மகாராஜா கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின்னர் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். மருத்துவக் கல்லூரி மாணவராக இருந்த போதே பிராமணரல்லாதார் நலனில் ஆர்வம் காட்டினார்.

### சென்னை திராவிடர்

மருத்துவப் படிப்பை முடித்தபின் **சென்னை ஐக்கிய கூட்டமைப்பை** (Madras United League) துவக்கினார் (1912). இக்கூட்டமைப்பில் பல அரசாங்க அலுவலர்கள் சேர்ந்தனர். இக்கூட்டமைப்பு **சென்னை திராவிடர் சபை** (Madras Dravidian Association) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது (1914). இச்சபை பிராமணரல்லாதார் கல்வி வளர்ச்சிக்கு, குறிப்பாக முதியோர் கல்விக்கு முன்னுரிமை கொடுத்தது. சென்னையில் தங்கிப் படித்த பிராமணரல்லாத மாணவர்களுக்கென திராவிடர் விடுதி (Dravidian Home) துவக்கப்பட்டது. டாக்டர் நடேச முதலியார் இவ்விடுதிக்குப் பொறுப்பாளராக இருந்து வழி நடத்திச் சென்றார். இதுவே சென்னையில் திராவிட மாணவர்களுக்காக நடத்தப்பட்ட முதல் விடுதி என்பது குறிப்பிடத்தக்கது.

### சமரசச் செல்வர்

பிராமணரல்லாதார் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட மருத்துவர் நடேச முதலியார் சென்னை வாழ் பிராமணரல்லாத பிரமுகர்களை ஒன்று சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டார். அப்போது சென்னை மாநகராட்சியில் பிரபலமாகத் திகழ்ந்து இரு துருவங்களாக செயல்பட்டு வந்த பிரபலங்களான **செல்வந்தர் பிட்டி தியாகராய செட்டியையும், மருத்துவ மேதை டாக்டர் டி.எம்.நாயரையும்** ஓரணியில் கொண்டு வரும் முயற்சியில் வெற்றி பெற்றார்.

### தோற்றகர்த்தா

டாக்டர் சி.நடேச முதலியார், டாக்டர் டி.எம்.நாயர், பிட்டி தியாகராய செட்டி ஆகிய மூவரும் பிற ஒத்த மனமுடைய பிரமுகர்களும் அப்போது சென்னையில் செல்வாக்குடன் திகழ்ந்த **எத்திராஜ் முதலியாரின்** இல்லத்தில் கூடி பிராமணர் அல்லாதார்க்கென ஒரு பிரத்யேக அமைப்பை ஏற்படுத்துவதைப் பற்றி விவாதித்தனர். இவ்விவாதத்தின் விளைவாக **தென்னிந்திய மக்கள் நல கூட்டமைப்பு** (South Indian Liberal Federation) தோற்றுவிக்கப்பட்டது. **நீதிக்கட்சி** (Justice Party) என்று பொதுமக்களிடையே பிரபலமான இக்கூட்டமைப்பின் தோற்றகர்த்தாக்களில் ஒருவர் என்ற பெருமை நடேச முதலியாருக்கு உண்டு.



### நடுநிலை நின்றவர்

நடேச முதலியார் நடுநிலை தவறாதவர். பிராமணரல்லாதார் நலனில் நாட்டம் கொண்ட தேசியவாதி. தாராள மனப்பான்மை கொண்ட பரந்த பார்வையுடைய சீர்திருத்தவாதி. தன் கருத்துக்களை விருப்பு வெறுப்பின்றி வெளிப்படையாகக் கூறக் கூடியவர். 1923 இல் சென்னை சட்டமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். எனினும் இவர் சட்ட மன்றத்தில் முதலமைச்சர் பனகல் அரசர் மற்றும் அவரது அமைச்சர்களின் செயல்பாடுகளை விமரிசிக்கத் தவறவில்லை. முதலமைச்சர் சுப்பராயனின் அரசாங்கத்தை ஆதரித்தார். அதுமட்டுமல்ல. தீரர் சத்தியமூர்த்தியின் தலைமையில் திறமையாக செயல்பட்ட சுயராஜ்யக் கட்சியின் சாதனைகளைப் பாராட்டினார். அதற்கும் மேல் சென்று நீதிக்கட்சியை இந்திய தேசிய காங்கிரசுடன் இணைத்துவிடும் முயற்சியில் ஈடுபட்டார் டாக்டர் சி.நடேச முதலியார்!

### நீதியை நிலைநாட்டியவர்

நடேச முதலியாரின் நடவடிக்கைகளின் விளைவாக நீதிக்கட்சியினர் **அரசியலமைப்பினர்** (Constitutionalists) என்றும் **அமைச்சரவையினர்** (Ministerialists) என்று இரு பிரிவினர்களாகச் செயல்படலாயினர். நடேச முதலியார் அரசியலமைப்பாளர்களின் தலைவராகத் திகழ்ந்தார். 1927 இல் கோவையில் நடைபெற்ற பிராமணரல்லாதார் மாநாட்டில் இவ்விரு பிரிவினருக்குமிடையே ஏற்பட்ட கருத்து மோதலால் நீதிக்கட்சி பிளவுபட்டது. பின்னர் இவ்விரு பிரிவினரும் இணைந்தனர்; 1929 ஆம் ஆண்டு நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார் டாக்டர் சி.நடேச முதலியார். அந்த மாநாட்டில் தான் பிராமணர்களை நீதிக்கட்சி உறுப்பினர்களாக சேர்ப்பது பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சி.பி.ராமசாமி ஐயர் சாதி முறையை எதிர்த்தும், ஆலய நுழைவுச் சட்டத்தை ஆதரித்தும் பேசியதை நடேச முதலியார் வரவேற்றுப் பாராட்டினார். 1937 சென்னை சட்ட மன்றத் தேர்தலில் போட்டியிடத் தயாராயிருந்த சமயத்தில் டாக்டர் சி.நடேச முதலியார் 62வது வயதில் காலமானார்.

டாக்டர் சி.நடேச முதலியார் மருத்துவத் தொழிலில் பொருள் சேர்க்க வேண்டும் என்று விரும்பாமல் பொதுப் பணிக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டார். இவர் நீதிக்கட்சி துவக்கப்படுவதற்கு முன்பே பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்காக முனைப்புடன் செயல்பட்டார். தான் பெற்ற கல்வியின் பயன் பிற்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பாரையும் சென்றடைய வேண்டும் என்று விரும்பி விழைந்தவர். இவர் துவக்கிய **சென்னை திராவிடர் சபை** நீதிக்கட்சியின் முன்னோடி அமைப்பாகும். அதேபோன்று இவர் நடத்திய **திராவிடர் விடுதி** சென்னையில் படிக்க வந்த பிராமணரல்லாத மாணவர்களுக்குக் காலத்தே செய்த பேருதவியாகும்.

### சமரச சித்தர்

நடேச முதலியார் ஒரு சமரச சித்தர். இரு துருவங்களாக இருந்த தியாகராய செட்டியையும், டாக்டர் டி.எம்.நாயரையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து தேசியல்

மாநாட்டைச் செய்தார். இவர்களுடன் சேர்ந்து நீதிக்கட்சியைத் தோற்றுவித்தார். இவர் நீதிக்கட்சிக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்தார். தேசியக் கண்ணோட்டத்தோடு பிராந்தியப் பிரச்சனைக்குத் தீர்வுகாண முற்பட்டார். நீதிக்கட்சிக்குள் இருந்து கொண்டே அதன் குறைகளைக் களைய முயன்றார். கருத்து சுதந்திரத்துக்கு மதிப்பளிக்காத எந்த அமைப்பும் நீடித்து நிலைக்க முடியாது என்ற அரசியல் விவேகத்தைத் தமிழருக்கு உணர்த்தியவர். நீதிக்கட்சியின் இதயமாகத் திகழ்ந்த நடேச முதலியார் அன்புக்கும், பண்புக்கும், பொறையுடைமைக்கும, சமரச மனப்பான்மைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கினார். **தென்னிந்திய பிரபலங்கள்** (South Indian Celebrities) என்ற நூலின் ஆசிரியர் கே.எம்.பாலப்பிரமணியன் டாக்டர் சி.நடேச முதலியாரை மகாத்மா காந்தியுடன் ஒப்பிட்டு எழுதியுள்ளார்.

## 17.5.4 டாக்டர் டி.எம். நாயர், 1868–1919

### கல்விக் குடும்பம்

மாதவன் 1868 ஜனவரி 15 ஆம் தேதி கேரளாவில் பாலக்காட்டுக்கு அருகே திரூரில் தரவாத் நாயர் குடும்பத்தில் பிறந்தார். எனவே, இவர் திரூர் மாதவன் நாயர் (T.M.Nair) என்று அழைக்கப்பட்டார். இவரது தந்தை சிங்கிசம் வீட்டில் சங்கரன் நாயர் திரூரில் துணை ஆட்சியராக (Deputy Munsif)ப் பணியாற்றியவர். மாதவனின் மூத்த சகோதரர் சட்டக் கல்வி பெற்று மாவட்டத் துணை ஆட்சியராக (Deputy Collector) பணிபுரிந்தவர்; சகோதரி தரவாத அம்மலு அம்மாள் மலையாள், சமகிருத மொழி வல்லுநர். சுருங்கக் கூறின், மாதவன் நாயர் கல்விக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

### மருத்துவ மேதை

மாதவன் பாலக்காடு அரசினர் உயர்நிலைப் பள்ளியில் படித்து விட்டு, சென்னை மாநிலக் கல்லூரியில பட்டப் படிப்பை முடித்து விட்டு, சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். மருத்துவப் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு இங்கிலாந்து சென்றார் மாதவன். இங்கிலாந்து சென்ற மாதவன் நாயர் எடின்பர்க் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து முதுகலைப் பட்டம் (MD) பெற்றார். இவர் கல்லூரி மாணவராக இருந்த போது எடின்பர்க் மாணவர் மன்றச் செயலராக இருந்தார். பின்னர் படிப்பை முடித்தவுடன் எடின்பர்க் இந்திய சங்கத் தலைவராகவும்; எடின்பர்க் பல்கலைக் கழக முற்போக்கு சங்க உறுப்பினராகவும்; எடின்பர்க் பல்கலைக்கழக முற்போக்கு இதழின் ஆசிரியராகவும்; லண்டன் இந்தி சங்க செயலாளராகவும் பின்னர் அதன் துணைத் தலைவராகவும்; பிரிட்டிஷ் மருத்துவ சங்கம், ராயல் ஆசிய சங்கம், தேசிய முற்போக்கு மன்றம் மற்றும் ராயல் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினராகவும் இருந்தார். இவரது பலதரப்பட்ட நடவடிக்கைகளால் மாதவன் நாயரின் பெயர் எடின்பர்க்கில் மிகவும் பிரபலமடைந்தது. 1896 ஆம் ஆண்டு டாக்டர் மாதவன் நாயர் பிரான்சின் தலைநகர் பாரீ சென்று காது, மூக்கு, தொண்டை வியாதிகள் பற்றி ஆராய்ச்சி செய்தார். ஓராண்டு ஆராய்ச்சிக்குப் பின் சென்னை திரும்பினார் மாதவன் நாயர் (1897).



### காங்கிரஸ்காரர்

சென்னை திரும்பிய டாக்டர் மாதவன் நாயர் அகில இந்திய காங்கிரசில் சேர்ந்தார். காங்கிர மாநாடுகளில் பங்கேற்று (1897–1899) இந்திய மருத்துவர் பணி பற்றியும், மருத்துவ அதிகாரிகளின் அவலநிலை குறித்தும் பேசினார். இத்துறைகளில் ஆங்கில அரசாங்கத்தின் அக்கறையின்மை பற்றிக் குறை கூறினார். இந்திய மருத்துவர்கள் ஆங்கில மருத்துவர்களுக்கு சமமாகக் கருதப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார். 1907 இல் சித்தூரில் நடைபெற்ற மாவட்ட காங்கிர கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார் நாயர்.

### சகலகலா வல்லவர்

டாக்டர் டி.எம்.நாயர் 12 ஆண்டுகள் சென்னை மாநகராட்சி உறுப்பினராகப் பணியாற்றினார் (1904–1916). திருவல்லிக்கேணியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் நகராட்சிப் பிரச்சனைகள் பற்றி, குறிப்பாகக் குடிநீர் வினியோகம் பற்றிய மக்கள் எதிர்பார்ப்புகள் பற்றிப் பேசினார். இதற்கிடையே அவர் இந்திய அரசால் தொழில் கமிஷன் (Labour Commission) உறுப்பினராக நியமிக்கப்பட்டார் (1908). அப்போது தொழிலாளர்களின் பிரச்சனைகள் பற்றி, குறிப்பாக அவர்களது வேலை நேரத்தைக் குறைப்பது உள்ளிட்ட பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை லண்டனில் இருந்த அரசாங்கச் செயலாளர் (Secretary of State) நேரில் சந்தித்துக் கொடுத்தார் (1908)! 1912 இல் நாயர் சென்னை சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதல் உலகப் போரின் போது (1914–1918) எ.எ.மதரா (S.S.Madras) கப்பலில் மருத்துவப் பணி செய்தார். போர் முடிந்தவுடன் பிரிட்டிஷ் அரசாங்கம் அவருக்கு கெய்சர்–இ–ஹிந்த் (Kaiser-i-Hind) பதக்கம் வழங்கி பெருமை செய்தது. பின்னர் அவருக்கு போர் சேவை பதக்கமும் (War Service Medal) வழங்கப்பட்டது.

### நீதிக்கட்சியில் நாயர்

முதல் உலகப் போர் முடிந்ததும் டாக்டர் டி.எம்.நாயர் அவரது பார்வையைப் பிராமணரல்லாதார் பிரச்சனைகள் பக்கம் திருப்பினார். டாக்டர் சி.நடேச முதலியாரின் சமரச ஆலோசனையை ஏற்றுக் கொண்டு பிட்டி தியாகராய செட்டியாருடன் அணி சேர்ந்தார். இம்மூவரும் இணைந்து நீதிக்கட்சி என்றழைக்கப்பட்ட **தென்னிந்திய மக்கள் நல கூட்டமைப்பை** (South Indian Liberal Federation)த் தோற்றுவித்தனர் (1916). 1917 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற முதல் பிராமணரல்லாதார் மாநாட்டில் கலந்து கொண்ட தியாகராய செட்டி "திராவிட நாகரிகத்தின் தனிச் சிறப்புத் தன்மை (genius) பிறப்பால் மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையேயான வேறுபாட்டை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை" என்றார். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும். அதே மாநாட்டில் கலந்து கொண்ட டாக்டர் நாயர், தியாகராய செட்டி மற்றும் இரட்டைமலை சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் பின்வருமாறு பேசினார்: "இந்தியாவில் இரண்டு இனங்கள் தான் உண்டு: ஒன்று சொத்துக்குச் சொந்தக்காரர்களான திராவிடர்கள்; இரண்டாவது தூங்கும் போது திருடியவர்களைப் போன்ற ஆரியர்கள்". ஆரியர்கள் தான் பிரம்மாவின் உடலிலிருந்து உருவாக்கப்பட்டது தான் நான்கு சாதி வர்ணமுறை என்று திராவிடர்களை நம்ப

அதிலிருந்துதான் படித்தவர்கள் பிராமணர்கள் என்றும், படிக்காதோர் சூத்திரர்கள், தீண்டத்தகாதோர் என்றும் பிரிக்கப்பட்டனர் என்ற விளக்கத்தை கூறி நீதிக்கட்சியின் நோக்கத்தை விவரித்தார்.

## நீதிக்கு ஆசிரியர்

டாக்டர் டி.எம்.நாயர் தென்னிந்திய மக்கள் நலக் கூட்டமைப்பின் நீதி (Justice) ஆங்கிலப் பத்திரிகையின் தலைமை ஆசிரியராக இருந்து கருத்துப் பிரச்சாரம் செய்தார். இவரது தலைமையில் இப்பத்திரிகை மிகுந்த செல்வாக்கு பெற்றது. இப்பத்திரிகையின் பெயரால் தென்னிந்திய மக்கள் நலக் கூட்டமைப்பு **நீதிக்கட்சி** என்று புகழ் பெற்றது.

## ஓயா உழைப்பாளி

டாக்டர் நாயர் 1918–1919இல் உடல் நலக் குறைவையும் பொருட்படுத்தாமல் லண்டன் சென்றார். அங்குள்ள பாராளுமன்ற குழுவின்முன் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தின் இன்றியமையாமையைப் பற்றிக் கூறுவதற்காகச் சென்றார் நாயர். அங்கு பல நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். ஓயாது ஒழியாது உழைத்த டாக்டர் டி.எம்.நாயர் லண்டனில் 1919 ஜூலை 17 ஆம் தேதி 51 வயதில் இயற்கை எய்தினார்.

## மதிப்பீடு

டாக்டர் டி.எம்.நாயர் நல்ல கல்விக் குடும்பத்தில் இருந்து வந்தவர். அவரது குடும்பப் பின்னணியும், இங்கிலாந்து அனுபவமும், மருத்துவ அறிவும் நாயரைப் பல்திறன் கொண்ட மேலைநாட்டு முற்போக்கு நோக்குடைய நவீன மனித மேதையாக்கின. உயர் சாதிக் குடும்பத்தில் பிறந்த நாயர் கீழ்ச்சாதியினருக்கு இழைக்கப்பட்ட கொடுமை கண்டு கொதித்தெழுந்தார். ஆரிய–திராவிடப் பிரச்சனையை இன மாறுபட்ட இனங்களின் போராட்டமாகப் பார்த்தார். பிராமணர் ஆதிக்கம் பொறுக்க முடியாமல் காங்கிரசை விட்டு வெளியேறினார். காங்கிரசை விட்டு வெளியே வந்த டாக்டர் நாயர் அன்னிபெசண்டின் பிராமண ஆதரவுப் போக்கை வன்மையாகக் கண்டித்தார். சுயாட்சி (Home Rule) இயக்கத்தை கடுமையாக விமரிசித்தார்.

நடேச முதலியார் (தமிழ்), தியாகராய செட்டி (தெலுங்கு), நாயர் (மலையாளம்) ஆகியோர் ஒருங்கிணைந்து துவக்கிய நீதிக்கட்சி தற்காலத் தமிழ்நாட்டு வரலாற்றில் முக்கிய மைல்கல் ஆகும். நாயர் 'நீதி'யின் ஆசிரியராக இருந்து சமுதாய நீதிக்காக அரும்பாடுபட்டார். அப்பணியாற்றியபோதே உயிர்த் தியாகம் செய்தார். ஆங்கிலேயர் போன்று உடை அணிந்து, ஆங்கிலேயர் நடைமுறைகளைப் பின்பற்றியதால் நாயரை **ஆங்கிலப் பித்தர் (Anglophile)** என்று குறை கூறினர். ஆங்கிலப் புலமை இருந்தும் நாயர் தாய்மொழிப் பற்றுடையவர்; தூய்மையான மலையாள மொழியில் எழுதியும், பேசியும் வந்தார். சென்னை தியாகராய நகரில் இவர் பெயரில் ஒரு பாதை உள்ளது. 2008 ஆம் ஆண்டு மத்திய அரசு நாயரைப் பெருமைப்படுத்தி அஞ்சல் தலை வெளியிட்டது. சுருங்கக் கூறின், டாக்டர் டி.எம்.நாயர் சமூக நீதிக் காவலர்களில ஒருவர். "டாக்டர் டி.எம்.நாயர் அக்காலத்தில் தேசியவாதிகளில் முக்கியமான பிராமணரல்லாத தேசியவாதி" என்பது பெரியார் ஈ.வெ.ராவின் கணிப்பு.

### 17.5.5 பிட்டி தியாகராய செட்டி, 1852–1925

## செல்வமும் செல்வாக்கும்

தியாராயர் 1852 ஏப்ரல் 27 ஆம் தேதி எகத்தூரில் செல்வமும், செல்வாக்கும்மிக்க தேவாங்க செட்டிக் குடும்பத்தில் பிறந்தார். இவரது குடும்பத் தொழில் கைத்தறிநெசவு, துணிகள் தயாரித்தல், தோல் வணிகம். தியாகராயர் பள்ளிப் படிப்பை முடித்தபின் சென்னை மாநிலக் கல்லூரியில் சட்டம் பயின்று தேர்ச்சி பெற்றார். வழக்குரைஞரானார்.

## பொதுப்பணி

கல்லூரிப் படிப்பை முடித்தபின் வக்கீல் தொழிலைவிட பொது வாழ்க்கையில் அதிக ஆர்வம் காட்டினார் தியாகராயர். இவர் 1882 லிருந்து 1922 வரை சென்னை மாநகராட்சியின் உறுப்பினராகவும், தலைவராகவும் இருந்துள்ளார். அப்போது இவருக்கும் டாக்டர் பி.டி.நாயருக்குமிடையே கருத்து மோதல் இருந்தது. டாக்டர் சி.நடேச முதலியாரின் சமரச முயற்சியால் இவ்விருவரும் கருத்து வேறுபாடுகளைக் களைந்துவிட்டு பிராமணரல்லாதார் சமூக நீதிக்காக ஒருங்கிணைந்தனர்.

## வணிக வேந்தர்

தியாகராய செட்டி 1910 லிருந்து 1921 வரை **தென்னிந்திய வணிகக் கழகத்தை** (South Indian Chamber of COmmerce) தோற்றுவித்து அதன் தலைவராகப் பணியாற்றினார். சென்னையில் நடைபெற்ற தொழில் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராயிருந்து அம்மாநாட்டை வெற்றிகரமாக நடத்தினார்.

## திராவிட இயக்கத்தில் தியாகராயர்

1909 ஆம் ஆண்டு பி.சுப்பிரமணியம், எம்.புருஷோத்தம் ஆகிய இரண்டு வழக்குரைஞர்களால் துவக்கப்பட்ட **சென்னை பிராமணரல்லாதார் சங்கத்** (adras Non-Brahmin Association)தில் சேர்வதில் தியாகராய செட்டி ஆர்வம் காட்டவில்லை. ஆனால் 1912 இல் டாக்டர் சி.நடேச முதலியார் ஆரம்பித்த சென்னை ஐக்கிய கூட்டமைப்பில் (Madras United League) சேர்ந்தார்! இக்கூட்டமைப்பே சென்னை திராவிடர் சபை (Madras Dravidian Association) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இச்சபை நடேச முதலியாரின் தலைமையில் பிராமணரல்லாதோருக்கு குறிப்பாக மாணவர்களுக்காகப் பல்வேறு கல்விப் பணிகளைச் செய்து வந்தது. முதலியாருடன் சேர்ந்து செட்டியாரும் கல்வி நிறுவனங்களுக்கு நன்கொடைகளை தடையின்றி வாரி வழங்கினார்.

## பிராமணரல்லாதார் பிரகடனம்

தியாகராய செட்டி தேசபக்திமிக்க காங்கிர காரராக இருந்தார். ஆனால் காங்கிர பிராமணர்களின் பிடியில் இருந்ததையும், பிராமணரல்லாதார் நலன் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டதாலும் மனம் வருந்தி காங்கிரசைவிட்டு வெளியேறினார். அதன் பின்னர் டாக்டர் நடேச முதலியார், டாக்டர் நாயர் ஆகியோருடன் சேர்ந்து நீதிக்கட்சி என்று அழைக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைக் கூட்டமைப்பைத் தோற்றுவித்தார்.

1916 டிசம்பர் 20 ஆம் தேதி வரலாற்றுச் சிறப்புமிக்க பிராமணரல்லாதார் பிரகடனத்தை (Non-Brahmin Manifesto) வெளியிட்டனர். சென்னையில் கூடிய முதல் பிராமணரல்லாதார் மாநாட்டில் திராவிட நாகரிகத்தின் தனித்தன்மை பற்றிப் பேசினர். நீதிக்கட்சியின் நோக்கங்கள் தெளிவுபடுத்தப்பட்டன.

## முடிசூடா மன்னர்

தியாகராய செட்டி 1917 ஆம் ஆண்டு நீதிக்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன்பின் எட்டு ஆண்டு காலம் அக்கட்சியின் முடிசூடா மன்னராகக் கோலோச்சினார்! இவரது தலைமைக் காலத்தில் பல பிராமணரல்லாதார் மாநாடுகள் நடத்தப்பட்டன. சமூக நீதிப் பிரச்சாரம் சென்னை ராஜதானி எங்கும் மேற்கொள்ளப்பட்டது. மாவட்ட, நகர் மன்றக் கிளைகள் துவக்கப்பட்டன. ஆங்கில அரசாங்கத்தின் ஆதரவோடு நீதிக்கட்சி வளர்ந்தது; நீதிக்கட்சி அரசாங்கம் பல பிராமணரல்லாதார் நலத் திட்டங்களை நிறைவேற்றியது. இவர் சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்த போது தான் முதல் முறையாக குறிப்பிட்ட மாநகராட்சிப் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது (1921). அதன் பின்னர் நீதிக்கட்சி அரசாங்கம் நகராட்சிகள் சட்ட (The Municipalities Act G.O.N No.1008 dt.07-06-1922)த்தில் திருத்தம் செய்து மதிய உணவுக்கான செலவை அரசாங்கச் செலவாக ஏற்றுக் கொண்டது. பிராமணரல்லாதாரிடையே ஒற்றுமை உணர்வு எக்காலத்திலும் இல்லாத அளவுக்கு விரிவடைந்தது. சுருங்கக்கூறின், தியாகராய செட்டியின் தலைமையில் பிராமணரல்லாதார் கல்வி, சமூக, பொருளாதார, அரசியல், நிர்வாக, கலை கலாச்சாரத் துறைகளில் முன்னேறத் துவங்கினர். இம்முன்னேற்றத்துக்குக் காரணமான பிட்டி தியாகராய செட்டி 1925 ஜூன் 30 ஆம் தேதி 75வது வயதில் 'வெள்ளுடை வேந்தர்' காலமானார்.

## மதிப்பீடு

தியாகராயர் பிறக்கும்போதே வாயில் வெள்ளிக் கரண்டியோடு பிறந்தவர்! செல்வச் செழிப்போடு வாழ்ந்தவர். தற்காலத் தமிழ் நாட்டு அரசியல் வரலாற்றில் தனக்கென தனித்த இடத்தைப் பிடித்துக் கொண்டு தனித்தன்மையோடு செயல்பட்டவர்; அவருக்கென தனி முத்திரையைப் பதித்தவர். உயர் சாதிக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த தியாகராய செட்டி ஆங்கிலக் கல்வி பெற்று சென்னை மாநகராட்சியில் பல ஆண்டு காலம் பணியாற்றியபின் பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்துக்காக நீதிக்கட்சியைத் தோற்றுவிக்கக் காரணமாக இருந்தோரில் முக்கியமானவர். இவரது பிராமணரல்லாதார் பிரகடனம் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆதார ஆவணமாகும்.

தியாகராய செட்டி ஆங்கில அரசாங்கத்தின் ஆதரவாளர். பிரிட்டிஷ் அரசாங்கம் இவரது சேவையைப் பாராட்டி திவான் பகதூர் பட்டத்தையும் (1915), சர் பட்டத்தையும் கொடுத்துப் பெருமைப்படுத்தியது (1921). தேச பக்தியும் கடவுள் பக்தியுமிக்க தியாகராயர் பிராமண எதிர்ப்பாளரோ, வெறுப்பாளரோ அல்லர். ஒத்த தகுதியுடைய பிராமணரல்லாதார் அவர்களது எண்ணிக்கைக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையி அனைத்துத் துறைகளிலும் பிராமணர்களுக்குச் சமமான வாய்ப்புகளைப் பெ

# 18. நீதிக்கட்சி ஆட்சி, 1920–1937

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கொள்கையாகக் கொண்டிருந்த இக் கட்சியானது, அந்நாளில் நடந்து வந்த விடுதலைப் போருக்கு முதல் நம்பர் எதிரியாகச் செயல்பட்டு வந்தது.

– ம.பொ.சிவஞானம்

## 18.1 சென்னை சட்டமன்றத் தேர்தல், 1920

### 18.1.1 நீதிக்கட்சியின் அமைப்பு

நீதிக்கட்சி ஒரு அரசியல் அமைப்பாக துவக்கப்பட்டது. அதன் நோக்கம் பிராமணரல்லாதாரிடையே விழிப்புணர்வை உருவாக்கி, தேர்தலில் போட்டியிட்டு, ஆட்சியைக் கைப்பற்றி, சமூக நீதியை நிலைநாட்டுவதாகும். நீதிக்கட்சியின் நிர்வாகிகள் 1917 அக்டோபர் மாதம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நீதிக்கட்சி வெளியிட்ட கொள்கை அறிக்கையே அக்கட்சியின் அரசியல் சட்ட வரைவாகக் கருதப்பட்டது. 1925 டிசம்பர் 19 ஆம் தேதி நீதிக்கட்சியின் அமைப்புச் சட்டம் (Party Constitution) அங்கீகரிக்கப்பட்டது. அதன் அலுவலகம் மௌண்ட் ரோடில் இருந்தது. கட்சிக் கிளைகள் முதலில் சென்னையில் துவக்கப்பட்டு பின்னர் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டன. கட்சித் தலைவர்கள் அவ்வப்போது மாவட்டக் கிளைகளுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டனர்.

நீதிக்கட்சிக்கு ஒரு தலைவரும், நான்கு துணைத் தலைவர்களும், ஒரு பொதுச் செயலரும், ஒரு பொருளாளரும் இருந்தனர். 25 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு (Executive Committee) கட்சியின் கொள்கை முடிவுகளை செயல்படுத்தியது. 1920 தேர்தலுக்குப் பிறகு நீதிக்கட்சி ஐரோப்பிய அரசியல் கட்சி போன்று சீரமைக்கப்பட்டது. கட்சிக் கொறடா (Party Whip) என்ற புதிய கட்சிப் பதவி உருவாக்கப்பட்டது. செயற்குழு உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள் (Committees) அமைக்கப்பட்டன. நீதிக்கட்சித் தலைவர் கட்சியோடு இணைக்கப்பட்ட அனைத்து பிராமணரல்லாதார் சங்கங்களுக்கும் பொதுவான தலைவர் என்பது உறுதி செய்யப்பட்டது. அவரே சட்டமன்ற உறுப்பினர்களின் தலைவராகவும் செயல்பட்டார். செயற்குழு, அதன் உறுப்பினர்களது நிலை வரையறுக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் நீதிக்கட்சி மாநாடு கூட்டப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. நீதிக்கட்சியின் முதல் தலைவராக சர்.தியாகராய செட்டியும், முதல் பொதுச் செயலாளராக ஆர்க்காடு ராமசாமியும் பொறுப்பேற்றனர். ஒரு மாநில அரசியல் கட்சி எவ்வாறு அமைக்கப்படவேண்டும் என்பதற்கு நீதிக்கட்சி சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. நீதிக்கட்சி 1920 ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை சட்டமன்றத் தேர்தலில் முதல் முறையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றது.

### 18.1.2 சென்னை சட்டமன்றம்

சென்னை சட்டமன்றம் (Madras Legislative Council) 1861 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அப்போது அம்மன்றம் மக்கள் பிரதிநிதிகளை கொண்டிருக்கவில்லை. ஆலோசனை அவையாக மட்டுமே இருந்தது. அதன்பின் 1909 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மிண்டோ–மார்லி சீர்திருத்தங்களின் (Minto-Morley Reforms) விளைவாக மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் இடம் பெற்றனர். பின்னர் 1919 இல் மாண்டேகு–செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் (Montford Reforms)படி அறிமுகப்படுத்தப்பட்ட இரட்டை ஆட்சி (Dyarchy)யின் கீழ் நடைபெற்ற தேர்தலில் சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றம் ஓரவை (Unicameral) அமைப்பாக 1920லிருந்து 1937 வரை செயல்பட்டது.

### 18.1.3 சட்டமன்றத் தேர்தல், 1920

#### தேர்தல் தொகுதிகள்

சென்னை சட்டமன்றத்தில் 127 உறுப்பினர்கள் இருந்தனர். ஆளுநரின் நியமன உறுப்பினர்கள் இந்த எண்ணிக்கையில் அடங்கார். 127 உறுப்பினர்களில் 98 பேர் 61 தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்தல் தொகுதிகள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன: 1) வகுப்புவாரி தொகுதிகள் (Communal Constituencies) இவற்றுள் முகமதியரல்லாத நகரம், முகமதியரல்லாத கிராமம், பிராமணரல்லாத நகரம், முகமதியர் நகரம், முகமதியர் கிராமம், இந்திய கிறித்துவர், ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர் ஆகியோருக்கான தொகுதிகள் அடங்கும்; 2) சிறப்புத் தொகுதிகள்: (Special Constituencies) நிலச் சொந்தக்காரர், பல்கலைக்கழகங்கள், பண்ணையார், வர்த்தக சங்கங்கள் ஆகியோருக்கான தொகுதிகள் இவை; 3) ஒதுக்கப்பட்ட தொகுதிகள் (Reserved Constituencies) இத்தொகுதிகளில் 28 பிராமணரல்லாதவர்களுக்கும்; 29 நியமன உறுப்பினர்களுக்கும்; 5 பறையர், பள்ளர், வள்ளுவர், மாலா, மடிகா, சக்கிலியர், தோட்டியர், செறுமான்கள், ஹோலேயர் ஆகிய வகுப்பினருக்கும்; ஒரு தொகுதி 'பிற்பட்ட பகுதிகளுக்கும்' (Backward Tracts) ஒதுக்கப்பட்டன. நியமன உறுப்பினர்களையும் சேர்த்து சென்னை சட்டமன்றத்தின் மொத்த எண்ணிக்கை 134.

#### வாக்காளர்களும், வாக்குப்பதிவும்

சென்னை சட்டமன்றத்துக்கான முதல் பொதுத் தேர்தல் 1920 நவம்பர் மாதம் நடைபெற்றது. அப்போது சென்னை ராஜதானியின் மக்கள்தொகை 40 மில்லியன். சொத்துத் தகுதி உடையோர் மட்டுமே வாக்காளர்களாக அங்கீகரிக்கப்பட்டனர். எனவே, 12,48,156 பேர் மட்டுமே வாக்களிக்கும் தகுதியைப் பெற்றிருந்தனர். இவர்களுள் 3,03,558 பேர் மட்டுமே வாக்களித்தனர்! சராசரியாக 24.9% வாக்குப் பதிவாயிற்று. இருப்பினும் இத்தேர்தல் மக்களின் அரசியல் விழிப்புணர்வையும், பொதுத் தேர்தலில் நேரடியாகப் பங்கேற்கும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துவதாக இருந்தது. மைலாப்பூர் தொகுதியில் மட்டுமே அதிகபட்சமாக 52% வாக்குகள் பதிவாயின என்பது குறிப்பிடத்தக்கது.

### தேர்தல் முடிவுகள்

இந்திய தேசிய காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று சட்டமன்றத் தேர்தலைப் புறக்கணித்தது. பலமிக்க எதிர்க்கட்சி இன்மையால் நீதிக்கட்சி 63 இடங்களில் வெற்றி பெற்றது. தேர்தல் முடிவுகள் வருமாறு:

| கட்சிகள் | தேர்ந்தெடுக்கப்பட்டோர் | நியமன உறுப்பினர் | மொத்தம் |
|---|---|---|---|
| நீதிக்கட்சி | 63 | 0 | 63 |
| காங்கிரஸ் | -- | பங்கேற்கவில்லை | -- |
| சுயேட்சைகள் | 18 | 0 | 18 |
| அமைச்சரவை எதிர்ப்பாளர் | 17 | 0 | 17 |
| அலுவலர்கள் | 0 | 11 | 11 |
| அலுவலரல்லாதார் | 0 | 18 | 18 |
| மொத்தம் | 98 | 29 | 127 |

தேர்ந்தெடுக்கப்படாத 18 உறுப்பினர்கள் ஆதரவைப் பெற்ற நீதிக்கட்சியின் எண்ணிக்கை 81 ஆக உயர்ந்தது.

### வகுப்புவாரியான எண்ணிக்கை

தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் தேர்ந்தெடுக்கப்படாத சட்டமன்ற உறுப்பினர்களின் வகுப்புவாரியான விபரம் வருமாறு:

| கட்சிகள் | தேர்ந்தெடுக்கப்பட்டோர் | தேர்ந்தெடுக்கப்படாதோர் | மொத்தம் |
|---|---|---|---|
| பிராமணர் | 17 | 5 | 22 |
| பிராமணரல்லாதார் | 57 | 8 | 65 |
| பிற்படுத்தப்பட்டோர் | 0 | 5 | 5 |
| முகமதியர் | 13 | 1 | 14 |
| இந்திய கிறித்துவர் | 5 | 1 | 6 |
| ஐரோப்பியர் மற்றும் ஆங்கிலோ இந்தியர் | 6 | 9 | 15 |
| மொத்தம் | 98 | 29 | 127 |

1920 சட்டமன்றத் தேர்தலில் நீதிக்கட்சி குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றமைக்கான முக்கிய மூன்று காரணங்களாவன: 1) காங்கிரஸ் இத்தேர்தலைப் புறக்கணித்தது; 2) நீதிக் கட்சியின் தீவிரப் பிரச்சாரம்; 3) பிராமணரல்லாதாருக்கான இட ஒதுக்கீடு வாங்கித் தருவதாகக் கொடுத்த வாக்குறுதி.

## 18.2 நீதிக்கட்சி ஆட்சி I, 1920–1923

### 18.2.1 சுப்பராயலு நாயுடு ஆட்சி

சென்னை ராஜதானி ஆளுநர் மார்க்குவிஸ் வில்லிங்டன் (Marquess Willington) தேர்தலில் வெற்றி பெற்ற நீதிக்கட்சித் தலைவர் பி.தியாகராய செட்டியை ஆட்சி அமைக்குமாறு அழைத்தார். ஆனால் அவர் மக்கள் வரிப்பணத்தில் ஊதியம் பெற விரும்பவில்லை எனக் கூறி அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருக்குப் பதில் ஏ.சுப்பராயலு நாயுடுவின் பெயரைப் பரிந்துரைத்தார். அவரின் பரிந்துரையை ஏற்று சுப்பராயலு நாயுடுக்கு அழைப்பு விடுத்தார் ஆளுநர். ஆளுநரின் அழைப்பை ஏற்று நாயுடு முதலமைச்சரானார். அவருடன் ராமராயனிங்கரும், வெங்கட ரெட்டி நாயுடுவும் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்கள் 1920 டிசம்பர் 17 ஆம் நாள் பதவிப் பொறுப்பேற்றனர்.



பெருங்காவூர் ராஜகோபாலாச்சாரி சட்டமன்றத் தலைவராக நியமிக்கப்பட்டார். எட்வின் பெரியநாயகம், ஆர்க்காடு ராமசாமி முதலியார், பி.சுப்பராயன் ஆகிய மூவரும் சட்டமன்ற செயலர்களாயினர். சர் லியோனல் டேவிட்சன் (உள்துறை), சர் சார்லஸ் தோதுந்தர் (நிதி), முகமது ஹபிபுல்லா (வருவாய்), எ.சீனிவாச ஐயங்கார் (சட்டம்) ஆகிய சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளுநர் ஆட்சி அவையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். பிராமணரல்லாதார் அமைச்சரவையில் பிராமணர் அமைச்சராக நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. 1921 ஜூலை 11 ஆம் தேதி உடல் நிலை காரணமாக சுப்பராயலு ரெட்டியார் பதவி விலகியதால் அவருக்குப் பதில் பனகல் அரசர் (Raja of Panagal) முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். ஏ.பி.பாட்ரோ கல்வி அமைச்சரானார். நீதிக்கட்சியின் முதல் அமைச்சரவை 1923 செப்டம்பர் 11 வரை பதவியில் இருந்தது.

### 18.2.2 சட்டச் சாதனைகள்

முதல் நீதிக்கட்சி அரசாங்கம் சில வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சட்டங்களை நிறைவேற்றி நடைமுறைப்படுத்தியது. 1) 1921 ஏப்ரல் முதல் தேதி சென்னை சட்டமன்ற தீர்மானத்தின்படி சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட பெண்களுக்கு (1919 இந்திய அரசாங்கச் சட்டத்தில்) விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது. இத்தடை நீக்கம் 1926 இல் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட வழிவகுத்தது. 2) 1920 இல் சென்னை மாநகராட்சி சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் இருந்த பள்ளிகளில் இலவச காலை உணவு வழங்குவதற்கு சட்டமன்றம் அங்கீகாரம் அளித்தது. இதுவே, பின்னர் மதிய உணவுத் திட்டமாக விரிவடைந்தது. 3) பஞ்சமர், தீண்டத்தகாதோர், அரிஜன் என்று முத்திரை குத்தி சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த மக்கள் ஆதிதிராவிடர் என்று அழைக்கப்பட்டு சமுதாய அந்தஸ்து அளிக்கப்பட்டது. 4) உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (Local Boards Act, 1920) மாவட்ட, தாலுகா, பஞ்சாயத்து நிறுவனங்களுக்கு சுயேட்சையாக இயங்கக்கூடிய அதிகாரத்தைக் கொடுத்தது. இச்சட்டம் உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டியது. இந்த அமைப்புகளுக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்ததோடு அதிகாரிகளுக்கு இவற்றின் மீது இருந்த ஆதிக்கத்தைக் குறைத்தது. 5) 1922 டிசம்பர் 18 ஆம் நாள் இந்து சமய அறக்கட்டளை சட்ட மசோதா (Madras Hindu Religious Endowment Act) இச்சட்டம் 1925 இல் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் மூலம் சென்னை ராஜதானியில் உள்ள அனைத்து இந்து கோயில்களும் அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம் அரசாங்கத்தின் சமயக் கொள்கையைத் தீர்மானித்தது.

... சம்பந்தமாக கொண்டுவரப்பட்ட சட்டங்களுக்கு முன்மாதிரிச் சட்டமாக அமைந்தது. முதல் நீதிக்கட்சி அரசாங்கம் கொண்டு வந்த இந்த ஐந்து சீர்திருத்தங்களும் அசாதாரண முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

### தாழ்த்தப்பட்டோருக்குத் தனி அதிகாரி

சட்டங்களை நிறைவேற்றினால் மட்டும் போதாது; அவை செம்மையாக நிறைவேற்றப்படுதல் வேண்டும். குறிப்பாக நீதிக்கட்சி ஆட்சி தாழ்த்தப்பட்டோரின் நலனில் சிறப்புக் கவனம் செலுத்தியது. அவர்களது நலனைப் பாதுகாத்துப் பராமரிப்பதற்காகவே ஒரு ஐ.சி.எ. அதிகாரியை கமிஷனர் (Labour Commissioner, I.C.S) ஆக நியமித்தது. அவர் தாழ்த்தப்பட்டோர், ஆதிவாசிகள், மலைவாழ் மக்கள் போன்றோரின் உரிமைகளையும், நலத் திட்டங்களையும் பாதுகாத்து, நிறைவேற்றும் பொறுப்புடையவர். அவர் மேற்கண்ட வகுப்பினக்கு 1) வீட்டுமனை வழங்கினார்; 2) கூட்டுறவு கடன் சங்கங்களைத் துவக்கினார்; 3) குடிநீர் வசதி செய்து கொடுத்தார்; 4) பொது நிலத்தை குறைந்த வாடகைக்கு வழங்கினார்; 5) குடிப்பழக்கத்திலிருந்து விடுபடுமாறு ஊக்குவித்தார்; 6) சாதி இந்துக்களின் எதிர்ப்பிலிருந்து பாதுகாத்தார்; 7) அரசாங்க நிலத்தை விவசாயத்துக்காக ஒதுக்கினார்; 8) இவர்கள் பிரதான பாதையை எளிதில் அடைப்பதற்கான கிளைப் பாதைகளைப் போட்டுக் கொடுத்தார்; 9) பெண்களுக்கென கழிப்பறைகள் கட்டிக் கொடுத்தார்; 10) ஏழைகள் வீடுகட்டிக் கொள்ள 20 சென்ட் நிலம் இலவசமாகக் கொடுத்தார்; மரக்கன்றுகள் நடப்பட்டன; மிகக் குறைந்த விலையில் வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டன. தாழ்த்தப்பட்டோர் நலனுக்காகத் தனி அதிகாரியை நியமித்தது நீதிக்கட்சியில் நிலைத்த மகத்தான சரித்திர சாதனையாகும்.

## 18.3 நீதிக்கட்சி ஆட்சி II, 1920–1923

### 18.3.1 இரு பிரிவுகள்

நீதிக் கட்சியின் முதல் மூன்றாண்டு கால ஆட்சியின் போது பல முக்கிய சமுதாய, சமய, கல்வி, உள்ளாட்சி, வகுப்புவாரி பிரதிநிதித்துவ திட்டங்களை நிறைவேற்றிய போதிலும் கட்சிக்குள் ஒற்றுமை இல்லாமல் போயிற்று. கட்சி அதிருப்தியாளர்கள் **அரசாங்க எதிர்ப்புக் குழுவினர்** (Anti-Ministerialists) என்று கூறிக் கொண்டு தனியே செயல்படலாயினர். சி.நடேச முதலியார், டி.ஏ.ராமலிங்கம் செட்டியார், சி.ஆர்.ரெட்டி, பிசுப்பராயன் போன்றோர் இக்குழுவின் பிரதான பிரமுகர்கள். இவர்கள் நீதிக்கட்சித் தலைவர் தியாகராய செட்டியின் மீது கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர்: 1) பிறரைக் கலந்து ஆலோசிக்காத யதேச்சாதிகார தலைமை; 2) பிற்படுத்தப் பட்ட வகுப்பினரின் நலனைவிட உயர்சாதி வகுப்பினருக்கு சாதகமாகச் செயல்படல்; 3) ஒத்துழையாமை இயக்கத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்கிய பிரிட்டிஷ் அரசாங்கத்தின் செயலை ஆதரித்தது; 4) முதல் நீதிக்கட்சி அமைச்சரவையில் தமிழருக்கு இடம் கொடுக்காமை. இச்செயல் தமிழர் தலைவர்களிடையே மிகுந்த மனக்கசப்பை ஏற்படுத்தியது. அவர்கள் முதல் அமைச்சரவையைத் தெலுங்சர்களே ஆக்கிரமித்துக் கொண்டதாக குற்றம் சாட்டினர். எனவே, நீதிக்கட்சிக்குள் இரு கோஷ்டிகள் எதிரும் புதிருமாகச் செயல்பட்டதால் கட்சி பலவீனமடைந்தது.

### 18.3.2 சுயராஜ்யக் கட்சி

1920 தேர்தல் இந்திய தேசிய காங்கிரசில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. காந்தி, ராஜாஜி போன்றோர் காங்கிர தேர்தல்களில் பங்கேற்கக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர். ஆனால் சித்தரஞ்சன்தா , மோதிலால் நேரு, போன்றோர் காங்கிர தேர்தலில் பங்கேற்பதை ஆதரித்தனர். அதற்கான தீர்மானத்தையும் 1922 செப்டம்பர் 7 ஆம் தேதி நிறைவேற்றினர். இவர்கள் காங்கிரசுக்குள் சுயராஜ்யக் கட்சி (Swaraj Party) என்ற தனி அமைப்பை உருவாக்கினர்.

தமிழ் நாட்டில் க தூரிரங்க ஐயங்கார், சீனிவாச ஐயங்கார், ஏ.ரங்கசாமி ஐயங்கார், வரதராஜுலு நாயுடு, விஜயராகவாச்சாரி, ஏ.ரங்கசாமி யங்கார் ஆகியோர் சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து, தேர்தலில் போட்டியிட்டு, சட்டமன்றம் சென்று ஒத்துழையாமை இயக்கத்தை நடத்துவதென்று முடிவு செய்தனர். 1923 நவம்பர் 13 ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில் பங்கேற்றனர்.

### 18.3.3 சட்டமன்றத் தேர்தல், 1923

நீதிக்கட்சியின் முதல் ஆட்சி 1923 செப்டம்பர் 11 ஆம் தேதி முடிந்தது. சட்டமன்றத்துக்கான தேர்தல் 1923 அக்டோபர் 31 ஆம் நாள் நடத்தப்பட்டது. அடை மழையும், வெள்ளமும் தேர்தல் உரிய நாளில் முடிவதில் காலதாமதம் ஏற்படுத்தின. தேர்தல் நவம்பர் 10 ஆம் தேதி முடிவுற்றது. 17 தொகுதிகளில் 20 உறுப்பினர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்! 44 தொகுதிகளில் மட்டுமே தேர்தல் நடைபெற்றது. கடந்த தேர்தலைவிட இத்தேர்தலில் அதிக வாக்காளர்கள் பங்கேற்றனர். சென்னை நகரில் 58.8%; திருநெல்வேலி–பாளையம்கோட்டை நகரில் 77%; வட ஆர்க்காடு கிராமத் தொகுதி 58.8% வாக்குப்பதிவு இருந்தது. சென்னை ராஜதானியின் சராசரி வாக்குப்பதிவு 36.2%. இத்தேர்தலில் சுயராஜ்யக் கட்சி பங்கேற்றதால் நீதிக்கட்சியின் தேர்தல் வெற்றியைப் பெரிதும் பாதித்தது. சுயராஜ்யக் கட்சி போட்டியிட்ட 11 இடங்களிலும் வெற்றி பெற்றது! நீதிக்கட்சி தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றாலும், அரசாங்கத்தை அமைக்கக்கூடிய பெரும்பான்மையை இழந்தது. சட்டமன்ற அமைப்பு விவரம் பின்வருமாறு

| கட்சிகள் | தேர்ந்தெடுக்கப்பட்டோர் | நியமன உறுப்பினர் | மொத்தம் |
|---|---|---|---|
| நீதிக்கட்சி | 44 | 0 | 44 |
| சுயராஜ்யக் கட்சி | 11 | 0 | 11 |
| அரசாங்க எதிர்ப்பாளர்கள் | 37 | 0 | 37 |
| சுயேட்சைகள் | 6 | 1 | 7 |
| அலுவலர்கள் | 0 | 1 | 11 |
| அலுவலரல்லாதார் | 0 | 17 | 17 |
| மொத்தம் | 98 | 29 | 127 |

தேர்ந்தெடுக்கப்பட்ட, தேர்ந்தெடுக்கப்படாதவர்களின் வகுப்புவாரி இடப் பங்கீட்டு விவரம் வருமாறு:

| கட்சிகள் | தேர்ந்தெடுக்கப்பட்டோர் | தேர்ந்தெடுக்கப்படாதோர் | மொத்தம் |
|---|---|---|---|
| பிராமணரல்லாதார் | 61 | 8 | 69 |
| பிராமணர் | 13 | 1 | 14 |
| தாழ்த்தப்பட்டோர் | 0 | 9 | 9 |
| முகமதியர் | 13 | 1 | 14 |
| இந்திய கிறித்துவர் | 5 | 2 | 7 |
| ஐரோப்பியர் மற்றும் ஆங்கிலோ இந்தியர் | 6 | 8 | 14 |
| மொத்தம் | 98 | 29 | 127 |

1923 தேர்தலில் நீதிக்கட்சிக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. அதற்கான காரணங்கள்: 1) கட்சிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் நீதிக்கட்சியை பலவீனப் படுத்திவிட்டது. நடேச முதலியார், எம்.சி.ராஜா, ஓ.கந்தசாமி செட்டியார் போன்றோர் கட்சித் தலைமையை வெளிப்படையாகவே விமர்சித்தனர். 2) முதல் அமைச்சரவையில் தமிழருக்கு இடம் கொடுக்காமையால் ஏற்பட்ட ஏமாற்றம் தென் தமிழ்நாட்டுத் தொகுதிகளில் நீதிக்கட்சி வேட்பாளர்கள் தோல்வியடைவதற்குக் காரணமாக இருந்தது; 3) சுயராஜ்யக் கட்சி நீதிக்கட்சிக்குப் பிரதான பலமிக்க எதிர்க்கட்சியாக உருவெடுத்தது; 4) கட்சிப் பூசலால் நீதிக்கட்சியின் தேர்தல் பிரச்சாரம் பலமிழந்துவிட்டது. சுருங்கக்கூறின், 1923 சட்டமன்றத் தேர்தல் நீதிக்கட்சியின் சரிவுக்கான அடையாளமாக அமைந்தது.

## 18.3.4 பனகல் அரசர் ஆட்சி

### அரசாங்க அமைப்பு

தேர்தல் முடிந்தபின் ஆளுநர் வெல்லிங்டன் நீதிக்கட்சி அரசாங்கம் அமைப்பதற்கு அழைப்பு விடுத்தார். தியாகராய செட்டியின் பரிந்துரையின் பேரில் பனகல் அரசர் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார்; ஏ.பி.பாட்ரோ அமைச்சரவையில் இடம் பெற்றார்; கூர்மா வெங்கடரெட்டி நாயுடுவுக்குப் பதில் தமிழ் சட்டமன்ற உறுப்பினர் டி.என்.சிவஞானம் இடம் பெற்றார். 1923 நவம்பர் 19 ஆம் தேதி நீதிக்கட்சியின் இரண்டாம் அமைச்சரவை பதவிப் பொறுப்பேற்றது. அப்துல்லா காட்டலா சாகிப் பகதூர், எ.அற்புதசாமி உடையார், டி.சிதங்கவேலு பிள்ளை ஆகியோர் சட்டமன்ற செயலர்களாக நியமிக்கப்பட்டனர். ஆளுநரின் புதிய ஆட்சிக் குழுவில் சி.ஜி.தோதுண்தர், ஏ.ஆர்.நாப், சி.பி.ராமசாமி ஐயர், வாசுதேவ ரவிவர்மா ஆகியோர் இடம் பெற்றனர். எல்.டி.சாமிக்கண்ணு சட்டமன்றத் தலைவராக ஆளுநரால் ஒரு ஆண்டுக்கு நியமிக்கப்பட்டார்; அதன்பின் அப்பதவிக்கு சட்ட மன்றமே நியமனம் செய்யும். நீதிக்கட்சியின் இரண்டாவது அமைச்சரவை 1926 நவம்பர் 7 ஆம் தேதி வரை செயல்பட்டது. பனகல் அரசர் ஆட்சியின் போது தான் வன்னியர் வகுப்பைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் மாணிக்கவேலு நாயக்கர் நீதிக்கட்சி அரசாங்கத்தின் பாராளுமன்ற செயலராகவும் வருவாய்த்துறை அமைச்சராகவும் இருந்தார்.



### நம்பிக்கையில்லா தீர்மானம்

நீதிக்கட்சியின் அரசாங்க எதிர்ப்பாளர்கள் (Anti Ministerialists) ஐக்கிய தேசிய கட்சி (United Nationalist Party) என்ற புதிய கட்சியை அமைத்தனர். ஐக்கிய தேசிய கட்சியின் சார்பாக சி.ஆர்.ரெட்டி நீதிக்கட்சிக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை முன்மொழிந்தார் (1923 நவம்பர் 27). அப்போது அவர் நீதிக்கட்சியைப் பற்றிய இரண்டு குற்றச்சாட்டுகளைக் கூறினார்: 1) நீதிக்கட்சி பெரும்பான்மையைப் பெறாததால் வாக்காளர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது; 2) பனகல் அரசர் உள்ளாட்சி நிறுவனத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கையில் அவரது உறவினர்களுக்கு முன்னுரிமை (Nepotism) கொடுத்தார். இத்தீர்மானத்தை சுயராஜ்யக் கட்சி ஆதரித்தது. அக்கட்சியின் பிரபல உறுப்பினரான சொல்வேலர் எ.சத்தியமூர்த்தி நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஆதரித்து அவரது கன்னிப் பேச்சை நிகழ்த்தினார் (பின்னர் சுயராஜ்யக் கட்சியின் தலைவரானார்). இத்தீர்மானம் இரண்டு நாட்கள் விவாதிக்கப்பட்டது. விவாதத்துக்குப்பின் ஆளும் நீதிக்கட்சி நியமன உறுப்பினர்களின் ஆதரவோடு தீர்மானத்தைத் தோற்கடித்து பதவியைத் தக்கவைத்துக் கொண்டது! இந்திய சட்டமன்ற வரலாற்றில் முதல் முறையாகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் இதுவேயாகும்!!

### சாதனை

நீதிக்கட்சியின் இரண்டாவது அரசாங்கம் புதிய சாதனைகள் எதையும் செய்யவில்லை. 1920–1923இல் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை பனகல் அரசரின் ஆட்சி தொடர்ந்து செயல்படுத்தியது. குறிப்பாக 1922 டிசம்பர் 18 ஆம் தேதி சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்து அறநிலைய மசோதா (Hindu Religious Endowment Bill)வை நிறைவேற்றியது (1925). இச்சட்டத்தின் மூலம் சென்னை ராஜதானியில் இருந்த இந்து கோயில்கள் அரசாங்கத்தின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன. எனினும் சரிவுப் பாதையில் சென்ற நீதிக்கட்சிக்கு 1926 சட்டமன்றத் தேர்தல் பெரும் சவாலாக இருந்தது.

### நீதிக்கட்சியின் நிலை

நீதிக்கட்சி உட்கட்சி கோஷ்டிப் பூசல்களால் பலவீனப்பட்டுப் போயிருந்தது. அக்கட்சித் தலைவர் தியாகராய செட்டி இறந்தபின் (1925 ஏப்ரல் 28) நிலைமை மேலும் மோசமாயிற்று. முதலமைச்சராயிருந்த பனகல் அரசர் கட்சித் தலைமைப் பொறுப்பேற்றார். நடேச முதலியாரின் ஐக்கிய தேசிய கட்சியினரை மீண்டும் நீதிக்கட்சிக்குக் கொண்டு வருவதற்கு பனகல் அரசர் மேற்கொண்ட முயற்சி வெற்றி பெறவில்லை. பயம் பொய்த்ததால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு விவசாயிகள் வேலையின்றி புலம் பெயர்ந்து சென்றனர். இந்த இக்கட்டான நேரத்தில் நீதிக்கட்சிக்கும் புதிதாக ஆளுநர் பொறுப்பேற்ற **வைகௌண்ட் கோஷனுக்கு** (Viscount Goschen) மிடையோன உறவில் விரிசல் ஏற்பட்டது (1924). அதிகாரப் பகிர்வு மற்றும் வேண்டியவர்களுக்கு உதவுவது (Patronage) போன்ற விவகாரங்களில் அமைச்சர்களுக்கும் ஆளுநர் ஆட்சிக் குழுவுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் எழுந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக, ஈ.வே.ராமசாமி நாயக்கர்

காங்கிரஸை விட்டு வெளியேறி தேர்தலில் நீதிக்கட்சி வேட்பாளர்களை ஆதரித்தார்! அவர் காங்கிரஸை விட்டு வெளியேறியதற்கான முக்கியக் காரணம் அவர் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஆதரித்துக் கொண்டு வந்த தீர்மானங்களை காங்கிர ஏற்றுக் கொள்ளாததுதான்.

### 18.3.5 சட்டமன்ற தேர்தல், 1926

1926 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் சென்னை ராஜதானி அரசியலில் எதிர்பாரா மாற்றத்தை ஏற்படுத்தியது. சுயராஜ்யக் கட்சி எ .சத்தியமூர்த்தி தலைமையில் இத்தேர்தலில் களமிறங்கிப் போட்டியிட்டது. இந்திய தேசிய காங்கிர தேர்தலைப் புறக்கணித்தது. நொண்டிக் குதிரையான நீதிக்கட்சி நம்பிக்கை இழந்த இத்தேர்தலில் கலந்து கொண்டது! அக்கட்சியால் 21 இடங்களை மட்டுமே பெற முடிந்தது!! சுயராஜ்யக் கட்சி 41 இடங்களைக் கைப்பற்றியது. நீதிக்கட்சியின் கோட்டையாகக் கருதப்பட்ட சென்னை நகரில் 4 இடங்களிலும் வெற்றிவாகை சூடியது. நடேச முதலியார், ஓ.தணிகாசலம் செட்டியார், கூர்மா வெங்கிரரெட்டி நாயுடு, ஆர்க்காடு ராமசாமி முதலியார் போன்ற நீதிக்கட்சி பிரபலங்கள் தோல்வியைத் தழுவினர்! கட்சிகளைப் பற்றிய விவரங்கள் வருமாறு:

| கட்சிகள் | தேர்ந்தெடுக்கப்பட்டோர் | நியமன உறுப்பினர் | மொத்தம் |
|---|---|---|---|
| சுயராஜ்யக் கட்சி | 41 | 0 | 41 |
| சுயேட்சைகள் | 36 | 22 | 58 |
| நீதிக்கட்சி | 21 | 1 | 22 |
| அலவலர்கள் | 0 | 11 | 11 |
| மொத்தம் | 98 | 34 | 132 |

### 18.3.6 சுயராஜ்யக் கட்சியின் சாதனை

1926 சட்டமன்றத் தேர்தலில் பங்கேற்ற சுயராஜ்யக் கட்சி தமிழ் நாட்டு அரசியலில் புதிய சாதனை படைத்தது. அக்கட்சித் தலைவர் எ .சத்தியமூர்த்தியும், மற்றொரு பிரமுகரான எ .சீனிவாச ஐயங்காரும் புதிய தேர்தல் பிரச்சார உத்திகளைக் கையாண்டனர். பொதுக்கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், வீட்டுக்கு வீடு சென்று வாக்கு சேகரிப்பது, பஜனை ஊர்வலங்கள் போன்ற புதிய வழிகளைக் கடைப்பிடித்து வாக்காளர் களைக் கவர்ந்தனர். சுயராஜ்யக் கட்சிக்கு திரு.வி.கல்யாணசுந்தர முதலியார், மா.பொ.சிவஞானம் போன்ற காங்கிர தலைவர்கள் ஆதரவளித்தனர். ஈ.வேராவின் பிராமண ஆதிக்கக் குற்றச்சாட்டுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்த சுயராஜ்யக் கட்சி சென்னை ராஜதானியில் தமிழ் பேசுவோர் அதிகமுள்ள தொகுதிகளில் பிராமணரல்லாதோரை வேட்பாளர்களாக நிறுத்தியது! இச்செயல் ஓரளவுக்கு பிராமணர் எதிர்ப்பு இயக்கத்தினை முனைமழுங்கச் செய்தது. வகுப்புவாரியான உறுப்பினர்கள் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் வருமாறு:



| கட்சிகள் | தேர்ந்தெடுக்கப்பட்டோர் | நியமிக்கப்பட்டோர் | மொத்தம் |
|---|---|---|---|
| பிராமணரல்லாதார் | 56 | 10 | 66 |
| பிராமணர்கள் | 18 | 3 | 21 |
| தாழ்த்தப்பட்டோர் | 0 | 10 | 10 |
| முகமதியர் | 13 | 1 | 14 |
| இந்திய கிறித்துவர் | 5 | 2 | 7 |
| ஐரோப்பியர் மற்றும் ஆங்கிலோ இந்தியர் | 6 | 8 | 14 |
| மொத்தம் | 98 | 34 | 132 |

## 18.4 சுப்பராயன் ஆட்சி, 1926–1929

### 18.4.1 அரசாங்கம் அமைப்பு

இம்முறை அரசாங்கம் அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டது. தனிப் பெரும்பான்மையைப் பெற்ற சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த சி.வி.எ .நரசிம்மராஜுவை ஆட்சி அமைக்குமாறு அழைப்பு விடுத்தார் ஆளுநர் **கோஷன்** (Goschen). ஆனால் சுயராஜ்யக் கட்சி அரசாங்கம் அமைக்க மறுத்துவிட்டது. பெரும்பான்மை இன்மையால் நீதிக்கட்சி அரசாங்கம் அமைக்க முன்வரவில்லை. எனவே ஆளுநர் கோஷன் தேசிய சுயேட்சைகளில் ஒருவரான டாக்டர் பி.சுப்பராயனை முதலமைச்சராக நியமித்தார். சுப்பராயன் முன்னாள் நீதிக்கட்சி பிரமுகர். பனகல் அரசருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் அவர் நீதிக் கட்சியிலிருந்து விலகினார். சுப்பராயன் ஆளுநரின் அழைப்பை ஏற்று **சுயேட்சை** அரசாங்கத்தை அமைத்தார். முன் விரோதத்தை மறந்து நீதிக்கட்சியும் அவருக்கு நேசக்கரம் நீட்டியது! எனவே, டாக்டர் பி.சுப்பராயன் சுயராஜ்யக் கட்சி, நீதிக்கட்சி ஆகியவற்றின் ஆதரவோடு ஆட்சி நடத்தினார்.

சுப்பராயன் அமைச்சரவையில் ஏ.ரங்கநாத முதலியாரும், ஆர்.என்.ஆரோக்கியசாமி முதலியாரும் இடம் பெற்றனர். பின்னர் இவர்களுக்குப் பதில் எ .முத்தையா முதலியாரும், எம்.ஆர்.சேதுரத்னம் ஐயரும் அமைச்சர்களாக நியமிக்கப் பட்டனர். இவ்விருவம் சுயராஜ்யக் கட்சியிலிருந்து பிரிந்து வந்தவர்கள். அதனால் சுப்பராயன் அமைச்சரவை நீதிக்கட்சியின் மறுபதிக்காகக் கருதப்பட்டது. அதாவது, சுயேட்சை அரசாங்கம் என்ற பெயரில் நீதிக்கட்சியின் நிழலாட்சி (Prexy) நடைபெற்றது.

### 18.4.2 ‘கோட்டா’ முறை

டாக்டர் சுப்பராயன் அரசாங்கத்தின் மகத்தான சாதனையாகக் கருதப்படுவது **கோட்டா முறை** (Qutta System) ஆகும். நீதிக்கட்சி பிற்பட்டோருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பெற்றுத் தந்தாலும் அதற்கான அறிவியல் பூர்வமான முறையை வகுக்கவில்லை. இப்பொறுப்பை சுப்பராயன் அமைச்சரவையில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட எ .முத்தையா முதலியார் ஏற்றுக் கொண்டார். முதலியார் செல்வந்தர், நிலச்சுவான்தார், சட்ட வல்லுநர். அவர் தனது சட்ட அறிவைப் பயன்படுத்தி வகுப்புவாரி பிரதிநிதித்துவ கொள்கையை வெற்றிகரமாக

செயல்படுத்துவதற்குத் தேவையான விதிமுறை (Formula) வகுத்துக் கொடுத்தார். இது **முத்தையா முதலியாரின் கோட்டா முறை** என்று கூறலாம்.

முத்தையா முதலியார் வடிவமைத்த 'கோட்டா முறை'யின்படி ஒவ்வொரு வகுப்பாருக்கும் எத்தனை இடங்கள் என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி பிராமணரல்லாதாருக்கு 44%; முஸ்லீம்களுக்கு 16%; கிறித்துவர்களுக்கு 16%; பிராமணர்களுக்கு 16%; ஆங்கிலோ இந்தியருக்கு 16%; ஆதிதிராவிடருக்கு 8% என்று பங்கிட்டு அளிக்கப்பட்டது. அப்படிப் பார்க்கும் போது 12 அரசாங்கப் பணிகளுக்கு பிராமணரல்லாதவர்களுக்கு 5 இடங்களும், பிராமணர்கள், ஆங்கிலோ இந்தியர், முஸ்லீம்கள் ஆகியோருக்கு தலா 2 இடங்களும், ஆதி திராவிடருக்கு 1 இடமும் கிடைக்கும். இந்த விகிதாச்சாரம் குறிப்பிட்ட வகுப்புகளின் மக்கள் தொகைக்கு ஏற்ப இல்லை என்று குறை கூறப்பட்டது. **இந்துவும் சுதேசமித்திரனும்** இதற்கு எதிர்ப்பு தெரிவித்தன.

முதலில் முத்தையா முதலியாரின் கோட்டா முறையில் குறை கண்ட **ஈ.வெ.ராமசாமி நாயக்கர் பின்னர் அமைச்சர் முத்தையா முதலியார் நீண்ட காலம் வாழ்க என்று குடியரசு பத்திரிகையில் எழுதினார்** (குடியரசு, தலையங்கம் 1928, நவம்பர் 11). இன்றைய இடஒதுக்கீட்டு முறை (Reservation System)யின் அடித்தளத்தை அமைத்துக் கொடுத்ததால் முத்தையா முதலியாரை **வகுப்புவாரி இடஒதுக்கீட்டு முறையின் தந்தை** என்று கூறினால் மிகையாகாது.

## 18.5 நீதிக்கட்சி ஆட்சி III, 1930–1934

### 18.5.1 பொப்பிலி அரசர்

1926 தேர்தல் தோல்விக்குப் பிறகு நீதிக்கட்சியின் சரிவு தொடர்ந்தது. **ராமராயனின்கர் இறந்தபின் (1928) பொப்பிலி அரசர்** (Raja of Bobbili) என்ற **ராமகிருஷ்ண ரங்காராவ்** நீதிக்கட்சியின் தலைவர் பொறுப்பேற்றார். டாக்டர் சுப்பராயனின் சுயேட்சை அரசாங்கத்தை நீதிக்கட்சி தொடர்ந்து ஆதரித்தது. நீதிக்கட்சிக்குள் நிலவிய கோஷ்டிப் பூசல்களை புதிய தலைவரால் தடுக்க முடியவில்லை. அக்கட்சி இரண்டுபட்ட வீடாக இருந்தது! உலகப் பொருளாதார மந்தத்தால் (World Economic Depression) தமிழ் நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. அந்நிலையில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது.

### 18.5.2 சட்டமன்றத் தேர்தல், 1930

இரட்டை ஆட்சியின் கீழ் சட்ட மன்றத்துக்கான நான்காவது தேர்தல் 1930 ஆம் ஆண்டு நடைபெற்றது. நீதிக்கட்சியின் நிலை மிகவும் மோசமாக இருந்ததால் அதன் ஆட்சிக் குழுவின் தீர்மானத்தின் (1930 ஜூன் 15) நீதிக்கட்சியின் கதவுகள் பிராமணர் களுக்குத் திறந்துவிடப்பட்டன! அதன் நோக்கம் காங்கிரசின் ஆதரவோடு ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதுதான்!! அரசியலில் மார்க்கத்தைவிட முடிவு தான் முக்கியம்!!! 1929 இல் நடைபெற்ற லாகூர் மாநாட்டுத் தீர்மானத்தின்படி காங்கிர தேர்தலில் கலந்து கொள்வதில்லை என்று முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவின்படி தமிழ்நாட்டு காங்கிர சட்டமன்றத் தேர்தலைப் புறக்கணித்தது. அதுமட்டுமல்ல. சத்தியமூர்த்தி உள்ளிட்ட 17



சட்டமன்ற உறுப்பினர்களும் பதவி விலகினர். எனினும், **சாமி வெங்கடாசலம், ஆர்.கே.சண்முகம் செட்டியார்** போன்ற காங்கிரஸ் பிரமுகர்கள் இத்தேர்தலில் சுயேட்சைகளாகப் போட்டியிட்டனர்! எனவே, இந்த சட்டமன்றத் தேர்தல் நீதிக் கட்சிக்கும், டாக்டர் பி.சுப்பராயன் தலைமையிலான தேசிய கட்சி (Nationalist Party)க்கும் இடையிலான நேரடிப் போட்டியாக இருந்தது.

சட்டமன்றத் தேர்தலில் 132 இடங்களுக்கு 61 தொகுதிகளிலிருந்து 98 உறுப்பினாகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நீதிக்கட்சி போட்டியிட்ட 45 இடங்களில் 35 இடங்களில் வெற்றி பெற்றது. சுயேட்சை தேசிய கட்சியும், லிபரல்களும் (Liberals) 10 இடங்களைக் கைப்பற்றினர். 98 இடங்களில் 35 வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். எஞ்சியிருந்த இடங்களில் சுயேட்சைகள் வெற்றி பெற்றனர். இத்தேர்தலில் 43% வாக்குகள் பதிவாயின; இது சென்னை ராஜதானியின் மொத்த மக்கள் தொகையில் 4% மட்டுமே.

### 18.5.3 சிறுபான்மை அரசாங்கம்

நீதிக்கட்சிக்கு தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க முடியவில்லை. எனவே, ஆளுநர் நியமித்த 32 உறுப்பினர்களின் ஆதரவோடு நீதிக்கட்சித் தலைவர் **முனுசாமி நாயுடு** 1930 அக்டோபர் 27 ஆம் தேதி முதலமைச்சர் பொறுப்பேற்றார். பி.ராமச்சந்திர ரெட்டி சட்டமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிடி.ராஜாவும், எ.குமாரசாமி ரெட்டியாரும் முனுசாமி அமைச்சரவையில் இடம் பெற்றனர். முன்னாள் முதலமைச்சர் பி.சுப்பராயன் எதிர்க்கட்சித் தலைவரானார்! தமிழ் நாட்டில் நிலவிய நிலையற்ற சூழ்நிலையில் முனுசாமி நாயுடு சிறுபான்மை அரசாங்கத்துக்குத் தலைமையேற்று நடத்தினர்.

### 18.5.4 அரசாங்கத்தின் அவல நிலை

கட்சி கட்டுக்கோப்புடன் இருந்தால்தான் அரசாங்கம் நிலையாக இருக்கும். முனுசாமி நாயுடு முதல்வர் பொறுப்பேற்ற போது நீதிக்கட்சி கோஷ்டிப் பூசல் புயலில் சிக்கியிருந்தது. நீதிக்கட்சியை ஆதரித்த ஜமீன்தார்களுக்கு அமைச்சரவையில் இடம் கொடுக்காமையால் அவர்கள் கட்சிக்கு எதிராகச் செயல்பட்டனர். அமைச்சர் பதவியை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த பொப்பிலி அரசரும், வெங்கடகிரி குமார ராஜாவும், எம்.ஏ.முத்தையா செட்டியாரின் தலைமையில் நீதிக்கட்சிக்குள்ளேயே ஒரு **இஞ்சிக் குழு** (Ginger Group)வை உருவாக்கினர்.

முதலமைச்சர் முனுசாமி நாயுடு நெருக்கடிக்கிடையே மக்களின் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதில் முனைப்புடன் ஈடுபட்டார். அரசாங்கத்தின் வருவாய் இழப்பை சரிக்கட்டுவதற்காக நிலவரியை உயர்த்தினார். நிலவரி உயர்வு குழவிக் கூட்டில் கைவிட்டது போலாயிற்று! நிலவரி உயர்வால் பாதிக்கப்பட்ட ஜமீன்தார்களும், நிலச்சுவான்தார்களும் முதலமைச்சருக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினர். பொப்பிலி அரசரும், வெங்கடகிரி குமார ராஜாவும் அமைச்சரவையில் இடம் பெறாதது எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றியது போலாயிற்று.

இதற்கிடையே, நீதிக்கட்சியின் தலைமைப் பதவிக்காக பி.டி.ராஜானும், முனுசாமி நாயுடுவும் போட்டியிட்டார்கள் (1928). இப்போட்டியில் முனுசாமி நாயுடு வெற்றி பெற்றார். முனுசாமி நாயுடு கட்சித் தலைவராகவும், முதலமைச்சராகவும் இருந்தபோதிலும் அவரால் கட்சியின் கட்டுக்கோப்பையும், மாகாண நிர்வாகத்தையும் திறமையாகக் கையாள முடியவில்லை. நீதிக்கட்சி ஆண்டு மாநாட்டை மூன்றாண்டு காலம் கூட்டாமல் நிலைமையைச் சமாளித்தார். எனினும் உட்கட்சி 'இஞ்சிக் குழு', 1932 அக்டோபர் மாதம் நடைபெற்ற 12வது ஆண்டு மாநாட்டில் முனுசாமி நாயுடுவுக்குப் பதில் பொப்பிலி அரசரை கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. பொப்பிலி அரசர் 1932 நவம்பர் 5 ஆம் தேதி முதலமைச்சரானார்.

இரண்டாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்ற பொப்பிலி அரசர் மக்கள் பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் ஜமீன்தாரர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டார். இவரது ஜமீன்தார் ஆதரவு பொருளாதாரக் கொள்கையால் மக்கள் மிகுந்த ஏமாற்றமடைந்தனர். நீதிக்கட்சி மக்களின் ஆதரவை இழந்தது. ஜமீன்தாரர்களை மட்டும் நம்பி தேர்தலில் வெற்றி பெற முடியாதல்லவா? எனவே, நீதிக்கட்சி 1934 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் நிலைகுலைந்து போயிற்று.

நம்பிக்கையோடு துவக்கப்பட்ட நீதிக்கட்சி மக்களின் நம்பிக்கையை இழந்த அரசியல் அமைப்பாக ஓரங்கட்டப்பட்டது. அக்கட்சியின் வீழ்ச்சிக்கான காரணங்கள் வருமாறு: 1) நீதிக்கட்சிக்குள் நிலவிய உட்குழுக்களிடையே நிலவிய மோதல்கள்; 2) தாழ்த்தப்பட்டோர் நலன்களைப் புறக்கணித்துவிட்டு உயர் வகுப்பாரின் உயர்வுக்காகப் பாடுபட்டது; 3) அரசாங்கத்தின் அனைத்து நிலைகளிலும் உறவினர்களுக்கும், வேண்டியவர்களுக்கும் பதவிகளை வழங்கியது; 4) அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியது; 5) ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான போட்டி; 6) தேசப்பற்றுடைய காங்கிர மக்களிடையே செல்வாக்கு பெற்றது.

## 8.6 நீதிக்கட்சி ஆட்சி IV, 1934–1937

### 18.6.1 மீண்டும் பொப்பிலி அரசர் ஆட்சி

நீதிக்கட்சி ஜமீன்தார் ஆதரவு குழு, ஜமீன்தார் எதிர்ப்புக் குழு என்று இரு கோஷ்டிகளாகப் பிரிந்து பூசல்களில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்தன! பொப்பிலி அரசர் மக்கள் நிலைமையைப் பற்றிக் கவலைப்படாமல் தனது ஜமீன்தார் ஆதரவுப் பொருளாதாரக் கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றினார். இதற்கிடையே 1930–1931 இல் மேற்கொள்ளப்பட்ட **உப்புச் சத்தியாகிரகம்** மற்றும் ஒத்துழையாமை இயக்கத்தால் தமிழ் நாட்டில் காங்கிரசின் மீது மக்களுக்கு மரியாதையும், நம்பிக்கையும் அதிகரித்தது. இரட்டை ஆட்சியைத் தொடர்ந்து எதிர்த்து வந்த சுயராஜ்யக் கட்சி சத்தியமூர்த்தியின் திறமையான தலைமையின் கீழ் தேர்தலில் கலந்து கொள்ளத் தயாராக இருந்தது. இந்நிலையில் நீதிக்கட்சி தன் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ள இரண்டு முக்கிய முடிவுகளை எடுத்தது: 1) நீதிக்கட்சியில் பிராமணர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளல்; 2) சுயமரியாதை இயக்கத்தை (Self-Respect Movement) வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருந்த ஈ.வெ.ராமசாமியின் ஆதரவைப் பெறுவது. நீதிக்கட்சி பெரியாரின்



'ஈரோட்டுத் திட்ட' (Erode Plan)த்தை ஏற்றுக் கொண்டு அவரின் ஆதரவைப் பெற்றது. ஈரோட்டுத் திட்டத்தின் முக்கியக் கூறுகளாவன: 1) அத்தியாவசிய தொழில்களை நாட்டு உடைமையாக்கல்; 2) அனைவருக்கும ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை விரிவுபடுத்தல்; 3) மதுவிலக்குக் கொள்கையைக் கடைப்பிடித்தல்; 4) அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளித்தல்; 5) தீண்டாமை ஒழிப்பு; 6) அனைவருக்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை நடைமுறைப்படுத்தல்; 7) அனைத்து நிர்வாக அமைப்புகளுக்கும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுத்தல். இருப்பினும் நீதிக்கட்சி 1934 சட்டமன்றத் தேர்தலில் படுதோல்வி அடைந்தது. சுயராஜ்யக் கட்சி 29 இடங்களில் வெற்றி பெற்று தனிப் பெரும்பான்மையுடன் திகழ்ந்தது. எனினும், அக்கட்சி ஆட்சிப் பொறுப்பேற்க மறுத்துவிட்டதால் பொப்பிலி அரசர் தொடர்ந்து முதலமைச்சராக நீடித்தார்!

## 18.7 ஆட்சியின் வீழ்ச்சி

### 18.7.1 சிறுபான்மை அரசாங்கம்

பொப்பிலி அரசர் சிறுபான்மை அரசாங்கத்தின் முதல்வராக நீடித்தாலும் நீதிக்கட்சியின் வீழ்ச்சியைத் தடுக்க முடியவில்லை. நீதிக்கட்சியின் தலைமைக் கொறடா (Chief Whip)வாக இருந்த எம்.ஏ.முத்தையா செட்டியார் அவரது ஆதரவை விலக்கிக் கொண்டதால் ஆர்.கே.சண்முகம் செட்டியும், ஆர்க்காடு ராமசாமி முதலியாரும் தேர்தலில் தோற்க நேர்ந்தது! எனவே பொப்பிலி அரசர் எம்.ஏ.முத்தையா செட்டியாரை கட்சியின் தலைமைக் கொறடா பதவியிலிருந்து நீக்கினார். அதனால் ஆத்திரமடைந்த செட்டியார் பொப்பிலி அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அவரைத் திருப்திப்படுத்துவதற்காக எ .குமாரசாமி ரெட்டியாருக்கு பதில் எம்.ஏ.முத்தையா செட்டியாரைக் கல்வி அமைச்சராக்கினார்! பிறரைத் திருப்திப்படுத்து வதற்காக புதிதாக உள்துறை அமைச்சரகத்தை ஏற்படுத்தி அதில் முகமது உ மானையும், பின்னர் ஏ.டி.பன்னீர் செல்வத்தையும் அமைச்சர்களாக நியமித்தார்!!

### 18.7.2 யதேச்சாதிகாரம்

பொப்பிலி அரசரின் யதேச்சாதிகாரப் போக்கு நீதிக்கட்சியினரிடையே அதிருப்தியை அதிகரித்து விட்டது. கட்சி முக்கிய தர்களே அவரை நேரில் பார்த்துப் பேச முடியவில்லை! தன்னை எதிர்த்தவர்களையும், அவருடன் ஒத்துப்போகாத உள்ளாட்சி நிறுவனங்களையும் ஒடுக்க முற்பட்டார். இதற்காக உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (Local Boards Act) திருத்தப்பட்டது. தாலுகா போர்டுகள் கலைக்கப்பட்டன. தனக்கு வேண்டாத ஒரு மாவட்ட மன்றம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது! அவரோடு ஒத்துழைக்காத பிற மாவட்ட மன்றங்களையும் பிரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோன்று அவரது அதிகாரத்துக்குக் கீழ்ப்பணியாத நகராட்சி மன்றங்கள் முடக்கப்பட்டன; தனக்கு வேண்டாத நகராட்சி மன்றத் தலைவர் தண்டிக்கப்பட்டனர். கமிஷனர்களை நியமிப்பதன் மூலம் இம்மன்றங்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தப்பட்டது. சுருங்கக் கூறின், நீதிக் கட்சியின் தேர்தல் வெற்றிக்கு ஊற்றுக் கண்களாக இருந்த உள்ளாட்சி நிறுவனத் தலைவர்களை விரோதித்துக் கொண்டார் பொப்பிலி அரசர்! அதுமட்டுமல்ல. ஜமீன்தாரியல்லாத நிலப் பகுதிகளில் அதீதமான நிலவரியைக் குறைக்க விடாப்பிடியாக

...டார். பொருளாதார நெருக்கடியில் உழன்று கொண்டிருந்த விவசாயிகளும், நில சொந்தக்காரர்களும் பொப்பிலி அரசரின் விவேகமற்ற நடவடிக்கைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதன் காரணமாக இவர் கிராம மக்களின் ஆதரவை இழந்தார்.

### 18.7.3 காங்கிரசின் செல்வாக்கு

இந்திய விடுதலைப் போராட்டத்தை முன்னின்று நடத்திய அகில இந்திய காங்கிரசின் செல்வாக்கு மக்களிடையே விரைந்து பரவிக் கொண்டிருந்த சமயத்தில் பொப்பிலி அரசர் பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு சேர்ந்து கொண்டு நிலவரியைக் குறைக்கக் கோரி காங்கிரசார் நடத்திய ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தார். இத்தகைய அடக்குமுறை நடவடிக்கைகள் காங்கிரசின் மக்கள் செல்வாக்கை அதிகரிக்கவே செய்தன. எளிய உடை அணிந்து நாட்டு விடுதலைக்காக காங்கிர கார்கள் போராடிக் கொண்டிருக்கையில் நீதிக்கட்சி முதலமைச்சரும், பிற அமைச்சர்களும் அதிக ஊதியம் பெற்றுக் கொண்டு ஆடம்பரமாக வாழ்ந்ததை மக்கள் வெறுப்போடு பார்த்தனர்; பத்திரிகைகள் கண்டித்தன. சுருங்கக் கூறின், பொப்பிலி அரசர் அடக்குமுறையை விதைத்து மக்களின் வெறுப்பை அறுவடை செய்தார்! நீதிக்கட்சி மீண்டும் தலைதூக்க முடியாத அளவுக்கு 1934 சட்டமன்றத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது; காங்கிர வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. அதன்பின் எதிர்க்கட்சியாக செயல்பட்டு வந்த நீதிக்கட்சி 1938 டிசம்பர் 29 ஆம் தேதியிலிருந்து 1944 ஆகடு 27 ஆம் தேதி வரை பெரியாரின் தலைமையின் கீழ் செயல்பட்டது. பெரியார் தனியாகத் திராவிடர் கழகத்தைத் தோற்றுவித்த பின்னர் (1944) நீதிக்கட்சி பிராமச்சந்திர ரெட்டியின் தலைமையின் கீழும் (1944–1945), பிடி.ராஜன் தலைமையிலும் (1945–1957) வரையளவுக்கு நீடித்தது. அதன்பின் நீதிக்கட்சி தமிழ்நாட்டு அரசியல் வானிலிருந்து மறைந்துவிட்டது.

## 18.8 சர்ச்சைக்குரிய கொள்கைகள்

### 18.8.1 பிராமணர் கொள்கை

நீதிக்கட்சி பிராமணர் எதிர்ப்பு அமைப்பா? நீதிக்கட்சியின் பிராமணர் கொள்கை துவக்கத்திலிருந்தே தெளிவில்லாமல் இருந்தது. டாக்டர் டி.எம்.நாயர் மட்டுமே ஆதிகால ஆரியர்கள் 'தூங்கும்போது நுழைந்த திருடர்களைப் போன்றவர்கள்' என்றும், அவர்களுடைய வாரிசுகளே பிராமணர்கள் என்றும், ஆரியர்களும் திராவிடர்களும் இருவேறு இனங்கள் என்றும் பகிரங்கமாகப் பேசினார். பொதுவாக நீதிக்கட்சித் தலைவர்கள் அரசாங்கப் பதவிகளில் பிராமணர் ஆதிக்கத்தை எதிர்த்தார்களேயன்றி பிராமணர்களை விரோதித்துக் கொள்ளவில்லை.

நீதிக்கட்சி துவக்கப்பட்ட போது கட்சிக் கூட்டங்களில் பிராமணர்கள் பார்வையாளர்களாக அனுமதிக்கப்பட்டனர். 1926 தேர்தல் தோல்விக்குப் பிறகு பிராமணர்களின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1929 அக்டோபர் மாதம் கூடிய நீதிக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இதற்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின்னர் நெல்லூரில் கூடிய பொதுக் கட்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. முனுசாமி நாயுடு, பாட்ரோ



போன்ற நீதிக்கட்சித் தலைவர்கள் இத்தீர்மானத்துக்கு ஆதரவாக இருந்தனர். ஆனால் பெரியார் ஈ.வெ.ரா, ஆர்.கே.சண்முகம் செட்டியார் போன்றோர் இப்போக்கைக் கடுமையாக எதிர்த்தனர். 1930களில் நீதிக்கட்சியின் செல்வாக்கு சரிந்தபோது 1934 ஆகடு மாதம் நீதிக்கட்சி அதன் கதவுகளைப் பிராமணர்களுக்குத் திறந்துவிட்டது. பெரியார் ஈ.வெ.ரா. அக்கட்சிக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொண்டார்.

### 18.8.2 சிறுபான்மையினர் கொள்கை

நீதிக்கட்சி அனைத்து பிராமணரல்லாதார் நலன்களையும் பாதுகாக்கும் என்ற தேர்தல் வாக்குறுதியுடன் ஆட்சிக்கு வந்தது (1920). ஆதிதிராவிடர்களும், முலிம்களும் பிற சிறுபான்மை வகுப்பினரும் அந்த வாக்குறுதியை நம்பினர்; நீதிக்கட்சியை ஆர்வத்துடன் ஆதரித்தனர். ஆனால் ஆட்சிக்கு வந்த சில ஆண்டுகளுக்குள்ளாகவே நீதிக்கட்சி செட்டியார், முதலியார், நாயுடு, பிள்ளை போன்ற உயர் சாதியினரின் கோட்டை என்ற எண்ணம் சிறுபான்மையினரிடையே எழுந்தது. சட்டமன்ற உறுப்பினர் அப்பா **அலிகான்** ஒரு முலிமுக்குக்கூட அமைச்சரவையில் இடம் தரவில்லை என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டினார் (1923). டாக்டர் டி.எம்.நாயர் இறந்தபின் ஆதி திராவிடர்களின் நலன் புறக்கணிக்கப்பட்டது. **'புளியந்தோப்பு நிகழ்ச்சிகள்'** என்று அழைக்கப்பட்ட பி அன்டு சி மில் **வேலைநிறுத்தம்** (B and C Mill Strike) பிராமணரல்லாத உயர் வகுப்பாருக்கும் ஆதி திராவிடர்களுக்குமிடையே பெரும் பிளவை ஏற்படுத்திவிட்டது. சுருங்கக்கூறின், சென்னை ராஜதானியிலிருந்த சிறுபான்மையினர் மலையை எதிர்பார்த்து மலை எலியைக்கூட பெறவில்லை!

### 18.8.3 தேசப்பற்று

நீதிக்கட்சி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆதரவுடன் பிராமணரல்லாதார் நலன்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட பிராந்திய அரசியல் அமைப்பாகும். துவக்கத்திலிருந்தே நீதிக்கட்சியினர் பிரிட்டிஷ் அரசாங்க விசுவாசிகள் என்பதை வெளிப்படையாகவே கூறி வந்தனர். அவர்கள் அன்னிபெசண்ட் அம்மையாரின் சுயாட்சி இயக்கத்தையும், காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தையும் எதிர்க்கத் தயங்கவில்லை. நீதிக்கட்சி ஜாலியன் வாலாபாக் படுகொலையைக்கூட கண்டிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. நீதிக்கட்சியினர் தேசியவாதிகளா? அல்லது தேச விரோதிகளா? என்ற வினா விவாதிக்கப்பட்டது. நீதிக்கட்சியினர் தேச விடுதலைப் போராட்ட நீரோட்டத்திலிருந்து விலகிச் சென்று அந்நிய அரசாங்க ஆதரவுடன் வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கையை நிறைவேற்றுவதிலேயே குறியாக இருந்தனர். அந்த நோக்கம் நிறைவேறிய பின் நீதிக்கட்சி சரிவுப் பாதையில் பயணிக்கத் தொடங்கியது. நீதிக்கட்சியினர் பிராந்தியவாதிகளேயன்றி தேசியவாதிகள் அல்லர்.

## 18.9 நீதிக்கட்சியின் சாதனைகள்

நீதிக்கட்சியின் எழுச்சி தற்காலத் தமிழ்நாட்டு வரலாற்றின் திருப்புமுனை நிகழ்ச்சியாகும். சென்னை ராஜதானியின் பிராமணரல்லாதார் சார்பாகத் துவக்கப்பட்ட முதல் அரசியல் அமைப்பு நீதிக்கட்சி தான். இக்கட்சியின் சாதனைகள் வருமாறு

[illegible] குரல் இல்லாதிருந்த பிராமணரல்லாதாரின் குரலாக ஒலித்தது. நீதிக்கட்சியின் குறிக்கோள்கள் பிராமணரல்லாதோர் பிரகடனத்தின் மூலம் தெளிவாக்கப் பட்டது. கட்சிப் பத்திரிகைகள் மூலம் இக்குறிக்கோள்கள் மக்களிடையே பிரச்சாரம் செய்யப்பட்டது. 2) நீதிக்கட்சியின் சட்டச் சாதனைகளில் முதல் முக்கியத்துவம் வாய்ந்தது வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாங்க ஆணையாகும். இந்த ஆணையின் அடிப்படையில் தான் பிற்கால இட ஒதுக்கீட்டுக் கொள்கைகள் வகுக்கப்பட்டன. 3) இந்து மத அறக்கட்டளைச் சட்டம் இந்து கோயில்களை அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்த புரட்சிகரமான சீர்திருத்தமாகும். 4) பெண்களுக்கு வாக்குரிமை வழங்கியது பெண்ணுரிமை வழங்கப்பட்டதற்கான முதல் முன்னேற்ற நடவடிக்கையாகும். 5) சென்னை மாநகராட்சி துவக்கிய இலவச உணவுத் திட்டத்துக்கு சட்ட அங்கீகாரம் அளித்தது. பின்னர் வந்த அரசாங்கங்கள் விரிவுபடுத்திய பள்ளி மதிய உணவுத் திட்டங்களுக்கான அடித்தளமாகும்.

6) பஞ்சமர்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதி திராவிடர் என்று பெயரிட்டு சமுதாய அங்கீகாரம் அளித்தது நீதிக்கட்சியின் துணிச்சல் மிக்க சமூக சீர்திருத்தச் செயலாகும். 7) **உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின்** மூலம் தமிழ் நாட்டின் பாரம்பரிய புல்லிதழ் ஜனநாயக அமைப்புகளுக்கு புத்துயிர் ஊட்டப்பட்டது. இந்த நிறுவனங்களுக்கு **அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும்** என்ற முயற்சி தொலைநோக்குடன் மேற்கொள்ளப்பட்ட பாராட்டுக்குரிய புதுவழியாகும். 8) தாழ்த்தப்பட்ட மக்கள் சொந்த வீடு கட்டிக் கொள்வதற்காகப் பட்டா மனைகள் வழங்கும் திட்டத்தை நீதிக்கட்சி அறிமுகப்படுத்தியது. 9) மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி **தொழில்மயமாவதில்தான் உள்ளது** என்பதை நன்குணர்ந்த நீதிக்கட்சி **சென்னை** மாநில **தொழிற்சாலைகளுக்கு உதவச் சட்ட** (Madras State Aid to Industries, 1922)த்தை நிறைவேற்றியது. இது தொலைநோக்குடைய பொருளாதாரத் திட்டமாகும். 10) நீதிக்கட்சியின் துவக்ககால நடவடிக்கைகளின் விளைவாக மாநில மக்களிடையே, குறிப்பாக தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களிடையே **தன்மான உணர்வும், உரிமை வேட்கையும், வாழ்க்கையில் உயர வேண்டும் என்ற எண்ணமும் வேர்விட்டு வளரலாயிற்று.**

### வரலாறு காணா வளர்ச்சி

நீதிக்கட்சி ஆட்சியின் கீழ் சென்னை வரலாறு காணாத வளர்ச்சி அடைந்தது. **சென்னை நகரத் திட்ட சட்டம்** (Madras Town Planning Act, 1920) செயல்படுத்தப் பட்டதன் விளைவாக பல **குடியிருப்புக் காலனிகள்** உருவாக்கப்பட்டன. **நீண்ட நுங்கம்பாக்கம் நீர்நிலை அமைக்கப்பட்டது. மார்மலான் கிராமம், மாம்பலம் ஆயிற்று; தியாகராய நகர்** என்ற பெயர் பெற்றது. சென்னை நகரின் மையப்பகுதியில் **பனகல் பூங்கா** புன்னகைத்தது. **உ மான் ரோடு, ஹபிபுல்லா ரோடு, தணிகாசலம் ரோடு, நடேசன் பூங்கா, பாண்டி பசார்** போன்றவை நவநாகரிக அடையாளங்களாயின. மருத்துவப் படிப்புக்காக **இந்திய மருத்துவப் பள்ளி** (Indian School of Medicine) துவக்கப்பட்டது. **சிவஞானம் பிள்ளைக் குழுவின்** (1926 மார்ச் 22) பரிந்துரையின் பேரில்தான் பின்னர் **அண்ணாமலைப் பல்கலைக்கழகம்** துவக்கப்பட்டது (1929).



### வளர்ச்சித் துறைகள் வளர்ச்சி

தமிழ் நாட்டில் இரட்டை ஆட்சிக் காலம் (Dyarchy) முழுவதையும் நீதிக்கட்சி ஆக்கிரமித்துக் கொண்டது. இரட்டை ஆட்சியின் கீழ் நிர்வாகப் பொறுப்புகள் இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டன: 1) பிரித்துக் கொடுக்கப்பட்ட துறைகள் (Transferred Subjects); 2) **ஒதுக்கப்பட்ட** துறைகள் (Reserved Subjects). கல்வி, பொதுப் பணிகள், விவசாயம், உள்ளாட்சி, பொது சுகாதாரம், மருத்துவ நிர்வாகம், தொழில் கல்வி–வளர்ச்சி–ஆராய்ச்சி போன்ற துறைகள் பிரித்துக் கொடுக்கப்பட்ட துறைகளாகும். அதேபோன்று, காவல், நீதி நிர்வாகம், நில வருவாய், சிறைகள், தொழில் தகராறுகளைத் தீர்த்தல் போன்றவை ஒதுக்கப்பட்ட துறைகளாகும். நீதிக்கட்சி பிரித்துக் கொடுக்கப்பட்ட துறைகளில் குறிப்பிடத்தக்க சாதனைகளைச் செய்தது.

### நிலையான ஆட்சி

நீதிக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் நிலையான அரசாங்கத்தை (Stable Government) அமைத்துச் செயல்பட்டது. அதன் விளைவாக சில ஆரோக்கியமான ஜனநாயக வழக்காறுகள் (Democratic Conventions) பின்பற்றப்பட்டன: 1) மக்கள் நலம் சம்மந்தப்பட்ட துறைகளை நிர்வகிக்கும் அனுபவம் கிடைத்தது; 2) ஆளுநர் சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெற்ற கட்சியின் தலைவரை அரசாங்கம் அமைக்க அழைக்கும் வழக்கம் ஏற்பட்டது. 3) அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு (Collective Responsibility), அமைச்சரவை சட்ட சபைக்குப் பொறுப்பானது போன்ற பிரிட்டிஷ் நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. 4) சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும்–சுயராஜ்யக் கட்சியினர் உட்பட–சட்ட சபையின் முடிவுக்குக் கட்டுப்படல் என்ற வழக்கம் நடைமுறைக்கு வந்தது. 5) ஆளும் கட்சி–எதிர்க்கட்சி தொடர்பு ஜனநாயக அரசியல் பண்புக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக அமைந்தது. 6) **கட்சிக் கொறடா** (Party Whip) சட்டமன்றத்துக்குள் கட்சிக் கட்டுப்பாட்டை நிலைநாட்டும் பழக்கம் வழக்கத்துக்கு வந்தது. இந்திய அரசியல் **சமூகவியலை** (Political Sociology) ஆழ்ந்து ஆய்வு செய்த **ஆர்.பா கரன்** பிரிட்டிஷ் இந்தியாவில் சென்னை ராஜதானியில் மட்டுமே இரட்டை ஆட்சி வெற்றிகரமாக செயல்பட்டது என்று கூறுகிறார்.

## 18.10 நீதிக்கட்சியின் குறைகள்

நீதிக்கட்சியின் குறைபாடுகள் கட்சியின் பலவீனங்களின் வெளிப்பாடுகளே யன்றி வேறில்லை. அக்குறைகள் வருமாறு: 1) நீதிக்கட்சி **ஒற்றைக் குறிக்கோள் கட்சியாக** செயல்பட்டு தேக்கமடைந்தது. வகுப்புவாரி பிரதிநிதித்துவ சட்டம் நிறைவேற்றப்பட்ட பின் நீதிக்கட்சி தன்னைப் புதுப்பித்துக் கொள்ளத் தவறிவிட்டது. அதன் காரணமாக அக்கட்சி உந்து சக்தியை இழந்தது. 2) அரசாங்கத்தை எந்த வகுப்பார் அமைக்கின்றார்களோ அந்த வகுப்பு நலனுக்காகவே பாடுபடுவர் என்ற அரசியல் அறிவியல் விதிக்கேற்ப நீதிக்கட்சி ஆட்சியாளர்கள் **உயர் வகுப்பாரின் உயர்வுக்காக** மட்டுமே முன்னுரிமை கொடுத்ததால் மக்களின் மதிப்பையும், ஆதரவையும் இழந்தனர். 3) நீதிக்கட்சியிடமிருந்து நிறைய எதிர்பார்த்த சிறுபான்மையினர், குறிப்பாக தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிடர்கள் பெருத்த ஏமாற்றமடைந்தனர். அக்கட்சி நம்பகத்தன்மையை

பிரிந்தது 4) அதிகார ஆசையும், பதவிப் பித்தும் நீதிக்கட்சிக்குள் கோஷ்டிப் பூசல்களையும், போராட்டங்களையும் தீவிரப்படுத்திவிட்டன. உட்கட்சிப் பூசல்களே நீதிக்கட்சியின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது 5) நீதிக்கட்சித் தலைவர்களின் ஆடம்பர வாழ்க்கை முறை அக்கட்சியை மக்களிடமிருந்து அந்நியப்படுத்திவிட்டது. 6) முதலமைச்சராயிருந்த பொப்பிலி அரசர் தனது யதேச்சாதிகார தன்முனைப் பாட்சியால் நீதிக்கட்சியை மீண்டும் தலைதூக்க முடியாமல் செய்துவிட்டார்! சுருங்கக்கூறின் நீதிக்கட்சியின் குறைபாடுகள் அக்கட்சியின் குறைபாடுகளேயாகும். விடிவெள்ளியாகத் தோன்றிய நீதிக்கட்சி எரிநட்சத்திரமாக எரிந்து மறைந்தது.

## 18.11 மதிப்பீடு

நீதிக்கட்சி பிராமணரல்லாதாருக்கு ஆதரவாகத் துவக்கப்பட்ட அமைப்பேயன்றி பிராமணர்களுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட கட்சி அல்ல. நீதிக்கட்சி பிராமணர்களுக்கு ஆதரவாக இருந்தது என்பது நியாயமற்ற குற்றச்சாட்டாகும். ஏனெனில், நீதிக்கட்சியின் வகுப்புவாரி பிரதிநிதித்துவ சட்டம் பிராமணர்களின் அரசாங்க வேலை வாய்ப்பை வெகுவாகக் குறைத்து விட்டது; அதன் காரணமாக தமிழ் நாட்டில் பிராமணர் ஆதிக்கம் குறையலாயிற்று. நீதிக்கட்சி கொண்டு வந்த மாற்றத்தால் தமிழ்நாடு காங்கிரசும் அதிக அளவில் பிராமணரல்லாதாரை உறுப்பினர்களாகவும், பொறுப்பாளர்களாகவும் சேர்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

தேர்தல் தோல்வியை சந்திக்க விரும்பாத நீதிக்கட்சி பிராமணர்களை கட்சி உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டது சந்தர்ப்பவாத அரசியலாகும். நீதிக்கட்சி வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கையை செயல்படுத்தியது பிராமணரல்லாதாரின் வாக்குகளைப் பெறுவதற்காகத்தான் என்று குறை கூறினார் கம்யூனிட் தலைவர் பி.ராமமூர்த்தி. பொருளாதார நெருக்கடியில் விவசாயிகள் சிக்கித் தவித்தபோது நிலத்தீர்வை ரத்து செய்யாதது பொருளாதாரத் தவறாகும். அதேபோன்று, நீதிக்கட்சி சில பிராமணரல்லாத சமூகத்தினரைக் குற்றவாளிகளாகக் கருதிய குற்றப் பழங்குடியினர் சட்ட (Criminal Tribe Act)த்தை நீக்காதது சமுதாயத் தவறாகும்.

நீதிக்கட்சியினர் துவக்க காலத்தில் அந்நிய ஆதிக்க அரசாங்க ஆதரவாளர்களாக, விசுவாசிகளாக இருந்தனர் என்பதில் ஐயமில்லை. எனினும் விரைவிலேயே அவர்கள் தேசிய சுதேசிப் பொருளாதாரத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு அதற்கான தீர்மானத்தை 1925இல் நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் நிறைவேற்றினர். நீதிக்கட்சி அரசியலமைப்பில் 'சுவராஜ்' என்ற சொல் இடம் பெற்றது. நீதிக்கட்சியின் நான்காவது ஆண்டுக் கூட்டத்தில் ஜாலியன்வாலாபாக் படுகொலைக்குக் கண்டனம் தெரிவித்ததோடு அதற்குக் காரணமாக இருந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனினும், நீதிக்கட்சி தேசியத்தை (Nationalism)விட பிராந்தியத்துக்கே (Regionalism) அதிக முக்கியத்துவம் அளித்தது. பிரிட்டிஷ் ஆட்சியில் நம்பிக்கையுடைய நீதிக்கட்சி திராவிடர் இயக்கத்தின் அரசியல் கிளையாக இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார் சி.சுப்பிரமணியம். சுருங்கக்கூறின், நீதிக்கட்சியின் எழுச்சி தற்காலத் தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றைத் திசைதிருப்பிய நிகழ்ச்சியாகும்.

# 19. சுயமரியாதை இயக்கம்

*'சுயமரியாதை' என்ற சொல் எளிமையாகவும், தெளிவாகவும் இருப்பதைப் போல் தோன்றினாலும் அதன் ஆழத்தையும் அகலத்தையும் ஒரு வரையறைக்குள் அடக்கிவிட இயலாது.*

*– எம்.கே.ரெட்டி.*

## 19.1 பெரியார் ஈ.வெ.ராமசாமி : வாழ்க்கைச் சுவடுகள், 1879–1973

### 19.1.1 இளமைப் பருவம், 1879–1919

ஈரோடு வெங்கட ராமசாமி (ஈ.வெ.ரா) 1879 செப்டம்பர் 17 ஆம் தேதி ஈரோட்டில் மண்டி வெங்கட்டப்ப நாயக்கர்–சின்னத்தாயம்மை ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இவர் செல்வமும் செல்வாக்குமிக்க கர்நாடக பலிஜவார் வகுப்பைச் சேர்ந்தவர். ராமசாமி திண்ணைப் பள்ளியிலும், துவக்கப் பள்ளியிலும் படித்தார். 12வது வயதிலேயே பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டு, வெங்கட்டப்ப நாயக்கர் மண்டிக்கடை வியாபாரத்தைப் பார்த்துக் கொண்டார். 19 ஆவது வயதில் சேலம் நாதம்பட்டியைச் சேர்ந்த 13 வயது நாகம்மையைத் திருமணம் செய்து கொண்டார் (1898). 25 ஆம் வயதில் வீட்டைவிட்டு வெளியேறி, காசி, கல்கத்தா முதலான இடங்களுக்குச் சென்றுவிட்டு மீண்டும் ஈரோட்டுக்கே வந்து 'ஈ.வெ.ராமசாமி நாயக்கர் மண்டி' வியாபாரியானார் (1904). வியாபாரியாக இருந்த போதே காங்கிர இயக்கத்தில் ஆர்வம் கொண்டார். காங்கிர மாநாடுகளில் கலந்து கொண்டார். அதேசமயம் ஈரோடு நகர் மன்றத் தலைவராகவும் இருந்தார். பின்னர் நகர் மன்றத் தலைவர் பதவியையும், பல கவுரவப் பொறுப்புக்களையும் விட்டுவிட்டு காங்கிர உறுப்பினராகி இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரப் பங்கேற்றார் (1919).

### 19.1.2 காங்கிரஸ் போராளி, 1919–1925

காங்கிர இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்ட ஈ.வெ.ராமசாமி நாயக்கர் ஒத்துழையாமை இயக்கத்துக்கு முழு ஒத்துழைப்பைக் கொடுத்தார். நெல்லை காங்கிர கூட்டத்தில் வகுப்புரிமைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். ஈரோட்டில் கள்ளுக்கடை மறியலைத் தலைமை தாங்கி நடத்தினார். காந்தியின் நிர்மானத் திட்டத்தை சிரமேற்கொண்டு நடைமுறைப்படுத்தினார். தாதம்பட்டியில் அவருக்குச் சொந்தமான தென்னந்தோப்பில் நூற்றுக்கணக்கான தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தார். வீதி வீதியாகச் சென்று தீவிரக் கதர் பிரச்சாரம் செய்தார். தஞ்சாவூர் காங்கிரசில் மீண்டும் வகுப்புரிமைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார் (1921). கள்ளுக்கடை மறியலில் [illegible] சிறையில் அடைக்கப்பட்டார் (1922).

ஈ.வெ.ராமசாமி நாயக்கர் 1923 ஆம் ஆண்டு தமிழ்நாடு காங்கிர தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழ் நாட்டில் முதல் முதலாக காங்கிர தலைமைப் பொறுப்பேற்ற பிராமணரல்லாதவர் இவர்தான்! அப்படியும் வ.வே.சு.ஐயர் இவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தார்! (விடுதலை, 1960, ஜனவரி 6). 'தட்சிண காந்தி' என்று அழைக்கப்பட்ட ராஜாஜியுடன் பெரியார் பொள்ளாச்சிக்கு வந்ததாக (1925)க் குறிப்பிட்டுள்ளார் சிகப்பிரமணியம். காங்கிர கமிட்டித் தலைவரான பின்னரும் வகுப்புரிமை கோரிக்கையைக் கைவிடவில்லை ஈ.வெரா 1924 ஆம் ஆண்டில் மூன்று முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்: 1) கேரளாவில் வைக்கம் மகாதேவர் கோவில் முன் தீண்டாமை ஒழிப்புச் சத்தியாகிரகத்தில் பங்கேற்று இருமுறை சிறை சென்று, போராட்டத்தில் வெற்றி பெற்று 'வைக்கம் வீரர்' என்று பாராட்டப்பட்டார்; 2) திருவண்ணாமலை காங்கிரசில் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்மொழிந்து உணர்ச்சி உரையாற்றினார்; 3) சேரன்மகாதேவி குருகுலத்தில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை வன்மையாகக் கண்டித்தார். இவற்றோடு நீதிக்கட்சி ஆட்சியின் அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தை ஆதரித்தார். ஈ.வெ.ராமசாமி நாயக்கர் 1925 நவம்பர் 25 ஆம் தேதி நடைபெற்ற காஞ்சிபுரம் காங்கிர மாநாட்டில் இறுதியாக வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்மொழிந்தார். அத்தீர்மானம் ஏற்கப்படாமையால் அவரும் அவரது ஆதரவாளர்களும் காங்கிரசை விட்டு வெளியேறினர். வெளியேறிய பின்னரும் அவர் காங்கிரசை ஒரு 'வகுப்புவாத சபை'யாகவே கருதினார்.

## 19.1.3 சுயமரியாதை சமதர்மம், 1925–1938

### 'தமிழ்நாட்டு ரூசோ'

காங்கிரசை விட்டு வெளியேறிய ஈ.வெ.ராமசாமி நாயக்கர் பல சமுதாய சீர்திருத்தப் பிரசாரங்களில் ஈடுபட்டார். காங்கிரசின் 'இந்திக் கொள்கை'யைக் கண்டித்து எழுதினார். 1926 டிசம்பர் மாதம் மதுரையில் பிராமணரல்லாதார் முதல் மாநில மாநாட்டைக் கூட்டி [illegible] பிரச்சனைகள் பற்றிப் பேசினார். காந்தியின் [illegible] திட்டத்தை நிராகரித்தார். காந்தியாரை பெங்களூரில் சந்தித்து பிராமண எதிர்ப்புக் கொள்கையைப் பற்றி விவாதித்தார் (1927). நாகை தொழிலாளர் கிளர்ச்சியில் பங்கேற்று சிறை சென்றார். [illegible] திருக்குறள், புத்தர் கொள்கைகளைப் பரப்பினார். தன் பெயருக்குப் பின்னால் இருந்த 'நாயக்கர்' சாதிப் பட்டத்தை விலக்கிக் கொண்டார். [illegible] 'தமிழ் நாட்டின் ரூசோ' என்று அழைத்து பெருமைப்படுத்தினார் (1927 ஜூலை). 1928 ஆம் ஆண்டிலிருந்து காந்தியை 'மகாத்மா' என்று அழைப்பதை நிறுத்திவிட்டார். [illegible]



ஈ.வெ.ராமசாமி என்று பெயரை மட்டும் போட்டுக் கொள்வது மரியாதையாக இருக்காது என்று கருதிய நாகர்கோவில் வழக்குரைஞர் பி.சிதம்பரம் பிள்ளை முதன் முதலாக ஈ.வெ.ரா.பெரியார் என்று அழைத்தார் (1927). அதிலிருந்து ஈ.வெ.ரா.பெரியார் என்ற பெயர் பிரபலமாயிற்று. 1929 பிப்ரவரி 17–18 தேதிகளில் செங்கல்பட்டில் முதலாவது சென்னை மாகாண சுயமரியாதை மாநாட்டைக் கூட்டி முறைப்படி சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கினார். மனைவி நாகம்மையுடன் மலேசிய நாட்டில் சுற்றுப் பயணம் செய்து சுயமரியாதைப் பிரச்சாரம் செய்தார். அப்பயணத்தின் போதுதான் பெரியார் தாடி வளர்க்கத் தொடங்கினார்!

### சமதர்மவாதி

மலேசியாவிலிருந்து திரும்பிய பெரியார் ஈ.வெரா பல பகுத்தறிவாளர் சங்கங்களைத் துவக்கினார். இரண்டாவது சுயமரியாதை மாநாட்டை ஈரோட்டிலும் (1930), மூன்றாவது மாநாட்டை விருதுநகரிலும் (1931) நடத்தினார். 1932 ஆம் ஆண்டு பல ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு வந்த பெரியார் சமதர்மவாதியானார். சமதர்மப் பிரச்சாரம் செய்ததற்காகப் பெரியார் தண்டிக்கப்பட்டு சிறை தண்டனை பெற்றார் (1933). பெரியார் தயாரித்த சமதர்ம வேலைத் திட்டத்தை நீதிக்கட்சி ஏற்றுக் கொண்டதால் அக்கட்சியின் ஆதரவாளரானார் (1935). பகுத்தறிவு என்ற நாளேட்டைத் துவக்கினார். 1937 இல் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் நீதிக்கட்சிக்காக பிரச்சாரம் செய்தார். இருப்பினும் நீதிக்கட்சி படுதோல்வி அடைந்தது. இத்தேர்தலில் காங்கிர மகத்தான வெற்றி பெற்று ராஜாஜி சென்னை ராஜதானியின் முதலமைச்சரானார். அவர் பள்ளிகளில் அறிமுகப்படுத்திய இந்தியை எதிர்த்துப் போராடி சிறை சென்றார் பெரியார் (1938). பெரியார் பெல்லாரி சிறையில் இருந்தபோதுதான் நீதிக்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்! தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு ஈ.வெ.ராவை எப்போதும் பெரியார் என்றே குறிப்பிட வேண்டும் என்று அறிவித்தது.

## 19.1.4 நீதிக்கட்சித் தலைவர், 1938–1944

நீதிக்கட்சித் தலைவரான பெரியார் அக்கட்சியை ஒரு சமுதாய சீர்திருத்த இயக்கமாக உருமாற்றம் செய்வதில் முனைப்புடன் ஈடுபட்டார். சிறையிலிருந்து திரும்பிய பெரியார் 'திராவிட நாடு' கோரிக்கையை எழுப்பினார். திராவிட நாட்டை இலட்சியமாகக் கொண்டு அதற்கான பிரச்சாரத்தைத் துவக்கினார். சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸை (Sir Stafford Cripps) சந்தித்து 'திராவிட நாடு பிரிவினை' பற்றி பேசினார் [illegible]. 1940 ஜனவரி 8 ஆம் தேதி [illegible] சந்தித்து திராவிட நாடு கோரிக்கைக்கு அவரது ஆதரவைக் கோரினார். [illegible]

பற்றிய தெரியவில்லை! ஒருபக்கம் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று முழக்கமிட்டார். அந்த வாசகத்தை ஒவ்வொரு தமிழனும் கையில் பச்சை குத்திக் கொள்ள வேண்டும் என்றார்! அதே சமயம் திராவிட பிரிவினை பற்றியும் பிரச்சாரம் செய்தார்!! பிராமணரல்லாதார் என்ற பெயரில் செயல்பட்டுவந்த அமைப்புகளைப் படிப்படியாக திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றம் செய்து வந்தார் (1941). அமைச்சரவை அமைக்கும் வாய்ப்பு வந்தும் அதைப் பெரியார் நிராகரித்துவிட்டார் (1942). திராவிடப் பிரிவினைப் பிரச்சாரத்தில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டார் பெரியார். 1944 ஆக டு 27 ஆம் தேதி சேலத்தில் பெரியார் நீதிக்கட்சி என்ற பெயரை திராவிடர் கழகம் என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

### 19.1.5 திராவிடர் கழகத் தலைவர், 1944–1973

#### கொடியும், சீருடையும்

நீதிக்கட்சியை திராவிடர் கழகமாக மாற்றியபின் பெரியார் தராசு சின்னம் பொறித்த நீதிக்கட்சியின் கொடியை கருப்புப் பின்னணியில் சிவப்பு வட்டம் கொண்ட கொடியாக மாற்றினார். தனிக் கொடியுடன் திருச்சி திராவிடர் கழக மாநில மாநாட்டில் கருஞ்சட்டைத் தொண்டர் படை என்ற அமைப்பை உருவாக்கினார் (1945 செப்டம்பர் 29–30). அதன்பின் மதுரையில் கருஞ்சட்டைப் படை மாநாடு நடத்தப்பட்டது (1946 மே 11). திராவிடர் கழகக் கொடி முறையாக ஏற்கப்பட்டது.

#### இயக்கம் இரண்டுபட்டது

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையின் அமைப்பு முறையை எதிர்த்தார் பெரியார் (1946). 1947 ஆக டு 15 ஆம் தேதி நாடு முழுவதும் சுதந்திர நாளாகக் கொண்டாடிய போது பெரியார் அந்த நாளை 'திராவிடருக்கு துக்க நாள்' என்று அறிவித்தார்! வடநாட்டவர் தமிழ்நாட்டு ஆளுநராக நியமிக்கப்படுவதை எதிர்த்தார். கடலூரில் திராவிடர் மாநாடு கூட்டி நாட்டுப் பிரிவினைப் பிரச்சாரம் செய்தார். இந்தி எதிர்ப்புக் கொள்கையை தீவிரப்படுத்தினார். சென்னைக்கு வந்த ராஜாஜிக்கு எதிராக ஆர்ப்பட்டம் செய்ததற்காக சிறை தண்டனை பெற்றார் (1948). மூத்த கழகத் தலைவர்கள் மீது நம்பிக்கையின்றி திராவிடர் கழகப் பாதுகாப்பு கருதி 1949 ஜூலை 9 ஆம் தேதி பெரியார் மணியம்மையைத் திருமணம் செய்து கொண்டார். பெரியாரின் யதேச்சாதிகார சர்வாதிகாரப் போக்கை எதிர்த்து சி.என்.அண்ணாதுரையும் அவரது ஆதரவாளர்களும் திராவிடர் கழகத்தை விட்டுப் பிரிந்து சென்று திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் தனிக்கட்சியைத் துவக்கினர். அதன்பின் திராவிடர் கழகத்து தலைவர் பெரியார் பல போராட்டங்களை நடத்தி 1973 டிசம்பர் 24 ஆம் தேதி காலை 94 வயதில் இயற்கை எய்தினார்.

## 19.2 சுயமரியாதை இயக்கம், 1925–1935

### 19.2.1 முன்னுரை

சென்னை ராஜதானியில் இரட்டை ஆட்சி (Dyarchy)யின் கீழ் நீதிக்கட்சி (Justice Party) ஆட்சி செய்து கொண்டிருந்த போது பெரியார் ஈ.வெ.ராமசாமி காங்கிரசை



விட்டு வெளியேறி (1925) சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கினார். ஈரோடு வெங்கடப்ப ராமசாமி (ஈ.வெ.ரா) நாயக்கர் தனது 28வது வயதிலிருந்து (1907) காங்கிரஸ் இயக்கத்தில் ஆர்வம் கொண்டார்; காங்கிர மாநாடுகளுக்குச் சென்று வரத் தொடங்கினார்; 1919 ஆம் ஆண்டு ஈரோடு நகர்மன்றத் தலைவர் பதவியைவிட்டு வெளியேறி காங்கிர உறுப்பினரானார். காந்தியின் தலைமையின் கீழ் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தில் முழு மனதுடன் ஈடுபட்டார். ஈரோட்டில் கள்ளுக்கடை மறியலை முன்னின்று நடத்தினார். காந்தியின் நிர்மானத் திட்டத்தை சிரமேற்கொண்டு தாதம்பட்டியில் அவருக்குச் சொந்தமான 500 தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தார். தீவிர கதர் பிரச்சாரத்தை மேற்கொண்டார் (1921). கள்ளுக்கடை மறியல் செய்ததற்காக கோவைச் சிறையில் அடைக்கப்பட்டார் (1922). தமிழ்நாடு காங்கிர தலைவராகப் பணியாற்றியபோது (1924) கேரளத்தில் வைக்கம் தீண்டாமை ஒழிப்பு சத்தியா கிரகத்தில் பங்கேற்றார்; சேரன்மாதேவி குருகுலத்தில் பிராமணரல்லாதாருக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டித்தார். இவற்றுக்கிடையே ஈ.வெ.ரா. தொடர்ந்து காங்கிர ஆண்டுக் கூட்டங்களில் வகுப்புரிமை பற்றிப் பேசி அதற்கான தீர்மானங்களைக் கொண்டு வந்தார். அந்த தீர்மானங்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்ட போது அவர் காங்கிரசை விட்டு வெளியேறினார் (1925). அப்போது அவர் தமிழ்நாடு காங்கிர செயலராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சுருங்கக்கூறின், ஈ.வெ.ராமசாமியின் வகுப்புரிமை கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படாமையால் காங்கிரசைவிட்டு வெளியேறி சுயமரியாதை இயக்கத்தைத் துவங்கினார். காங்கிரசைவிட்டு வெளியேறியதற்குக் காரணம் "அது ஒரு வகுப்புவாத தாபனம்; ஆரியப் பார்ப்பனரின் நலனுக்காகவே பாடுபட்டு வந்த ஒரு தாபனம்; வருணாசிரம பாதுகாப்பி தாபனம் என்பதை தெளிவாக உணர்ந்தது தான்" (விடுதலை 1948, பிப்ரவரி 29).

### 19.2.2 முன்மாதிரி இயக்கங்கள்

பெரியார் ஈ.வெ.ராமசாமி சுயமரியாதை இயக்கத்தைத் துவக்குவதற்கு முன்னால் வெளிநாடுகளில் சுயமரியாதைக் கொள்கைகளுக்காக அமைக்கப்பட்டு செயல்பட்டு வந்த இயக்கங்களைப் பற்றி அறிந்து கொண்டார். எடுத்துக்காட்டாக, லண்டன் பகுத்தறிவாளர் சங்கம் (RDA), அமெரிக்க சுதந்திர சிந்தனையாளர் சங்கம் (Free Thinkers Association), ரஷ்ய கடவுள் எதிர்ப்பு சங்கம் (Anti-God Society), சீன வாலிப சங்கம் (Young Chinese) ஆகியவற்றைப் பெரியார் முன்மாதிரி இயக்கங்களாகக் கருதினார். இவற்றுள் ரஷ்ய சங்கம் அரசாங்கத்தால் ஆதரிக்கப்பட்டது. இவையேயன்றி ஆப்கானி தானத்திலும், துருக்கியிலும் சுயமரியாதைப் பிரச்சாரங்கள் நடைபெற்று வந்தன. இச்சங்கங்களின் செயல்பாடுகள் பெரியாருக்கு உந்து சக்திகளாக இருந்தன.

### 19.2.3 சுயமரியாதை–விளக்கம்

பெரியார் ஈ.வெ.ராமசாமி சுயமரியாதையை உயிருக்கு ஒப்பாகக் கருதினார். 'சுயமரியாதையற்றவனைப் பிணமென்றுதான் சொல்ல வேண்டும்' என்றார். சுயமரியாதை இல்லாதவர்களுக்கு இந்தியா அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை

ஆவதால் எந்தப் பயனுமில்லை என்று கருதினார் ஈ.வெ.ரா. அவருடைய நோக்கில் சுயமரியாதை என்பது சமத்துவம், சம உரிமை, சம வாய்ப்பு, சிக்கனம், அன்பு, இரக்கம், ஒழுக்கம் ஆகியவற்றையும்; குருட்டு நம்பிக்கை, மூடப் பழக்கவழக்கங்கள், தீண்டாமை, பெண் அடிமை ஒழிப்பு, எளியோரை வலியோர் அடக்கி ஆளாமை, படித்தவர்கள் படிக்காமல் இருப்போரை ஏமாற்றாமல் இருத்தல், பகுத்தறிவு வளர்ச்சி பெறல், தன் முயற்சிக்கு ஊக்கமளித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். சுருங்கக்கூறின், சுயசிந்தனையும், சுய சார்புடைமையும் சுயமரியாதையின் இரு கண்களானால் பகுத்தறிவும் தன்மானமும் இரு கால்களாகும்.

## 19.2.4 நீதிக்கட்சியில் ஏன் சேரவில்லை ?

நீதிக்கட்சி பிராமணரல்லாதார் அனைவரது சமூக சமத்துவத்தையும், உரிமை களையும், சமவாய்ப்பையும் அடிப்படையாகக் கொண்டு துவக்கப்பட்டது. அக்கட்சி எதிர்ப்புகளுக்கிடையே எதற்கும் அஞ்சாமல், உறுதியுடன் இருந்து சவால்களை சமாளித்து, அவ்வியக்கத்தை அழியவிடாமல் காப்பாற்றி, மக்களிடையே சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டி வந்தார்கள் என்பதை பெரியார் ஈ.வெ.ரா ஏற்றுக் கொண்டார். ஆனால் அக்கட்சி பிராமணர்களை உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்வது என்ற முடிவை 'தேன் கூட்டில் நெருப்பு வைக்கப்பட்டது போன்றது' என்றும் இந்த 'இயக்கம் செத்து, பார்ப்பன ஆதிக்கத்திற்கு மற்றொரு சாதனமாய் மாறிவிடும்' என்றும் அஞ்சிய பெரியார் ஈ.வெ.ரா. அக்கட்சியில் சேரவில்லை; ஆனால் அக்கட்சியை ஆதரித்தார். எனினும் நீதிக்கட்சியை '**உத்தியோக வேட்டைக் கட்சி**'யாகவே கருதினார். எனவே பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கி அதன் தனித்தன்மையை நிலை நாட்டுவதில் குறியாக இருந்தார். ஆங்கிலம் தெரிந்த மக்களிடையே சுயமரியாதைக் கொள்கையைப் பரப்புவதற்காக **ரிவோல்ட்** (Revolt) என்ற இதழை நடத்தினார் (1928). சுயமரியாதை இயக்கம் வேர்பிடித்து வளர நீதிக்கட்சியைப் பயன்படுத்திக் கொண்டார். 1929 இல் செங்கல்பட்டில் நடைபெற்ற சென்னை மாகாண சுயமரியாதை முதல் மாநாடு இதைத் தெளிவுபடுத்தியது. இந்த வரலாற்று முக்கியத்துவமிக்க மாநாடு **சுயமரியாதை இயக்கத்தின் தோற்றுவாயாகக்** கருதப்பட்டது.

## 19.2.5 அரசியல் கட்சியல்ல

சுயமரியாதை இயக்கம் ஒரு அரசியல் கட்சியைப் போன்று குறிப்பிட்ட இடத்தில் சிலர் கூடி துவக்கப்பட்ட அமைப்பல்ல. இந்த இயக்கம் பெரியார் ஈ.வெ.ராவின் தலைமையின் கீழ் செயல்பட்ட தனிமனித சமுதாய சீர்திருத்த இராணுவமாகும்; இராணுவக் கட்டுப்பாட்டுடன் நடத்தப்பட்டது. பெரியாரின் வார்த்தைகளில் கூறுவதாயின் **"சுயமரியாதை இயக்கமானது அரசியல்களின் பேரால் நமது நாட்டிலுள்ள பல கட்சிகளைப் போலல்லாமல், அன்னியர்களிடம் இருந்து யாதொருவிதமான சிறு விஷயத்தையும் எதிர்பாராமல் மக்கள் அறிவை விளக்கை அவரவர்களின் மனப்பான்மையை மாற்றுவதன் மூலம் உண்மையான விடுதலையையும், சமத்துவத்தையும், தன்மதிப்பையும் உண்டாக்கக் கூடிய ஒரு இயக்கமாகும்"** (தலையங்கம், குடிஅரசு 25-8-1929). அதாவது, சுயமரியாதை இயக்கம் தமிழர்களின்



அறிவை விரிவுபடுத்தி, மனப்பான்மையை மாற்றி, சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் இயக்கமாகும். ஏனெனில் அரசியல் தொண்டு என்பது **"அயோக்கியர்களை உற்பத்தி செய்து அவர்கள் மூலம் பாமர மக்களை வஞ்சிக்கச் செய்வதே அல்லாமல் வேறில்லை"** என்றார் பெரியார்.

## 19.2.6 வேகமான வளர்ச்சி

பெரியார் ஈ.வெ.ராமசாமியால் துவக்கப்பட்ட சுயமரியாதை இயக்கம் வேகமாக வளரத் துவங்கியது. இந்த வேக வளர்ச்சியைக் கண்ட நீதிக்கட்சித் தலைவர்கள் அதன்பால் ஆர்வம் காட்டலாயினர். 1929 மே மாதம் பட்டுக்கோட்டையில் எ .குருசாமியின் தலைமையின் கீழ் மாபெரும் சுயமரியாதை நடைபெற்றது. **கே.வி.அழகிரிசாமி** தொண்டர் படைக்குத் தலைமை தாங்கினார். இந்த மாநாட்டைப் போல் சென்னை ராஜதானியின் பிற நகரங்களிலும் சுயமரியாதை மாநாடுகள் நடத்தப்பட்டன. அவற்றுள் ஒன்றுதான் 1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடத்தப்பட்ட வரலாற்று முக்கியத்துவமிக்க சுயமரியாதை மாநாடு ஆகும்.

## 19.2.7 இயக்கத்தின் குறிக்கோள்கள்

### 15 அம்சக் கொள்கை

1929 இல் செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மூலம் இந்த இயக்கத்தின் 10 அம்சக் கொள்கையை வெளியிட்டார் பெரியார் ஈ.வெ.ரா. அவையாவன: 1) மக்கள் பிறப்பால் சாதிபேதம் அற்றவர்கள்; 2) சாதிபேதம் கற்பிக்கும் மதம், வேதம், சா திரம், புராணம் இவைகளைப் பின்பற்றக்கூடாது; 3) வருணாசிரமப்படி பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் என்ற பிரிவுகளை ஏற்றுக் கொள்ளக்கூடாது; 4) மக்களிடையே தீண்டாமையை ஒழித்து, பொதுக்கிணறு, குளம், பள்ளிக்கூடம், சத்திரம், தெரு, கோயில் முதலியவற்றில் பொது மக்களுக்குச் சமஉரிமை இருக்க வேண்டும்; 5) இவற்றுக்கு எதிர்ப்பு வந்தால் அரசாங்கம் மூலம் சட்டம் இயற்றி, அச்சட்டத்தின் மூலம் நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும்; 6) சாதி மத வேறுபாட்டைக் காட்டக்கூடிய பட்டம், குறியீடுகள் முதலியவற்றை உபயோகிக்கக் கூடாது; 7) பெண்களைப் பொறுத்தவரை, திருமண வயது 16க்கு மேல் இருக்க வேண்டும்; கணவனுக்கும் மனைவிக்குமிடையே ஒத்துப்போக முடியாவிடில் பிரிந்து போகும் உரிமை வேண்டும்; விதவைகள் மறுமணம் செய்து கொள்ள வேண்டும்; கலப்பு மணம் செய்து கொள்ளலாம்; ஆண்களும் பெண்களும் தங்கள் துணைகளை அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்; 8) திருமணச் சடங்குகள் போன்றவை மிகவும் சுருக்கமாகவும், சிக்கனமாகவும், ஒரு நாளைக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்; 9) கோயில் பூசைகளுக்குப் பண விரயம் செய்யக்கூடாது; கடவுளுக்கும் பக்தனுக்குமிடையே இடைத்தரகர் கூடாது; கோயில் சொத்தை கல்விக்கும், ஆராய்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் பயன்படுத்த வேண்டும். 10) மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தல்; 11) பெண்களுக்கு சொத்துரிமை, உத்தியோக உரிமை அளித்தல்; ஆசிரியர்கள் அனைவரும் பெண்களாகவே இருக்க வேண்டும்; 12) 'தீண்டத்தகாதோர்' என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருப்போருக்கு உணவு, உடை, புத்தகம் ஆகியவற்றைக்

கொடுத்து அவர்களுக்குக் கல்வி அளிப்பது; அவர்களுக்கு அரசாங்க நிலங்களை வழங்கல். 13) பிராமணரல்லாத இளைஞர்களுக்கு உள்ள தடைகளையும், இடர்ப்பாடுகளையும் நீக்கல்; 14) கல்வி சம்பந்தமாக தாய்மொழி, அரசாங்க மொழி தவிர பிற மொழி கல்விக்குப் பொதுப் பணம் செலவிடக்கூடாது; ஆரம்பக் கல்விக்குப் பொதுப் பணத்தை செலவழித்து கட்டாயமாக கற்பிக்க வேண்டும் உயர்நிலைக் கல்விக்கு பொது நிதியை செலவிடக்கூடாது; அரசாங்க அலுவல்களுக்குத் தேவைப்பட்டால் வகுப்புவாரி ஒதுக்கீட்டின்படி மாணவர்களைத் தேர்ந்தெடுத்து படிப்பிக்க வேண்டும்; 15) சிற்றுண்டி, ஒட்டல் முதலிய இடங்களில் வேறுபாடு எதுவும் இருக்கக்கூடாது.

மேற்கண்ட நோக்கங்களையும், கொள்கைகளும், கருத்துக்களும் இதற்கு முன்பிருந்த சீர்திருத்தக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை பெரியார் ஈ.வெ.ரா நினைவுபடுத்தத் தவறவில்லை. இத்தகைய கொள்கைகள் உலகின் பல்வேறு முன்னேறிய நாடுகளில் பின்பற்றப்படுவதையும் பெரியார் எடுத்துக்காட்டினார். எனவே, பெரியார் இத்தகைய கொள்கைகளையும், சிந்தனைகளையும் நடைமுறைப்படுத்தும் தீர்மானத்துடன் சுயமரியாதை இயக்கத்துக்குத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டார். ''மனிதனுக்கு வெட்கமும் ரோஷமும், மான உணர்ச்சியும் ஏற்படுவதற்காகவே சுயமரியாதை இயக்கம் ஏற்பட்டது'' என்று கூறிவந்தார் பெரியார்.

### 19.2.8 மலேசியப் பயணம், 1930

பெரியார் ஈ.வெ.ரா செங்கல்பட்டில் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைப் பிரகடனம் செய்தபின் மலேசியாவில் சுற்றுப் பயணம் செய்து தீவிர சுயமரியாதைப் பிரச்சாரம் செய்தார் (1930). மலேசியப் பிரச்சாரப் பயணத்தை முடித்துக் கொண்டு நாகை திரும்பிய பெரியார் தாடி வளர்க்கத் துவங்கினார்! தமிழ் நாடெங்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு உண்மை நாடுவோர் சங்கம், தாராள சிந்தனையாளர் சங்கம், பகுத்தறிவாளர் கழகம் ஆகிய அமைப்புகளைத் துவக்கினார். சமதர்ம அதிகாரி (Communist Manifesto)யைத் தமிழாக்கம் செய்து வெளியிட்டார். 1931 ஆம் ஆண்டு விருதுநகரில் மாகாண மூன்றாவது சுயமரியாதை மாநாடு நடத்தப்பட்டது. தமிழ் நாடெங்கும் சமதர்ம சங்கங்கள் நிறுவப்பட்டது. அடுத்த ஆண்டே (1932) எகிப்து, ரஷ்யா, கிரேக்கம், துருக்கி, ஜெர்மனி, பெயின், பிரான் , போர்ச்சுக்கல், இங்கிலாந்து, இலங்கை ஆகிய நாடுகளில் 11 மாதங்கள் சுற்றுப் பயணம் செய்து தனது சுயமரியாதை இயக்கம் பற்றி அந்நாடுகளில் இருந்த சமுதாய சிந்தனையாளர்கள், சீர்திருத்தவாதிகள் ஆகியோருடன் கலந்துரையாடினார். இப்பயணத்தின் போது பெரியார் மேலை நாடுகளின் அரசியல் முறைகள், சமுதாய இயக்கங்கள், பொருளாதார சமுதாய முறை, வாழ்க்கை முறை, பொது நிர்வாகம் பற்றியெல்லாம் தெரிந்து கொண்டார். புதிய கருத்துக்களோடும் அனுபவத்தோடும் தமிழ்நாடு திரும்பினார் (1932 நவம்பர் 11).

#### பயணத்தின் பயன்

தமிழ்நாடு திரும்பிய பெரியார் ஈ.வெ.ரா சுயமரியாதைப் பிரச்சாரத்தோடு தீவிர சமதர்மப் பரப்பாளரானார். மேலைநாட்டு அனுபவம் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்துக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்தது. ரஷ்யப் பொதுவுடைமைத் தத்துவமும், நடைமுறையும் பெரியாரை வெகுவாகக் கவர்ந்தன. மார்க்சிய சித்தாந்தத்தை (Marxian Philosophy)ஐ வழிகாட்டியாகக் கொண்டார். பிரபல தமிழ்நாட்டு கம்யூனிஸ்ட் எம்.சிங்காரவேலு செட்டியாருடன் இணைந்து சுயமரியாதைக் குறிக்கோளுடன் சமதர்ம கருத்துக்களைச் சேர்த்து ஒரு புதிய சமூக-பொருளாதாரத் திட்டத்தை உருவாக்கினார். இத்திட்டம் சுயமரியாதை இயக்க வரலாற்றில் குறிப்பிடத்தக்க முக்கிய நிகழ்ச்சியாகும். ஏனெனில், மேலைநாட்டு அனுபவம் பெரியாருக்கு தேசிய பார்வையைக் கொடுத்தது. புரட்சி வார ஏட்டைத் துவக்கினார். தீவிர சமதர்ம பிரச்சாரத்துக்காக பெரியார் தண்டிக்கப்பட்டு சிறை வைக்கப்பட்டார் (1933)! 1933 மே 21ம் தேதியை மே தினமாகக் கொண்டாடுமாறு வேண்டுகோள் விடுத்தார். ஓராண்டு காலம் சமதர்ம வேலைத் திட்டத்தை செயல்படுத்துவதில் கவனம் செலுத்தினார் (1934).

### 19.2.9 திருத்தப்பட்ட திட்டம்

சமதர்ம சித்தாந்தத்தின் அடிப்படையில் சுயமரியாதை இயக்க வேலைத் திட்டம் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கப்பட்டது: 1) முதலாளித்துவ பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து இந்தியாவை விடுவிப்பது; 2) தேசத்தின் கடன்களை ரத்து செய்வது; 3) அனைத்து தொழிற்சாலைகளையும், ரயில்வேக்களையும், வங்கிகளையும், கப்பல், படகு போக்குவரத்து சாதனங்களையும் தேசியமயமாக்குவது; 4) அதேபோன்று தேசத்தில் உள்ள அனைத்து விவசாய நிலங்களையும், காடுகளையும், மற்ற தாவர சொத்துக்களையும் பொது மக்களுக்கு உரிமையாக்கல்; 5) குடியானவர்களும், தொழிலாளர்களும் லேவா தேவிக்காரர்களிடம் பட்டிருக்கும் கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்வது; 6) அடிமை ஒப்பந்தங்கள் அனைத்தையும் ரத்து செய்வது; 7) சுதேச சம தானங்களை மாற்றி, இந்தியா முழுவதையும் தொழிலாளிகள், குடியானவர்கள் மற்றும் உடலுழைப்பு வேலைக்காரர்கள் ஆகியோரின் நேரடியான ஆட்சியின்கீழ்க் கொண்டு வருவது; 8) தொழிலாளர்களின் வேலை நேரத்தை 7 மணியாகக் குறைத்து, ஊதியத்தை உயர்த்தி, அவர்களது 'சுக வாழ்க்கைக்கு' வேண்டிய அனைத்து வசதிகளையும்–நூல் நிலையங்கள், மருத்துவமனைகள், பொழுதுபோக்கு இடங்களை–ஏற்படுத்திக் கொடுப்பது; 9) தொழில் இல்லாமல் இருப்போருக்கு அரசாங்க வாழ்க்கை உத்திரவாதம் கொடுப்பது; 10) பகுத்தறிவுக்கு எதிரான குருட்டு நம்பிக்கைகள் மூடக் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை சட்டம் மூலமாக ஒழிப்பது. இந்த திருத்தப்பட்ட வேலைத் திட்டம் பெரியாரின் தேசியக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது

### 19.2.10 இயக்கக் கட்சி

பெரியார் அரசியல் கட்சிக்கு எதிரி. அதற்குக் காரணம் அரசியல் கட்சிகள் பாமர மக்களின் சமூக, சமய மற்றும் பொருளாதார உரிமைகளை ஒடுக்கும் சாதனங்களாக பயன்படுத்தப்படுவதேயாகும். இந்த நிலையை மாற்றுவதற்காக சுயமரியாதை இயக்கத்துக்குள் சமதர்மக் கட்சி (Socialist Party) என்ற அரசியல் அமைப்பை உருவாக்கத் தீர்மானித்தார் பெரியார். அதற்கான திட்டத்தையும் தீட்டினார். அத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன: 1) அனைத்து சட்டசபை, முனிசிபல், தாலுகா, மாவட்ட மன்றங்களுக்கான தேர்தல்களுக்கு வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கல்; 2) பாமர மக்களை சாதி, மத, பொருளாதார கொடுமைகளிலிருந்து விடுவிக்க

3) பொது மக்கள் உபயோகத்துக்குத் தேவையான தொழில் முறைகள், போக்குவரத்து சாதனங்கள் ஆகியவற்றின் நிர்வாகத்தைத் தனி மனிதர்கள் பறித்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளல்; 4) நிலமற்ற விவசாயத் தொழிலாளிகளுக்கு வெள்ளாமையில் ஒரு நியாயமான பங்கு கிடைக்கச் செய்தல்; 5) கோயில் சொத்துக்களின் வருவாய் பொது மக்களின் தொழில், கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, ஆதரவற்ற அநாதைப் பிள்ளைகளுக்கான விடுதி போன்றவற்றுக்குப் பயன்படுத்துதல்; 6) சாதி, மதப் பிரிவுகளைப் பற்றிய குறிப்புகளை அரசாங்க ஆவணங்களிலிருந்து நீக்கிவிடல்; சாதி, சமயப் பட்டங்களைப் போட்டுக் கொள்வோரைப் பொதுப் பணிகளில் அமர்த்தாமல் இருத்தல்; 7) போக்குவரத்து, வீட்டு வசதி, பால் வசதி, வைத்திய வசதி போன்றவற்றை உள்ளாட்சி நிறுவனங்களிடம் ஒப்படைத்தல்; 8) சட்டசபை, முனிசிபாலிட்டி போன்ற உள்ளாட்சி நிறுவனத் தேர்தல்களுக்கு கட்சி சார்பாக வேட்பாளர்களை நிறுத்துவது; 9) வேட்பாளர் களிடம் கட்சித் திட்டங்களுக்கு உறுதி கூறி கையொப்பம் வாங்க வேண்டும்; 10) மேற்கண்டவற்றை சட்டசபைப் பிரவேசம், பிரச்சாரம், பத்திரிகைகள் மூலம் செய்ய வேண்டும் (குடி அரசு, தலையங்கம், 1933 ஜனவரி 1). அரசியல் கட்சிகளை எதிர்த்து வந்த பெரியார், அவரது இயக்கத்திற்குள்ளாகவே ஒரு கட்சியை உருவாக்கி இயக்க வளர்ச்சிக்கான கருவியாகப் பயன்படுத்த நினைத்தது அவரது இயல்புக்கு மாறான அரசியல் பரிசோதனையாகும்.

## 19.3 சுயமரியாதை இயக்கத்தின் சாதனைகள்

சுயமரியாதை இயக்கம் கோப்பையில் எழுந்த புயல் அல்ல; வானத்தில் தோன்றி மறைந்த வானவில்லும் அல்ல. அது ஒரு சமுதாய, சமய, கலாச்சார சீர்திருத்த இயக்கம். சுயமரியாதை இயக்கம் சமுதாயப் புரட்சிக்கான முன்னோடி முயற்சியாகும். அந்தப் பாதையில் முளைத்தவைதான் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஆகும். சுயமரியாதை இயக்கத்தின் சாதனைகள் பல. அவை வருமாறு:

1) தமிழ் நாட்டில் பிராமணர் ஆதிக்கம் படிப்படியாகக் குறைந்தது; 2) பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த கண்மூடித்தனமான மரியாதையும், மதிப்பும், முன்னுரிமையும் முக்கியத்துவம் இழந்தன; 3) பொதுத் தேர்தல்களில் பிராமண வேட்பாளர் களுக்குப் பிராமணரல்லாத வாக்காளர்களின் ஆதரவு வெகுவாகக் குறைந்தது; 4) பண்டிகைகள், விரதங்கள், சமயச் சடங்குகள் சிறப்பிழந்தன; 5) விதவைகள் திருமணம், கலப்பு மனம், சாதி வேறுபாடு கருதாமை, தீண்டாமை ஒழிப்பு, கோவில் நுழைவு ஆகியவை மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. 6) புரோகித விலக்குச் சங்கங்கள் தோன்றி, மதப் புரட்டுகளை அம்பலப்படுத்தி, புரோகிதர்களின் தேவையை மட்டுப்படுத்தியது; 7) மக்கள் வாக்கெடுப்பின் போது, ஒவ்வொரு குடிமகனும் இந்தியன் என்று கூற வேண்டும், எக்காரணம் கொண்டும் சாதிப் பெயரைச் சொல்லக்கூடாது என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டன; 8) வகுப்புரிமை பிரதிநிதித்துவம் நடைமுறை சாத்தியமாயிற்று; 9) பதிவுத் திருமணங்கள் பிரபலமடைந்தன; 10) சனாதன வைதீகங்களும், புராணங்களும், வர்ணாசிரம தர்மமும் செல்வாக்கு இழந்தன; 11) பொது உணவு விடுதிகள், ஆலயங்கள், புகைவண்டி நிலையங்கள், சத்திரங்கள் போன்ற பொது இடங்களில் பிராமணர்களுக்கும் பிறர்க்கும் காட்டப்பட்டு வந்த வேறுபாடுகள் மறைந்தன.

## 19.4 சட்டசபைத் தேர்தல்

### நீதிக்கட்சி

பெரியாரின் ஈரோட்டுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டதால் அக்கட்சிக்குத் தன் முழு ஆதரவையும் அளித்தார். 'பகுத்தறிவு' வார ஏட்டைத் துவக்கினார் (1935). நீதிக்கட்சி 1937 சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக தமிழ் நாடெங்கும் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். எனினும், பெரியாரால் கூட நீதிக்கட்சியைத் தேர்தல் தோல்வியிலிருந்து காப்பாற்ற முடியவில்லை! காங்கிர பெரும்பான்மை பலம் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. சிராஜகோபாலாச்சாரி சென்னை ராஜதானியின் முதலமைச்சரானார்.

### இந்தி எதிர்ப்புப் போராட்டம், 1938

சென்னை ராஜதானியின் முதல் காங்கிர முதலமைச்சரான ராஜாஜி (1937) பள்ளிகளில் இந்தி மொழியைப் புகுத்தினார். ராஜாஜியின் இச்செயல் குளவிக் கூட்டில் கைவிட்டது போல் ஆயிற்று! பெரியார் கிளர்ந்தெழுந்தார். விசுவரூபமெடுத்தார். அவரது அறிவாற்றலையெல்லாம் ஒருமுகப்படுத்தி இந்தி எதிர்ப்பு சூறாவளியைக் கட்டவிழ்த்து விட்டார். இந்தித் திணிப்பு திராவிட கலாச்சாரத்தின் மீதான ஆரியப் படையெடுப்புக்கான அடையாளம் என்று மக்களை எச்சரித்தார். அதன் மூலம் தற்காலத் தமிழ் நாட்டு வரலாற்றில் முதல் முறையாக ஆரியர்–திராவிடர் இன–சாதி–கலாச்சார வேறுபாட்டைத் தீவிரப்படுத்தினார். இதோடு பெரியார் மற்றொரு பரிமாணத்தையும் சேர்த்தார். ராஜாஜி அரசாங்கத்தின் இச்செயல் தமிழ் பேசும் மக்களை இந்தி பேசும் வட இந்தியர்களுக்கு அடிமையாக்கிவிடும் என்று விளக்கமளித்தார். சுருங்கக்கூறின், இந்தித் திணிப்பு தமிழர்களின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருப்பதோடு அல்லாமல், தமிழர் கலாச்சாரத்தை சீர்குலைத்து, சுயமரியாதை இயக்கத்தையே அழித்துவிடும் என்று அஞ்சினார். பெரியாரின் இந்தி எதிர்ப்புப் புயல் பிரச்சாரம் சுயமரியாதை இயக்கத்தையும் நீதிக்கட்சியையும் ஓரணியில் கொண்டு வந்தது. சர்.ஏ.டி.பன்னீர்செல்வத்தின் கீழ் நீதிக்கட்சியும், பெரியாரின் தலைமையில் சுயமரியாதை இயக்கத்தாரும், தமிழ் தேசியவாதிகளும் இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர் (1938). இக்கிளர்ச்சியில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்தி எதிர்ப்புப் படை சென்னை நோக்கி அணிவகுத்துச் சென்று திருவல்லிக்கேணி கடற்கரையை அடைந்தது (1938 செப்டம்பர் 11). இந்த மாபெரும் கடற்கரைக் கூட்டத்தில தான் பெரியார் ஈ.வெ.ராமசாமி முதல் முறையாக 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று குர எழுப்பினார். பெரியாருக்கு இரண்டாண்டு சிறை தண்டனையும், இரண்டாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டு பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார். பெரியார் பெல்ல சிறையில இருந்தபோது தான் நீதிக்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக் பட்டார் (1938 டிசம்பர் 29). பெரியார் தலைமையில் 1938 இல் நடத்தப்பட்ட இ எதிர்ப்புக் கிளர்ச்சி பின்னர் 1948, 1952, 1965 ஆண்டுகளில நடத்தப் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளுக்கு முன்னோடி நிகழ்ச்சியாக அமைந்தது. பெ 1938 ஆம் ஆண்டு கூடிய தமிழ்நாட்டு பெண்கள் மாநாடு ஈ.வெ.ராவை இ

பெரியார் என்றே குறிப்பிட வேண்டும் என்று அறிவித்தது. அந்த அறிவிப்பை ஏற்று மக்கள் ஈ.வெ.ராவைப் பெரியார் என்றே மரியாதையுடன் அழைத்தனர்.

## 19.5 நீதிக்கட்சித் தலைவர்

சுயமரியாதை இயக்கத் தலைவராக பெல்லாரி சிறை சென்ற பெரியார் நீதிக்கட்சித் தலைவராக வெளியேறினார்! சிறையிலிருந்து மீண்ட பெரியார் சர். டாபோர்டு கிரிப்ஸை சந்தித்து 'திராவிட நாடு பிரிவினை' பற்றி விவாதித்தார் (1939)! பின்னர், பெரியார் முகமது அலி ஜின்னாவை அவரது பம்பாய் இல்லத்தில் சந்தித்து தனி திராவிட நாடு பிரிவினை பற்றிப் பேசினார். அந்த உரையாடலின் போது டாக்டர் அம்பேத்கார் உடனிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது (1940). பெரியாரைத் தேடிவந்த அமைச்சர் பதவியை ஏற்க மறுத்துவிட்டார் (1940, ஏப்ரல்)!

### கட்சி கழகமாயிற்று

நீதிக்கட்சியின் தலைமைப் பொறுப்பேற்றபின் பெரியார் அந்த அரசியல் கட்சியை சமுதாய சீர்திருத்த இயக்கமாக உருமாற்றம் செய்தார். அது ஒரு வேதியியல் மாற்றமாகும். நீதிக்கட்சி மீண்டும் அரசியல் அவதாரம் எடுக்க முடியாமல் மாற்றத்தைச் செய்துவிட்டார் பெரியார். நீதிக்கட்சியின் அடிப்படைக் கொள்கையான பிராமணரல்லாதார் என்பதைப் படிப்படியாக மாற்றி அக்கட்சியைத் திராவிடர் கழகமாக மாற்றினார் (1941). அதன்பின், திராவிட நாடு பிரிவினைக் கொள்கையைப் பரப்பும் பணியில் ஈடுபட்டு தீவிரமாகப் பிரச்சாரம் செய்தார். இரண்டாவது முறையாக அமைச்சர் பதவி அவரைத் தேடி வந்தும் நிராகரித்து விட்டார் பெரியார் (1942). 1944 ஆம் ஆண்டு ஆகஸ்டு 27 ஆம் தேதி சேலத்தில் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவமுடைய நீதிக்கட்சி மாநாட்டுக்குத் தலைமையேற்ற பெரியார் 'நீதிக்கட்சி' என்ற பெயரை 'திராவிடர் கழகம்' என்று முறையாக, அதிகாரப்பூர்வமாகப் பெயர் மாற்றம் செய்தார். பின்னர் ஆண்டு இறுதியில் கல்கத்தாவில் எம்.என்.ராயின் தலைமையில் நடைபெற்ற ரேடிகல் டெமாக்ரடிக் கட்சியின் மாநாட்டிலும், கான்பூரில் நடைபெற்ற 'பிராமணரல்லாத பிற்பட்டோர்' மாநாடுகளிலும் பங்கேற்று திராவிடர் கழகக் கொள்கைகளை விளக்கி உரையாற்றினார் (1944). திருச்சியில் திராவிடர் கழக மாநில மாநாட்டைக் கூட்டி (1945 செப்டம்பர் 29, 30) 'கருஞ்சட்டைத் தொண்டர் படை' என்ற அமைப்பை உருவாக்கினார். கொடியில் உள்ள கருப்புப் பகுதி திராவிடரைக் கப்பியுள்ள இழிநிலைக் குறிப்பது; சிவப்பு வட்டப் பகுதி இழிவு நீக்கி பாட்சி மலர்வதைக் குறிப்பது.

அடுத்த ஆண்டே (1946) மதுரையில் கருஞ்சட்டைப் படை மாநாட்டைக் கூட்டி திராவிடர் கழகக் கொடியை உருவாக்கினார். எதிரிகளால் மாநாட்டுப் பந்தல் எரிக்கப்பட்டு கழகத் தொண்டர்கள் தாக்கப்பட்டனர் என்பது நினைவு கூறத்தக்க நிகழ்ச்சியாகும் (1946, மே 11). இந்திய அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட்ட முறையை கடுமையாக விமர்சித்தார். இந்தியா விடுதலையான 1947 ஆகஸ்டு 15 ஆம் தேதியை 'திராவிடருக்குத் துக்க நாள்' என்று அறிவித்தார்; வட நாட்டவரை ஆளுநராக நியமித்ததை எதிர்த்து கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் செய்தார். கடலூரில் 'திராவிடர் மாநாடு' கூட்டி நாட்டுப் பிரிவினை பற்றிப் பேசினார்; ஜூலை முதல் தேதியை 'திராவிட நாடு பிரிவினை நாள்' என்று அறிவித்து அந்த நாளைக் கொண்டாட வேண்டும் என்று மக்களைக் கேட்டுக் கொண்டார்! பெரியாரின் இச்செயல் திராவிடர் கழகம் பிளவுபடக் காரணமாயிற்று. திராவிடக் கழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்தது.

## 19.6 மதிப்பீடு

பெரியார் ஈ.வெ.ராவால் 1925 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட சுயமரியாதை இயக்கம் பிற்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் சம உரிமைகள் பெறவும், சுயமரியாதையுடன் தலைநிமிர்ந்து நிற்கவும் அயராது உழைத்தது. இந்த இயக்கம் தமிழ் நாட்டில் மட்டுமின்றி மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளிலும் செல்வாக்கு பெற்றது. பிராமணர்கள் தான் தமிழர்களின் தாழ்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணம் என்று கூறி பிராமணர் எதிர்ப்பு பிரச்சாரம் செய்தார் பெரியார். சுயமரியாதைத் திருமணங்களை ஊக்குவிப்பதன் மூலம் பிராமணப் புரோகிதர்களின் செல்வாக்கைக் குறைக்க முடியும் என்று நம்பினார். அதேபோன்று கலப்புத் திருமணங்கள் பெற்றோரால் தீர்மானிக்கப்படும் திருமணங்களுக்கு மாற்றாக இருக்கும் என்று எதிர்பார்த்தார். இவற்றின் மூலம் தமிழர்கள் பின்பற்றி வந்த பிராமணர் ஆதிக்கத் திருமண நடைமுறைகளுக்கும், சம்பிரதாயங்களுக்கும், சடங்குகளுக்கும் முடிவுகட்ட முடியும் என்று தீர்மானித்தார். சுயமரியாதை இயக்கமும் புதிய நீதிக்கட்சியும், திராவிடர் கழகமும் பெரியாரின் தனிப்பட்ட சர்வாதிகார அமைப்புகளாகச் செயல்பட்டமையால் சி.என்.அண்ணாதுரை போன்ற ஜனநாயக சிந்தனை உள்ளவர்களால் பெரியாரின் யதேச்சாதிகாரத் தலைமையை ஏற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அண்ணாதுரையும் அவரது 'தம்பி'களும் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்து திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல் கட்சியைத் துவக்கினர். திராவிடர் கழகம் சமுதாய சீர்திருத்த இயக்கமாகவே செயல்பட்டது.

## 19.7 திராவிடர் கழகம், 1944–1973

### 19.7.1 தனிக் கழகம் ஏன் ?

திராவிடர் கழகம் நீதிக்கட்சியின் மறுபதிப்பு அல்ல. மாறாக, அக்கழகம் புதிதாக எழுதப்பட்ட புத்தகம் ஆகும். நீதிக்கட்சியின் மூல நோக்கம் பிராமணரல்லாதாருக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பெற்றுத் தருவதேயாகும். அந்த நோக்கம் நிறைவேறிய பின் நீதிக்கட்சி சரிவடையத் தொடங்கியது. தமிழ் நாட்டு மண்ணின் மைந்தர்கள் சமுதாயத்திலும், பொருளாதார நிலையிலும் இழிந்தவர்களாகவே இருந்து வந்தனர். தமிழர்கள் உழைப்பாளிகளாக இருந்தும் ஒற்றுமையின்மையால் வளர்ச்சியின்றி இருந்தனர். தென்னிந்தியர் திராவிடர் என்று தெரிந்திருந்தும் பழம் பெருமை மறந்து வடநாட்டு ஆரியர் வழிவந்த பிராமணர்களின் ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்டே இருந்தனர். நீதிக்கட்சியினரும் இவர்களை பிராமணரல்லாதார் என்று கூறி வந்தனரேயன்றி திராவிடர்கள் என்று கூறவில்லை. இந்த நிலையை மாற்றி தென்னாட்டவர் திராவிடர்கள் என்றும் பிராமணர்கள் திராவிடரல்லாதார் என்றும் கூறிக் கொள்ளும் நிலை உருவாக வேண்டும் என்று எண்ணினார் பெரியார். திராவிட நாடு திராவிடருக்கே உரித்தாக வேண்டும் என்றால் அந்த இலக்கை எட்டுவதற்காக ஒரு அமைப்பு வேண்டும். அந்த

திராவிடர் கழகம் ஆகும். 1944 ஆக. ⑨ 27 ஆம் தேதி சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநில மாநாட்டில் பெரியார் நீதிக்கட்சிக்கு திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றம் செய்தார்.

## 19.7.2 பெயர்க் காரணம்

நீதிக்கட்சி என்று அழைக்கப்பட்ட தென்னிந்திய சுதந்திரக் கூட்டமைப்பு (South Indian Liberal Federation) தமிழர்களுக்கு உரிய முக்கியத்துவத்தையும் இடத்தையும் கொடுக்கவில்லை. தமிழ் பத்திரிக்கைக்குத் திராவிடன் என்று பெயரிட்டதேயன்றி அமைப்புக்குத் திராவிடர் சுதந்திரக் கூட்டமைப்பு என்று பெயரிடப்படவில்லை. தென்னிந்திய கூட்டமைப்பாகவே செயல்பட்டு வந்தது. பெரியார் சுயமரியாதை இயக்கத்தை அரசியல் சாராத அமைப்பாக நடத்தி வந்த போது அதற்கு திராவிடர் கட்சி என்று பெயரிடுவதில் கருத்து வேறுபாடுகள் இருந்தன. அதற்குக் காரணம் பெரியாருடன் பணியாற்றிய தேவாங்கர் தங்களைப் பிராமணர்கள் என்றே கூறிக் கொண்டனர்! பெரிய சமஸ்கிருத பண்டிதரான பனகல் அரசரே பூணூல் அணிந்து உச்சிக்குடுமி வைத்திருந்தார்!! அப்போதைய சூழ்நிலையில் தமிழர் பெயரால் கட்சியைத் துவங்குவது இயலாத காரியமாக இருந்தது. மேலும், தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற நீதிக்கட்சி கால் நூற்றாண்டு காலமாக .'பிராமணரல்லாதார் கட்சி'யாகக் கருதப்பட்டாலும் அது 'ஜமீன்தார் கட்சி', 'அரசாங்க அடிமைகள் கட்சி', 'பட்டம் பதவியாளர் கட்சி', 'பதவி வேட்டைக்காரர் கட்சி' என்றெல்லாம் பிராமணர் பத்திரிகைகள் குறை கூறின. இந்த நிலையை முற்றிலுமாக மாற்றித் திராவிடர் உரிமைக்கும் நலனுக்கும் போராட வேண்டும் என்பதற்காக பெரியார் புதிதாகத் துவக்கிய அமைப்புக்கு திராவிடர் கழகம் என்று பெயரிட்டார்.

## 19.7.3 கழகக் கொடியும், குறிக்கோளும்

### கொடி

திராவிடர் கழகத்தைத் தனித்துக் காட்டுவதற்கு அடையாளமாக தனிக்கொடி தேவைப்பட்டது. இக்கழகம் துவக்கப்பட்ட போது நீதிக்கட்சியின் தராசுக் கொடியே திராவிடர் கழகக் கொடியாக இருந்தது. அதற்குக் காரணம் தராசுக் கொடி தென்னாட்டில் காணப்பட்ட கொடுமைகளையும், அநீதிகளையும், சாதிபேத வேறுபாடுகளை ஒழித்து, அனைவரும் சமம் என்ற சமநீதியைக் காட்டும் அறிகுறியாகவும் அடையாளமாகவும் விளங்கியதேயாகும். எனினும் நீதிக்கட்சி சுயநலக் கட்சியாக மாறியதாலும், அக்கட்சிக்கு அவப்பெயர் ஏற்பட்டதாலும், பெரியார் அந்த நிலையை அடியோடு மாற்றி திராவிடருக்கென தனிக்கட்சி துவங்கியதால் அதற்கென தனிக்கொடி இருக்க வேண்டியதன் இன்றியமையாமையை உணர்ந்தார். அதன் விளைவாக, 1946 ஆம் ஆண்டு தற்போதுள்ள திராவிடர் கழகக் கொடி வடிவமைக்கப்பட்டது. கொடியில் கருப்புப் பகுதி திராவிடரைச் சூழ்ந்துள்ள இழிவைக் குறிப்பதாகவும், சிவப்பு வட்டப் பகுதி புரட்சி மலருவதைக் காட்டுவதாகவும் உள்ளது.



### குறிக்கோள்

திராவிடர் கழகம் மற்ற கட்சிகள் போன்று அரசியலை அடிப்படையாகக் கொண்ட அமைப்பல்ல. மாறாக, திராவிடர் கழகம் தெளிவான குறிக்கோள்களைக் கொண்ட சமூக, சமய சீர்திருத்த இயக்கமாகும். திராவிடர் கழகத்தின் குறிக்கோள்களாவன: 1) திராவிட மக்களிடையே கடவுள் பெயராலும், சுயராஜ்யத்தின் பெயராலும் இருந்துவரும் மூட நம்பிக்கைகளையும், உயர்வு தாழ்வுகளையும், பித்தலாட்டங்களையும் போக்கி அவர்களிடையே ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும், நாணயத்தையும் ஏற்படுத்தப் பாடுபடுவது; 2) பன்னெடுங்காலமாக அறிவிலிகளாய் ஆக்கி வைக்கப்பட்டிருக்கும் திராவிட மக்களுக்குச் சிந்தனை அறிவை உண்டாக்கி வைப்பது; 3) சமுதாய சமத்துவக் கொள்கையைக் கடைப்பிடிப்பது; 4) மக்கள் தொகைக்கேற்ப வகுப்புவாரி உரிமைகளைப் பெற்றுத் தருவது; 5) திராவிடர்களின் வீழ்ச்சிக்கும் தாழ்ச்சிக்கும் காரணமான சாதி முறையை ஒழித்தல்; 6) தனி திராவிட நாட்டுக்காகப் போராடுவது. சுருங்கக்கூறின், திராவிடர் கழகக் குறிக்கோள்கள் எதிர்மறை–உடன்பாட்டு நோக்கங்களைக் கொண்ட கலவையாகும்.

## 19.7.4 தனித்தன்மை

திராவிடர் கழகம் துவக்கத்திலிருந்தே தனித்தன்மையுடன் இயங்கி வந்தது. அதன் தனித் தன்மையை அடையாளம் காட்டும் திட்டங்களாவன: 1) தீண்டாமையை அகற்றுவதன் மூலம் சாதியை ஒழித்துவிட முடியும். 2) பிராமணர் ஆதிக்கத்தை அகற்றுவதன் மூலம் திராவிடரின் உரிமைகளைப் பாதுகாக்க இயலும். 3) இந்து கடவுள்களையும், சடங்கு சம்பிரதாயங்களை நிந்தித்தல். 4) அறியாமை, மூடநம்பிக்கை, இயலாமை ஆகியவற்றுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தல். 5) பெண்களின் விடுதலைக்காகத் தொடர்ந்து போராடல். 6) வட இந்திய மேலாண்மையையும், இந்தித் திணிப்பையும் எதிர்த்தல்.

திராவிடர் கழகத் தலைவர் பெரியாரும் அவரது கழகத் தோழர்களும் கருப்பு சட்டை அணிந்து கழகத்தின் தனித்தன்மையை வெளிப்படுத்தினர். அவ்வப்போது வன்முறை நிகழ்ச்சிகள் தலைதூக்கினாலும், பொதுவாக திராவிடர் கழகமும் அமைதியான முறையிலேயே இயங்கி வந்தது. பெரியாரின் காலத்திலேயே தனி திராவிட நாடு கோரிக்கையும், சாதி ஒழிப்பும், சமதர்மக் கொள்கையும் முனைமழுங்கிப் போய்விட்டன. சாதி ஒழிப்பு தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்தோடு நின்று விட்டது. தனியுடைமை ஒழிப்பைக் கைவிட்டதால் சமதர்மக் கொள்கை சத்தற்றுப் போய்விட்டது. பெரியாரின் பேச்சும் போக்கும் அவர் கையாண்ட முறைகளும் கற்றோரிடையே மனக்கசப்பை ஏற்படுத்தின. திறமைமிக்க பிராமண இளைஞர்கள் வேலைதேடி பிற மாநிலங்களுக்கும், பிற நாடுகளுக்கும் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. பெரியாரின் மூடநம்பிக்கை எதிர்ப்புப் பிரச்சாரம் மக்களிடையே செல்வாக்கு பெறவில்லை. இறுதியாக, பெரியாரின் இந்திய சுதந்திர எதிர்ப்பும், அதைத் தொடர்ந்து சி.என்.அண்ணாதுரையும் அவரது ஆதரவாளர்களும் கழகத்தைவிட்டு வெளியேறியதும் திராவிடர் கழகத்தை பெரிதும் பலமிழக்கச் செய்துவிட்டன. இருப்பினும் பெரியார் மன உறுதியுடன் தனது சமூக, கலாச்சார,

பகுத்தறிவு மனமாற்றப் பணியை தன் இறுதி மூச்சு உள்ள வரை (1973 டிசம்பர் 24) திராவிடர் கழகத்தின் தனிப் பெரும் தலைவராகத் தொடர்ந்து செய்து வந்தார். "பெரியாரின் வாழ்க்கை வரலாற்றுத் திருப்புமுனையாகவும், புதிய சகாப்தத்தின் துவக்கமாகவும் இருந்தது'' என்று குறிப்பிட்டுள்ளார் கி.வீரமணி.

## 19.8 பெரியாரின் சமூக சீர்திருத்தம்

### 19.8.1 தமிழர் சமுதாயம்

பெரியார் ஈ.வெ.ராமசாமி 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற சமூக சீர்திருத்தவாதி. இவர் சுயமரியாதை இயக்கத்தையும், திராவிடர் கழகத்தையும் சமுதாய மாற்றக் கருவிகளாகக் கொண்டு அவற்றின் மூலம் சீர்திருத்தப் பிரச்சாரத்தையும், நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். தமிழர்கள் யார்? தமிழர்களின் வரலாற்றுப் பின்னணி என்ன? வளமாக வாழ்ந்த தமிழன், வறுமையில் வீழ்ந்து, சூத்திரன் ஆனது எப்படி? தமிழனின் சமுதாய அமைப்பு, சமயம், வாழ்க்கை நெறி யாவை? இத்தகைய வினாக்களை எழுப்பி அவற்றுக்கான விடைகளையும் அவரே தந்தார். தமிழனின் தாழ்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் பெரியார் கூறிய காரணங்கள்: 1) வெளியிலிருந்து வந்த ஆரியர்களின் ஆதிக்கம்; 2) தமிழனின் பூர்வீக அடையாளத்தை இழந்தது; 3) தமிழனுக்கென தனி அடிப்படை அமைப்பு இல்லாமல் போனது; 4) தமிழர்கள் என்ற பொதுப் பெயரால் பிற சிறுபான்மையரும் அழைக்கப்படுவதால் தமிழனுக்கென தனி அடையாளம் இல்லாமல் போனது; 5) தமிழன் பின்பற்றுவதற்கு அவனுக்கே உரிய, அவனது பாரம்பரிய பெருமைமிக்க சமூக அமைப்போ, சமயமோ, வழிமுறையோ, நடை உடை பாவனையோ இல்லாமை; 6) தமிழனுக்கே உரிய ஆரியம் கலவாத இலக்கியம் இல்லமல் வழக்கொழிந்தது. இந்த இழிநிலை தமிழர்களிடையே நீங்க வேண்டுமாயின் தமிழர்களிடையே 1) நல்ல பண்போடு கூடிய பழக்கவழக்கங்கள் கற்பிக்கப்பட வேண்டும்; 2) அறிவும், பகுத்தறிவும் பெருக வேண்டும்; 3) அனைத்துத் துறைகளிலும் சமத்துவம் பின்பற்றப்பட வேண்டும்; 4) சுயமரியாதையின் சிறப்பை உணர வேண்டும்; 5) சமதர்மம் வாழ்க்கை வழியாக வேண்டும்; 6) சமயச் சார்பின்மை பொது வாழ்க்கையின் அடித்தளமாக அமைய வேண்டும். சுருங்கக் கூறின், தமிழர் சமுதாயம் தன்மானமற்ற தன்மையிலிருந்து விடுபட்டு மனிதாபிமானத் தன்மையோடு கூடிய சுயமரியாதைச் சமுதாயமாக மாற வேண்டும்.

### 19.8.2 சமுதாய தத்துவம்

பெரியாரின் சமுதாய சிந்தனைகளின் அடிப்படையில் உருவான சமுதாய தத்துவத்தைப் பற்றி அறிந்து கொள்ளாமல் அவரது சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களையும், கொள்கைகளையும், திட்டங்களையும் புரிந்து கொள்வது கடினம். பெரியார் சமூக சேவையையும், அரசியல் தொண்டையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாகப் பார்க்காமல் ஒன்றின் விளையே மற்றொன்று என்று கூறினார். தேர்தல் அரசியலைவிட சமுதாய மாற்றமே உடனடித் தேவை என்றார். சமுதாய சீர்திருத்த இயக்கத்தின் மூலம் அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே பெரியாரின் சமுதாய தத்துவத்தின் மையப் பகுதியாகும்.



அரசாங்கத்தின் கடமை சமத்துவ சமத்துவத்தை அடைவதற்கேற்ப சமுதாய மாற்றங்களைச் செய்வதேயாகும். மக்களின் தேவைகளை அறிந்து அரசாங்கம் செயல்பட வேண்டுமே யன்றி மக்கள் அரசாங்கத்தின் தயவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. அப்போதுதான் சிறுபான்மை பிராமண சமுதாயத்தால் பெரும்பான்மை சமூகத்தினை அடக்கி ஆள முடியாது. எனவே, அரசாங்கம் முதலில் தன்னை மாற்றிக் கொண்டு சமுதாயத்தை மாற்ற வேண்டும். சமுதாய சமத்துவக் கொள்கை (Social Equality)யின் மூலம் சமத்துவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

### 19.8.3 ஆரியர்–பிராமணர்–பிராமணீயம்

வெளியிலிருந்து இந்தியாவுக்குப் புல்தரைத் தேடி வந்த ஆரியரை 'லம்பாடிக் கூட்டம்' என்று வர்ணித்தார் பெரியார். அவர்கள் வருவதற்கு முன்னே இந்தியாவிலிருந்த திராவிடரைப் போரிட்டு, போராடி வென்று, அடிமைப்படுத்தி அவர்களை 'தஸ்யூக்கள்', 'அரக்கர்கள்', 'இராட்சகர்கள்', 'சூத்திரர்', 'பஞ்சமர்' என்று பெயரிட்டு, இழிவான வேலைகளுக்கு மட்டுமே ஒதுக்கிவிட்டனர். பிராமணர்கள், ஆங்கிலோ–இந்தியர்களைப் போன்று, ஆரியர்களுக்கும் இங்கிருந்த நாட்டவருக்கும் பிறந்தவர்கள் (குடி அரசு, 1943 மே 28). இவர்கள் சாதி, மதம், கடவுள், புராணம், இதிகாசம் ஆகியவற்றின் பெயரால் மண்ணின் மைந்தர்களை அடிமைகளக்கிவிட்டனர். பார்ப்பனீயம் அல்லது பிராமணீயம் என்ற பெயரால் தமிழ் நாட்டு ஆட்சியாளர்களின் ஆதரவைப் பெற்றனர். பார்ப்பனீயம் என்றால் என்ன? வேதம், சா திரம், மிருதி, ஆகமம், புராணம், மனுதர்மம், இந்து சடங்கு சடங்குகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றால் பதவிகளையும், தனி உரிமைகளையும் சலுகைகளையும் ஏற்படுத்திக் கொண்டு, பிராமணர் சங்கத்தை அமைத்துக் கொண்டு 'பிராமணர்களுக்கு மட்டும்' என்று போர்டு போட்டுக் கெண்டு, பிறரைப் பிரித்துக் காட்டும் பிராமணர்களின் மனப்பான்மையே பிராமனீயம் என்று வரையறுத்தார் பெரியார். எனவே, சாதி முறையை ஒழித்து, மக்களிடையே புகுத்தப்பட்ட வேறுபாடுகளைப் போக்கி, அனைவரும் உழைத்து வாழ வேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். "அப்போதுதான் பிராமண ஆதிக்கமும், பிராமண மனப்பான்மையான பிராமணீயமும் ஒழியும்'' (குடிஅரசு 1933, மார்ச் 5).

### 19.8.4 திராவிடர், சூத்திரர், ஆதிதிராவிடர்

மனுசா திரத்தில் 10வது அத்தியாயத்தில் 'சங்கர சாதி' என்ற தலைப்பின் கீழ் "சாதி தர்மத்தை அனுசரிப்பவர்களுக்கும், அனுசரிக்காதவர்களுக்கும் பிறந்தவர்கள் திராவிடர் என்ற பெயர் கொண்டவர்கள் என்று கூறப்பட்டுள்ளது" (குடிஅரசு, கட்டுரை, 1947 செப்டம்பர் 20). திராவிடர்களை அடிமைகளாக்கி அவர்களுக்குச் சூத்திரர் என்று பெயரிட்டு வர்ணமுறை சாதிப் பலகணியின் அடிப்படியாக்கிவிட்டனர். நான்கு வர்ண சாதிப் படிமுறை (Caste Hierarchy)யில் நான்காவது சாதி சூத்திரர். இந்த நான்கு சாதிக் கட்டத்துக்கு வெளியே இருந்தோரைப் பறையர், பள்ளர், பஞ்சமர், சண்டாளர், தீண்டத்தகாதோர் என்று கூறி ஊருக்கு வெளியே ஒதுக்கிவிட்டனர். இவர்களே பின்னர் அரிசனங்கள், ஆதிதிராவிடர், தலித்துகள் என்று பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டனர்.

திராவிடர்களை சூத்திரர், ஆதிதிராவிடர் அல்லது தீண்டத்தகாதோர் என்று பிரிப்பதைப் பெரியார் கடுமையாக எதிர்த்தார். இச்சாதிப் பிரிவினை திராவிடர்களைப் பிரிப்பதற்கான பிராமண சூழ்ச்சி என்றார். ஏனெனில், திராவிடருக்கும், ஆதிதிராவிடருக்கும் சமுதாய வாழ்வின் பொதுத் தத்துவத்தில் எந்தவிதமான பேதமோ, வேறுபாடோ இல்லை. இருசாராருமே பிராமணர்களால் பிற்படுத்தப்பட்டவர்கள்; இழிநிலைக்குத் தள்ளப்பட்டவர்கள். எனவே இந்த திராவிடர்–சூத்திரர்–ஆதிதிராவிடர் பாகுபாட்டை உடைத்தெறிய வேண்டும் என்றார் பெரியார். பறையர் பட்டம் போகாமல் சூத்திரர் பட்டம் போகாது என்றார். "பறையன் பட்டம் போகாமல் உங்களுடைய சூத்திரப் பட்டம் போய்விடும் என்று கருதுவீர்களேயானால் நீங்கள் வடிகட்டின முட்டாள்களாவீர்கள்" (குடிஅரசு, 1931 அக்டோபர் 31).

### 19.8.5 தீண்டாமை

மக்கள் அனைவரும் கடவுளின் குழந்தைகள் என்றால் ஒரு பிரிவினர் மட்டும் தீண்டத்தகாதோர் என்று முத்திரை குத்தப்பட்டு ஒதுக்கி வைக்கப்படுவதேன்? பல சீர்திருத்தவாதிகள் நூற்றாண்டு காலமாக முயற்சி செய்தும் தீண்டாமை தொடர்ந்து பின்பற்றப்படுவதற்கான காரணம் என்ன? மத தர்மப்படியும், மனு தர்மத்தின்படியும், வேத சாத்திரங்கள்படியும் மக்கள் ஒரு சாரார் தீண்டத்தகாதவர்கள் என்று கருதப்படுகின்றனர். எனவே, இந்த இழிநிலைக்குக் காரணமான ஆதார அடிப்படையை அடியோடு அகற்ற வேண்டும். நாத்திகவாதமே இந்நோய்க்குக் கண்கண்ட மருந்து. மேலும், மேல் சாதி – கீழ் சாதி என்ற போலிப் பாகுபாட்டைப் போக்க வேண்டும். ஏனெனில் மேல்சாதிக்காரன் உழைக்காமல் பிறர் உழைப்பைச் சுரண்டி வாழ்கிறான். கீழ்ச்சாதிக்காரன் உழைத்தே ஓடாய்த் தேய்கிறான். "பாடுபட்டு உழைத்து, உழைப்பின் பயனையெல்லாம் அன்னியருக்கே அழுதுவிட்டு, மடிவில்லாமல், துணியில்லாமல், கஞ்சியில்லாமல், கல்வியில்லாமல், மிருகத்திலும் கேடாய் வாழ்கிறவன் கீழ்ச்சாதிக்காரன்" (குடிஅரசு, 1933 மே 7). எனவே பிறவியில் அனைவரும் சமமே என்ற உறுதியோடு யார் மேல்சாதிக்காரனுக்கு எதிராகப் போர் தொடுக்க முனைந்து நிற்கின்றானோ அவனே இந்த இழிவை நீக்கிக் கொள்ள அருகதை உள்ளவனாக ஆகிறான் என்றார் பெரியார் ஈ.வெரா. அத்தகைய நிலை உருவாக வேண்டுமாயின் தீண்டாமைக் கொடுமைக்கு உள்ளானவர்களின் கல்வி அறிவும், பகுத்தறிவும், பொருளாதார பலமும் அதிகரிக்க வேண்டும். இந்த வாழ்நாளிலேயே தீண்டாமைப் பிரச்சனைக்குத் தீர்வு கண்டாக வேண்டும் என்று உறுதியோடு உழைத்தார் பெரியார்.

### 19.8.6 கோயில் நுழைவு

கடவுள் நம்பிக்கை இல்லாத பெரியார் ஈ.வெரா கோவில் நுழைவு பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? ஏனெனில், கோவில்கள் பக்திக்கும், பண்பாட்டுக்கும், ஒழுக்கத்துக்கும் பயன்படாமல் 'மக்களை மூடர்களாக அடிமைப்படுத்தவும், உயர்சாதி தாழ்ந்த சாதி என்கிற சாதி வித்தியாசத்தை நிலை நிறுத்தவும்' பயன்படுவதாகக் கூறினார். எனவே கோவில்களும், பொதுப் பாதைகள், கிணறுகள், பள்ளிக்கூடங்கள், சாவடிகள் போன்று பொது மக்கள் அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்று வாதிட்டார்.



"ஆதலால் நான் நான் தீண்டத்தகாத மக்கள் என்போர் கண்டிப்பாக கோவிலுக்குள் போய்த் தீரவேண்டும் என்று கூறுகிறேனே ஒழிய பக்திக்காகவோ மோட்சத்துக்காகவோ, பாவ மன்னிப்புக்காகவோ அல்லவே அல்ல. கோவிலில் சமத்துவமடைந்து விட்டால் மற்ற காரியங்களில் வித்தியாசம் இருக்கவே முடியாது. கோவிலில் பிரவேசித்து நாம் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் சாதி வித்தியாசத்தை ஒழிக்கச் செய்யும் முயற்சியே ஒழிய வேறில்லை" (குடிஅரசு, 1929 அக்டோபர் 27).

பெரியார் வைக்கம் சத்தியாகிரகத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு 'வைக்கம் வீர'ராக ஈரோடு திரும்பினார். அப்போது அவர் ஈரோடு தேவஸ்தான கமிட்டித் தலைவராக இருந்தார். ஒரு நாள் பெரியார் ஊரில் இல்லாத போது அ.பொன்னம்பலம், சா.முத்துசாமி, ஈசுவரன் ஆகியோர் அலுவலகத்தில் வேலை பார்த்துவந்த ஆதிதிராவிடரை விபூதி பூசச் சொல்லி கோயிலுக்குள் அழைத்துச் சென்றனர்! அங்கிருந்த உயர்சாதி பக்தர்கள் கூச்சல் போட்டதோடு அல்லாமல் அவர்கள் கோயிலுக்குள் சென்றபின் வெளிக்கதவைப் பூட்டிவிட்டனர்!! அதுமட்டுமல்ல. கோவிலுக்குள் நுழைந்தோருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. ஆனால், இறுதியில் உயர்நீதிமன்றத்தில் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது (1926).

### 19.8.7 பெண் விடுதலை

#### கற்பு

பெண் விடுதலைக்கு ஆண்களைப் போன்றே பெண்களும் தடையாக உள்ளதாகக் கூறினார் பெரியார். ஆண்மை என்ற அகம்பாவத்தால் ஆண்கள் பெண்களை அடக்கி ஆள்கின்றனர். அதேபோன்று ஆண்கள் இன்றி பிள்ளை பெற்றுக் கொள்ள முடியாது என்று பெண்கள் நினைக்கின்றனர். எனவே, உண்மையான பெண்கள் விடுதலைக்குப் பிள்ளை பெறும் தொல்லை அடியோடு ஒழிந்து போக வேண்டும்! (குடிஅரசு தலையங்கம், 1928, ஆகஸ்டு 12). பெண்கள் பிள்ளை பெறும் இயந்திரங்களாகக் கருதப்படுவதால் தான் அவர்கள் மிருகங்களைவிடக் கேவலமாக நடத்தப்படுகிறார்கள் என்றார்.

கற்பு என்பது பெண்களுக்கு மட்டும்தான் என்று கூறி ஆண்கள் தப்பிக்கின்றனர். கற்பு என்பது இருபாலருக்கும் பொதுவானது என்று பிரச்சாரம் செய்தார் பெரியார். "பெண் மக்களை இன்று ஆண்கள் நடத்தும் மாதிரியானது மேல் சாதிக்காரன் கீழ்ச்சாதிக்காரனை நடத்துவதைவிட, பணக்காரன் ஏழையை நடத்துவதைவிட, எசமான் அடிமையை நடத்துவதை விட, மோசமானதாகும்". ஆண் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் ஆசை நாயகிகளாக வைத்துக் கொள்ளலாம்; ஆனால் பெண் மட்டும் பத்தினியாக இருக்க வேண்டும் என்பதை மிகவும் அநீதியும் அக்கிரமும் கொண்ட காரியமாகக் கருதினார் பெரியார். இதற்கு என்ன மாற்று? "ஆண்கள் இரண்டு வைப்பாட்டிகளை வைத்துக் கொண்டால், பெண்கள் மூன்று ஆசை நாயகர்களை வைத்துக் கொள்ள முற்பட வேண்டும். உடனே நிலைமை சரிப்பட்டுப்போகும்" (குடிஅரசு, 1928 பிப்ரவரி 8).

# 20. இராஜாஜி ஆட்சி, 1937–1939

*புதிய பதவியை அடக்கத்தோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். இதை முள்கிரீடமாகக் கருத வேண்டும். இப்பதவியை சுதந்திரப் போராட்ட இலக்கை அடைவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.*

*– மகாத்மா காந்தி*

## 20.1 நீதிக்கட்சி ஆட்சிக்குப் பின்...

1919 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட் மாண்டேகு–செம் போர்டு சீர்திருத்தத்தின் (GOI Act, 1919) விளைவாக சென்னை ராஜதானியில் இரட்டை ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. இரட்டை ஆட்சியின் கீழ் நடத்தப்பட்ட சட்டமன்றத் தேர்தலில், காங்கிர போட்டியிடாமையால், நீதிக்கட்சி போட்டியிட்டு, எளிதில் வென்று, ஆங்கில அரசாங்கத்தின் ஆதரவோடு 17 ஆண்டுகள் (1920–1937) ஆட்சி செய்தது. அதன்பின் இந்திய அரசாங்கச் சட்டம் 1935இன் கீழ் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் காங்கிர போட்டியிட்டு நீதிக்கட்சியைத் தோற்கடித்து ஆட்சி அமைத்தது.

## 20.2 சென்னை சட்டமன்றத் தேர்தல், 1937

### 20.2.1 இந்திய அரசாங்கச் சட்டம், 1935

**இந்திய அரசாங்கச் சட்டம்**, 1935 (Government of India Act, 1935) தமிழ் நாட்டு அரசியலில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. இச்சட்டம் இரண்டு அவை **சட்டமன்ற** (Bicameral Legislature)த்துக்கு வழிவகுத்தது: 1) **சட்டப் பேரவை** (Legislative Assembly). இதன் உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆனால் சொத்து உள்ளவர்கள் அல்லது நகர வரி செலுத்துவோர் மட்டுமே வாக்களிக்கத் தகுதியானவர்கள்! அதன்படி சென்னை ராஜதானியின் 70 லட்சம் வாக்காளர்கள் அல்லது 15% பேர் வாக்குரிமை பெற்றிருந்தனர்; 2) **சட்டமன்ற மேலவை** (Legislative Council). இதில் 54லிருந்து 56 உறுப்பினர்கள் இருப்பர். இது நிலையானது. ஆளுநரால் கலைக்க முடியாது. மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் பதவி விலகுவர். இந்த அவையின் 8லிருந்து 10 உறுப்பினர்கள் ஆளுநரால் நியமிக்கப்படுவர். இச்சட்டம் **மாநில சுயாட்சி** (Provincial Autonomy)க்கு வழிவகுத்தது.

### 20.2.2 தேர்தல் அறிக்கை

**இந்திய அரசாங்கச் சட்டம்** 1935 இன் கீழ் சென்னை ராஜதானிக்கான சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் காங்கிர போட்டியிட்டது. காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட நீதிக்கட்சி மக்கள் செல்வாக்கை இழந்திருந்தது. சத்தியமூர்த்தியின் தலைமையில் செயல்பட்டு வந்த **சுயராஜ்யக் கட்சி** காங்கிரசுடன் இணைந்தது. காங்கிரசின் **தேர்தல் அறிக்கை** (Election Manisfesto) நிலவரியைக் குறைப்பதாகவும்; தொழிலாளர்களின் ஊதியத்தையும், வாழ்க்கை நிலையை

...துவதாகவும்; வாடகையைக் குறைப்பதாகவும்; மக்களின் வாழ்க்கையை உயர்த்து ...தாகவும் வாக்குறுதிகளை அளித்தது. யாவற்றுக்கும் மேலாக, காங்கிர மக்களிடையே ...சிய உணர்ச்சியைத் தூண்டி விட்டது.

### 20.2.3 தேர்தல் பிரச்சாரம்

1937 சட்டப் பேரவைத் தேர்தலில் காங்கிர முதல் முறையாகப் பங்கேற்றது. **சத்தியமூர்த்தி**யின் தலைமையிலான சுயராஜ்யக் கட்சி காங்கிரசுடன் இணைந்திருந்தது. **நீதிக்கட்சி** மக்கள் ஆதரவை இழந்து பெயரளவுக்கு செயல்பட்டு வந்தது. சென்னை மாநில **காங்கிர** சத்தியமூர்த்தியின் தலைமையில் புதுபலத்துடன் மக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தது; சத்தியமூர்த்தியும் பலதரப்பு மக்களிடையே செல்வாக்கு பெற்றிருந்தார். அவர் புதிய தேர்தல் உத்திகளைக் கையாண்டார். அப்போது மக்களிடையே பிரபலமடைந்திருந்த நடிகர்களான **சி.வி.நாகய்யாவையும், கே.பி.சுந்தராம்பாளையும்** தேர்தல் பிரச்சாரத்துக்கு வெற்றிகரமாகப் பயன்படுத்தினார். அவர் வெளியிட்ட பிரச்சார குறுந் திரைப்படத்தை அரசாங்கம் தடை செய்தது. சத்தியமூர்த்தியின் சூறாவளித் தேர்தல் பிரச்சாரத்தின் போது **"காந்திக்கு வாக்களியுங்கள்; மஞ்சள் பெட்டிக்கே உங்கள் ஓட்டு"** என்ற ஒரே கோஷத்தை எழுப்பினார். அவர் வாக்காளர்களின் ஆதரவைப் பெறுவதில் வல்லவர். காங்கிரசின் **தேர்தல் அறிக்கை** (Election Manifesto) மக்கள் மனதைக் கவரும் பல வாக்குறுதிகளைக் கொடுத்தது. நீதிக்கட்சியின் சார்பாக **ஆர்க்காடு ராமசாமி முதலியார்** பிரச்சாரம் செய்தார். அக்கட்சியின் பிராமணர் ஆதிக்கப் பிரச்சாரம் மக்களிடையே எடுபடவில்லை. மாறாக, காங்கிரசின் தேச விடுதலைப் போராட்டப் பேச்சு வாக்காளரிடையே மிகுந்த உற்சாகத்தையும், நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியது. இத்தேர்தலில் காங்கிர , நீதிக்கட்சி தவிர **சென்னை மாநில மு லீம் லீக், சென்னை மக்கள் கட்சி, மு லீம் முன்னேற்றக் கட்சி, சுயேட்சைகள்** போட்டியிட்டன.

### 20.2.4 தேர்தல் முடிவுகள்

1937 சென்னை சட்டப் பேரவைத் தேர்தல் முடிவுகள் பிப்ரவரி மாதம் வெளியிடப் பட்டன. **மொத்தம் 215** இடங்களுக்கு கட்சி வாரியான முடிவுகள் வருமாறு: **காங்கிர 159; நீதிக்கட்சி 18; சென்னை மாநில மு லீம் லீக் 11; ஐரோப்பியர், வர்த்தகம் 3; ஆங்கிலோ இந்தியர் 2; நீதிக்கட்சி ஆதரவு பெற்றோர் 2; மு லீம் முன்னேற்றக் கட்சி 1; சென்னை மக்கள் கட்சி 1; நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம் 1; பிறர் 1; சுயேட்சைகள் 15.** நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத்தின் சார்பாக நீதிக்கட்சியின் ஆதரவோடு ராஜா முத்தையா செட்டியாரும், தென்னிந்திய வர்த்தக சங்கத்தின் சார்பாக காங்கிர டி.டி.கிருஷ்ணமாச்சாரியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நீதிக்கட்சி பிரபலங்களான முதலமைச்சர் பொப்பிலி அரசர், வெங்கடகிரி குமாரராஜா, பி.டி.ராஜன், ஏ.பி.பாட்ரோ, ராமநாதபுரம் ராஜா ஆகியோர் தோற்றுப்போயினர்! காங்கிர மாபெரும் வெற்றி பெற்றது.

## 20.3 ராஜாஜி அரசாங்கம்

### 20.3.1 இடைக்கால அரசாங்கம்

**இந்திய அரசாங்கச் சட்டம் 1935** இன் கீழ் மாநில ஆளுநருக்கு சிறப்பு அதிகாரங்கள் வழங்கப்பட்டதால் காங்கிர வெற்றி பெற்ற சென்னை, ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், பம்பாய், பீகார், ஒரிசா, வடமேற்கு எல்லை மாகாணம் ஆகிய மாகாணங்களில் அரசாங்கம் அமைப்பதில்லை என்று அகில இந்திய காங்கிர முடிவு செய்தது. அந்த முடிவின்படி சென்னை சட்டமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜாஜி அரசாங்கம் அமைக்க முன்வரவில்லை. எனவே, சென்னை ஆளுநர் எர் கின் பிரபு (Lord Erskine) எதிர்க்கட்சியைத் சேர்ந்த **வி.எ .சீனிவாச சா திரி**யைக் கொண்டு இடைக்கால **அரசாங்கத்தை** (Interim Government) அமைக்க ஏற்பாடு செய்தார். ஆனால் சா திரி ஆளுநரின் அழைப்பை ஏற்க மறுத்து விட்டார்! அதன்பின் நீதிக்கட்சியைச் சேர்ந்த **கூர்ம வெங்கடரெட்டி**யை முதலமைச்சராகக் கொண்ட இடைக்கால அரசாங்கத்தை அமைத்தார் ஆளுநர் எர் கின்! 1937 ஜூன் 22 ஆம் தேதி **வை ராய் லின்லித்தோ** (Viceroy Linlithgow) காங்கிரசின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டதால் அக்கட்சி வெற்றி பெற்ற மாநிலங்களில் அரசாங்கம் அமைக்க சம்மதித்தது. அதன்படி சென்னை ராஜதானியில் **ராஜாஜியின்** தலைமையில் **1937 ஜூலை 15** ஆம் தேதி முதல் காங்கிர அரசாங்கம் அமைக்கப்பட்டது. **புலுசு சாம்பமூர்த்தி** அவைத் தலைவராகவும் (Speaker), **ஏ.ருக்மணி லட்சுமிபதி** துணை அவைத் தலைவராகவும் பதவிப் பொறுப்பேற்றனர்.

### 20.3.2 அமைச்சரவை

ராஜாஜி 1937 ஜூலை 15 ஆம் தேதி ஆட்சிப் பொறுப்பேற்றார். அவரது அமைச்சரவையில் **டி.பிரகாசம், பி.சுப்பராயன், வி.வி.கிரி, பெசவாடா கோபால ரெட்டி, டி.எ .எ .ராஜன், மௌலானா யாகூப் காசன் சேத், வி.ஐ.முனுசாமி பிள்ளை, எ .ராமநாதன் பிள்ளை, கோங்கட்டி ராமன் மேனன்** ஆகியோர் இடம் பெற்றனர். ராஜாஜி அமைச்சரவையில் **எ .சத்தியமூர்த்தி** இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது!

### 20.3.3 சட்டச் சாதனைகள்

ராஜாஜி ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் சில சமுதாயச் சீர்திருத்த நடவடிக்கைகளைக் கால இழப்பின்றி மேற்கொண்டார்: 1) **விவசாயிகள் கடன் தள்ளுபடி சட்டம்** (Agricultural Debt Relief Act, March 1938). இச்சட்டம் மாநில விவசாயிகளைக் கடன் பிடியிலிருந்து விடுவித்து நிம்மதிப் பெருமூச்சு விடச் செய்தது. 2) **ஆலய நுழைவு மற்றும் இழப்பீட்டுச் சட்டம்** (Temple Entry Authorisation and Indemnity Act, 1939). இந்தச் சட்டம் தலித்துகளும், நாடார்களும் கோவிலுக்குள் நுழைவதற்கு எதிராக இருந்த கட்டுப்பாடுகளையும் தடைகளையும் நீக்கியது. பிற்படுத்தப்பட்டோர் உயர் சாதியினருக்குச் சமமாக கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவதற்கான உரிமை வழங்கப்பட்டது; 3) சட்டம் இயற்றுவதோடு நின்றுவிடாமல்

உடனடியாக மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் தலித்துகளுக்கும் நாடார்களுக்கும் திறந்துவிடப்பட்டது (1939).

4) மாநிலம் முழுவதும் மதுவிலக்கு (Prohibition) நடைமுறைப்படுத்தப் பட்டது. சமுதாயத்தின் அடித்தட்டு மக்களின் நலன் கருதி இத்திட்டம் உறுதியுடன் செயல்படுத்தப்பட்டது; 5) மதுவிலக்குத் திட்டத்தால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்வதற்காக விற்பனை வரி (Sales Tax) விதிக்கப்பட்டது; 6) அரசாங்க செலவைக் குறைக்க நூற்றுக்கணக்கான அரசாங்க ஆரம்பப் பள்ளிகள் மூடப்பட்டன! 7) பள்ளிகளில் காந்தியின் வார்தா கல்வித் திட்டம் (Wardha Scheme) அறிமுகப் படுத்தப்பட்டது. 8) பள்ளிகளில் ஆறாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை இரண்டாவது மொழியாக இந்தி பாடமாக்கப்பட்டது. அதாவது மாணவர்கள் தாய்மொழியோடு இந்தியையும் கட்டாயப் பாடமாகக் கற்க வேண்டும்.

## 20.4 இந்தி–எதிர்ப்புப் போராட்டம், 1937–1940

### 20.4.1 எதிர் விளைவுகள்

ராஜாஜி அறிமுகப்படுத்திய திட்டங்களில் நூற்றுக்கணக்கான துவக்கப் பள்ளிகளை மூடியதும், பள்ளிகளில் வார்தா திட்டத்தை அறிமுகப்படுத்தியதும், கட்டாய இந்திப் படிப்பும் பிற சமுதாய சீர்திருத்த திட்டங்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு எதிர் விளைவுகளை ஏற்படுத்தின. மதுவிலக்குத் திட்டத்தால் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை சரிக்கட்டுவதற்காக ராஜாஜி புதிதாகக் கொண்டு வந்த விற்பனை வரியை ஏற்றுக் கொண்ட மக்கள் நூற்றுக்கணக்கான அரசாங்கப் பள்ளிகள் மூடப்பட்டதை நிராகரித்தனர். ராஜாஜியின் இந்த நடவடிக்கை ஆயிரக்கணக்கான கீழ்ச்சாதி மக்களின் குறிப்பாக தலித்துகளின், கல்வி வாய்ப்பைப் பறித்துவிட்டதாகக் கருதினார். வார்தா திட்டம் வர்ணாசிரமத் திட்டமாக சித்தரிக்கப்பட்டது; இத்திட்டம் சாதிமுறையை சாகவதப்படுத்துவதற்கான முயற்சி என்று கூறப்பட்டது.

### 20.4.2 ஈ.வெரா எதிர்ப்பு

இந்தி ஆதரவாளரான ராஜாஜி ஆட்சிப் பொறுப்பேற்று இந்தி மொழியைக் கற்பிப்பதைப் பற்றிய அறிவிப்பை வெளியிட்டார். அதைத் தொடர்ந்து 1938 ஏப்ரல் 21 ஆம் தேதி ஒரு அரசாணை (Government Order, G.O) வெளியிடப்பட்டது. அதன்படி சென்னை ராஜதானியிலுள்ள 125 உயர்நிலைப் பள்ளிகளில் இந்தி மொழி கட்டாயமாக கற்பிக்கப்பட வேண்டும். இந்த அரசாணை வெளியிடப்பட்ட உடனே பெரியார் ஈ.வெ.ராவின் தலைமையிலான சுயமரியாதை இயக்கத்தினரும், ஏ.டி.பன்னீர் செல்வத்தின் தலைமையிலான நீதிக்கட்சியினரும் எதிர்த்தனர். இவர்களது எதிர்ப்பை மறைமலை அடிகள், சோமசுந்தரபாரதி, கே.அப்பாதுரை, முடியரசன், இலக்குவனார் போன்ற தமிழ் அறிஞர்கள் ஆதரித்தனர்.

### 20.4.3 போராட்டத்துக்கு ஆதரவு

1937 டிசம்பர் மாதம் வேலூரில் நடைபெற்ற சைவ சித்தாந்த மகாசமாஜ ...கள் சைவத் தலைவர்கள் பள்ளிகளில் இந்தி சொல்லிக் கொடுப்பதை எதிர்த்தனர்.



பெண்களும் அதிக அளவில் இப்போராட்டத்தில் பங்கேற்றனர். மூவலூர் ராமாமிர்தம், நாராயணி, வ.ப.தாமரைக்கனி, முன்னகர் அழகியார், டாக்டர் தர்மாம்பாள், மலர் முகத்தம்மையார், பட்டம்மாள், சீத்தம்மாள் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். தமிழ்நாடு பெண்கள் மாநாட்டில் கூடிய பெண்களும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு அளித்தனர் (1938 நவம்பர் 13). காஞ்சி ராஜகோபாலாச்சாரி போன்ற பிராமணர்களும் இப்போராட்டத்தில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் பேசும் முஸ்லிம்களும் ஆதரவளித்தனர். இந்தி எதிர்ப்புப் போராட்டம் அனைத்து தரப்பினரும் கலந்து கொண்ட மக்கள் இயக்கமாக மாறிற்று.

### 20.4.4 உள்நோக்கம்

பள்ளி மாணவர்கள் இந்தியைக் கட்டாயமாகக் கற்க வேண்டும் என்ற ராஜாஜியின் கல்வித் திட்டத்துக்கு உள்நோக்கம் கற்பிக்கப்பட்டு எதிர்க்கட்சிகள், குறிப்பாக பெரியார் ஈ.வெராவின் தலைமையிலான சுயமரியாதை இயக்கம் போர்க்கொடி உயர்த்தியது. கட்டாய இந்தி எதிர்ப்பு பெரிய போராட்டமாக உருவெடுத்து விரிவடைந்தது! மூன்றாண்டுகள் நீடித்த இப்போராட்டத்தின் போது உண்ணாவிரதங்கள், ஆர்ப்பாட்டங்கள், கருப்புக் கொடி ஊர்வலங்கள், மறியல்கள், கண்டனங்கள், இந்தி–எதிர்ப்பு மாநாடுகள் நடத்தப்பட்டன. 1938 ஜூலை முதல் தேதியும், டிசம்பர் மூன்றாம் தேதியும் இந்தி எதிர்ப்பு நாட்களாக அனுசரிக்கப்பட்டன. இப்போராட்டம் ராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், தஞ்சாவூர், வடஆர்க்காடு ஆகிய தமிழ் பேசும் மாவட்டங்களில் தீவிரமடைந்தது. நிலைமை கட்டுக்கடங்காமல் போயிற்று.

### 20.4.5 சமரசத் தீர்வு

இந்தி மொழிக் கல்வி பற்றி ஆளும் காங்கிர கட்சியினரிடையே கருத்து ஒற்றுமை இல்லை. இந்தி ஆதரவாளரான ராஜாஜி இதில் விடாப்பிடியாக இருந்தார். நிலைமை கட்டுமீறிச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு சத்தியமூர்த்தியும், சர்வபள்ளி ராதாகிருஷ்ணனும் ஒரு சமரசத் தீர்வைக் கூறினர். அதாவது, இந்தியை விருப்பப் பாடமாக சொல்லிக் கொடுப்பதே அந்த தீர்வாகும். ஆனால் ராஜாஜி இதற்கு சம்மதிக்க வில்லை! இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை சட்டம் ஒழுங்குப் பிரச்சனையாகப் பார்த்த ராஜாஜி 'போலீ தீர்வு' காணத் தீர்மானித்தார்.

### 20.4.6 போராட்டம்

இந்தி எதிர்ப்புப் போராளிகள் போலீ தாக்குதலை எதிர்கொண்டனர். சில இடங்களில் இப்போராட்டம் வன்முறையில் முடிந்தது. ஆயிரக்கணக்கானோர் போலீ தடியடிக்கு உள்ளாயினர். மொத்தம் 1,198 பேர் கைது செய்யப்பட்டனர். பெண்கள் கைக்குழந்தைகளுடன் சிறை சென்றனர். இப்போராட்டத்தின் போது தாளமுத்து நடராசன் ஆகிய இருவரும் உயிரிழந்தனர். 1,179 பேர் தண்டிக்கப்பட்ட... பெரியாருக்கு ரூ.1,000 அபராதமும், ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனையு... விதிக்கப்பட்டன. அண்ணாதுரை நான்கு மாதங்கள் சிறை தண்டனை பெற்றார். 19... ஜூன் 7 ஆம் தேதி போராட்டத்தில் பங்கேற்று கைதான அனைவரும் விடுவிக்கப்பட்ட...

# 27. அண்ணாதுரை ஆட்சி, 1967–1969

*தமர் என்றும் தான் என்றும்*
*நினைப்பதன்றித்*
*தமிழ் நாட்டின் நலத்திற்கே*
*உயிர் உடல்கள்*
*அமைகவென இரவு பகல்*
*உழைக்கும் மேலோன்.*

*– பார்திதாசன்.*

## 27.1 அறிவுப் பயணம்

### 27.1.1 பிறப்பும், படிப்பும்

'அண்ணா' என்று வயது வேறுபாடின்றி அனைவராலும் அழைக்கப்பட்ட சி.என்.அண்ணாதுரை 1909 செப்டம்பர் 15 ஆம் தேதி காஞ்சிபுரத்தில் ஒரு எளிய ஏழை செங்குந்தர் நெசவாளர் குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தை நடராஜ முதலியார்; தாய் பங்காரு அம்மாள். குடும்பம் வறிய நிலையில் இருந்தமையால் சற்று வசதியோடு இருந்த இவரது சிற்றன்னை ராஜாமணி அம்மையார் அண்ணாதுரையைக் கனிவோடும் கண்டிப்போடும் வளர்த்தார். அண்ணாதுரை காஞ்சிபுரம் பச்சையப்பர் பள்ளியில் படிப்பை முடித்தவுடன் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார் (1934).

அண்ணாதுரை பச்சையப்பன் கல்லூரியில் மாணவராக இருந்தபோதே அவருக்கும் ராணிக்கும் திருமணமாகிவிட்டது (1930). திருமணம் அவரது அறிவுப் பயணத்துக்குத் தடையாக இல்லை. கல்லூரி மாணவர் அண்ணாதுரை சிறந்த படிப்பாளியாகவும், பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்தார். இளம் வயதிலிருந்தே அவருக்கு அபரிமிதமான நினைவாற்றல் இருந்தது. கல்லூரி நூலகம் அண்ணாதுரைக்கு அறிவுப் பூங்காவாகப் பயன்பட்டது. பல பேச்சுப் போட்டிகளிலும், பட்டிமன்றங்களிலும் பங்கேற்ற இவர் தனது தமிழ் மற்றும் ஆங்கிலப் புலமைமிக்க பேச்சாற்றலால் கேட்போரைக் காந்தம் போல் கவர்ந்தார். எழுத்தாற்றல்மிக்க இவரது முதல் கட்டுரை தமிழ் அரசு பத்திரிகையில் வெளியாயிற்று. இவரது ஆங்கிலக் கட்டுரை கட்டுரைப் போட்டியில் முதல் பரிசைப் பெற்றது. இவரது முதல் சிறுகதை ஆனந்தவிகடனில் வெளியாயிற்று. அண்ணாதுரை பச்சையப்பன் கல்லூரி மாணவர் சங்கப் பொதுச் செயலாளராகவும் (1931), கல்லூரி பொருளாதார அமைப்பின் தலைவராகவும் (1933) இருந்தமையால் மாணவரிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றார். கல்லூரிக்கு உள்ளேயும், வெளியேயும் அண்ணாதுரைக்கென ஒரு பெரிய ...

அண்ணாதுரையின் ... செல்வாக்... ஆங்கிலப் பேராசிரியர் வரதராஜன் அண்ணாதுரையைப் பொது ... அறிமுகப்படுத்தினார். ஆங்கிலப் புலமையும், பேச்சாற்றலுமிக்க பேராசிரி... பிராமணரல்லாதார் சங்கத் தலைவராகவும், நீதிக்கட்சியின் ... ஏ.ராமசாமி முதலியாரின் தேர்தல் பிரச்சாரக் குழுப் பொறுப்பாளராகவு... வரதராஜனின் மண்ணடி வீடு அண்ணாதுரையின் குருகுலமாயிற்று. ... நீதிக்கட்சியின் வெங்கடசாமியும் சமூக நீதி, பிராமணரல்லாதார் மு... அரசியல் கட்சி மூலம் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துவது ஆகி... அறிமுகப்படுத்தி அண்ணாதுரை பொது வாழ்க்கையில் ஈடுபடக் காரணகர்த்... இருந்தனர். அதேபோன்று அண்ணாதுரையின் தமிழ் பேராசிரியர்களாக இரு... கந்தசாமியும், மணி திருநாவுக்கரசும் அண்ணாவுக்கு சங்க இலக்கியத்தி... ஏற்படக் காரணமாக இருந்தனர். அண்ணாதுரையின் மனதில் தமிழ் தேசிய... விதைக்கப்பட்டன.

### 27.1.3 நீதிக்கட்சியில் அண்ணாதுரை, 1934

அண்ணாதுரை பச்சையப்பன் கல்லூரியில் மாணவராக இருந்... நீதிக்கட்சி ஆளும் கட்சியாக இருந்தது. அண்ணாதுரையின் பேச்சாற்றல் நீதி... தலைவர்களின் கவனத்தைக் கவர்ந்தது. சென்னை மாநகராட்சி மேயராக ... நீதிக்கட்சியைச் சேர்ந்த சி.பாசுதேவ் அவரது ஆங்கிலப் பேச்சைத் தமிழி... பெயர்க்க அண்ணாதுரையை அழைத்தார். அண்ணாதுரையின் தமிழ் மொழி... ஆங்கிலப் பேச்சைவிடக் கவர்ச்சிகரமாக இருந்ததைக் கேட்டு அதிசயித்தனர்! பாசுதேவ் நடத்தி வந்த பாலபாரதி என்ற இதழை நடத்தும் பொறுப்பு அண்ணாது... கொடுக்கப்பட்டது!! அதேபோன்று, அவர் காஞ்சி மணிமொழியார் தோற்றுவித்த ... இதழுக்கும், நீதிக் கட்சியின் முதலமைச்சர் பொப்பிலி அரசர் நடத்தி வந்த ஒரு இத... துணை ஆசிரியராகப் பணியாற்றினார்!!! இவற்றின் விளைவாக அண்ணா... பச்சையப்பன் கல்லூரியில் மேல்பட்டப் படிப்பை முடித்த உடனேயே (1934) நீதிக்க... முறைப்படி சேர்ந்தார். அதற்கு அரசியல் இரட்டையர்களான சண்டே அ... ஆசிரியர் பி.பாலசுப்பிரமணியனும், நீதிக்கட்சி பத்திரிகை 'ஜ...' ஆசி... டி.வி.நாதனும் உடனடிக் காரணமாக இருந்தனர். துவக்கத்தில் தொழி... இயக்கத்தில் பதிந்திருந்த அண்ணாதுரையின் கவனம் நீதிக்கட்சியின் பக்கம் திரும்...

### 27.1.4 திருப்பூர் மாநாடு, 1935

#### அண்ணாதுரை–பெரியார் சந்திப்பு

அண்ணாதுரை மாணவராய் இருக்கும் போதும், பின்னர் நீதிக்க... பின்னரும் பெரியார் ஈ.வெ.ராவின் சுயமரியாதை இயக்க ... கவனித்து வந்தார் ...

அண்ணாதுரையும் பெரியாரும் நேருக்கு நேர் சந்தித்துப் பேசக்கூடிய வாய்ப்பு 1935 மே 20–21 தேதிகளில் திருப்பூரில் நடைபெற்ற இரண்டு நாள் இரண்டாவது செங்குந்தர் இளைஞர் மாநாட்டில் கிடைத்தது. இருவரும் மாநாட்டில உரையாற்றிய பின் சந்தித்துப் பேசினர். பெரியாரின் பேச்சில் இருந்த நேர்மை, வாய்மை, வேகம் அண்ணாதுரையை வெகுவாகக் கவர்ந்தன. அதேபோன்று அண்ணாதுரையின் பேச்சிலிருந்த தெளிவு, இனிமை, கவர்ச்சி பெரியாரை அண்ணாதுரை வசப்படுத்தியது. இருப்பினும் அண்ணாதுரையால் பெரியாரைப் பற்றிய ஒரு முடிவுக்கு வர முடியவில்லை! பெரியாரின் முற்போக்குக் கருத்துக்கள் அண்ணாதுரையை ஆக்கிரமித்த அளவுக்கு அவரது பேசும் முறை அவருக்கு நெருடலாக இருந்தது!!

## 27.1.5 தேர்தல் அனுபவம், 1936

அண்ணாதுரை நீதிக்கட்சியில் சேர்ந்த போது நீதிக்கட்சி சரிவுப் பாதையில் பயணித்துக் கொண்டிருந்தது. நீதிக்கட்சியில் சேராமல் பெரியார் ஈ.வெ.ரா சுயமரியாதை இயக்கத்தை நடத்திக் கொண்டிருந்தார். இந்திய தேசிய காங்கி தேசிய இயக்கமாக இந்திய விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தது. இதற்கிடையே 1937 ஆம் ஆண்டு நடக்கவிருந்த பொதுத் தேர்தலில் காங்கிர போட்டியிடுவதற்காகத் தன்னை தயார் செய்து கொண்டிருந்தது. அரசியல் கட்சி மூலம் தேர்தலில் பங்கேற்று, ஆட்சி அமைத்து, அரசாங்கத்தால்தான் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று கருதிய அண்ணாதுரை தேர்தல் அரசியலைத் தேர்ந்தெடுத்தார். அதற்காக வாய்ப்பை அப்போது நீதிக்கட்சிப் பிரபலங்களில் ஒருவரான குமாரராஜா முத்தையா செட்டியார் அண்ணாதுரை சென்னை மாநகராட்சிக்குப் பெத்துநாயக்கன்பேட்டைத் தொகுதியிலிருந்து போட்டியிடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார் (1936). நீதிக்கட்சியின் சார்பாகக் காங்கிர வேட்பாளருக்கு எதிராகப் போட்டியிட்ட அண்ணாதுரை வெற்றி பெறவில்லை! பேச்சாற்றல் மட்டும் தேர்தலில் வெற்றி பெற போதாது என்ற அரசியல் உண்மையை உணர்ந்தார்.

## 27.1.6 துறையூர் மாநாடு, 1937

திருப்பூர் சந்திப்புக்கு இரண்டாண்டு இடைவெளிக்குப் பிறகு, பெரியாரின் அழைப்பின் பேரில் அண்ணாதுரை ஈரோடு சென்று பெரியார் நடத்தி வந்த குடி அரசு மற்றும் விடுதலை இதழ்களின் முழுநேர துணை ஆசிரியராகப் பொறுப்பேற்றார். அண்ணாதுரையின் அறிவாற்றலும், எழுத்தாற்றலும், பயன்கருதாப் பணியும் பெரியாரைப் பெரிதும் கவர்ந்தன. எனவே, அவர் துறையூரில் நடத்திய சுயமரியாதை மாநாட்டுக்குத் தலைமை தாங்கும் வாய்ப்பை அண்ணாதுரைக்கு அளித்தார் (1937).

அந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு அண்ணாதுரை ஆற்றிய உரை மாநாட்டில் கூடியிருந்தோரின் மனங்களைக் கொள்ளை கொண்டது. அவரது பேச்சில் இருந்த அடுக்கு மொழி, கருத்தாழம், நகைச்சுவை, உணர்ச்சி உந்தல், நீர் வீழ்ச்சி போன்ற நடை, கடுமையான கருத்துக்களை எளிமையாக்கிக் கொடுக்கும் பாங்கு.... கேட்போரை மதிமயக்கச் செய்தன. அவரது பேச்சு மேடைப் பேச்சுக்கு இலக்கணமாகவும்,



இலக்கியமாகவும் அமைந்தது. இந்திய மேடைப் பேச்சு வரலாற்றில் அண்ணாதுரையின் பேச்சு முதலிடத்தை வகிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார் கே. கண்ணன். இதுவே பெரியாரைப் பொறாமைப்பட வைத்த பேச்சும் ஆகும்! அண்ணாதுரையின் திருப்பூர் பேச்சும், துறையூர் பேச்சும் தமிழ்நாட்டு மக்களிடையே அவரது செல்வாக்குப் பெருகப் பெரிதும் காரணமாக இருந்தன. பெரியாரின் பேச்சுக்கும் அண்ணாவின் சொற்பொழிவுக்கும் அடிப்படை வேறுபாடு இருந்தது; ஒன்று தர்க்க ரீதியானது, மற்றொன்று அறிவார்ந்த நயமும் நெளிவுமிக்கது; முதலாவது சாட்டையடி போன்றது; இரண்டாவது யாழிசை போன்றது.

## 27.1.7 இந்தி எதிர்ப்புப் போராட்டம், 1937–1939

1937 ஆம் ஆண்டு சென்னை ராஜதானியின் முதலமைச்சரான ராஜாஜி இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியதால் குடுவையில் கிடந்த இந்தி எதிர்ப்பு பூதத்தை வெளியே விட்டுவிட்டார்! பெரியார் காங்கிரசில் இருந்த போதே இந்தி இந்தியாவின் பொது மொழியாவதைத் தீவிரமாக எதிர்த்து வந்தார். ராஜாஜியின் இந்திக் கொள்கை அந்த எதிர்ப்புத் தீப்பொறி காட்டுத் தீயாகப் பரவக் காரணமாயிற்று. இந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பெரியாரும் அண்ணாதுரையும் பங்கேற்றனர். பெரியாருக்கு ஓராண்டு சிறை தண்டனையும், அண்ணாதுரைக்கு நான்கு மாத சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது. அண்ணாதுரையின் முதல் சிறைவாசம் இதுதான் (1938). அண்ணாதுரையும், பெரியாரும் ஒரே சிறையில் ஒரே தளத்தில் அடைக்கப்பட்டனர்! இச்சிறைவாசம் இவ்விருவருக்குமிடையேயான தொடர்பையும், பாசப் பிணைப்பையும் பலப்படுத்தியது.

## 22.1.8 பெரியாருடன் பயணம், 1941

1941 ஆம் ஆண்டு பெரியார் அரித்துவார யாத்திரை மேற்கொண்ட போது அண்ணாதுரையையும் உடன் அழைத்துச் சென்றார். அந்நகரில் இருவரும் 10 நாட்கள் தங்கி இருந்தனர். அப்போது அங்கிருந்த சாதுக்கள், சாமியார்கள், சோம்பேறிகள் பற்றி இருவரும் நேரில் அறிந்து கொண்டனர். தாடிப் பெரியாரையும், அவருடன் இருந்த அண்ணாதுரையையும் மதிப்பிற்குரிய சாமியார்–சீடர் என்று எண்ணிய அரித்துவார் மக்கள் அவர்களுக்கு மிகுந்த மரியாதை செலுத்தினர்! பெரியாரைப் பற்றி அறிந்த சிரத்தானந்தா கல்லூரி நிர்வாகத்தினர் அவரைக் கல்லூரியில் உரையாற்ற வருமாறு அழைத்தனர். அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு அக்கல்லூரி மாணவர்களிடையே உரையாற்றினார் பெரியார். அவரது உரையை ஆங்கிலத்தில் அழகாக மொழி பெயர்த்தார் அண்ணாதுரை. பெரியாரின் ராமாயணப் பேச்சு மாணவரிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது! அதேபோன்று அண்ணாதுரையின் ஆங்கில மொழிபெயர்ப்பும் கேட்போரை வெகுவாகக் கவர்ந்தது. அதை அடுத்து பெரியார் லக்னௌ பல்கலைக் கழகத்துக்குச் சென்ற போது கூட்ட அமைப்பாளர்கள் அண்ணாதுரையும் உரையாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். ஆனால் அதற்குப் பெரியார் சம்மதிக்கவில்லை! அண்ணாதுரை பேச்சை மொழிபெயர்க்க வந்தாரேயன்றி பேச வரவில்லை என்று கூறிவிட்டார்! இந்நிகழ்ச்சி அண்ணாதுரை பெரியாரைப் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பாக அமைந்தது

அரசியலுக்கு வந்தபின்னர் அண்ணாதுரையின் அறிவுப் பயணத்தில் முக்கிய பங்கு வகித்தது அறுதலாக அமைந்திருந்தது.

## 27.1.9 தனித்து நடத்திய அண்ணாதுரை, 1942

### திராவிட நாடு

அரசியல் பயணத்திலிருந்து திரும்பிய அண்ணாதுரை 1942 மார்ச் மாதம் 8 ஆம் தேதி, பெரியாரை விட்டுப் பிரிந்து காஞ்சிபுரம் சென்று திராவிட நாடு என்ற பெயரில் ஒரு வார இதழைத் துவக்கினார். விரைவிலேயே அப்பத்திரிகை வாசகர்களைக் கவர்ந்து பெரும் வளர்ந்தது. அதன் வாசகர் வட்டம் விரிவடைந்தது. எதிர்பாராத அளவிற்கு உயர்ந்த இடத்தைப் பிடித்த பத்திரிகை வெளிவந்து அறிவு ஒளி வீசியது. செவ்வியல், சமூக, அரசியல், சமய, தத்துவ, இலக்கிய, போன்ற பல துறைகளில் அண்ணாதுரை கட்டுரைகளையும், கதைகளையும், விமர்சனங்களையும் நாடகங்களையும் எழுதினார். ஒவ்வொரு வாரமும் திராவிட நாடு இதழ் ஆவலோடு எதிர்பார்க்கப்பட்டது. அண்ணாதுரையின் கருத்துக்களும், கட்டுரைகளும் பிற ஏடுகளும் தமிழ் நாட்டில் பெரும் பாராட்டை ஏற்படுத்தின. விரைவிலேயே ராம அரங்கண்ணலும், தில்லை வில்லாளனும் அண்ணாவுடன் இணைந்து அவரது பத்திரிகை முயற்சிக்குப் பக்கபலமாக இருந்தனர்.

### நாடகங்கள்

திராவிட நாட்டின் தேவை பல மடங்கு அதிகரித்ததால் அப்பத்திரிகைக்கென ஒரு அச்சகம் தேவைப்பட்டது. அதற்கான பணத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக எழுதப்பட்ட நாடகங்களே சந்திரோதயம், ஓர் இரவு, வேலைக்காரி, சிவாஜி கண்ட இந்து ராஜ்யம், நீதிதேவன் மயக்கம், காதல் ஜோதி, பாவையின் பயணம், நல்ல தம்பி, ஓர் நாளின் பெண், கொலைகாரியின் குறிப்புகள் ஆகியவை. அண்ணாதுரையின் படைப்புகள் அச்சக விரிவாக்கத்துக்கான தொகையை ஈட்டிக் கொடுத்ததோடு திராவிட இயக்கத்தில் பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தியது. இவை பக்தர்கள், பகுத்தறிவாளர்கள் என்ற வேறுபாட்டைக் கடந்து அனைவரது, குறிப்பாக மாணவர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டன. ஆட்சியாளர்கள் உயிர் அதிர்ச்சி அடைந்தனர்! அண்ணாதுரையின் புரட்சிகரமான படைப்புகளைக் கண்டு களித்து வந்த கல்கி கிருஷ்ணமூர்த்தி அவரை ஜெர்மனியின் நாடக மேதை இப்சனோடு (Ibsen) ஒப்பிட்டு எழுதினார். பாரதிதாசன் அண்ணாதுரைக்கு அறிஞர் பட்டத்தைச் சூட்டினார். அதிலிருந்து அவர் அறிஞர் அண்ணாதுரை என்று அழைக்கப்பட்டார். அண்ணாவின் எழுத்தும் கருத்தும் பக்தர்களிடையே இலக்கியச் சுவையையும் மாணவர்களிடையே எழுச்சியையும் ஏற்படுத்தின.

## 27.1.10 கடவுள் மறுப்பு இயக்கம், 1942–1944

1940களில் பெரியார் கடவுள் மறுப்பு இயக்கத்தைத் தீவிரப்படுத்தினார். பெரியார் ஒரு நாத்திகவாதி. அண்ணாதுரை ஆத்திகவாதி. எனவே அண்ணாதுரை கடவுள் இருக்கிறாரா இல்லையா என்ற சர்ச்சையில் கலந்து கொள்ளாமல் புராணங்களிலும், இதிகாசங்களிலும் காணப்படும் நம்பமுடியாத நிகழ்ச்சிகளையும், முரண்பாடுகளையும், ஆபாசங்களையும் அம்பலத்துக்குக் கொண்டு வந்தார். ராமாயணம் ஒரு ஆபாச காவியம் என்பதை எடுத்துக்காட்டுகளுடன் எடுத்துரைத்தார். பெரிய புராணத்தில் காணப்படும் முரண்பாடுகளைக் கோடிட்டுக் காட்டினார். சமய இலக்கியங்களில் காணப்படும் ஆரிய–திராவிட வேறுபாடுகளை உதாரணங்களுடன் விளக்கினார். சுருக்கக் கூறின், அண்ணாதுரை பெரியார் சென்ற பிறர் மனதைப் புண்படுத்தும் நாத்திகப் பாதையில் செல்லாமல், தமிழ் நாட்டு மக்களை மூட நம்பிக்கைகளின் இரும்புப் பிடியிலிருந்து விடுவிக்கும் அறிவுப் பாதையில் பயணித்தார். வேறுவிதமாகக் கூறுவதாயின் அண்ணாதுரை பெரியாரின் பகுத்தறிவுக் குறிக்கோளை ஏற்றுக் கொண்டார்; ஆனால் அந்த இலக்கை அடைவதற்கான வழியை ஏற்றுக் கொள்ளவில்லை. காந்தியடிகளைப் போன்று முடிவும் (Ends) அதை அடைவதற்கான மார்க்கமும் (Means) தூய்மையாக இருக்க வேண்டும் என்று கருதினார் அண்ணாதுரை. பிறர் மனதைப் புண்படுத்தாமல் தன் கருத்துக்களைத் தெரிவிப்பதில் குறியாக இருந்தார் அவர்.

## 27.1.11 திருச்சி மாநாடு, 1943

அண்ணாதுரை ஈரோட்டிலிருந்து காஞ்சிபுரம் வந்து திராவிட நாடு பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்த போதும் அவருக்கும் பெரியாருக்கும் இடையேயுள்ள தொடர்பு நீடித்தது. அதற்குக் காரணம் பெரியார் நீதிக்கட்சியின் தலைவராகவும், அண்ணாதுரை அதன் பொதுச் செயலாளராகவும் இருந்ததேயாகும். 1943 ஏப்ரல் 25 ஆம் தேதி திருச்சியில் கூட்டப்பட்ட நீதிக்கட்சி மாநாட்டிற்கு அண்ணாதுரை தலைமை தாங்கும் வாய்ப்பைக் கொடுத்தார் பெரியார்! அம்மாநாட்டில் உரையாற்றிய அவர் அண்ணாதுரை இளைஞர்; பதவியையோ, பட்டத்தையோ, பொருளையோ விரும்பாதவர்; முதுகலைப் பட்டம் பெற்றவர்; சிறை தண்டனை பெற்றவர்; கொள்கைப் பிடிப்புள்ளவர்; செயலாற்றல் உள்ளவர்; மாநாட்டிற்குத் தலைமை தாங்க இத்தகையோர் கிடைப்பது அரிது என்று அண்ணாதுரையைப் புகழ்ந்து பாராட்டினார்!

## 27.1.12 சேலம் மாநாடு, 1944

1944 ஆகஸ்ட் 27 ஆம் தேதி சேலத்தில் கூட்டப்பட்ட நீதிக்கட்சி மாநாடு தற்காலத் தமிழ் நாட்டு வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். அந்த மாநாட்டில் தான் நீதிக்கட்சி திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பெரியார் கட்சியின் பெயர் மாற்றத்துக்கு முயற்சி செய்து கொண்டிருந்த போது ஜஸ்டிஸ் அப்சர்வர் ஆசிரியர் பி.பாலசுப்பிரமணியன், டபிள்யூ.பி.சௌந்தர பாண்டியன், பி.டி.ராஜன், கே.வி.ரெத்தினசாமி, சி.ஜி.பிரிட்டோ போன்றோர் பெரியாரின் தலைமையையே மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். நீதிக்கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த கி.ஆ.பெ.விசுவநாதம் பெரியாருக்கு எதிராக குற்றச்சாட்டுகளைக் கூறி

என்று கூறினார். திராவிடக் கழகத் தலைவருக்கு எதிராக அக்கழகத்தின் பொதுச் செயலாளர் வெளியிட்ட அறிக்கை தமிழ் நாட்டில் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது.

### 27.1.17 கண்டனக் கூட்டம், 1948

தற்காலத் தமிழ் நாட்டு வரலாற்றிலிருந்து மொழிக் கொள்கை பற்றி எந்தப் பாடத்தையும் கற்றுக் கொள்ளாத ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சென்னை மாகாண முதலமைச்சரானவுடன் (1948 ஜூன் 20) இந்தியைக் கட்டாயப் பாடமாக்கி உத்தரவிட்டார்! தமிழ் நாட்டில் மட்டும் விருப்பப் பாடமாக இருந்த இந்தியை கட்டாயப் பாடமாக்கினார்!!! இதை எதிர்த்து 1948 ஜூலை 17 ஆம் தேதி சென்னையில் நடைபெற்றக் கண்டனக் கூட்டத்தில் பெரியாரும், அண்ணாதுரையும் பங்கேற்றனர். இந்தி எதிர்ப்பால் ஒன்றுபட்டு, மனப்பான்மையால் வேறுபட்டிருந்த பெரியாரையும் அண்ணா துரையையும் மீண்டும் ஒன்று சேர்த்தது. இந்த மாநாட்டில் பேசிய பெரியார் கூறினார்: இதுவே இறுதிப் போராட்டம். காம்ரேட் அண்ணாதுரை கூறியதைப் போன்று "நானும் உங்களோடு சேர்ந்து போராட வந்திருக்கிறேன்".

### ஈரோடு மாநாடு, 1948

1948 அக்டோபர் 23–24 ஆம் தேதிகளில் பெரியார் ஈரோட்டில் கூட்டிய இந்தி எதிர்ப்பு மாநாட்டுக்குத் தலைமை வகிக்குமாறு அண்ணாதுரையைக் கேட்டுக் கொண்டார்! அந்த அழைப்பை ஏற்று ஈரோடு சென்ற அண்ணாதுரைக்கு மகத்தான உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த மாநாட்டில் திரு.வி.கவும் கலந்து கொண்டார். அந்த மாநாட்டில் உணர்ச்சி வசப்பட்டுப் பேசிய பெரியார் கழகப் பெட்டிச் சாவியை அனைவரது முன்னிலையில் அண்ணாதுரையிடம் கொடுத்துவிட முடிவு செய்து விட்டதாக அறிவித்தார்! பெரியாரின் அந்த அறிவிப்பை மாநாட்டுப் பந்தலில் கூடியிருந்தோர் பலத்த கரவொலியோடு ஆமோதித்தனர். பெரியாருக்கு மனமாற்றம் ஏற்பட்டதாக அறிந்து கழகத்தார் மகிழ்ச்சி அடைந்தனர்.

### 27.1.19 பெரியார்–மணியம்மை திருமணம், 1949

ஈரோடு மாநாட்டின் போது உருவான மகிழ்ச்சி மேகம் ஒன்பது மாதங்களுக்குள் சூறாவளியை ஏற்படுத்தி சோக மழையைப் பொழிந்து விட்டது! 1949 ஜூலை 9 ஆம் தேதி பெரியார் மணியம்மையை மணந்து கொண்ட நிகழ்ச்சி மயிலிறகு ஏற்றிய வண்டியாயிற்று. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்; சால மிகுத்துப் பெயின் (குறள், 475). அந்நிகழ்ச்சி திராவிடர் கழகத்தின் அச்சு முறியக் காரணமாக இருந்தது. 70 வயதான பெரியார் 30 வயதான மணியம்மையை மணம் செய்து கொண்டதுமட்டுமல்ல. அதற்கு அவர் கூறிய காரணம் அண்ணாதுரையை அதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டது!

இப்பொருந்தாத் திருமணத்துக்குப் பெரியர் கொடுத்த விளக்கம்: கழகத்தைக் கட்டிக்காக்க தன்னைப் போன்ற பொறுப்பான எவருமில்லை; தனக்கு நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவர் தேவை; தனக்குப் பின் ஒரு வாரிசு வேண்டும்; மணியம்மையை வாரிசாக்குவதற்காகவே இந்த சட்ட ரீதியான பதிவுத் திருமணம் செய்து கொள்ளப்பட்டது. அதாவது, பெட்டிச்சாவியை அண்ணாதுரைக்குப் பதில்

மணியம்மையாரிடம் ஒப்படைப்பதற்கான ... திருமணம். திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளராக அண்ணாதுரை நீடிப்பது இயலாத காரியமாகிவிட்டது. எனவே, அவரும் அவரது ஆதரவாளர்களும் கழகத்தை விட்டு வெளியேறினர். திராவிடர் கழகம் இரண்டாகப் பிளவுபட்டது!

## 27.2 திராவிட முன்னேற்றக் கழகம், 1949

### 27.2.1 தோற்றம்

திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறிய அண்ணாதுரை, ஈ.வெ.கி.சம்பத், நெடுஞ்செழியன், மு.கருணாநிதி, என்.வி.நடராசன் போன்ற முன்னணித் தலைவர்கள் 1949 செப்டம்பர் 17 ஆம் தேதி சென்னை பவழக்காரத் தெரு 7 ஆம் எண் இல்லத்தில் கூடி திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க) என்ற பெயரில் ஒரு புதிய கட்சியைத் துவக்கத் தீர்மானித்தனர். இக்கட்சியின் பொதுக்குழு அமைக்கப்பட்டது. மேலே கருப்பும், கீழே சிவப்பும் கொண்ட கொடியும் முடிவு செய்யப்பட்டது. அண்ணாதுரை தி.மு.கவின் பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

### 27.2.2 தொடக்க விழா

தி.மு.க. தோற்றுவிக்கப்பட்ட அன்று மாலையே சென்னை ராபின்சன் பூங்கா மைதானத்தில் கழகத்தின் தொடக்கவிழா நடைபெற்றது. பெத்தம்பாளையம் பழனிச்சாமி அக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். கொட்டும் மழையில் உரையாற்றிய அண்ணாதுரை பெரியார்தான் அவரது நிரந்தரத் தலைவர் என்று. அதனால்தான் அவருக்காக தலைவர் நாற்காலியைக் காலியாக வைத்திருப்பதாகக் குறிப்பிட்டார். பெரியாருடன் இனியும் இணைந்து பணியாற்ற முடியாத சூழ்நிலையில்தான் அவரும் அவரது 'கண்ணீர்த் துளி'களும் திராவிடர் கழகத்திலிருந்து பிரியாவிடை பெற்று வந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகத் தன்னிலை விளக்கமளித்தார். தி.மு.க. துவக்கப்பட்ட நாள் பெரியார் பிறந்த நாள் என்பது குறிப்பிடத்தக்கது!

### 27.2.3 வளர்ச்சி

துவக்கத்தில் தி.மு.கவின் அலுவலகம் பவழக்காரத் தெரு வீட்டில் இருந்தது. சில மாதங்களுக்குப் பிறகு அந்த அலுவலகம் 'மின்ட்'டில் ஒரு வாடகை வீட்டுக்கு மாறியது. பின்னர் வட சென்னையில் ஒரு இடத்தை வாங்கி, அதற்கு 'அறிவகம்' என்று பெயரிடப்பட்டது (1951 நவம்பர்). இதற்காகத் தமிழ் நாடெங்கும் நாடகங்கள் நடத்தி நிதி சேர்க்கப்பட்டது. பட்டி தொட்டியெல்லாம் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஒரே மாதத்தில் 600–க்கும் மேற்பட்ட கிளைக் கழகங்கள் துவக்கப்பட்டு 50,000 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். விரைவிலேயே ஆயிரக்கணக்கான கிளைக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டு, பல்லாயிரக்கணக்கான உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டனர். தி.மு.க மக்களிடையே, குறிப்பாக இளைஞரிடையே தனிப்பட்ட அடையாளத்துடன் செல்வாக்கு

... என்று எழுதினார் கண்ணதாசன். ... எவ்வளவு விரைவாக வளர்ந்ததற்கான சான்று

## 27.2.4 முதலமைச்சர்களின் பங்களிப்பு

### குமாரசாமி ராஜா

திமுக. துவக்கப்பட்ட போது (1949 செப்.17) குமாரசாமி ராஜா சென்னை ராஜதானியின் முதலமைச்சராக இருந்தார். அவரால் தி.மு.க.வின் தோற்றம், வளர்ச்சி, அதன் எதிர்காலத்தைப் பற்றி சரியாகக் கணிக்க முடியவில்லை! அக்கட்சியை **தேசவிரோத சக்தியாகவே** பார்த்தார். கம்யூனி டுகளை ஆதரித்த தி.மு.கவை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அடக்குமுறை மூலம் தி.மு.கவைத் தலைதூக்க முடியாமல் செய்து விடலாம் என்று எண்ணினார். அண்ணாதுரையின் **ஆரியமாயை** வெளியிடப்பட்டு ஏழாண்டுகளுக்குப் பின் தடை செய்யப்பட்டு (1950) அவர் மீது வழக்கு தொடரப்பட்டது!! அவர் மீது விதிக்கப்பட்ட அபராதத் தொகையைக் கட்டமறுத்து சிறை சென்றார் அண்ணாதுரை. வழக்கு விசாரணையின் போது அண்ணாதுரை பலமுறை திருச்சி சென்று வர நேரிட்டது. தி.மு.க. இவையாவையையும் பிரச்சாரத்துக்கு நன்கு பயன்படுத்திக் கொண்டது. வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை விழாவாகக் கொண்டாடினர். குமாரசாமி ராஜா நிர்வாகத்தின் விவேகமற்ற நடவடிக்கைகளைத் தி.மு.க. அதன் அரசியல் ஆதாயத்துக்கு முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டது.

### ராஜாஜி

குமாரசாமி ராஜாவுக்குப் பின் முதலமைச்சரான ராஜாஜி (1952–1954) அறிமுகப்படுத்திய பகுதிநேர படிப்புத் திட்டம் 'குலக் கல்வித் திட்டம்' என்று பெயரிடப்பட்டு, அத்திட்டத்துக்கு எதிராக தி.மு.க. மாபெரும் போராட்டத்தை நடத்தியது. மக்கள் தி.மு.க. பக்கம் இருந்தமையாலும், காங்கிரசுக்குள்ளேயே இத்திட்டத்துக்கு எதிர்ப்பு இருந்ததாலும் ராஜாஜி பதவி விலக வேண்டியதாயிற்று! இந்நிகழ்ச்சியும் தி.மு.கவின் அரசியல் பசிக்குத் தீனியாயிற்று!!

### காமராசர்

ராஜாஜிக்குப் பின் முதலமைச்சரான காமராசரை வரவேற்ற தி.மு.க. அவரது **தட்சிணப் பிரதேச** ஆதரவு முயற்சியை ஆதரிக்கவில்லை. அத்திட்டத்தைத் தி.மு.க. கடுமையாக எதிர்த்தது. அதேபோன்று தமிழ்நாடு பெயர் மாற்றம் பற்றிய காமராசர் அரசாங்கத்தின் சமரசத் தீர்வை தி.மு.க. ஏற்றுக் கொள்ளவில்லை. அத்தீர்வு தமிழ்நாடு என்ற பெயர் ஆங்கிலத்திலும் அழைக்கப்படுவதற்கேற்ப இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது. இந்த கோரிக்கையையும் தி.மு.க. பிரச்சாரப் பொருளாக்கிக் கொண்டது. இந்தக் கழகத்தின் நிலைப்பாட்டுக்கு மக்கள் ஆதரவு அமோகமாக இருந்தது.

### பக்தவத்சலம்

காமராசர் திட்டத்தின் கீழ் காமராசர் பதவி விலகியதை அடுத்து (1963 அக்டோபர் 2) எம்.பக்தவத்சலம் முதலமைச்சர் பொறுப்பேற்றார் (1963–1967). 1963 இல் மத்திய அரசாங்கம் கொண்டு வந்த பிரிவினை தடை ச் சட்டத்தின் விளைவாக தி.மு.க. திராவிட நாடு பிரிவினை கோரிக்கையைக் கைவிட்டது! அதன்பின் 1963 இல் மத்திய அரசாங்கம் இந்தியை ஆட்சி மொழியாக்கும் அரசியல் சட்ட திருத்தத்தை எதிர்த்து தி.மு.க. அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தைத் துவக்கியது. போராட்டம் 1963 நவம்பர் 17 ஆம் தேதி துவக்கப்படும் முன் தி.மு.க. தலைவர்கள் கைது செய்யப்பட்டனர் (நவ.13). தி.மு.க. தலைவர் அண்ணாதுரை கைது செய்யப்பட்டு அவர் மீது வழக்கு தொடரப்பட்டது அவருக்கு 6 மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த சட்ட எரிப்புப் **போராட்டம் தி.மு.கவின் செல்வாக்கை மேலும் அதிகரித்தது.**

நேருவின் மறைவுக்குப் பிறகு (1964 மே 27), அவரது வாக்குறுதியை மீறி, மத்திய அரசு **1965 ஜனவரி 26 ஆம் தேதி முதல் இந்தி ஆட்சி மொழி ஆகும்** என்று அறிவித்தது. இந்த அறிவிப்பு குளவிக் கூட்டில் கைவிட்ட கதையாயிற்று! மீண்டும் தமிழ்நாடு வரலாறு காணா இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை சந்திக்க வேண்டியதாயிற்று. சட்டம் ஒழுங்கு முற்றிலுமாக சீர்குலைந்தது!! போராட்டம் முதலமைச்சர் பக்தவத்சலத்தின் கைமீறிச் சென்று விட்டது. நேருவின் வாக்குறுதி நிறைவேற்றப்படும் என்று இந்தியப் பிரதமரும், மாநில முதலமைச்சரும் உறுதி அளித்ததன் பேரில் இந்த 18 நாள் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது (1965 பிப்ரவரி 12). கைது செய்யப்பட்ட தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். தி.மு.க. இப்போராட்டத்தின் விளைவை 1967 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அறுவடை செய்தது!

## 27.3 திசை திருப்பிய தேர்தல், 1967

### 27.3.1 கவின்மிகு கூட்டணி

1967 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் தற்காலத் தமிழ்நாட் வரலாற்றைத் திசைதிருப்பி விட்டது! தமிழ்நாட்டு ஆட்சி காங்கிரசிடமிருந் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு மாறிவிட்டது. கழகத்துக்கு மு கழகத்துக்குப் பின் என்ற நிலை ஏற்பட்டது! காங்கிரசைத் தனித்திருந்து போட்டியி இத்தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பதை நன்கறிந்த தி.மு.க. தலைவர் அண்ணாது கவின்மிகு கூட்டணியை (Grand Alliance) உருவாக்கினார். இக்கூட்டணி ஐக் முன்னணி (United Front) என்று அழைக்கப்பட்டது.

### 27.3.2 கூட்டணிக் கட்சிகள்

இந்தக் கூட்டணியில் ராஜாஜியின் சுதந்திரா கட்சி, மார்க்சிய கம்யூ கட்சி, பிரஜா சோஷலி டு கட்சி, சம்யுக்த சோஷலி டு கட்சி, தமி உழைப்பாளர் கட்சி, இந்திய குடியரசுக் கட்சி, இந்திய யூனியன் மு லி ஆகிய கட்சிகள் இடம் பெற்றன. சிவஞான கிராமணியாரின் தமிழரசு வேட்பாளர்களும், ஈ.வெ.கி. சம்பத்தின் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர்களும்

# 29. எம்.ஜி.இராமச்சந்திரன் ஆட்சி, 1977–1987

*வறுமைக் கோட்டின் கீழே உள்ள மக்கள் எந்தச் சமூகத்தினராக இருந்தாலும் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர முன்னுரிமை கொடுத்துப் பாடுபடுவோம்.*

*– எம்.ஜி.ஆர்.*

## 29.1 வாழ்க்கை வரலாறு

### 29.1.1 இலங்கையில் இளமைக்காலம்

மருதூர் கோபாலன் ராமச்சந்திரன் (MGR) 1917 ஜனவரி 17 ஆம் தேதி இலங்கையில் உள்ள கண்டியில் கேரள நாயர் சமூகத்தைச் சேர்ந்த கோபால மேனனுக்கும் மருதூர் சத்தியபாமாவுக்கும் மகனாகப் பிறந்தார். இவரது மூத்த சகோதரர் சக்ரபாணி. கோபால மேனன் இலங்கைக்குச் செல்வதற்கு முன் மாஜிஸ்திரேட்டாகப் பணியாற்றியவர். இவர்கள் தாய்வழிக் குடும்ப மரபைச் சேர்ந்தவர்களாகையால் ராமச்சந்திரன் பெயரில் மருதூர் சேர்க்கப்பட்டது. இம்மரபுப்படி குடும்ப சொத்து சின்னம்மாவிடம் சென்று விட்டதால், கோபால மேனன் குடும்பத்துடன் தாயகம் திரும்பினார். தந்தை அகால மரணமடைந்ததால் (1920) குடும்பம் வறுமையின் பிடியில் சிக்கியது.

### 29.1.2 நாடக வாழ்க்கை

விதவை சத்தியபாமா தனது இரண்டு மகன்களையும் அழைத்துக் கொண்டு அவரது தம்பி நாராயணன் வசித்த கும்பகோணத்துக்குச் சென்றார். மதுரை ஒரிஜினல் பாய் நாடகக் கம்பெனியில் பின்பாட்டுப் பாடிவந்த நாராயணன் சக்ரபாணியையும், எம்.ஜி.ஆரையும் நாடகக் கம்பெனியில் சேர்த்து விட்டார். அப்போது அவ்விருவரும் முறையே 7வது வகுப்பிலும், 3வது வகுப்பிலும் படிந்து வந்தனர்! பி.யு.சின்னப்பா, டி.எஸ். பாலையா போன்றோர் அக்கம்பெனியில் நடித்து வந்தனர். எம்.ஜி.ஆர் சிறு வேடங்களில் நடித்துப் படிப்படியாகக் கதாநாயகன் அளவுக்கு உயர்ந்தார்.

### 29.1.3 திரைப்பட வாழ்க்கை

எம்.ஜி.ஆருக்குப் 18 வயதாகும் போது அவருக்கு எல்லிஸ் ஆர்.டங்கன் இயக்கிய சதிலீலாவதி என்ற திரைப்படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது (1935). அப்படத்தில் என்.எஸ்.கிருஷ்ணன், டி.எஸ். பாலையா நடித்தனர். படத்தின் கதாநாயகன் எம்.கே.ராதா. எம்.ஜி.ஆர். இன்ஸ்பெக்டர் வேடத்தில் நடித்தார். இத்திரைப் படத்தின் கதை ஆனந்த விகடன் ஆசிரியரால் எழுதப்பட்டு, அப்பத்திரிகையில் வெளிவந்து, மக்களிடையே நன்கு அறிமுகமாகியிருந்தது. எனவே, மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கிடையே வெளியான

[illegible] வியத்தகு வெற்றி பெற்றது. எம்.ஜி.ஆரின் திரைப்பட வாழ்க்கை வெற்றிப் படத்தோடு துவங்கியது. எம்.ஜி.ஆரின் இரண்டாவது படம் இரு சகோதரர்கள். இப்படத்தில் இவரும் இவரது சகோதரர் சக்ரபாணியும் நடித்தனர்!

## 29.1.4 மண வாழ்க்கை

எம்.ஜி.ஆர் திரைப்படங்களில் நடித்துக் கொண்டிருக்கும் போது அவரது தாயாரின் வற்புறுத்தலின் பேரில் பாலக்காட்டைச் சேர்ந்த பார்க்கவி என்ற தங்கமணியைத் திருமணம் செய்து கொண்டார். பார்க்கவி அகால மரணமடைந்ததால் தாயாரின் சொல் கேட்டு பாலக்காட்டைச் சேர்ந்த சதானந்தவல்லியை மணந்து கொண்டார். சதானந்தவல்லி கர்ப்பமுற்றிருந்த போது காச நோயால் பீடிக்கப்பட்டு இறந்துவிட்டார். இருவரும் இருபது ஆண்டு காலம் இல்லறம் நடத்தினர். அதன் பிறகு தான் எம்.ஜி.ஆர் தன்னுடன் மருதநாட்டு இளவரசியில் கதாநாயகியாக நடித்த வி.என்.ஜானகியை மணந்து கொண்டார். ஜானகி அவரது கணவர் கணபதி பட் என்பவரை விவாகரத்து செய்து விட்டு எம்.ஜி.ஆருடன் இணைந்தார்!

இல்லற வாழ்க்கையில் ஏற்ற இறக்கங்களைக் கண்ட எம்.ஜி.ஆர். திரைப்படங்களில் சிறு வேடங்களில் பல படங்களில் நடித்தார். அவற்றுள் குறிப்பிடத் தக்கது அவர் எம்.கே.தியாகராஜ பாகவதருடன் நடித்த அசோக்குமார். அப்படத்தில் தளபதி வேடத்தில் நடித்தார்.

## 29.1.5 வசூல் சக்ரவர்த்தி

1947 ஆம் ஆண்டு ஏப்ரல் 11 ஆம் தேதி ஏ.எ.எ.சாமி இயக்கத்தில் மு.கருணாநிதி கதை-வசனத்தில் எம்.ஜி.ஆர் முதல் முதலில் கதாநாயகனாக நடித்து வெளியிடப்பட்ட படம் **ராஜகுமாரி** கதாநாயகனுக்குப் பெயரையும் புகழையும் பெற்றுத் தந்தது. இதைத் தொடர்ந்து மருதநாட்டு இளவரசி, மந்திரகுமாரி, மர்மயோகி, சர்வாதிகாரி, என் தங்கை, பணக்காரி, ஜெனோவா போன்ற படங்களில் நடித்தார். கருணாநிதியின் **மேகலா பிக்சர்** நிறுவனத்தின் பங்குதாரராகி, அக்கம்பெனி தயாரித்த நாம் படத்தில் நடித்தார். எம்.ஜி.ஆர் பானுமதியுடன் சேர்ந்து நடித்த **மலைக்கள்ளன்** பெரிய வெற்றியைப் பெற்றுத் தந்தது (1954). அதேபோன்று அவர் பத்மினியுடன் இணைந்து நடித்த **மதுரை வீரன்** (1956) மாபெரும் வெற்றி பெற்று கதாநாயகனுக்கு **வசூல் சக்ரவர்த்தி** என்ற பெயரைக் கொடுத்தது. அவர் நடித்த முதல் வண்ணப் படமான அலிபாபாவும் 40 திருடர்களும் மக்களிடையே மிகுந்த செல்வாக்கைப் பெற்றது. எம்.ஜி.ஆர் நடித்த நாடோடி மன்னன், எங்க வீட்டுப் பிள்ளை, அடிமைப் பெண், ரிக்ஷாக்காரன் போன்ற திரைப்படங்கள் தமிழக ரசிகர்களின் இதயங்களில் நிரந்தர இடத்தைப் பிடித்தன. ரிக்ஷாக்காரனில் நடித்ததற்காக எம்.ஜி.ஆர் சிறந்த நடிகர் விருதைப் பெற்றார். ரிக்ஷாக்காரன் திரை உலக வரலாற்றில் புதிய சாதனை படைத்தது (1956). திரைப்பட வெற்றியே எம்.ஜி.ஆர் அரசியலில் வெற்றி பெறுவதற்கும் காரணமாக இருந்தது.



## 29.1.6 அரசியல் வாழ்க்கை

எம்.ஜி.ஆர். அண்ணாதுரையை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்ததிலிருந்து எம்.ஜி.ஆரின் அரசியல் வாழ்க்கை துவங்கியது எனலாம். அந்த சந்திப்புக்குக் [illegible] நடிகர் எம்.ஜி.ஆரின் அரசியல் வாழ்க்கை துவங்கியது எனலாம். காரணமாக இருந்தவர் அப்போது பிரபல நாடக நடிகராக இருந்த டி.வி.நாராயணசாமி ஆவார். அண்ணா எம்.ஜி.ஆரைத் தனது இளைய சகோதரர்போலக் கருதி [illegible] உபசரித்ததும், உரையாடியதும், அத்தலைவரின் எளிமையும், அடக்கமும், அறிவுத் தெளிவும் தன்னை அவரிடம் பறிகொடுக்கச் செய்துவிட்டதாக நான் ஏன் பிறந்தேன்? நாலில் பதிவு செய்துள்ளார் எம்.ஜி.ஆர். முன்னமேயே கருணாநிதியுடன் நன்கு தொடர்பு கொண்டிருந்த எம்.ஜி.ஆர். அடுத்த சில ஆண்டுகளில் கண்ணதாசன், ஏ.வி.பி.ஆசைத் தம்பி போன்றோருடன் நன்கு பழகலானார். அண்ணாவின் பணத் தோட்டத்தில் கூறியுள்ள கொள்கைகளும் கருத்துக்களும் எம்.ஜி.ஆரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

## 29.1.7 தி.மு.க.வில் எம்.ஜி.ஆர்

1953 ஏப்ரல் 25–26 தேதிகளில் திருச்சியில் நடைபெற்ற தி.மு.க. மாவட்ட மாநாட்டில் எம்.ஜி.ஆர் தன்னை முறையாகக் கழகத்தோடு இணைத்துக் கொண்டார். கதர் உடை அணிந்தாலும் பெரியார் மற்றும் அண்ணாவின் கொள்கைகளைப் பின்பற்ற போவதாக முடிவு செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார் அருணன். நாடோடி மன்னன் திரைப்படத்தில் முதன் முதலாக எம்.ஜி.ஆர் தி.மு.க. கட்சிக் கொடியுடன் தோன்றலானார் (1958). அப்போதிலிருந்து மக்கள் கட்சிக் கொடியை எம்.ஜி.ஆர். கொடியாகக் கருதியதாகக் குறிப்பிட்டுள்ளார் ஆர்.கண்ணன். 1957 தேர்தல் முடிந்த பின்னர் தேர்தல் செலவை சமாளிக்க எம்.ஜி.ஆர், கே.ஆர்.ராமசாமி, எ.எ.ராஜேந்திரன் டி.வி.நாராயணசாமி ஊதியம் வாங்கிக் கொள்ளாமல் ஒரு திரைப்படத்தில் நடிப்பதாக முன்வந்தனர். ஆனால் அண்ணா அதற்கு சம்மதிக்கவில்லை!

## 29.1.8 அண்ணாவின் இதயக்கனி

1959 ஜனவரி மாதம் சென்னை மாநகராட்சிக்கு நடைபெற்ற தேர்தலின் போது எம்.ஜி.ஆரை அண்ணாதுரை வீட்டுக்கு அழைத்து கழகத்து ஆதரவாகப் பிரச்சாரம் செய்யுமாறு கேட்டுக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார் கே.ராஜாராம். கழகம் இத்தேர்தலில் வரலாறு காணாத வெற்றி பெற்றது. 1962 தேர்தலின் போது எம்.ஜி.ஆர் ஒரு நாளைக்கு 30லிருந்து 40 தேர்தல் பொதுக் கூட்டங்களில் பேசிப் பிரச்சாரம் செய்தார். 1967 தேர்தலின் போது முதல் கட்டப் பிரச்சாரத்தின் போது பல கூட்டங்களில் [illegible] பேசினார். அதன்பின் எம்.ஆர்.ராதாவால் சுடப்பட்டு மருத்துவமனையில் [illegible] கட்டுடன் இருக்கும் படங்கள் பிரச்சார சுவரொட்டிகளாகத் தமிழ்நாடு [illegible] எம்.ஜி.ஆர் மருத்துவமனையில் இருந்தபடியே வெற்றி பெற்றார். தி.மு.க ஆட்சியைக் கைப்பற்றியது. எம்.ஜி.ஆர் அண்ணாவின் இதயக்கனி ஆனார்.

### 29.1.9 கருணாநிதியின் எட்டிக்காய்

1969 பிப்ரவரி 3 ஆம் தேதி அண்ணா இறந்தார். அவருக்குப் பின் முதலமைச்சரான கருணாநிதிக்கும் எம்.ஜி.ஆருக்குமிடையேயான தொடர்பில் அபாயம் தோன்றியது. இருவருக்குமிடையேயான அரசியல் உறவில் விரிசல் ஏற்பட்டது. குறிப்பாக எம்.ஜி.ஆர் கேட்டும் அமைச்சரவையில் இடம் கொடுக்காதது அவருக்குப் பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்தது. அண்ணாவுக்குப் பின் அவருக்குக் கழகத்தில் உரிய இடமோ, தகுந்த மரியாதையோ இல்லை என்பதைப் புரிந்து கொண்டார். திமுக அண்ணாவின் மதிப்பு கூட்டிய அரசியலிலிருந்து விலகிச் செல்வதை அவர் விரும்பவில்லை. குறிப்பாக கழகம் ஊழல் கோட்டையாவதையும், கருணாநிதி மதுவிலக்கைக் கைவிட்டதையும் எம்.ஜி.ஆரால் சீரணிக்க முடியவில்லை. அண்ணா எம்.ஜி.ஆரின் பலம் அறிந்து கட்சியை வளர்க்கப் பயன்படுத்தினார். ஆனால் கருணாநிதி எம்.ஜி.ஆரின் மக்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி ஆட்சியைப் பலப்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டார். அண்ணாவுக்கு இதயக் கனியாக இருந்த எம்.ஜி.ஆர், கருணாநிதியின் எட்டிக்காயானார்! விளைவு? தி.மு.க. பிளவுபட்டது. அண்ணா தி.மு.க. தோன்றியது. தமிழ்நாட்டு அரசியலின் 'தலையெழுத்து' மாற்றி எழுதப்பட்டது.

## 29.2 அண்ணா தி.மு.கவின் எழுச்சி

### 29.2.1 குடியரசுத் தலைவர் ஆட்சி, 1976

1975 ஜூன் 25 ஆம் தேதி இந்திரா காந்தி அரசாங்கம் நெருக்கடி நிலையை நடைமுறைப்படுத்தியது. தமிழ்நாடு குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் வந்தது. 1976 ஜனவரி 31 ஆம் தேதி கருணாநிதியின் அரசாங்கம் கலைக்கப்பட்டது. தமிழ்நாட்டை ஆளுநர் மத்திய அரசாங்கம் அனுப்பிய ஆலோசகர்களின் துணை கொண்டு நிர்வகித்தார். 1972 நவம்பர் 6 ஆம் தேதி எம்.ஜி.ஆர் கொடுத்த ஊழல் புகாரின் அடிப்படையில் சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டது (1976 பிப்ரவரி 3). அதன் பின்னர் 1977 ஜனவரி 18 ஆம் தேதி நெருக்கடி காலப் பிரதமர் இந்திரா காந்தி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மார்ச் மாதம் அதற்கான தேர்தல் நடைபெறும் என்று அறிவித்தார்! அந்த அறிவிப்பின்படி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டது. இத்தேர்தலில் இந்திரா காந்தி அவரது சொந்த ரேபரேலி தொகுதியிலேயே தோற்கடிக்கப்பட்டார். ஆனால் தமிழ் நாட்டில் தேர்தல் முடிவுகள் அதற்கு நேர்மாறாக இருந்தன!

### 29.2.2 நாடாளுமன்றத் தேர்தல், 1977

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் கருணாநிதி அரசாங்கத்தைக் கலைத்த இந்திரா காந்தி காங்கிரசும், அந்த அமைச்சரவை கலைக்கப்படுவதற்குக் காரணமான எம்.ஜி.ஆரின் தலைமையிலான அண்ணா தி.மு.கவும் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன. கொள்கையற்ற இச்சந்தர்ப்பவாதக் கூட்டணி அமோக வெற்றி பெற்றது. 40 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் முடிவுகள் வருமாறு: அண்ணா தி.மு.க. 19; இந்திரா காங்கிர 14; இந்திய கம்யூனிட் கட்சி 3; அமைப்பு காங்கி 3; தி.மு.க. 1; இந்திரா காந்தி–அ.தி.மு.க.–வலது கம்யூனிட் கூட்டணி 50 இடங்களில் 36 இடங்களைக் கைப்பற்றியது. தி.மு.க. கூட்டணிக்கு 4 இடங்கள் மட்டுமே கிடைத்தன. [illegible] தி.மு.க.வை தமிழக வாக்காளர்கள் நிராகரித்துவிட்டனர். தி.மு.க. மத்தியில் ஜனதா கட்சியுடன் கூட்டு சேர்ந்ததும் இத்தோல்விக்கு முக்கிய காரணமாகக் கருதப்பட்டது. 1977 ஏப்ரல் 15 ஆம் தேதி நெடுஞ்செழியன் தி.மு.க.வை விட்டு வெளியேறி மக்கள் திமுக என்ற தனிக்கட்சியை ஆரம்பித்தார்!



### 29.2.3 சட்டப் பேரவைத் தேர்தல், 1977

இத்தேர்தல் பல்வண்ணக் காட்சிக் கருவியில் (Kalaidoscopic) ஏற்படும் மாற்றம் போல் இருந்தது. பல மாற்றங்கள்; திருப்பங்கள். கொள்கையைப் புறம் தள்ளிவிட்டு பதவியை மையப்படுத்தியதால் ஏற்பட்ட விளைவுகள். நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கவுடன் அணி சேர்ந்திருந்த ஜனதா கட்சி உறவை முறித்துக் கொண்டு தனித்துப் போட்டியிட்டது. அதேபோன்று, தி.மு.க அணியிலிருந்த மார்க்சிட் கம்யூனிட் கட்சி அ.தி.மு.க பக்கம் சென்றது. அக்கட்சியோடு இந்திய யூனியன் முலீம் லீகும் அதிமுகவுடன் தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டது. இவற்றின் விளைவாக 1977 சட்டப் பேரவைத் தேர்தல் நான்கு முனைப் போட்டியை சந்தித்தது: 1) அதிமுக; 2) திமுக; 3) காங்கிர ; 4) ஜனதா. இதற்கிடையே தமிழக அரசியலைக் கலக்கிக் கொண்டிருந்த மூன்று பெருந் தலைவர்கள் இறந்துவிட்டதால் குழப்பம் குறைவாக இருந்தது: 1) ராஜாஜி (1972 டிசம்பர் 25); 2) ஈ.வெ.ரா.பெரியார் (1973 டிசம்பர் 24); 3) காமராசர் (1975, அக்.2); மேலும், இத்தேர்தலில் உசிலம்பட்டி தொகுதியில் பி.கே.மூக்கையா தேவர் போட்டியிட்டதால் அதிமுக அவருக்கு எதிராக வேட்பாளரை நிறுத்தவில்லை. அதேபோன்று அக்கட்சி வாணியம்பாடி தொகுதியில் இந்திய யூனியன் முலீம் லீக் வேட்பாளரை ஆதரித்தது. சட்டப் பேரவைத் தேர்தல் 1977 ஜூன் 12, 14 தேதிகளில் நடைபெற்றது.

### 29.2.4 தேர்தல் முடிவுகள்

ஆர்வத்தோடு எதிர்பார்க்கப்பட்ட தமிழ்நாட்டு 1977 சட்டப் பேரவை தேர்தல் முடிவுகள் வருமாறு:

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | மாற்றம் % |
|---|---|---|---|
| அதிமுக | 200 | 130 | 30.37 |
| திமுக | 230 | 48 | 24.89 |
| இந்திரா காங்கிர | 198 | 27 | 17.51 |
| ஜனதா | 233 | 10 | 16.66 |
| மார்க்சிட் கம்யூனிட் கட்சி | 20 | 12 | 2.79 |
| இந்திய கம்யூனிட் கட்சி | 32 | 5 | 2.91 |
| முலீம் லீக் | | 1 | |
| பார்வர்டு பிளாக் | | 1 | |

நாடாளுமன்றத் தேர்தலில் இந்திய அளவில் ஆட்சியைப் பிடித்த ஜனதா கட்சி தமிழ்நாட்டு சட்டப் பேரவைத் தேர்தலில் 233 இடங்களில் போட்டியிட்டு 10 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்று 120 இடங்களில் டெபாசிட் இழந்தது! தமிழ் மக்கள் அக்கட்சியை நிராகரித்தனர். அதேபோன்று சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் அதிமுகவுடன் கூட்டணி வைத்து 14 இடங்களைப் பெற்ற இந்திரா காங்கிரஸ் சட்டப் பேரவைத் தேர்தலில் அதே கூட்டணியில் போட்டியிட்டு 48 இடங்களைக் கைப்பற்றியது. சதவிகித வாக்குகளை வைத்துப் பார்த்தால் திமுகவும் (24.89%), ஜனதா கட்சியும் (16.66%) இணைந்து இத்தேர்தலில் போட்டியிட்டிருந்தால் எம்.ஜி.ஆர் இத்தேர்தலில் வெற்றி கண்டிருக்க முடியாது! சந்தர்ப்பவாத தேர்தல் அரசியல் கூட்டணி பற்றிய தவறான முடிவால் ஆட்சியைக் கைப்பற்றும் வாய்ப்பு முடிவாகிறது! இந்த சட்டப் பேரவைத் தேர்தல் முடிவுகள் எம்.ஜி.ஆருக்கு சாதகமாக இருந்தமையால் அவர் ஆட்சி அமைத்தார்.

### 29.2.5 வாக்குறுதி

ஆட்சி அமைக்கும் முன் எம்.ஜி.ஆர் தமிழக மக்களுக்கு நன்றி தெரிவித்து சில வாக்குறுதிகளைக் கொடுத்தார்: 1) அமரர் அண்ணாவின் மொழிக் கொள்கை, பொருளாதார, சமுதாய சீர்திருத்தக் கொள்கைகள் பின்பற்றப்படும்; 2) அண்ணா வழி சென்று தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்; 3) கிராமப்புறங்களில் இருந்து நகரங்கள் வரையிலான தமிழ்நாட்டு வளர்ச்சியை வலுப்படுத்தும் வகையில் மத்திய அரசின் ஒத்துழைப்போடு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்; 4) பொருளாதார சமத்துவச் சமுதாயத்தை உருவாக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்; 5) சாதி, மத வேறுபாடின்றி அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நீதி வழங்கப்படும்; 6) ஊழலற்ற, நேர்மையான, திறமையான நிர்வாகம் நடத்தப்படும்.

## 29.3 எம்.ஜி.ஆர் ஆட்சி I, 1977–1980

### 29.3.1 அமைச்சரவை

அதிமுக சார்பில் வெற்றி பெற்ற உறுப்பினர்கள் கூடி சட்டமன்ற அதிமுக தலைவராக எம்.ஜி.ஆரைத் தேர்ந்தெடுத்தனர். 1977 ஜூன் 30 ஆம் தேதி ஆளுநர் பட்வாரி எம்.ஜி.ஆருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அவர் தமிழ்நாட்டு முதலமைச்சர் பொறுப்பேற்றார். எம்.ஜி.ஆரின் அமைச்சரவையில் இடம் பெற்றோர்: நாஞ்சில் மனோகரன் (நிதி); நாராயணசாமி முதலியார் (சட்டம்); எட்மண்ட் (உணவு); பண்ருட்டி ராமச்சந்திரன் (பொதுப்பணி); ஆர்.எம்.வீரப்பன் (செய்தி, மக்கள் தொடர்பு); அரங்கநாயகம் (கல்வி); பெ.சவுந்தரபாண்டியன் (அரிசன நலம்); காளிமுத்து (ஊராட்சி); ராகவானந்தம் (தொழிலாளர் நலம்); பொன்னையன் (போக்குவரத்து); பி.டி.சரசுவதி (சமூக நலம்); ப.குழந்தைசாமி (விவசாயம்); கே.ராஜா முகமது (கைத்தறி); எம்.ஜி.ஆர் பொது நிர்வாகம், இந்திய ஆட்சித்துறை அதிகாரிகள் (IAS, IPS), மாவட்ட வருவாய் துறை, காவல் துறை, தேர்தல், பா போர்ட், மதுவிலக்கு, சுகாதாரம், மருந்து, அறநிலையத்துறை, லஞ்ச ஒழிப்பு, தொழிற்சாலை ஆகிய துறைகளைத் தன்சம் வைத்துக் கொண்டார். ராஜாஜி மண்டபத்தில் பதவி ஏற்பு விழா நடைபெற்றது. அதன்பின் அண்ணா சிலைக்கு மாலையிட்டு "லஞ்சமற்ற, ஊழலற்ற, நிர்வாக தலையீடு இல்லாத ...

... எதிர்ப்புகளை எதிர்த்து நின்று கடமைகளை நிறைவேற்றுவேன் ... இருந்தாலும் ... என்று உணர்ச்சிபூர்வமாக உறுதி அளித்தார்.

### 29.3.2 முதல் சட்டப் பேரவைக் கூட்டம்

எம்.ஜி.ஆர் ஆட்சியின் முதல் சட்டப் பேரவைக் கூட்டம் 1977 ஜூலை 4 ஆம் தேதி நடைபெற்றது. ஆளும் கட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும் எதிர்க் கட்சித் தலைவர் கருணாநிதியும் எதிர் எதிராக அமர்ந்தனர். தற்காலிக சபாநாயகர் ... புதிய உறுப்பினர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இரண்டு நாட்களுக்குப் பின்னர் முனு ஆதி சட்டப்பேரவை சபாநாயகராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### 29.3.3 கல்விச் சீர்திருத்தம்

எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத் துவக்கத்தில் கல்வி வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. கல்லூரிகளில் வழக்கத்தில் இருந்த புதுமுக வகுப்பு (Pre-University Course)க்குப் பதில் மேல்நிலைப் பள்ளிப் படிப்பாக 10+2+3 என்ற கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதாவது 10 ஆம் வகுப்புகள் வரை பள்ளிக் கல்வி, 2 ஆண்டு மேல்நிலைப் பள்ளிக் கல்வி, 3 ஆண்டுகள் கல்லூரி பட்டப் படிப்பு. மதிய உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. ஆசிரியர்களின் பணிக்கான சூழ்நிலைகள் மேம்படுத்தப்பட்டன. சென்னையில் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது (1978). அதன் பின்னர் தஞ்சாவூரில் தமிழ் பல்கலைக் கழகமும் (1981), கோயமுத்தூரில் பாரதியால் பல்கலைக் கழகமும் (1982), கொடைக்கானலில் அன்னை தெரசா பல்கலைக் கழகமும் (1982), அழகப்பா பல்கலைக்கழகமும் (1985) அமைக்கப்பட்டன.

### 29.3.4 தெலுங்கு கங்கைத் திட்டம்

தெலுங்கு கங்கை சென்னைக் குடிநீர்த் திட்டத்துக்கு 1977 ஆம் ஆண்டு ... அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி ஆந்திராவிலுள்ள கிருஷ்ணா நீர் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து பலகட்ட வாய்க்கால்கள் வழியாக, 406 கிமீ தூரத்தைக் கடந்து சோமசைவ நீர்த்தேக்கம், கண்டலேறு நீர்த்தேக்கம், ஊத்துக் கோட்டைக்கு அருகே பூஜ்யம்–புள்ளி (Zero-Point) வழியாக சென்னையில் உள்ள சத்தியமூர்த்தி சாகர் அணை பூண்டி நீர்த்தேக்கத்திற்கு குடிநீர் கொண்டுவரப்படுகிறது. அதன்பின் அங்கிருந்து ...கில், சோழவரம், செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கங்களுக்கு அனுப்பப்பட்டு சென்னை நகருக்கு வினியோகிக்கப்படுகிறது. 1983ல் சென்னைக்குக் கொண்டுவரப்படும் நீர் அளவு மறுஆய்வு செய்து மாற்றப்பட்டது. துவக்கத்தில் பல இடர்ப்பாடுகளை சந்தித்த இத்திட்டம் 2002 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் மறுசீரமைக்கப்பட்டு தற்போது நல்ல நிலையில் செயல்படுகிறது.

## 29.3.5 பெரியார் நூற்றாண்டு விழா, 1978

### எழுத்துச் சீர்திருத்தம்

1978 செப்டம்பர் 18–19 நாட்களில் ஈரோடு நகரில் பெரியார் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் இந்தியத் துணைப் பிரதமர் ஜெகஜீவன் ராம், முதலமைச்சர் எம்.ஜி.ஆர் உள்ளிட்ட பல பிரமுகர்கள் பங்கேற்றனர். இந்த விழாவையொட்டி **1978 அக்டோபர் 19 ஆம் தேதி** பெரியாரின் தமிழ் எழுத்து சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி, சீர்திருத்த எழுத்து வடிவங்கள் அனைத்து அரசு அலுவலகங்களிலும்; கல்வி நிறுவனங்களிலும்; நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களிலும்; தமிழக அரசின் வரம்புக்கு உட்பட்ட வாரியங்கள், கழகங்கள், நிறுவனங்களிலும்; தமிழ் மொழி நாளிதழ்களிலும், மாத வார ஏடுகளிலும்; தமிழ்ப் புத்தகம் வெளியிடுவோரும் சீர்திருத்த தமிழ் எழுத்து வடிவங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று எம்.ஜி.ஆர் அரசு பரிந்துரைத்தது. தமிழக அரசு வெளியீடுகளிலும், அரசிதழ்களிலும் மற்றும் தமிழில் அச்சிடப்படும் அனைத்து வெளியீடுகளிலும் பெரியாரின் எழுத்துச் சீர்திருத்த வடிவங்களே பயன்படுத்தப்பட்டன.

### பெரியார் மாவட்டம்

பெரியாரின் நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக கோவை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, ஈரோட்டைத் தலைநகரமாகக் கொண்டு 'பெரியார் மாவட்டம்' அமைக்கப்பட்டது.

## 29.3.6 நினைவு இல்லம்

காமராசர் சென்னை தியாகராய நகர் திருமலைப் பிள்ளை ரோட்டில் வாழ்ந்த இல்லத்தை மூன்று இலட்சத்து எட்டாயிரம் ரூபாய்க்கு வாங்கி அதைக் **காமராசர் நினைவு இல்லமாக** மாற்றப்பட்டது. கேரள ஆளுநர் ஜோதி அம்மாள் தலைமை தாங்க, எம்.ஜி.ஆர் **1978 அக்டோபர் 19 ஆம் தேதி** திறந்து வைத்தார். இந்த இல்லத்தில் காமராசரின் வாழ்நாளில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கும் புகைப்படங்கள் கொண்ட கண்காட்சியை மத்திய அமைச்சர் பா.ராமச்சந்திரன் திறந்து வைத்தார்.

## 29.3.7 விவசாயிகள் போராட்டம்

எம்.ஜி.ஆர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் விவசாயிகளின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக ஒரு குழுவை அமைத்தார். குழு அமைப்பதால் விவசாயி பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதைத் தள்ளிப் போடலாமேயொழிய தீர்க்க இயலாது. மீன்கட்டணக் குறைப்பு, விவசாயக் கடன் வசூல் தள்ளுபடி, வரி பாக்கிக்காக ஜப்தி செய்யாமை போன்ற கோரிக்கைகளை முன்வைத்துத் தமிழக விவசாயிகள் சங்கத்தினர் 1978 ஏப்ரல் முதல் சங்கத் தலைவர் நாராயணசாமி நாயுடு தலைமையில் போராட்டம் நடத்தினர்.

விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி சமூகமான தீர்வு காண்பதற்குப் பதில் அப்போராட்டத்தை சட்டம் ஒழுங்குப் பிரச்சனையாகக் கருதி போலி தீர்வு காண முற்பட்டது எம்.ஜி.ஆர் அரசு! நாராயணசாமி நாயுடு திண்டுக்கல்லில் கைது செய்யப்பட்டார். கடன் அடைக்காத விவசாயிகளின் பொருட்கள் ஜப்தி, மின்சார விநியோகத் துண்டிப்பு போன்ற கடுமையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது. போராட்டம் தீவிரமடைந்தது. கோவை, திண்டுக்கல், வட ஆர்க்காடு ஒடுக்கத்தூர் போன்ற இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது; சிலர் இறந்தனர்; பலர் காயமடைந்தனர். அரசாங்கம் நீதி விசாரணைக்கு உத்தரவிட்டது. முதலமைச்சர் எம்.ஜி.ஆர். விவசாய சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார் (ஏப்ரல் 24, 25). விவசாயிகள் போராட்டம் கைவிடப்பட்டது. விவசாயிகள் பிரச்சனை தீர்ப்படாமலே நீடித்தது!

## 29.3.8 பிற்படுத்தப்பட்டோருக்கு சலுகை

எம்.ஜி.ஆர் பிற்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டோருக்கு உடனடியாக உதவி செய்ய வேண்டும் என்று விரும்பினார். எனவே, அவரது ஆட்சித் தொடக்கத்திலேயே பிற்பட்ட வகுப்பினர் அரசாங்க சலுகைகளைப் பெற ஆண்டு வருமானம் ஒன்பதாயிரம் ரூபாய் இருந்தால் போதும் என்று 1979 ஜூலை 2 ஆம் தேதி அறிவித்தார். பின்னர், இந்த வருமான வரம்பையும் விலக்கி விட்டார். அதுமட்டுமல்ல. அதற்கும்மேல் பல படிகள் சென்று பிற்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டை 33 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக உயர்த்தினார். இத்துணிகர நடவடிக்கையின் மூலம் எம்.ஜி.ஆர் பிற்பட்ட வகுப்பாரின் பேராதரவைப் பெற்றார்.

## 29.3.9 மதுவிலக்கு

இந்தியா முழுவதும் பூரண மதுவிலக்கு வரவேண்டும் என்பது காந்தியடிகளின் கனவுத் திட்டமாகும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் வழிகாட்டு விதிகளில் (Directive Principles) போதைப் பொருட்களை தடை செய்தல் ஒரு நெறி செய் நியதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்திய விடுதலைக்குப் பின் தமிழ் நாட்டை ஆட்சி செய்த காங்கிர முதலமைச்சர்கள் மதுவிலக்குத் திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தினர். அண்ணா ஆட்சிப் பொறுப்பேற்றபின் மதுவிலக்கு காங்கிர திட்டம் என்று கைவிடவில்லை. இதனால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை, ஏழை எளியோரின் குடும்ப நிம்மதியே மேல் என்று கருதி உறுதியுடன் மதுவிலக்கை அரசின் கொள்கையாகக் கொண்டு செயல்படுத்தினார். ஆனால் கருணாநிதி ஆட்சிப் பொறுப்பேற்றபின் நிதி நிலையைக் காரணம் காட்டி மதுவிலக்கை ஒத்தி வைக்கிறேன் என்று கூறி கைவிட்டார்.

எம்.ஜி.ஆர் தி.மு.கவை விட்டு வெளியேறி தனிக் கட்சியைத் துவக்கிய போது அவர் கருணாநிதி மீது சுமத்திய குற்றச்சாட்டுகளில் மதுவிலக்கை நீக்கியதும் ஒன்றாகும். கருணாநிதி மதுவிலக்கை ரத்து செய்த போது அதை எதிர்க்காத எம்.ஜி.ஆர், தி.மு.கவை விட்டு வெளியேறியபோது அதைக் கடுமையாக எதிர்த்தார். கோவையில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுவில் மதுவிலக்கு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசி, அத்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற ஆதரவு அளித்தவர் எம்.ஜி.ஆர்!

எம்.ஜி.ஆர் ஆட்சிப் பொறுப்பேற்றபின் பூரண மதுவிலக்கை முழு மூச்சுடன் தமிழ் நாட்டில் நடைமுறைப்படுத்துவார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந்த எதிர்பார்ப்புக்கு எதிராக 30 வயதுக்கு மேற்பட்டவாகள் 25 ரூபாய் கட்டணம் செலுத்தி தாசில்தார் அலுவலகத்தில் மது பெர்மிட் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டது!! தேர்தலுக்கு முன் இருந்த இலட்சியமும், கொள்கையும், வாக்குறுதியும் ஆட்சிக்கு வந்தபின் நிறைவேற்ற முடியாது என்ற கசப்பான உண்மையை உணர்ந்து கொண்டார் எம்.ஜி.ஆர்.

### 29.3.10 இணைப்பு முயற்சி

மொரார்ஜிக்குப் பின் காங்கிர ஆதரவுடன் சரண்சிங் பிரதமரானார். விரைவிலேயே சரண்சிங்குக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொண்டதால் காங்கிர அரசு கவிழ்ந்தது. அவரது அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த அதிமுக அமைச்சர்களான பாபா பழனூர், சத்தியவாணிமுத்து ஆகியோர் பதவி இழந்தனர். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, 1980இல் அதற்கான தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அத்தகைய சூழ்நிலையில் ஜனதா கட்சி இந்திரா காங்கிரசுக்கு எதிராக திமுகவையும் அதிமுகவையும் இணைக்க முயன்றது. ஜனதா கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சர் பிஜுபட்நாயக் இந்த இணைப்பு முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். அவரது முயற்சியின் விளைவாக இரு துருவங்களாக இருந்த எம்.ஜி.ஆரும் கருணாநிதியும் 1979 செப்டம்பர் 13 ஆம் தேதி சேப்பாக்கம் அரசினர் விடுதியில் சந்தித்துப் பேசினர். விளைவு? மலையை எதிர்பார்த்தவர்களுக்கு மலை எலிகூட கிடைக்கவில்லை!

### 29.3.11 கிராமக் கர்ணம் முறை ஒழிப்பு

எம்.ஜி.ஆர் தமிழ்நாட்டு முதலமைச்சர் பொறுப்பு ஏற்றவுடன் அவர் எடுத்த முக்கிய முடிவுகளில் ஒன்று பாரம்பரியமாக இருந்து வந்த கிராம ஊழிய முறை நீக்கப்பட்டதேயாகும். கர்ணம், கிராம முன்சீப் போன்ற பரம்பரைப் பதவிகள் ஒழிக்கப்பட்டன. அவர்களுக்குப் பதிலாக கிராம நிர்வாக அதிகாரிகள் (VIllage Administratie Officers-VAOs) நியமிக்கப்பட்டனர். இதன் மூலம் கிராம மக்கள் பரம்பரைக் கொடுமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

### 29.3.12 தலைநகர் மாற்றம்

எம்.ஜி.ஆரின் முதல் ஆட்சிக் காலத்தின் போது (1977–1980) தமிழ் நாட்டின் தலைநகரை சென்னையிலிருந்து திருச்சிக்கு மாற்றுவது பற்றிப் பரிசீலிக்கப்பட்டது. எம்.ஜி.ஆரின் இந்த யோசனை மக்களிடையே ஆர்வம் கலந்த பரபரப்பையும், அரசியல் வாதிகளிடையே விவாதப் பொருளாகவும், பத்திரிகைகளில் விமரிசனத் திட்டமாகவும் இருந்தது. இறுதியில் இத்திட்டம் நடைமுறை சாத்தியமற்றது என்று கைவிடப்பட்டது. எம்.ஜி.ஆரின் யோசனை குறைப் பிரவசமாயிற்று!

### 29.3.13 எம்.ஜி.ஆர் 'பார்முலா'

1980 ஆம் ஆண்டு நடைபெற்ற திருப்பத்தூர் நாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தலின் போது ஒரு விதிமுறையை (Formula) வகுத்துக் கொடுத்தார். அதாவது, ஒரு தொகுதியின் மக்கள் பிரதிநிதி இறந்து விட்டால் அந்த இடைத்தேர்தலை அப்பிரதிநிதி சார்ந்த கட்சிக்கே விட்டுக் கொடுக்க வேண்டும். அதன்படி திருப்பத்தூர் இடைத்தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட இந்திரா காங்கிர வேட்பாளரை எம்.ஜி.ஆர் வலிய சென்று ஆதரித்தார்; அத்தொகுதிக்குச் சென்று பிரச்சாரம் செய்தார். அதற்குக் காரணம் அப்போது தி.மு.க. பக்கம் இருந்த பிரதமர் இந்திரா காந்தியைத் தன் பக்கம் கொண்டு வருவதேயாகும். அத்தொகுதியில் அவரது கூட்டணிக் கட்சியான இந்திய கம்யூனிட் கட்சி வேட்பாளரைப் பற்றி எம்.ஜி.ஆர். கவலைப்படவில்லை! காங்கிர வேட்பாளர் வெற்றி பெற்றார்.

அதன்பின் பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதிக்கு இடைத்தேர்தல் வந்த போது எம்.ஜி.ஆர் திருப்பத்தூர் பார்முலாவைப் பின்பற்றவில்லை. ஏனெனில் அதற்கு முன் போட்டியிட்டவர் தி.மு.க. வேட்பாளர்! அத்தொகுதிக்கு அதிமுக வேட்பாளர் நிறுத்தப் பட்டார். அவரது வேட்பாளர் வெற்றி பெற்றார். தனித்துப் போட்டியிட்ட இந்திரா காங்கிர டெபாசிட் தொகையை இழந்தார்!

## 29.4 நாடாளுமன்றத் தேர்தல், 1980

### 29.4.1 தேர்தல்

இந்திரா காந்தியின் தலைமையிலான காங்கிரசும், கருணாநிதியின் தலைமையிலான தி.மு.கவும் ஓரணி சேர்ந்து 1980 ஜனவரி 3, 6 தேதிகளில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலை சந்தித்தன. எம்.ஜி.ஆரின் அதிமுக ஜனதா மற்றும் இரு கம்யூனி டு கட்சிகளுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டது. தேர்தல் முடிவு எம்.ஜி.ஆருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. ஏனெனில், 22 இடங்களில் போட்டியிட்ட காங்கிர 20 இடங்களிலும், 16 இடங்களில் போட்டியிட்ட தி.மு.க. 16 இடங்களிலும் வெற்றி பெற்றன. மு லிம் லீக் வேலூர் தொகுதியில் வெற்றி பெற்றது. 24 இடங்களில் போட்டியிட்ட அதிமுக சிவகாசி, கோபிச்செட்டிப்பாளையம் ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது!! எம்.ஜி.ஆரின் கவர்ச்சி இத்தேர்தலில் எடுபடவில்லை. ஜனதா கட்சியும் இரு கம்யூனி டுகளும் ஒரு இடத்தில்கூட வெற்றி பெறவில்லை!

### 29.4.2 ஆட்சிக் கலைப்பு

இந்திரா காந்தி இந்நாடாளுமன்றத் தேர்தலில் 525 தொகுதிகளில் 351 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தார் (1980 ஜனவரி 14). இந்திரா காந்தி ஆட்சி அமைத்த அடுத்த மாதமே எம்.ஜி.ஆரின் மீதான ஊழல் புகார் பட்டியலை கருணாநிதி மாநில ஆளுநரிடம் கொடுத்தார். ஜனதா ஆட்சியை முன்மாதிரியாகக் கொண்டு பிரதமர் இந்திரா காந்தி காங்கிர அல்லாத கட்சிகள் ஆட்சி நடத்திய மாநில அரசாங்கங்களைக் கலைத்த போது தமிழ்நாட்டில் ஆட்சி செய்து கொண்டிருந்த எம்.ஜி.ஆர். அரசாங்கத்தையும் கலைத்துவிட்டார் (1980 பிப்ரவரி 17)! கருணாநிதி அரசை கலைத்த அதே இந்திரா காந்தி எம்.ஜி.ஆர் அரசாங்கத்தையும் கலைத்தார்! எம்.ஜி.ஆர் ஆட்சிக் கலைப்புக்குப்பின் டெல்லியிலிருந்து திரும்பிய கருணாநிதிக்குக் கோலாகல வரவேற்பு அளித்தனர். குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட்ட தமிழ்நாட்டை ஆளுநர் பட்வாரி, டி.என்.லட்சுமி நாராயணனை ஆலோசகராகக் கொண்டு

பிறப்பித்தார். ஆளுநர் எம்.ஜி.ஆர் பிறப்பித்த மது பெர்மிட் உத்தரவுக்குத் தடை விதித்தார் அதாவது, பெர்மிட்டுக்கு மது வழங்கும் முறை நிறுத்தப்பட்டது.

## 29.5 சட்டப் பேரவைத் தேர்தல், 1980

### 29.5.1 இரு பெரும் அணிகள்

#### தி.மு.க அணி

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து நான்கு மாதங்களில் தமிழ்நாடு சட்டப் பேரவைக்கான தேர்தல் 1980 மே 28, 31 தேதிகளில் நடைபெற்றது. இத்தேர்தலை சந்திக்க இரு அணிகள் அமைக்கப்பட்டன. நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெற்ற தி.மு.க. தலைமையில் இந்திரா காங்கிர , மு லீம் லீக், பசும்பொன் தேவர் கட்சி, உழைப்பாளர் கட்சி, தேசிய பார்வார்டு பிளாக், சக்திதாசன் குடியரசு கட்சி, கிறித்துவ முன்னணி ஆகிய கட்சிகள் அணி சேர்ந்தன.

#### அ.தி.மு.க. அணி

நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வி அடைந்த அதிமுக தலைமையில் இரண்டு கம்யூனி ட் கட்சிகள், காந்தி காமராஜ் தேசிய காங்கிர , தமிழ்நாடு காமராசர் காங்கிர , பார்வர்டு பிளாக், அர்சு காங்கிர , மக்கள் கட்சி, தமிழ்நாடு மு லீம் லீக், கிறித்துவ ஜனநாயக முன்னணி, குடியரசு (கவாய்) கட்சி ஆகியவை அணிவகுத்தன. இரு அணிகளாலும் கைவிடப்பட்ட ஜனதா கட்சி 95 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்டன.

### 29.5.2 தேர்தல் பிரச்சாரம்

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற களிப்பு வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த தி.மு.க. அதன் தேர்தல் பிரச்சாரத்தை முழு வீச்சில் முடுக்கிவிட்டது. அதோடு புதிதாகக் கூட்டு சேர்ந்த இரண்டு கம்யூனி ட் கட்சிகளும் நெருக்கடி நிலையை ஆதரித்தது தவறு என்று பேசத் துவங்கினர். அதிக இடங்களில் வெற்றி பெரும் கட்சிதான் முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கோரினர் காங்கிரசார்! இவற்றுக்கிடையே தி.மு.க கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை அள்ளி வீசியது. அனைத்துக்கும் சிகரம் வைத்தாற்போல் "எம்.ஜி.ஆர் இரண்டரை ஆண்டு காலம் நடத்தியது ஆட்சியல்ல; சினிமாக் காட்சியே" என்று கருணாநிதி பிரச்சாரம் செய்தார்.

தேர்தல் பிரச்சாரத்தின் போது அதிமுக விவசாயக் கடன் ரத்து, 5 கிலோ அரிசி வாங்கும் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளோருக்கு 1 கிலோ அரிசி இலவசம் போன்ற வாக்குறுதிகளைக் கொடுத்தது. தமிழ்நாட்டு முதலமைச்சரை மக்களே முடிவு செய்யட்டும் என்றார் எம்.ஜி.ஆர். அதுமட்டுமல்ல. சர்க்காரியா கமிஷன் விசாரணையிலிருந்து தப்பிப்பதற்காகவே கருணாநிதி இந்திரா காந்தியுடன் கூட்டணி சேர்ந்தார் என்று பிரச்சாரம் செய்தார்.



### 29.5.3 தேர்தல் முடிவுகள்

1980 ஜூன் முதல் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டன: அதிமுக கூட்டணி: அதிமுக 129, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் 11, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 10; காந்தி காமராஜ் தேசிய காங்கிர (குமரி அனந்தன்) 6, தமிழ்நாடு காமராசர் காங்கிர (நெடுமாறன்) 3; பார்வர்டு பிளாக் 3, மக்கள் கட்சி 1 (மொத்தம் 161) திமுக கூட்டணி: தி.மு.க 38; இந்திரா காங்கிர 30, ஜனதா கட்சி 2, மு லீம் லீக் 1 (மொத்தம் 71) சட்டப் பேரவைக்கான மொத்த இடங்கள் 234. அதிமுக 177 இடங்களில் போட்டியிட்டு 129 இடங்களைக் கைப்பற்றியது (38.74%). தி.மு.க. 114 இடங்களில் போட்டியிட்டு 38 இடங்களில் வெற்றி பெற்றது (22.54%). இந்திரா காங்கிர 112 இடங்களில் போட்டியிட்டு 30 இடங்களைப் பெற்றது.

## 29.6 எம்.ஜி.ஆர் ஆட்சி II, 1980–1984

### 29.6.1 மீண்டும் முதல்வர்

1980 பிப்ரவரி 17 ஆம் தேதி எம்.ஜி.ஆர் அமைச்சரவை கலைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல் செய்யப்பட்டது. 1980 மே மாதம் நடத்தப்பட்ட சட்டப் பேரவையில் வரலாறு காணாத வெற்றி பெற்ற எம்.ஜி.ஆர் 1980 ஜூன் 9 ஆம் தேதி மீண்டும் தமிழக முதல்வர் பொறுப்பேற்றார். ஆளுநர் பட்வாரி எம்.ஜி.ஆருக்கு உறுதி மொழியையும், இரகசிய பிரமாணத்தையும் செய்து வைத்தார்.

### 29.6.2 அமைச்சரவை

இரண்டாவது முறையாக முதலமைச்சரான எம்.ஜி.ஆரின் அமைச்சரவையில் இடம் பெற்றோர்: நெடுஞ்செழியன் (நிதி); பண்ருட்டி ராமச்சந்திரன் (மின்சாரம்); கே.ஏ.கிருஷ்ணசாமி (கிராமத் தொழில்); எ .டி.சோமசுந்தரம் (வருவாய் துறை); ஆர்.எம்.வீரப்பன் (தகவல்); அரங்கநாயகம் (கல்வி); காளிமுத்து (விவசாயம்); பொன்னையன் (சட்டம்); குழந்தைவேலு (ஊராட்சி); ராகவானந்தம் (தொழிலாளர் நலம்); டாக்டர் ஹன்டே (சுகாதாரம்); ராஜா முகமது (கூட்டுறவு); எ .முத்துச்சாமி (போக்குவரத்து); திருநாவுக்கரசு (பெருந்தொழில்கள்); எ .என்.ராஜேந்திரன் (கைத்தறி); விஜயசாரதி (அரிசன நலம்); கோமதி (சமூக நலம்).

### 29.6.3 உறுதிமொழிகள்

எம்.ஜி.ஆர் முதலமைச்சர் பொறுப்பேற்றவுடன் அண்ணா சாலைக்குச் சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து, சக அமைச்சர்கள் மற்றும் அங்கு கூடியிருந்த மக்கள் வெள்ளத்துக்கு முன் பின்வரும் உறுதிமொழிகளை அளித்தார்: 1) தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்; 2) சாதி வேறுபாடின்றி வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்கள் அனைவரின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும்; 3) தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரின் நலன்களைக் காப்பாற்ற சிறப்புக் கவனம் அளிக்கப்படும்; 4) அனைத்து சிறுபான்மையினரின் உரிமைகளும், நலன்களும் பாதுகாக்கப்படும்; 5) உழைக்கும் வர்க்கத்தினரான

விவசாயிகள், கைத்தறி நெசவாளர்கள், மீனவர்கள், தொழிலாளிகள், பாட்டாளிகள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், காவலர்கள் ஆகியோரின் உரிமைகளும், நலன்களும் பேணப்படும். இந்த உறுதிமொழிகள் எம்.ஜி.ஆர் ஆட்சியின் வழிகாட்டு விதிகளாகும்; ஆட்சி நெறிகளாகும்.

## 29.6.4 கொள்கைகள்

அண்ணாவின் கொள்கைகள் தான் எம்.ஜி.ஆரின் கொள்கைகள்: 1) தமிழ் மொழி வளர்ச்சி; 2) தமிழர் உணர்வைப் பேணல்; 3) தமிழ் நாட்டின் மேம்பாடு; 4) மாநில உரிமைகள்; 5) ஏழை–எளிய மக்களின் ஏற்றம்; 6) ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற ஒரே கடவுள் கொள்கை; 7) சாதி சமய வேறுபாடின்றி மக்கள் அனைவருக்கும் வாழ்வளித்தல். இக்கொள்கைகளை எம்.ஜி.ஆர் ஆட்சித் திட்டங்களுக்கான அடிப்படையாகும்.

## 29.6.5 உலகத் தமிழ் மாநாடு

எம்.ஜி.ஆரின் வேண்டுகோளை ஏற்று ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு 1981 இல் மதுரையில் நடைபெற்றது. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் ஆய்வரங்கம்; வேறு இடங்களில் பொது மக்களுக்கான நிகழ்ச்சிகள்; அலங்கார அணிவகுப்பு; கவிஞர் கண்ணதாசன் தலைமையில் கவியரங்கம்; பாவாணரின் சொல்லாய்வு என இம்மாநாடு ஆடம்பரம், ஆரவாரம், சுயவிளம்பரம் எதுவுமின்றி சிறப்பாக நடைபெற்றது. தமிழக அரசு உலகத் தமிழ்ச் சங்கத்துக்கென 20 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி 1986 இல் கால்கோள் விழாவும் நடத்தப்பட்டது. இந்த மாநாட்டில் தான் எம்.ஜி.ஆர் அவரது முன்னாள் கதாநாயகி ஜெயலலிதாவின் நாட்டிய நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார். அதன் மூலம் "எம்.ஜி.ஆர்–ஜெயலலிதா நட்பு புதுப்பிக்கப்பட அந்நிகழ்ச்சி பயன்பட்டது" என்று குறிப்பிட்டுள்ளார் தி.சிகாமணி.

## 29.6.6 மதிய உணவுத் திட்டம்

நீதிக்கட்சியால் அறிமுகப்படுத்தப்பட்டு, முதலமைச்சர் காமராசரால் விரிவுபடுத்தப்பட்டு, முதலமைச்சர் கருணாநிதியால் பின்பற்றப்பட்டு, முதலமைச்சர் எம்.ஜி.ஆரால் மதிப்பு கூட்டப்பட்டு சத்துணவுத் திட்டமாக மாற்றப்பட்டது. இது எம்.ஜி.ஆரின் தனித்திறன் மிக்கத் திட்டமாகும். இத்திட்டம் 1982 ஜூலை முதல் தேதி நடைமுறைப்படுத்தப்பட்டது. ஏழைப் பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் சத்துணவு வழங்குவதே இத்திட்டத்தின் சிறப்பாகும். 5 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் பள்ளிகளிலும், 2 முதல் 5 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு நல்வாழ்வு நிலையங்களிலும் சத்துணவு வழங்கப்பட்டது. இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுவதற்காக முதலமைச்சரின் தலைமையில் உயர் மட்டக்குழு அமைக்கப்பட்டது. சத்துணவுத் திட்டத்துக்கு நன்கொடை அளித்தோருக்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. சத்துணவுத் திட்டத்துக்கென முதலமைச்சர் இலவச சத்துணவுத் திட்ட நிதி ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் செயல்பாட்டைக் கவனிக்கத் தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். இத்திட்டத்துக்கென தமிழக வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.100 கோடி ஒதுக்கப்பட்டது.



சத்துணவு வழங்குவதற்காக தமிழ்நாடு முழுவதும் 17,000 சமூக நல மையங்கள் அமைக்கப்பட்டன. 60,000,00 குழந்தைகளுக்கு சத்துணவு கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது! நிதி ஆதார உத்திரவாதத்துடன், உட்கட்டுமான வசதிகளோடு தீர்க்கமாக நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டமாகும். எம்.ஜி.ஆரின் சத்துணவுத் திட்டம் பாரதப் பிரதமர் இந்திராகாந்தியின் பாராட்டைப் பெற்றது. பிற மாநிலங்களுக்கும் முன்னோடித் திட்டமாக அமைந்தது. மதிய உணவுத் திட்டத்துக்காக முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்கு நோபல் பரிசு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறினார் ஜெயலலிதா!

## 29.6.7 விவசாய வளர்ச்சி

எம்.ஜி.ஆர் விவசாயத் தொழிலாளர்களின் பிரச்சனைகளைப் பற்றிய உண்மை நிலையைக் கண்டறிய ஒரு உயர்நிலைக் குழுவை அமைத்தார். விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. விவசாயிகளின் மின் கட்டணக் குறைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது (1982). பின்னர் உழவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது!

## 29.6.8 உணவு நெருக்கடி

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்து, குறிப்பாக இரண்டாம் உலகப் போர் துவங்கியதிலிருந்து உணவுப் பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. பொது விநியோகத் திட்டத்தின் மூலம் நிலைமை சமாளிக்கப்பட்டு வந்தது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை காங்கிர முதலமைச்சர்கள் உணவுப் பஞ்ச நெருக்கடியை சமாளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். 1967 ஆட்சி மாற்றத்துக்குப் பின்னரும் உணவு நெருக்கடி நீடித்தது. வறட்சியின் விளைவாக ஏற்பட்ட இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக எம்.ஜி.ஆர் மத்திய அரசாங்கத்தின் உதவியை நாடினார். ஆனால் மத்திய அரசு தமிழ் அரசாங்கம் மத்திய உணவுத் தொகுப்புக்கு தன் பங்கைக் கொடுக்கவில்லை என்ற காரணத்தைக் கூறி உதவி செய்யவில்லை. இப்பிரச்சனையை மக்கள் மன்றத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தோடு எம்.ஜி.ஆர் 1983 பிப்ரவரி 9 ஆம் தேதி சென்னை கடற்கரையில் அண்ணா சமாதிக்கு முன் உண்ணாவிரதத்தைத் துவக்கினார். எம்.ஜி.ஆரின் உண்ணாவிரதம் இந்தியாவின் கவனத்தைக் கவர்ந்தது. மத்திய உணவு அமைச்சர் ராவ் பிரேந்திர சிங் அரிசிப் பிரச்சனையைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று உறுதி அளித்ததன் பேரில் எம்.ஜி.ஆர் 7 மணி நேர உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார். இந்த உண்ணாவிரதம் தமிழ்நாட்டின் உணவு நெருக்கடியை மத்திய அரசாங்கத்தின் அவசர கவனத்துக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கையேயன்றி மத்திய அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் அல்ல என்பதைத் தெளிவுபடுத்தினார்.

## 29.6.9 இலங்கை தமிழர் பிரச்சனை

இலங்கை ஈழத்துக்குச் சளி பிடித்தால் தமிழ் நாட்டுக்குத் தும்மல் வரும். 1983 ஜூலை 24 ஆம் தேதி தனி ஈழம் கேட்டுப் போராடிய விடுதலைப் புலிகளுக்கும் (LTTE) இலங்கை ராணுவத்தினருக்குமிடையே யாழ்ப்பாணத்தின் வடபகுதியில் பயங்கர மோதல் ஏற்பட்டது. இந்நிகழ்ச்சி தமிழ் நாட்டில் பெரிய அரசியல் புயலை ஏற்படுத்தியது

முதலமைச்சர் எம்.ஜி.ஆர் இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்கு அனுப்பிய தந்தியில் இலங்கையில் உள்ள அப்பாவித் தமிழர்களைக் காப்பாற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இந்தப் பிரச்சனையை ஐ.நா சபையில் எழுப்ப வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அதுமட்டுமல்ல, அரசு சார்பில் தமிழ் நாட்டில் பூரண பந்த் (கடையடைப்பு) நடத்தப்பட்டது (ஆக 2).

## 29.6.10 ஜெயலலிதாவின் எழுச்சி

திரை உலகில் பெரும் புகழ் பெற்ற எம்.ஜி.ஆருடன் பல படங்களில் கதாநாயகியாக நடித்த, திறமைமிக்க ஜெயலலிதா 1982 ஜூலை 18 ஆம் தேதி அதிமுகவில் சேர்ந்து அவரது அரசியல் வாழ்க்கையைத் துவக்கினார். அடுத்த ஆண்டே அவர் அதிமுகவின் கொள்கை பரப்புச் செயலாளர் ஆனார் (1983, ஜனவரி 28). எம்.ஜி.ஆரின் விருப்பத் திட்டமான சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழுவில் இடம் பெற்றார். 1984 மார்ச் 29 ஆம் தேதி நாடாளுமன்ற மேல்சபைக்கு நடைபெற்ற தேர்தலில் எம்.ஜி.ஆரின் ஆதரவோடும் ஆசியோடும் தேர்ந்தெடுக்கப்பட்டார் ஜெயலலிதாவின் அரசியல் எழுச்சி பிரமிக்கத் தக்கது.

## 29.6.11 மேலவை உறுப்பினர்

1984 மார்ச் 30 ஆம் தேதி தமிழ்நாடு மேலவை உறுப்பினர் 7 பேரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது. 7 இடங்களுக்கு 8 பேர் போட்டியிட்டதால் போட்டி அவசியமாயிற்று. இப்போட்டியில் கருணாநிதி வெற்றி பெற்றார். இலங்கை தமிழர் பிரச்சனைக்காக சட்டப் பேரவை உறுப்பினர் பதவியைத் துறந்த கருணாநிதி முதல் முறையாக மேலவை உறுப்பினரானார். கருணாநிதி 1957லிருந்து தொடர்ந்து சட்டப் பேரவை உறுப்பினராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஒரே ஆண்டில் (1984) ஜெயலலிதா நாடாளுமன்ற உறுப்பினராகவும், கருணாநிதி சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பதவி ஏற்றனர்! இது ஒரு தற்செயல் நிகழ்வேயாகும்.

## 29.6.12 அனைத்துக்கட்சி அணிவகுப்பு

1984 மே 5 ஆம் தேதி எம்.ஜி.ஆர் தலைமையில் அனைத்துக் கட்சி தலைவர்கள் குழு டெல்லி சென்று இலங்கைத் தமிழர் பிரச்சனை பற்றி பிரதமர் இந்திரா காந்தியை சந்தித்தது. இக்குழுவில் அமைச்சர் நெடுஞ்செழியன் (அதிமுக), ஹாஜா ஷெரீப் (இந்திரா காங்கிர ), எம்.கல்யாணசுந்தரம் (இந்திய கம்யூனி ட் கட்சி), முகமது இ மாயில் (ஜனதா), குமரி ஆனந்தன் (கா.கா.தேசிய காங்கிர ), ஆண்டித் தேவர் (பார்வர்டு பிளாக்), செங்கம் ஜப்பார் (முற்போக்கு மு லீம் லீக்), ஜி.மூர்த்தி (குடியரசு கட்சி), சட்டநாத கரையாளர் (மக்கள் கட்சி). இந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் குழுவில் பிரதான கட்சிகளான தி.மு.கவும், மார்க்சி ட் கம்யூனி ட் கட்சியும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது!

டெல்லி சென்ற அனைத்துக் கட்சித் தலவர்கள் குழு பிரதமர் இந்திரா காந்தியை சந்தித்து, மத்திய அரசு தலையிட்டு இலங்கைத் தமிழர்களைக் காக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி, மனு ஒன்றைக் கொடுத்தது. டெல்லியிலிருந்து



திரும்பிய எம்.ஜி.ஆரும் அவரது அமைச்சர்களும் இலங்கையில் தமிழர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து கருப்பு சட்டை அணிந்தனர்!

## 29.6.13 திடீர்த் திருப்பம்

எவரும் எதிர்பாராத நிலையில் 1984 அக்டோபர் 5 ஆம் தேதி எம்.ஜி.ஆருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டதால் சென்னை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட செய்தி கேட்டு மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். தமிழ்நாட்டு அரசியலில் திடீர்த் திருப்பம் ஏற்பட்டது. தமிழக அரசியல் கேள்விக்குறியாயிற்று. மருத்துவர்களின் ஆலோசனைக்குப் பின்னர் 1984 நவம்பர் 5 ஆம் தேதி எம்.ஜி.ஆர் தனி விமானம் மூலம் அமெரிக்கா கொண்டு செல்லப்பட்டு புரூக்ளின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு மாற்று சிறுநீரக அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டது (டிசம்பர் 19).

## 29.7 பொதுத் தேர்தல், 1984

## 29.7.1 இடைத் தேர்தல்

இந்திரா காந்திக்குப் பின் பிரதமரான ராஜீவ் காந்தி நாடாளுமன்றத்தை முன்கூட்டியே கலைத்துவிட்டு அதற்கான தேர்தலை நடத்தத் தீர்மானித்தார். 1984 நவம்பர் 13 ஆம் தேதி அதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. டிசம்பர் 24, 27 தேதிகளில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது. நாடாளுமன்றத் தேர்தலுடன் தமிழ்நாட்டு சட்டப் பேரவைத் தேர்தலையும் நடத்துவதென்று அதிமுக தலைவர்கள் முடிவு செய்தனர்! அந்த முடிவுக்கு அமெரிக்காவில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த எம்.ஜி.ஆரிடம் அனுமதி பெறப்பட்டது.

## 29.7.2 தேர்தல் கூட்டணி

1984 எட்டாவது பொதுத் தேர்தலை சந்திக்க இரு பெரும் கூட்டணிகள் அமைக்கப்பட்டன. அதிமுக கூட்டணியில் இடம் பெற்ற கட்சிகள்: 1) அதிமுக, 2) இந்திரா காங்கிர ; 3) காந்தி காமராஜ் தேசிய காங்கிர ; 4) பார்வர்டு பிளாக்; 5) குடியரசு (கோபர் கடே பிரிவு). தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்ற கட்சிகள்: 1) தி.மு.க; 2) மார்க்சி ட் கம்யூனி ட் கட்சி; 3) ஜனதா கட்சி; 4) மு லீம் லீக்; 5) இந்திய கம்யூனி ட் கட்சி; 6) தமிழ்நாடு பார்வர்டு பிளாக்.

## 29.7.3 தேர்தல் பிரச்சாரம்

அமெரிக்கா நியூயார்க் நகரில் ப்ரூக்ளின் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த எம்.ஜி.ஆரால் இத்தேர்தலில் நேரடியாகப் பங்கேற்று பிரச்சாரம் செய்ய முடியாது. எனவே, அவர் பிரச்சாரம் செய்யாத பொதுத் தேர்தல் இதுதான். அவருக்குப் பதிலாக அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நிலையில் தோற்றமளித்த சுவரொட்டிகள் தமிழ் நாட்டில் நாடெங்கும் ஒட்டப்பட்டன. அவர் சிகிச்சை பெற்ற ஒளி நாடாக்கள் (Videos) காண்பிக்கப்பட்டன. எம்.ஜி.ஆர் உடல் நிலை தெளிவாகி வருவதையும், இந்திரா காந்தியின்

இறுதி ஊர்வலக் காட்சிகளையும் இணைந்து 'வெற்றித் திருமகள்' என்று பெயரிடப்பட்ட திரைப்படம் திரையரங்குகளில் காண்பிக்கப்பட்டன.

### 29.7.4 தேர்தல் முடிவுகள்

நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும், சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் 1984 டிசம்பர் 24 ஆம் தேதி ஒரே நாளில் ஓட்டுப் பதிவு நடைபெற்றது. ஒரு சுயேட்சை வேட்பாளர் இறந்ததால் வடசென்னை நாடாளுமன்றத் தொகுதியிலும், எழும்பூர் சட்டப் பேரவைத் தொகுதியிலும் தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டது. எஞ்சியுள்ள 38 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் (பாண்டிச்சேரி நீங்கலாக). 233 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் ஓட்டுப் பதிவு நடைபெற்று தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. சட்டப் பேரவைக்கான முடிவுகள் வருமாறு:

**அதிமுக கூட்டணி:** அதிமுக 132; இந்திரா காங்கிர 62; காந்தி காமராஜ் தேசிய காங்கிர 2; பார்வர்டு பிளாக் (கோபர் கடே பிரிவு) 1; (மொத்தம் 198). **தி.மு.க. கூட்டணி:** திமுக 20; மார்க்சி ட் கம்யூனி ட் கட்சி 5; ஜனதா கட்சி 3; மு லீம் லீக் 2; இந்திய கம்யூனி ட் கட்சி 2; தமிழ்நாடு பார்வர்டு பிளாக் 1 (மொத்தம் 33).

இத்தேர்தலில் அதிமுக 155 இடங்களில் போட்டியிட்டு 132 இடங்களைக் கைப்பற்றியது (39.09%). இந்திரா காங்கிர 72 இடங்களில் போட்டியிட்டு 62 இடங்களில் வெற்றி பெற்றது (16.46%). திமுக 168 இடங்களில் போட்டியிட்டு 20 இடங்களை வென்றது (29.49%). தி.மு.க கூட்டணி நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று சட்டப் பேரவைத் தேர்தலில் தோல்வியைத் தழுவியது.

முன்னாள் அதிமுக அமைச்சர் எ.டி.சோமசுந்தரத்தின் நமது கழகம் இத்தேர்தலில் படு தோல்வி அடைந்தது. அவரே பட்டுக்கோட்டை தொகுதியில் போட்டியிட்டுத் தோற்றார்! அதேபோன்று பழ.நெடுமாறன், எ.எ.ராஜேந்திரன், மு.க. டாலின், கே.டி.கே.தங்கமணி, பெ.சீனிவாசன், புலவர் கோவிந்தன், இரா.செழியன் ஆகியோரும் தோற்கடிக்கப்பட்டனர். எம்.ஜி.ஆர் அமைச்சரவையில் இருந்த 18 அமைச்சர்கள் வெற்றி பெற்றனர். ஆண்டிப்பட்டி தொகுதியில் போட்டியிட்ட எம்.ஜி.ஆர் தமிழ்நாடு பார்வர்டு பிளாக் சார்பில் போட்டியிட்ட வல்லரசை 31,484 வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் முடிவுகள் வருமாறு: இந்திரா காங்கிர 25; அதிமுக 12; திமுக 1; இந்திரா காங்கிரசும், அதிமுகவும் போட்டியிட்டு அனைத்து இடங்களிலும் வெற்றி பெற்றன. திமுக போட்டியிட்ட 25 இடங்களில் கலாநிதி மட்டும் மத்திய சென்னை தொகுதியில் வெற்றி பெற்றார்!

## 29.8 எம்.ஜி.ஆர்: ஆட்சி III, 1985–1987

### 29.8.1 மூன்றாம் முறை முதலமைச்சர்

அமெரிக்காவில சிகிச்சையை முடித்துக் கொண்டு எம்.ஜி.ஆர் 1985 பிப்ரவரி 4 ஆம் தேதி சென்னை திரும்பினார். அவர் மீண்டும் அதிமுகவின் சட்டப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் ஆளுநர் ... பின்னர் ஆளுநர் மாளிகையில் பதவி ... சந்தித்தார் (பிப்ரவரி 7). பின்னர் ஆளுநர் மாளிகையில் பதவி ஏற்பு ... பெற்றது (பிப்ரவரி 10). எம்.ஜி.ஆர் தொடர்ந்து மூன்றாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்றார். காமராசருக்குப் பின் மூன்றாவது முறையாக முதலமைச்சராக இருந்தவர் எம்.ஜி.ஆர் தான்!

### 29.8.2 அமைச்சரவை

எம்.ஜி.ஆரின் மூன்றாவது அமைச்சரவையில் இடம் பெற்றோர்: நெடுஞ்செழியன் (நிதி); பண்ருட்டி ராமச்சந்திரன் (மின்சாரம்); கே.ஏ.கிருஷ்ணசாமி (தொழிலாளர் நலம்); அரங்கநாயகம் (கல்வி); ... ஆர்.எம்.வீரப்பன் (செய்தி, அறநிலையத் துறை); பொன்னையன் (சட்டம்); டாக்டர் ஹன்டே (சுகாதாரம்); ... (விவசாயம்); திருநாவுக்கரசு (உணவு); ஆர்.சவுந்தரராஜன் (வீட்டு வசதி, ...); ... (போக்குவரத்து); கோமதி (சமூக நலம், சத்துணவு); ... எம்.ஆர்.கோவிந்தன் (பிற்பட்டோர் நலம்); சாத்தூர் கே.கே.எ.எ.ராமச்சந்திரன் (கூட்டுறவு, ... (கூடுதல்); யூசுப் (பொதுப்பணி); ... தொழில்). எம்.ஜி.ஆர் முந்தைய அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த 6 பேர் புதிய அமைச்சரவையில் இடம் பெறவில்லை!

### 29.8.3 சட்டப் பேரவை

1985 பிப்ரவரி 25 ஆம் தேதி கூடிய சட்டப் பேரவையில் ப.உ.சண்முகம் தற்காலிக சபாநாயகராக இந்து உறுப்பினர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அதன்பின் பி.எச்.பாண்டியன் சபாநாயகராகவும், வி.பி.பாலசுப்பிரமணியம் துணை சபாநாயகராகவும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### 29.8.4 மூர் மார்க்கெட்டுக்கு முடிவு

சென்னை நகருக்கு வருவோர் விரும்பி வரும் அங்காடியாகத் திகழ்ந்த மூர் மார்க்கெட் எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்தில் **1985 மே 29 ஆம் தேதி** சாம்பலாயிற்று! இந்த இடம் அந்நாள் சென்னை நகர் மன்றத் தலைவராக இருந்த சர் ஜார்ஜ் மூர் என்பவரின் முயற்சியால் மார்க்கெட்டாக மாற்றப்பட்டு 1900 நவம்பர் ... கட்டி முடிக்கப்பட்டது; ஆளுநர் ஆர்தர் கல்லாக் திறந்து வைத்தார். சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கு அருகில் இருந்த மூர் மார்க்கெட்டின் ஒரு பகுதி சென்ட்ரல் புகைவண்டி நிலையத்தை விரிவுபடுத்துவதற்காக அகற்றப்பட்டது. அதன்பின் மூர் மார்க்கெட்டை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அந்த நிலையில் ஒரு நள்ளிரவில் மூர் மார்க்கெட் தீப்பற்றி எரிந்தது. பேரிழப்பை ஏற்படுத்திய தீ விபத்துக்கான காரணம் இன்று வரை அவிழ்க்கப்படாத மர்ம முடிச்சாகவே இருந்து வருகிறது!

### 29.8.5 ஊராட்சித் தேர்தல்

1986 பிப்ரவரி 23 ஆம் தேதி நடைபெற்ற ஊராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தி.மு.க. அணி வெற்றி பெற்றது. மொத்தம் 97 நகர சபைத் தலைவர் பதவிகளுக்கு ...

கட்சிகளான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லீம் லீக், ஜனதா கட்சி ஆகியவை 8 இடங்களில் வெற்றி பெற்றன. அதிமுகவுக்கு 11 இடங்களும், இந்திரா காங்கிரசுக்கு 11 இடங்களும், சுயேட்சைகளுக்கு 3 இடங்களும் கிடைத்தன. இத்தேர்தல் எம்ஜிஆருக்கு நகரங்களில் செல்வாக்கு இல்லை என்பதைக் காட்டுவதாக இருந்தது. இருப்பினும் திமுக பஞ்சாயத்துத் தேர்தலில் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. எனவே, இந்த ஊராட்சித் தேர்தல் திமுக மீண்டும் நகர்ப்புறங்களில் செல்வாக்கு பெறத் துவங்கியதையும், அதிமுக கிராமங்களில் அதன் செல்வாக்கு குறையாமல் இருந்ததைக் காட்டுவதாகவும் இருந்தது.

## 29.8.6 மேல்சபைக்கு முடிவு

தமிழ் நாட்டின் மேல்சபை (Legislative Council) 120 ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்தது. அதில் 63 உறுப்பினர்கள் இடம் பெற்று இருந்தனர். ம.பொ.சிவஞானம் மேல்சபைத் தலைவராக இருந்தார். கருணாநிதி உறுப்பினராக இருந்தார். 1986 ஏப்ரல் மாதம் ஆளுநர் காலியான 3 இடங்களுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து 1986 மே 14 ஆம் தேதி மேலவையைக் கலைப்பதற்கான மசோதா சட்டப் பேரவையில் நிறைவேற்றப் பட்டு, மத்திய அரசின் ஒப்புதலுடன் (செப்.4) மேலவை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

## 29.8.7 சிலை திறப்பு

1987 மே 24 ஆம் தேதி சென்னையில் சிபா.ஆதித்தனார் உருவச் சிலையை முதலமைச்சர் எம்.ஜி.ஆர் திறந்து வைத்தார். அன்றைக்கே சென்னை **'ஆரி சாலை'**க்கு **'ஆதித்தனார் சாலை'** என்று பெயர் சூட்டப்பட்டது. அதேபோன்று 1987 டிசம்பர் 21 ஆம் தேதி சென்னையில் விமான நிலையத்துக்கும் கிண்டிக்கும் இடையே கத்திப்பாரா சந்திப்பில் நேரு சிலை ராஜீவ் காந்தியால் திறந்து வைக்கப்பட்டது. வெண் புறாக்கள் பறக்கவிடப் பட்டன. நேருவின் சிலையை அமைத்த சிற்பி மணி நாகப்பாவும், பீடத்தை அமைத்த கணபதி தபதியும் பொன்னாடை போர்த்தி, பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டனர்.

## 29.8.8 மாமனிதரின் மறைவு

1987 டிசம்பர் 24 ஆம் தேதி புரட்சித் தலைவர் என்று மக்களால் பாசத்தோடு அழைக்கப்பட்ட எம்.ஜி.ஆர் மாரடைப்பால் மரணம் அடைந்தார். அவரது உடல் இறுதி மரியாதைக்காக ராஜாஜி மண்டபத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. லட்சக் கணக்கானோர் இறுதி அஞ்சலி செலுத்தினர். பிரதமர் ராஜீவ் காந்தி அவர் உடல் மீது மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். எம்.ஜி.ஆரின் இறுதி ஊர்வலத்தில் லட்சக்கணக்கானோர் கலந்து கொண்டனர். அவரது உடல் சந்தனப் பெட்டிக்குள் வைக்கப்பட்டு, அரசு மரியாதையுடன், அண்ணா சமாதியின் தெற்கே நல்லடக்கம் செய்யப்பட்டது (டிச.25). நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் இடைக்கால முதலமைச்சராகப் பதவி ஏற்றார்.

## 29.8.9 விருப்பாவணை

எம்.ஜி.ஆர் உயிருடன் இருக்கும் போதே 1986 [illegible] 18 ஆம் தேதியிட்ட [illegible] பக்க விருப்பாவணை (Will) எழுதினார். அதில் ராமாவரம் தோட்டத்தில் எம்.ஜி.ஆர் [illegible] ஊமைகள் இல்லம் ஏற்படுத்த வேண்டும். அதில் ஊமைகள் காது கேளாதவர்கள் இலவசமாக தங்கி, பேசுவதற்கு சிகிச்சையும், பயிற்சியும் பெற வேண்டும். காது கேளாதவர்கள் தங்கி காது கேட்பதற்கான கருவிகள் பெற வேண்டும். இவருக்குச் சொந்தமான தியாகராய நகர் ஆர்க்காடு 27 ஆம் எண் கட்டிடம் எம்.ஜி.ஆர் நினைவு இல்லம் ஆக்கப்பட்டு அதில் இவரது பரிசுப் பொருட்கள் [illegible] வைக்கப்படுதல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அரசாங்க செலவைத் தவிர்க்கவே தனது வீட்டையே நினைவு இல்லமாக ஏற்பாடு செய்ததாக விருப்பாவணையில் குறிப்பிட்டுள்ளார். அதன்படி இவரது சத்யா ஸ்டுடியோ 'சத்யபாமா எம்.ஜி.ஆர் மாளிகை' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

# 32. ஜெ.ஜெயலலிதா ஆட்சி I, 1991–1996

*அதிமுக ஆட்சியில் மக்கள் எப்போதுமே மிகவும் பாதுகாப்பாக உணருகிறார்கள்.*

*– ஜெயலலிதா.*

## 32.1 வாழ்க்கைச் சுவடுகள்

### 32.1.1 பூர்வீகம்

ஜெயலலிதா கர்நாடகத்தில் மண்டய மாவட்டத்தில் பாண்டவபூர் தாலுக்காவில் **மேலுகோட்டே** என்ற ஊரில் **1948 பிப்ரவரி 24** ஆம் தேதி வசதியான வைதிய ஐயங்கார் குடும்பத்தில் **ஜெயராமுக்கும் சந்தியாவுக்கும்** மகளாகப் பிறந்தார். இவரது பெற்றோரது **பூர்வீகம் திருச்சி ஸ்ரீரங்கம்** ஆகும். இவரது குடும்பத்தினர் தமிழ் நாட்டியிலிருந்து கர்நாடகத்தில் குடியேறியவர்கள். ஜெயலலிதாவின் தந்தை வழி தாத்தா **ரெங்காச்சாரி** மைசூர் மகாராஜாவின் குடும்ப மருத்துவராக இருந்தவர்.

### 32.1.2 கல்வி

ஜெயலலிதா **பெங்களூர் பிஷப் கார்டன் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில்** படித்தார். பின்னர் இவர் விதவைத் தாயார் சந்தியாவுடன் **சென்னைக்கு** வந்த பிறகு சென்னையில் பிரபல **சர்ச் பார்க் கான்வெண்டியில்** கல்வியைத் தொடர்ந்தார். ஆங்கிலத்தில் நன்கு பேசவும் எழுதவும் தெரிந்த ஜெயலலிதா பள்ளிப் பருவத்திலேயே முறைப்படி பரத நாட்டியத்தில் பயிற்சி பெற்றார்; கர்நாடக இசை கற்றுக் கொண்டார்; இசைக் கருவிகளை மீட்டவும் தெரிந்து கொண்டார். இவர் இனிமையாகப் பாடவும், ஆங்கிலம், கன்னடம், தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய மொழிகளில் தடையின்றி பேசவும் கற்றுக் கொண்டார்.

### 31.1.3 திரைப்பட வாழ்க்கை

பல்திறன் கொண்ட ஜெயலலிதா மேல் படிப்பைத் தொடராமல் திரைத் துறையில் நடிகையாக இருந்த தாய் சந்தியாவின் வழிகாட்டுதலின் பேரில் **திரைப்படங்களில் நடிக்கத் தொடங்கினார்.** துவக்கத்தில் இவர் சில **கன்னடப் படங்களில்** நடித்தார். முன்னாள் குடியரசுத் தலைவர் வி.வி.கிரியின் மகன் சங்கர் கிரி தயாரித்த எபிசில் (Epistle) என்ற **ஆங்கிலப் படத்திலும்** நடித்துள்ளார் ஜெயலலிதா. இவரைக் கதாநாயகியாக வைத்து இயக்குநர்கள் **ஸ்ரீதரும், பி.ஆர்.பந்துலுவும்** முறையே இயக்கிய **வெண்ணிற ஆடை, ஆயிரத்தில் ஒருவன்** ஆகிய திரைப்படங்கள் அமோக வெற்றி பெற்றன. **ஆயிரத்தில் ஒருவனில் எம்.ஜி.ஆருடன்** நடித்த ஜெயலலிதா தொடர்ந்து பல படங்களில் புரட்சி நடிகருக்கு கதாநாயகியாக நடித்தார். இவர் பல தமிழ், தெலுங்கு, மலையாள, இந்தி திரைப்படங்களில் முன்னணிக் கதாநாயகர்களுடன் நடித்துள்ளார். இவரது தாயார் சந்தியா இறந்த பின் **(1971)** திரைப்படங்களில் நடிப்பதைப் படிப்படியாகக்

குறைத்துக் கொண்டார். ஜெயலலிதா கடைசியாக நடித்த திரைப்படம் நதியைத் தேடிவந்த கடல் (1980). நூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்த ஜெயலலிதா திரைத்துறையிலிருந்து அரசியல் துறைக்கு மாறினார்.

### 32.1.4 அரசியல் வாழ்க்கை

1980 இல் திரை வாழ்க்கையிலிருந்து விலகிய ஜெயலலிதா 1982 ஆம் ஆண்டு அதிமுகவில் உறுப்பினராகச் சேர்ந்து முன்னேறினார். கட்சியில் சேர்ந்த அதே ஆண்டில் அவர் எம்.ஜி.ஆரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி கடலூர் கட்சி மாநாட்டில் புரட்சித் தலைவரால் அவரது தொண்டர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். அதன்பின் அவர் அதிமுகவின் கொள்கை பரப்புச் செயலாளராக எம்.ஜி.ஆரால் நியமிக்கப்பட்டார். இரண்டாண்டுகளுக்குப் பின் (1984) ஜெயலலிதா நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகி நாடாளுமன்ற அதிமுக துணைத் தலைவியானார்.

### 32.1.5 இறுதி வெற்றி

எம்.ஜி.ஆர் உடல் நலம் பாதிக்கப்பட்டு அமெரிக்க மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த போது நீருபூத்த நெருப்பாக இருந்த ஜெயலலிதா உட்கட்சி எதிர்ப்பு புகைந்து எரியத் தொடங்கியது. இவரது எதிர்ப்பாளர்கள் எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகி பக்கம் சேர்ந்தனர். எம்.ஜி.ஆர் இறந்த பின்னர் ஜெயலலிதா கட்சியில் ஓரம் கட்டப்பட்டார். ஜானகி முதலமைச்சரானார். முதலமைச்சர் பதவியில் தாக்குப்பிடிக்க முடியாத ஜானகி பதவி விலகினார். ஜெயலலிதா ஜானகியுடன் சமரசம் செய்து கொண்டு, பிளவு பட்டிருந்த அதிமுகவை ஒன்று சேர்த்து, இரட்டை இலை தேர்தல் சின்னத்தைப் பெற்று 1991 தேர்தலை சந்தித்து வெற்றி பெற்றார். அந்த வெற்றி ஜெயலலிதாவின் அச்சமின்மைக்கும், துணிவுக்கும், தன்னம்பிக்கையோடு கூடிய விடாமுயற்சிக்கும், ராஜதந்திரத்துக்கும் கிடைத்த வெற்றியாகும்.

## 32.2 சட்டப் பேரவைத் தேர்தல், 1991

### 32.2.1 ஜெயலலிதா–ராஜீவ் காந்தி கூட்டணி

1991 ஜனவரி 30 ஆம் தேதி பிரதமர் சந்திரசேகர் கருணாநிதியின் அரசைக் கலைத்துவிட்டார்! தமிழ்நாடு குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. தமிழக சட்டப்பேரவைக்கான தேர்தல் 1991 மே மாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. கருணாநிதியின் அரசைக் கலைத்த சந்திரசேகர் ஆட்சி கவிழ்ந்தது! சந்திரசேகர் அரசு கவிழ்ப்புக்குக் காரணமாக இருந்த ராஜீவ் காந்தியும் ஜெயலலிதாவும் தேர்தல் கூட்டணி அமைத்தனர்.

### 32.2.2 அனுதாப அலை

இவ்விருவரும் நாடாளுமன்றத்துக்கும் சட்டப் பேரவைக்கும் நடக்கவிருந்த பொதுத் தேர்தலைக் கூட்டாக எதிர்கொள்ளவிருந்த நிலையில் தேர்தல் பிரச்சாரத்துக்காக சென்னை வந்த ராஜீவ் காந்தி ஸ்ரீபெரும்புதூரில் மனித வெடிகுண்டால் படுகொலை செய்யப்பட்டதை தமிழர்களால் சீரணித்துக் கொள்ள



முடியவில்லை. தமிழ் நாட்டில் ராஜீவ் அனுதாப அலை எழுந்தது. கருணாநிதி தமிழக மக்களிடையே செல்வாக்கு இழந்தார். ஜெயலலிதா ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதால் எழுந்த அனுதாப அலையை அறுவடை செய்தார்!

### 32.2.3 மூன்று கட்டத் தேர்தல்

தமிழ்நாட்டில் முதல்கட்ட பொதுத் தேர்தல் திட்டமிட்டபடி மே மாதம் துவங்கியது. ராஜீவ் காந்தியும் ஜெயலலிதாவும் கூட்டணி அமைத்து முதல் கட்டத் தேர்தலை சந்தித்தனர். ஏப்ரல் 18 ஆம் தேதி இந்த இரண்டு தலைவர்களும் சென்னை கடற்கரையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஒரே மேடையில் இருந்து பேசினர். மே 21 ஆம் தேதி ராஜீவ் காந்தி தமிழ் மண்ணில் கொலை செய்யப்பட்டார். அதன் காரணமாக இரண்டாம் கட்டத் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டு ஜூன் 12, 15 தேதிகளில் நடைபெற்றது. ராஜீவ் காந்தியின் அனுதாப அலையும், ஜெயலலிதாவின் ஆதரவு அலையும், கருணாநிதி எதிர்ப்புச் சூறாவளியும் ஒன்று சேர்ந்து இத்தேர்தலின் முடிவைத் தீர்மானித்தன.

### 32.2.4 தேர்தல் முடிவுகள்

#### போட்டி

தமிழ்நாடுசட்டப் பேரவைக்கான மொத்த தொகுதிகள் 234. வேட்பாளர்கள் இறந்ததால் எழும்பூர், முசிறி தொகுதிகளுக்கான தேர்தல் தள்ளிவைக்கப்பட்டது. மீதமுள்ள 232 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும், 39 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெற்றது. ஜெயலலிதா காங்கேயம், பர்கூர் ஆகிய இரு தொகுதிகளிலும் போட்டியிட்டார். கருணாநிதி சென்னை துறைமுகம் தொகுதியில் போட்டியிட்டார்.

#### முடிவு

சட்டப் பேரவை தேர்தல் முடிவுகள் வருமாறு: அதிமுக 163; இந்திரா காங்கிரஸ் 61; திருநாவுக்கரசு அணி 2; திமுக 1; ஜனதா தளம் 1; இந்திய கம்யூனிட் கட்சி 1; மார்க்சிட் கம்யூனிட் கட்சி 1; பாட்டாளி மக்கள் கட்சி 1; சுயேட்சை 1.

#### திமுகவுக்கு தண்டனை

இத்தேர்தலில் தமிழ்நாட்டு வாக்காளர்கள் திமுகவையும் அதன் கூட்டுக் கட்சிகளையும் கடுமையாகத் தண்டித்துவிட்டனர்; 176 இடங்களில் போட்டியிட்ட திமுகவால் ஒரு இடத்தை மட்டுமே பெற முடிந்தது! துறைமுகம் தொகுதியில் போட்டியிட்ட கருணாநிதியின் தலை மட்டும் தப்பியது. அன்பழகன், நாஞ்சில் மனோகரன் போன்ற முன்னணித் தலைவர்கள் புறம் தள்ளப்பட்டு தோல்வி அடைந்தனர். இது தி.மு.கவின் வரலாறு காணாத் தோல்வியாகும். ஜெயலலிதா போட்டியிட்ட இரண்டு இடங்களிலும் வெற்றி பெற்றார்!

## அதிமுகவின் அமோக வெற்றி

**அதிமுக–காங்கிர கூட்டணி** நாடாளுமன்றத் தேர்தலிலும் அமோக வெற்றி பெற்றது. காங்கிர 26 இடங்களில் போட்டியிட்டு அனைத்து இடங்களிலும் வெற்றி அடைந்தது. அதேபோன்று அதிமுக போட்டியிட்ட 11 இடங்களையும் கைப்பற்றியது. 29 இடங்களில் போட்டியிட்ட திமுகவுக்கு ஒரு இடம்கூட கிடைக்கவில்லை. நாடாளுமன்றத் தேர்தலிலும் வாக்காளர்கள் திமுகவை நிராகரித்துவிட்டனர்!

## 32.2.5 முதலமைச்சர் ஜெயலலிதா

அதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் துணைப் பொதுச் செயலாளர் **நெடுஞ்செழியன்** தலைமையில் கட்சியின் தலைமை அலுவலகத்தில் கூடி ஜெயலலிதாவை சட்டப் பேரவைக் கட்சித் தலைவராக, அதாவது முதலமைச்சராக ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தனர். பின்னர், ஜெயலலிதா ஆளுநர் பீஷ்ம நாராயண் சிங்கை சந்தித்த பின்னர் அவரது அமைச்சரவை ஜூலை 14 ஆம் தேதி பதவி ஏற்கும் என்று அறிவித்தார்.

## 32.2.6 அமைச்சரவை

**1991 ஜூலை 24** ஆம் தேதி ஜெயலலிதா தமிழ் நாட்டு முதலமைச்சராகப் பதவிப் பொறுப்பேற்றார். அவரது அமைச்சரவையில் இடம் பெற்றோர்: நெடுஞ்செழியன் (நிதி); **கே.ஏ.கிருஷ்ணசாமி** (சட்டம்); **எ.டி.சோமசுந்தரம்** (வருவாய் துறை); **ஆர்.எம்.வீரப்பன்** (கல்வி); **க.ராசாராம்** (உணவு); அரங்கநாயகம் (தொழிலாளர் நலம்); **எ.முத்துசாமி** (சுகாதாரம்); **கே.ஏ.செங்கோட்டையன்** (போக்குவரத்து); **மதுசூதனன்** (கைத்தறி); **எ.கண்ணப்பன்** (பொதுப் பணித்துறை); **அழகு திருநாவுக்கரசு** (ஊராட்சி); **கே.பி.கிருஷ்ணன்** (விவசாயம்); **செல்வ கணபதி** (வீட்டு வசதி); **முகமது ஆசிப்** (சிறுதொழில்); **இந்திர குமாரி** (சமூக நலம்); **எம்.ஆனந்தன்** (ஆதிதிராவிடர் நலம்); **டி.ஜெயக்குமார்** (கால்நடை). முதலமைச்சர் பொது நிர்வாகம், மத்திய அரசு ஆட்சிப் பணியாளர், காவல்துறை, மதுவிலக்கு, அறநிலையத்துறை, தொழில்நுட்பம் போன்ற 15 முக்கிய இலக்காக்களைத் தன்வசம் வைத்துக் கொண்டார். முதலமைச்சர் உட்பட ஜெயலலிதா அமைச்சரவையில் 18 அமைச்சர்கள் இடம் பெற்றிருந்தனர். புதிய அமைச்சரவை **1991 ஜூன் 24** ஆம் தேதி சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில் **பதவி ஏற்றது**. ஆளுநர் பீஷ்மநாராயண்சிங் பதவி பிரமாணத்தையும், ரகசிய காப்பு உறுதிமொழியையும் கூற ஜெயலலிதா உறுதிமொழி ஏற்றுக் கொண்டார். பின்னர் **ஜூலை முதல் தேதி** சட்டப்பேரவை கூடி உறுப்பினர்கள் பதவி ஏற்றுக் கொண்டவுடன் **சேடப்பட்டி முத்தையா** சபாநாயகராகவும், **பொன்னுசாமி** துணை சபாநாயகராகவும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



## 32.3 ஆட்சிக்கால சாதனைகள்

### 32.3.1 சமூக நலத் திட்டங்கள்

ஜெயலலிதாவின் முதலாம் ஆட்சிக் காலத்தில் பல சமூக நலத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றின் நோக்கம் சமுதாயத்தின் பிரதான பிரிவினரான குழந்தைகள், பெண்கள் மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு உதவியளித்து அவர்களையும் வளர்ச்சித் திட்டங்களில் பங்கேற்கச் செய்வதற்கான சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகும்.

### தொட்டில் குழந்தைத் திட்டம்

ஜெயலலிதா அரசாங்கம் அறிமுகப்படுத்திய புதுமைத் திட்டங்களில் முதன்மையானது **தொட்டில் குழந்தைத் திட்டம்** (Gradle Baby Scheme) ஆகும். இத்திட்டத்தின் கீழ் பெற்றோரால் புறக்கணிக்கப்படும் குழந்தைகளை அரசுத் தொட்டில்களில் விட்டுச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. இக்குழந்தைகள் அரசாங்க மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள், அநாதை இல்லங்கள், குழந்தைகள் இல்லங்கள் ஆகியவற்றில் பராமரிக்கப்பட்டன. திருமணத்துக்குப் பின் தனிமைப்படுத்தப்பட்ட பெண்கள் இத்தொட்டில்களில் விட்டுச் ஆண் குழந்தைகளும் எடுத்து வளர்க்கப்பட்டன. இவையன்றி பெண் சிசுக் கொலைக்கு இலக்காகவிருந்த குழந்தைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. இக்குழந்தைகளின் மறுவாழ்வுக்கான முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன. தொட்டில் குழந்தை முழுநேர மையங்கள் சேலம், திண்டுக்கல், தர்மபுரி மாவட்டங்களில் செயல்பட்டன. இத்திட்டம் இந்தியாவிலேயே முன்மாதிரித் திட்டமாகக் கருதப்பட்டது; வெளிநாடுகளின் கவனத்தையும் ஈர்த்தது.

### ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்

முறையான பயிற்சி பெற்ற ஆசிரியர்களே திறமையாகக் கற்பிக்க முடியும். துவக்க, இடைநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் பெருகியதால் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் தேவை அதிகரித்தது. அத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஜெயலலிதா அரசு 1992 ஜனவரி முதல் ஜூலை வரையான ஆறுமாத காலத்தில் 192 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கியது.

### காவிரி நீர் பிரச்சனை

### இடைக்காலத் தீர்வு

முதலமைச்சர் ஜெயலலிதா எடுத்துக் கொண்ட முக்கிய பிரச்சனை தமிழ் நாட்டின் தலைவலியாக இருந்து வந்த காவிரி நதிநீரைப் பகிர்ந்து கொள்வது பற்றித் தமிழ் நாட்டுக்கும் கர்நாடகத்துக்கும் நீண்ட காலமாக இருந்து வந்த சர்ச்சைக்குரிய பிரச்சனையாகும். காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக ஜெயலலிதா முனைப்புடன் செயல்பட்டார். இப்பிரச்சனை பற்றி விசாரித்த நடுவர் மன்றம் 1991 ஜூன் மாதம் 25 ஆம் தேதி கர்நாடகம் எவ்வளவு தண்ணீரைத் தமிழ்நாட்டுக்குத் திறந்து விட வேண்டும் என்று நிர்ணயித்து உத்தரவிட்டது (205 டி.எம்.சி தண்ணீர் ஒரு டி.எம்.சி

100 கன அடி). அந்த இடைக்காலத் தீர்வை உச்சநீதிமன்றமும் உறுதி செய்தது. ஆனால் கர்நாடக அரசாங்கம் அந்த உத்தரவை செயல்படுத்தவில்லை!

## உண்ணாவிரதம்

நடுவர் மன்ற இடைக்காலத் தீர்வை நரசிம்மராவ் தலைமையிலான மத்திய அரசாங்கம் தலையிட்டுக் கர்நாடக அரசை வற்புறுத்துவதற்காக ஜெயலலிதா **1993 ஜூலை மாதம் 18 ஆம் தேதி** எம்.ஜி.ஆர் சமாதிக்கு முன் **உண்ணாவிரதத்தைத்** துவக்கினார். முதலமைச்சரின் உண்ணாவிரதப் போராட்டம் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. மத்திய நீர்வளத் துறை அமைச்சர் **வி.சி.சுக்லா** டெல்லியிலிருந்து வந்து ஜெயலலிதாவை சந்தித்துப் பேசினார். **ஜூலை 21 ஆம் தேதி** ஜெயலலிதா உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டார்.

## அண்ணா நூல்கள் அரசுடைமை

**சி.என்.அண்ணாதுரை** பல்திறன் கொண்ட மனிதர். அண்ணாவின் எளிமை, மனித நேயம், அறிவாற்றல் அனைவரையும் கவர்ந்த குணங்களாகும். முதலமைச்சர் ஆன பின்னரும் வறுமையின் விளிம்பிலேயே வாழ்ந்தவர்; வறுமையை அவரது வாரிசாக விட்டுச் சென்றவர். அவரது குடும்பத்தினரின் வறுமையின் வாட்டத்தைப் போக்க முதலமைச்சர் ஜெயலலிதா **அண்ணாவின் நூல்களை நாட்டுடமையாக்கி,** அதன் ஈட்டுத் தொகையாக ரூ.75 லட்சத்தை முதலமைச்சர் 1995 நவம்பர் 2 ஆம் தேதி அண்ணாவின் மனைவி **ராணி அம்மாளுக்கு** வழங்கினார். முதலமைச்சர் ஜெயலலிதா இத்தொகையை அண்ணாவின் வீட்டுக்குச் சென்று நேரடியாக வழங்கியது குறிப்பிடத்தக்கது.

## பெண் சிசுக் கொலை தடுப்பு

சமூக நலத்திட்டங்கள் மூலம் பெண் சிசுக் கொலையைத் தடுத்து நிறுத்துவதற்கான தீவிர முயற்சி எடுக்கப்பட்டது. இதன் விளைவாக சில மாவட்டங்களில் ஆண்–பெண் குழந்தைகளின் விகிதாச்சாரம் கணிசமாகக் குறைந்தது! இத்திட்டத்தோடு **ஒருங்கமைந்த சமூகப் பாதுகாப்புத் திட்டமும்** (Comprehensive Social Security Net) அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் நோக்கம் ஏழை எளிய மக்களுக்கு வாழ்க்கைப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதாகும். இந்தத் திட்டத்தின் கீழ் உணவு, உடை, இருப்பிடம், சுகாதாரம், ஆரம்பக்கல்வி, வாழ்வாதாரம், திறமையான பொது வினியோக முறை, மக்கள் நலன் ஆகியவற்றுக்கான பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

## ஊனமுற்றோர் நலம்

கண் பார்வையற்றோர், காது கேளாதோர், வாய் பேச முடியாதோர், மனநலம் பாதிக்கப்பட்டோர் ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு உடல் **ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்குநரகம்** தோற்றுவிக்கப்பட்டது. மாற்றுத் திறனாளிகள் இயல்பான வாழ்க்கை நடத்தும் வகையில் நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்த நலத்திட்ட முயற்சியில் தன்னார்வத் தொண்டு



## 18 அம்சத் திட்டம்

இளஞ்சிறார் (குழந்தைகள் பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் குழந்தைகள் நலம் காக்கப்பட்டது. குழந்தைகளுக்கான ஆய்வு மையங்கள், சிறப்பு இல்லங்கள் பாதுகாப்பு இல்லங்கள் இயக்கப்பட்டன. சிறுவர்கள் பலாத்காரம் செய்யப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் அவசர தொலைபேசி வசதி செய்யப்பட்டது. பெண்கள் தவறான வழிகளில் ஈடுபடுத்தப்படுவதைத் தடுக்கும் நோக்குடன் மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஏற்படுத்தப்பட்டது. மூத்த குடிமக்களுக்கான மாநிலத் திட்டம் வகுக்கப்பட்டது. யாவற்றுக்கும் மேலாக 18 அம்சங்கள் கொண்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பின்வரும் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன:

1) முதிர் கன்னிகளுக்கான சிறப்புத் திட்டம்; 2) அடிக்கடி குழந்தை பெறுவதைத் தடுத்தல்; 3) பெண் சிசுக்கொலைத் தடை; 4) எடை குறைந்த குழந்தை பெறுவதைத் தடுத்தல்; 5) நோய்களை வருமுன் கண்டறிந்து நீக்கல்; 6) இளம் வயதிலேயே குழந்தைப் பேற்றைத் தடுத்தல்; 7) குழந்தைகளைப் பாதுகாத்துப் பராமரிக்கும் முறைகளைக் கற்பித்தல்; 8) குழந்தை இறப்பைத் தடுத்தல்; 9) சத்துணவு குறைபாட்டைக் களைதல்; 10) நுண் ஊட்டச்சத்து குறைபாட்டைத் தடுத்தல்; 11) பெண் குழந்தைகளைப் பாதுகாத்தல்; 12) அனைத்து மருத்துவமனைகளும், பேறுகால மையங்களும் பெண்களும், குழந்தை களும் எளிதில் அணுகும்படி செய்தல்; 13) குழந்தைகளின் இதயநோயைத் துவக்கத்திலேயே கண்டறிந்து இலவசமாக அறுவை சிகிச்சை அளித்தல்; 14) குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல்; 15) அனைத்துக் குழந்தைகளும் எட்டு ஆண்டுகள் பள்ளிக்குச் செல்வதை உறுதி செய்தல்; 16) குழந்தைகள் நல மையங்களில் சுகாதா வசதிகளை மேம்படுத்தல்; 17) பெண்களின் கல்வி அறிவை உயர்த்தல்; 18) சுய உதவி குழுக்கள் மூலம் பெண்களின் ஆளுமைத் திறன்களை உயர்த்தல்.

## தரமான கல்வி

குழந்தைகளுக்குக் கல்வி கொடுத்தால் மட்டும் போதாது; கொடுக்கப்படும் கல் தரமானதாக இருத்தல் வேண்டும். தரமான கல்வியின் மூலம் மாணவரிடையே மறை ந்திருக்கும் ஆற்றல்கள் அனைத்தையும் வெளிக்கொணற முடியும். இத்தகைய தரம கல்வி கற்போரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு, தமிழ் நாட்டின் பொருள வளர்ச்சியையும் தீர்மானிக்க வல்லது. இந்த உண்மையை நன்கறிந்த ஜெயல அரசாங்கம் புதிய பள்ளிகளைத் திறக்கவும்; செயல்படும் பள்ளிகளின் நிலை தரத்தையும் உயர்த்தவும்; அனைத்துப் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிக மேம்படுத்தவும்; காலியாக இருந்த ஆசிரியர் பணி இடங்களை நிரப்பவும் சிறப்புக் க செலுத்தப்பட்டது. அதுமட்டுமல்ல. அனைத்து அரசாங்க, அரசாங்க உதவி பள்ளிகள் அனைத்திலும் பத்தாம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்கள் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. இவற்றின் விளைவாக, 18% ஆக பெண் கல்வி விகிதம் 43% ஆக உயர்ந்தது. அதேபோன்று பெண் குழந்தைகளின் படிப்பு பாதியிலேயே நிறுத்தப்படும் விகிதம் 24.5% லிருந்து 13% ஆகக் குை ... பெண்களுக்கான வேலைவாய்ப்பு 724.2 ஆயிரமாக உய

## இலவச இருசக்கர வண்டித் திட்டம்

பிற்படுத்தப்பட்ட, பிற்பட்ட, வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இலவச இருசக்கர வண்டி (Cycle) வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தால் இலட்சக்கணக்கான மாணவ–மாணவியர் பயன் பெற்றனர். இதோடு பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய பெண்களுக்கு இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

## மழைநீர் அறுவடைத் திட்டம்

நீரின் தேவை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வந்தது. பருவ காலத்தையே பெரிதும் நம்பியுள்ள தமிழ்நாடு, குறிப்பாக சென்னை நகரம், நீர் நெருக்கடியின் பிடியில் சிக்கியிருந்தது. நீர் நெருக்கடியை நிரந்தரமாகத் தீர்க்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக ஜெயலலிதா அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டதே **மழைநீர் அறுவடைத் திட்டம்** (Rain Water Harvesting) ஆகும். இத்திட்டத்தின் கீழ் மழைக்காலத்தில் வீணாகும் மழைநீரை வீட்டுக் கூரையிலிருந்து கொண்டு வந்து நிலத்தடி தொட்டிகளில் சேமித்து வைத்துப் பயன்படுத்துவதற்கான முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. இதுபற்றிய முன்மாதிரி வரைவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது; விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்த நூதனத் திட்டம் மக்களின் கருத்தையும், கவனத்தையும் கவர்ந்து, ஆர்வத்துடன் பின்பற்றப்பட்டது. பிற மாநிலங்களாலும் பாராட்டப்பட்டது.

## விவசாயிகளின் பாதுகாப்புத் திட்டம்

விவசாயிகளின் நலனை மையப்படுத்தி உருவாக்கப்பட்டதே **விவசாயிகள் பாதுகாப்புத் திட்டம்** (Farmer's Security Scheme) ஆகும். இத்திட்டத்தின் கீழ் விவசாயத் தொழிலாளர்கள், சிறுகுறு விவசாயிகள் ஆகியோரின் குடும்பங்களுக்குத் தரமான கல்வி, திருமணம், பேறுகாலம், ஒய்வூதியம், விபத்து மற்றும் இறப்பு ஆகியவற்றுக்காக அரசாங்க உதவி அளிக்கப்பட்டது. நோக்கிலும், போக்கிலும், அகல் விரிவான இத்திட்டத்தால் 1.37 குடும்பங்கள் பயன் பெற்றன.

## நவீன காவல் துறை

தமிழ் நாட்டு காவல்துறையை **நவீனமயமாக்கியதன்** (Modernisation of the Police Force)ஜெயலலிதா அரசாங்கம் பல சாதனைகளைப் படைத்தது. இந்தியாவிலேயே ஐந்தாவது பெரிய பாதுகாவலர் படை தமிழ் நாட்டில் தான் உள்ளது. முதன் முதலாகத் தமிழகத்தில் தான் 1) **அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்** துவக்கப்பட்டன; 2) உயர் தொழில்நுட்ப பயிற்சி பெற்ற **பெண் கமாண்டோ படை** (Women Commando Contingent) உருவாக்கப்பட்டது; 3) ஒவ்வொரு காவல் நிலையத்திலும் **பெண் போலீ** பிரிவு இணைக்கப்பட்டது; 4) **உயர் தொழில்நுட்ப ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு அறை** (Integrated Control Room) அறிமுகப்படுத்தப்பட்டது; 5) காவல்துறை அதிகாரிகளின் குழந்தைகள் படிப்பதற்குப் **பிரத்யேகப் பள்ளி** துவக்கப்பட்டது; 6) காவல் துறையில் பணிபுரிவோருக்கு **ஆயுள் காப்பீடு மற்றும் குடியிருப்பு வசதிகள்** செய்து கொடுக்கப்பட்டன.



## 12.3.2 பொருளாதார சீர்திருத்தம்

### நிதி நிர்வாகம்

தமிழ்நாட்டின் பொருளாதார அடிப்படை உறுதியாக இருந்தால் மட்டுமே அத்தியாவசிய இலவச மக்கள் நலத் திட்டங்களை மேற்கொள்ள முடியும். இப்பொருளாதார உண்மையை நன்கறிந்த ஜெயலலிதா அரசாங்கம் பொருளாதார ஆதார பலத்தை, குறிப்பாக நிதி நிர்வாகத்தை முனைப்புடன் நெறிப்படுத்துவதில் முனைப்புடன் ஈடுபட்டது. இதன் விளைவாக 1994 ஆம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் சட்டம் 198 படி மாநில நிதிக்குழு (State Finance Commission) நியமிக்கப்பட்டது. இக்குழு பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியம், மாவட்டப் பஞ்சாயத்து, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகியவற்றின் நிதி நிலவரத்தை ஆராய்ந்து பரிந்துரைகள் செய்தது. இப்பரிந்துரைகளின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஏனெனில், உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையைப் பொறுத்தே மாநில அரசின் செயல்பாடு அமைகிறது. தமிழ் நாட்டின் ஒட்டுமொத்த நிதி ஆதாரத்தைப் பெருக்கவும், அவற்றைச் சீராகவும், திறமையாகச் செலவிடவும், நிதி நிர்வாகத்தைத் திறமையாக நடத்துவதற்கும் மாநில நிதிக்குழு உறுதுணையாக இருந்தது

### மாநில நிதி நிலை

#### வருமானம்

மாநில வரவு செலவுத் திட்டம் (Budget) தமிழ் நாட்டின் பொருளாதார நிலையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகும். எனவே, ஜெயலலிதா அரசாங்கம் மாநில அரசின் முக்கிய வருவாய் வழிகளான 1) வரி வருவாய்; 2) வரியில்லா வருவாய்; 3) மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் மானியங்கள் ஆகியவற்றில் சிறப்புக் கவனம் செலுத்தியது.

இதன் விளைவாக தமிழக அரசுக்கு வேளாண்மை வருமான வரி மூலம் 1992-93 இல் 24 கோடி ரூபாயும்; நிலவரி மூலம் 20 கோடியும்; நகர்ப்புற வரி மூலம் 14 கோடியும்; பதிவுக் கட்டண வழி மூலம் 309 கோடியும்; ஆயத் தீர்வை மூலம் 514 கோடியும்; விற்பனை வரி மூலம் 2,400 கோடியும்; மத்திய விற்பனை மூலம் 350 கோடியும்; மோட்டார் வரி வழியாக 275 கோடியும்; மின்சாரத் தீர்வை மூலம் 55.82 கோடியும்; கேளிக்கை வரி மூலம் 90 கோடியும்; சரக்குகள் மற்றும் பயணிகள் மீதான வரி மூலம் 27 கோடியும்; ஆரம்ப வரிகள் வழியாக 40 கோடியும் வருவாயாகக் கிடைத்தன. இவையன்றி வட்டி வருவாய்; பொது சேவைகள்; சமூக சேவைகள்; பொருளாதார சேவைகள்; மற்றும் மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் மானிய உதவி போன்ற வரியில்லா வருவாயும் (Non-tax Revenue) தமிழக அரசுக்குக் கிடைத்தன.

இவைபோக மாநில அரசுக்கு கடன் வருவாய் (Capital Receipts) கிடைத்தது. எடுத்துக்காட்டாக, ஜெயலலிதா ஆட்சிக்கால துவக்கத்தில் 9,795.14 கோடி கடன் வருவாய் கிடைத்தது. இதில் உள்நாட்டுக் கடன் 1,741 கோடியாகவும், வைப்புத் தொகை மற்றும் [illegible] 2,687.27 [illegible]

### செலவினம்

கிடைத்த வருமானத்தைக் கொண்டு ஜெயலலிதா அரசாங்கம் பின்வரும் செலவினங்களை ஏற்றுக் கொண்டது: ஆட்சித் துவக்கத்தில் சமுதாயப் பணிகளுக்காக 2,492 கோடியும்; பொருளாதார செலவுக்காக 1,587.45 கோடியும்; நிர்வாகச் செலவுக்காக 1,526.23 கோடியும்; வரி வசூலிப்பதற்காக 96.61 கோடியும்; கடன் பணிகளுக்காக 483 கோடியும்; பல்வேறு மானிய உதவிகளுக்காக 340.97 கோடியும்; மூலதனச் செலவுகளுக்காக 208.41 கோடியும் செலவிடப்பட்டது. இப்புள்ளி விவரங்களைக் கூர்ந்து கவனித்தால் சமுதாயப் பணிகளில் **கல்விக்கும்,** பொருளாதார வளர்ச்சிப் பணிகளில் **வேளாண்மைக்கும், மின் உற்பத்திக்கும்** அதிகமாக செலவிடப்பட்டது தெரியவரும். அதேபோன்று தமிழ் நாட்டை எந்த கட்சி ஆட்சி செய்தாலும் நிதிப் பற்றாக்குறை (Fiscal Deficit) நிலைத்த நிதி சவாலாகவே இருந்து வருகிறது. எடுத்துக்காட்டாக, 1991–92இல் இப்பற்றாக்குறை 1,375 கோடியாக இருந்தது! இது 2000–2001ல் 5,781 கோடியாக அதிகரித்தது!!

### வேளாண்மை வளர்ச்சி

தமிழ் நாட்டில் உள்ள 50%க்கும் மேற்பட்ட மக்கள் விவசாயத்தை நம்பியே உள்ளனர்; இவர்கள் உழுதுண்டு வாழ்வார். நிகர மாநில உள்நாட்டு உற்பத்தியில் வேளாண்மையின் பங்கு 12% ஆகும். எனவே ஜெயலலிதா அரசு மாநில உணவு உற்பத்தியில் தன்னிறைவு, உணவுப் பாதுகாப்பு, வருமானத்தைப் பெருக்கி வறுமையைப் போக்கல், மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தல் ஆகியவற்றை ஆதார நோக்கமாகக் கொண்டு செயல்பட்டது. வேளாண்மைக்கும், அதன் சார்புடைய துறைகளுக்கும் அதிக முக்கியத்துவம் அளித்து திட்டமிடப்பட்டது. மானாவரி வேளாண்மையில் மாற்றத்தை ஏற்படுத்தவும், இறைவைப் பயிரில் உள்ள வளர்ச்சியை நிலைப்படுத்தவும், உணவு உற்பத்தித் தடைகளை நீக்கவும், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், சுற்றுச்சூழலுக்கேற்ப வேளாண் வசதிகளை மேம்படுத்தவும் அரசு முனைப்புடன் முயன்றது. அதிக பரப்பில் பயிரிடவும், உற்பத்தித் திறனை உயர்த்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டது.

எனினும் வேளாண் பயன்பாட்டில் இருந்த நிலப்பரப்பு தொடர்ந்து குறைந்து கொண்டே வந்தது. எடுத்துக்காட்டாக, 1950 ஆம் ஆண்டுகளில் வேளாண் அல்லாத பயன்பாட்டிற்கான நிலப்பரப்பு 1950 ஆம் ஆண்டுகளில் 9.8 விழுக்காட்டிலிருந்து 1990களில் 14.73% ஆக உயர்ந்துவிட்டது! நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல், பருவமழை பொய்ப்பு போன்றவை இதற்குக் காரணமாகும். இதன் விளைவாக, வளமான வேளாண் நிலம், வேளாண் அல்லாத பயன்பாட்டுக்கு மாற்றப்பட்டதுடன், வேளாண் தொழிலாளர்களின் உழைப்பும், நிலத்தடி நீரும் இதர பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இப்பிரச்சனை அரசுக்கு சவாலாகவே இருந்து வருகிறது.



### தொழில் வளர்ச்சி

தமிழ் நாட்டுப் பொருளாதாரம் பெரிதும் விவசாயம் சார்ந்தது. இருப்பினும், தொழில் துறையிலும் நல்ல வளர்ச்சி அடைந்து வருகிறது. குறிப்பாக ஜெயலலிதாவின் முதலாம் ஆட்சிக் காலத்தில்தான் மத்திய அரசு புதிய பொருளாதாரக் கொள்கையை அறிவித்து அமல்படுத்தியது. அக்கொள்கையைப் பின்பற்றிய தமிழகமும் தொழில் வளர்ச்சியில் இந்தியாவில் முன்னோடி மாநிலமாக உருவெடுத்தது. அதன் விளைவாக 1992–1997 காலகட்டத்தில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 7.1% ஆக இருந்த போது, தமிழ் நாட்டின் வளர்ச்சி விகிதம் 7.9% ஆக இருந்தது. அதேபோன்று மாநில தனிநபர் சராசரி வருமானமும் உயர்ந்தது. முதலீட்டுக் கொள்கை, உற்பத்தித் திறன், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் பொருள் நுகர்வு குறைகள் இந்த மாற்றத்துக்கு வழிவகுத்தன.

ஜெயலலிதாவின் முதலாம் ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருந்தது. இந்த காலகட்டத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் காகித உற்பத்தித் தொழிற்சாலை துவக்கப்பட்டது. கன்னியாகுமரியில் ரப்பர் தொழிற்சாலையும், சிவகங்கையில் கிராபைட் தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்பட்டன. பிலிம் உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டது. கைத்தறித் தொழில் நவீனமயமாக்கப்பட்டது. தொழில் விரைவு வளர்ச்சிக்காக **தொழில் ஆலோசனை மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு மையம்** துவக்கப்பட்டது.

### வெளிநாட்டு நேரடி முதலீடு

ஜெயலலிதாவின் முதலாம் ஆட்சிக் காலத்தில் ஒட்டுமொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டைப் (Foreign Direct Investment-FDI) பொறுத்தவரை தமிழ்நாடு இந்தியாவிலேயே மகாராஷ்டிரம், டெல்லிக்கு அடுத்தபடி மூன்றாவது இடத்தில் இருந்தது. இந்தியாவின் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டில் தமிழ் நாட்டின் பங்கு 9.12% ஆகும். தமிழ்நாடு வெளிநாட்டு முதலீட்டாளர்களின் சிறப்பாதரவு இலக்காக இருந்தமைக்கான காரணம் உலகத்தரமிக்க உள்கட்டமைப்பு வசதிகளும், திறமையான தொழில்நுட்ப வல்லுனர்கள் மற்றும் பயிற்சி பெற்ற அலுவலர்கள், தடையற்ற மின்சாரம், அரசாங்க ஆதரவு ஆகியவையாகும். இதேபோன்று பொருள் உற்பத்தித் துறையிலும் தமிழ்நாடு குஜராத், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களுக்கு அடுத்தபடியாக சாதனை படைத்தது.

## 32.4 சட்டப்பேரவைத் தேர்தல், 1996

### 32.4.1 கூட்டணிகள்

1996 பொதுத் தேர்தலின் போது 4 கூட்டணிகள் அமைந்தன: 1) திமுக–தமிழ் மாநில காங்கிர கூட்டணி. இக்கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI), இந்திய தேசிய லீக், அகில இந்திய பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகள் [illegible] 2) அதிமுக–காங்கிர கூட்டணி. இந்தக் கூட்டணியில் இந்திய [illegible] கட்சிகள், பார்வர்டு பிளாக், அகில இந்திய குடியரசுக் கட்சி, உழவர் [illegible]

முன்னேற்ற கழக (மதிமுக)க் கூட்டணி. இந்த அணியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (CPM), ஜனதா தளம், சமாஜ்வாதி ஜனதா கட்சி ஆகிய கட்சிகள் சேர்ந்தன. 4) அகில இந்திய இந்திரா காங்கிரஸ் (திவாரி). வாழப்பாடி ராமமூர்த்தி இக்கட்சியின் தலைவர். இவையன்றி, பாரதீய ஜனதா கட்சி தனித்துப் போட்டியிட்டது. சுப்பிரமணிய சுவாமியின் ஜனதா கட்சி, கிருஷ்ணசாமியின் தேவேந்திரகுல வேளாளர் சங்கத்துடன் சேர்ந்து போட்டியிட்டது. இந்தத் தேர்தலில் மக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்த சூப்பர் டார் ரஜினிகாந்த் திமுக-தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணியை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்தார். அவரது ஆயிரக்கணக்கான ரசிகர் மன்றங்கள் ஈடுபாட்டுடன் தேர்தல் பணியாற்றினர்.

## தேர்தல் முடிவுகள்

| கட்சிகள் | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | மாற்றம் % |
|---|---|---|---|
| தி.மு.க. அணி | | | |
| திமுக | 182 | 173 | 42.06 |
| த.மா.க | 40 | 39 | 9.03 |
| இந்திய கம்யூனிஸ்ட் கட்சி | 11 | 8 | 2.12 |
| அ.தி.மு.க அணி | | | |
| அதிமுக | 168 | 4 | 21.05 |
| காங்கிரஸ் | | | |

பிற கட்சிகள் பெற்ற இடங்கள்: பா.ம.க. 4; மதிமுக 0; ஜனதா தளம் 1; மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் 1; ஜனதா கட்சி 1; பா.ஜ.க. 1; சுயேட்சை 1; பார்வர்டு பிளாக் 1.

### 32.4.2 முக்கியத்துவம்

1991 தேர்தலில் நிராகரிக்கப்பட்ட தி.மு.க. இத்தேர்தலில் வியத்தகு வெற்றி பெற்றது! அக்கட்சி 182 இடங்களில் போட்டியிட்டு 173 இடங்களைக் கைப்பற்றியது! தி.மு.கவும்–த.மா.கவும் கூட்டணி வைத்துப் போட்டியிட்ட 222 இடங்களில் 212 இடங்களில் வெற்றி பெற்றன. அதேபோன்று கடந்த தேர்தலில் ஜெயலலிதாவின் தலைமையிலான அதிமுகவுக்கு அமோக ஆதரவளித்த வாக்காளர்கள் இத்தேர்தலில் நிராகரித்துவிட்டனர். அக்கட்சி 168 இடங்களில் போட்டியிட்டு 4 இடங்களை மட்டுமே பெற முடிந்தது. ஜெயலலிதா பர்கூர் தொகுதியில் போட்டியிட்டு தி.மு.க. வேட்பாளர் ஈ.ஜி.சுகவனத்திடம் 8,366 வாக்கு வித்தியாசத்தில் தோற்றார்! அவரது அமைச்சர்கள் பலரும் தோல்வி கண்டனர். தி.மு.கவிலிருந்து பிரிந்து சென்று போட்டியிட்ட மதிமுக ஒரு இடத்தில்கூட வெற்றி பெறவில்லை. அக்கட்சித் தலைவர் வை.கோ போட்டியிட்ட விளாத்திகுளம், சிவகாசி ஆகிய இரண்டு இடங்களிலும் தோற்கடிக்கப்பட்டார். தனித்துப் போட்டியிட்ட பா.ம.கவால் 4 இடங்களை மட்டுமே பெற முடிந்தது. நாடாளுமன்ற தேர்தல் தி.மு.க–த.மா.கா–இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்



கூட்டணி தமிழ் நாட்டில் 39 இடங்களையும், பாண்டிச்சேரியில் ஒரு இடத்தையும் சேர்த்து 40 இடங்களையும் கைப்பற்றியது.

## 32.5 மதிப்பீடு

சமகாலத் தமிழ் நாட்டு அரசியல்–ஆட்சி வரலாற்றில் ஜெயலலிதாவின் எழுச்சியும் ஏற்றமும் முக்கிய மைல்கல்லாகும். அவர்தான் எம்.ஜி.ஆரின் உண்மையான அரசியல் வாரிசு என்பதைத் தனது அறிவாற்றலாலும், தலைமைத் திறனாலும், கட்சித் தொண்டர் களின் ஆதரவோடும் நிலை நாட்டினார். ஜெயலலிதாவுக்கு 1991 சட்டப் பேரவைத் தேர்தல் வியத்தகு வெற்றியையும், முதலமைச்சராகும் வாய்ப்பையும் தேடித் தந்தன. மக்களின் மாபெரும் எதிர்பார்ப்புகளுக்கிடையே ஜெயலலிதா முதலமைச்சர் பொறுப்பேற்றார். பல சிறப்பான சமுதாய–பொருளாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்திய போதிலும், அதிமுக 1996 சட்டப் பேரவைத் தேர்தலில் தோல்வியைத் தழுவியது!